Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 88 | சர்வதேச மின் செய்தித்தாள் | சனவரி 01 2025




தாய் தேசத்தின் நினைவு சுமந்து நடப்போம்!
மண்மீட்பினை தம் இரத்தத்தோடும் கனவோடும் சுமந்து
சரித்திரமாகிய எம் வீரர் பணி தொடருவோம்!
இடரிலும் தளரிலும் சிக்கும் எம் வாழ்வை மீட்டு
நிலவு பொழியும் எம் முற்றத்தில் திளைப்போம்!
இந்தப் புத்தாண்டில், வரும் பொங்கள் திருநாளில்
புது வாழ்வுக்குள் காலடி எடுத்து வைக்க
வாழ்த்துகின்றோம்...!

சங்கத்தமிழ்

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில்
மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச
ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathananthan
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

Kurinchi
Beauty & Makeup
647.918.9742


விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

# 2025 உலக வணிகம்



தமிழுக்கு அமுதென்று பேர் அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் – இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்...!

– கவிஞர் பாரதிதாசன் –

*உறவுகள் அனைவருக்கும்*
*இனிய புத்தாண்டு, தமிழர் திருநாள் பொங்கல்*
*நல்வாழ்த்துகள். – உலகவணிகம்*


Sangathamil
# சங்கத்தமிழ்

சர்வதேச மின் செய்தித்தாள்

www.sangathamil.ca

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத்தேசிய இனமுமே பகிர்ந்துகொள்ள வேண்டும். இந்தத் தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்ல வேண்டும்.






## சங்கத்தமிழ்

### தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

437 345 4203

**மின்னஞ்சல்** (Email)

sangathamilcanada@gmail.com

**இணையத்தளம்** (Website)

www.sangathamil.ca


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# மேஜர்
# ரஞ்சன் (சித்தப்பா)

வடமராட்சி- லிபரேசன் ஒப்பரேசன் நடந்து முடிந்த சில நாட்கள் மாவீரர்கள்வடமராட்சி- லிபரேசன் ஒப்பரேசன் நடந்து முடிந்த சில நாட்கள்.

வடமராட்சி- லிபரேசன் ஒப்பரேசன் நடந்து முடிந்த சில நாட்கள் சின்னனும் பெரிசுமாக - கடற்காற்றுக்குச் சரசரத்துக் கொண் டிருந்த-பனங்கூடலுக்கு நடுவில் ரஞ்சன் நின்றான். இனி ஓட முடியாது. நாலுபக்கத்திலும் பச்சை உடைப்பேய்கள் நெருங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த பனங்கூடலிற்குள் நின்ற மக்கள் மேஜர் ரஞ்சனை நடுவில் இருத்திவிட்டுச், சுற்றி நின்றனர்.



வழமையான விசாரணைகள்-சித்திவதைகளை நடாத்தி விட்டு, இராணுவத்தினர் விலகிச் சென்றார்கள். அன்று ரஞ்சன் அங்கிருந்து தெரிந்திருந்தால், அந்தப் பனங்கூடலிலும் பல உயிர்கள் பலியாகியிருக்கக்கூடும். அந்த மக்கள் தமது உயிரை விட ஒரு போராளியின் உயிரைப் பெறுமதியாகக் கருதியதால், ரஞ்சன் அன்று காப்பாற்றப்பட்டான். அன்றே இது மக்கள் தந்த உயிர்: இந்த மக்களின்ர விடுதலைக்காகத்தான் நான் வாழ்வதும்-சாவதும்... என, உறுதி எடுத்துக்கொண்டான் ரஞ்சன். அவனது முடிவைக் கேட்டுக் கடலில் எழுந்த அலைகள் சிலவும், கரையில் மோதி ஆமோதித்தன.

(லிபரேசன் ஒப்பரேசன்) காலத்திலும், இந்தியப்படை இம் மண்ணை ஆக்கிரமித்திருந்த நேரத்திலும், வடமராட்சிப் பகுதி யிலேயே ரஞ்சன் நின்றான். பகற்பொழுதுகளிலும், பயங்கர மான இரவு நேரங்களிலும் ரஞ்சனையும் அவனது தோழர் களையும் மக்கள் தான் மூடிக்காத்தனர்.

இந்தியப்படை வெளியேறி-சிறீலங்காவுடனான யுத்தம் தொடங் கியதன் பின்பு, வடமராட்சிப்பகுதியில் பலம் வாய்ந்ததொரு படை யணியை உருவாக்க, ரஞ்சன் இரவு பகலாகப் பாடுபட்டான். அதன்பின்பு அவனும் அவன் வளர்த்தெடுத்த தோழர்களும் வடமராட்சிப் பகுதி மக்களைச் சுற்றிநின்று காத்தனர். ரஞ்சன் ஒரு திறமையான போர்வீரன்: அதே நேரம் இளகிய மனம் படைத்த போராளி - சின்னஞ் சிறுசுகளைக் கண்டால் எப்பவுமே



மயங்கிவிடுவான்.



மழைநீர் தேங்கி ஈரமாக இருக்கும் வீதிகளில், சில நேரம் இவனது வண்டி தயங்கும். உடனேயே சித்தப்பா என்றபடி சில் வண்டுகள் ஓடிவரும். அவர்களுடன் கதைப்பதா - புதைந்த வண்டியை எடுப்பதா? அவன் தயங்கி நிற்பான்.

வண்டி உறுமிவிட்டு ஓடமறுத்து நிற்கும். வீதியில் செல்லும் கிளவிகள் (என்ர ராசா) என்று கட்டி அனைத்து முத்தமிட்டுச் செல்வார்கள்: வெற்றிலை எச்சிலால் சிவந்த நெற்றியையும், கன்னத்தையும் அவன் சிரித்தபடியே துடைப்பான். (சீ எச்சில்) என்ற படி சின்னஞ்சிறுசுகளும் சிரிப்பார்கள்.

(இந்தச் சிரிப்பு நிரந்தரமாகி விட வேண்டும் என்பதற்காகத்தான் இண்டைக்கு நாங்கள் சாகிறம்) என்று சொல்வான் ரஞ்சன்.

உண்மைதான், சாவை இவர்கள் தினமும் வரவேற்றதால் தான் இவர்கள் சாவில் வாழ்வு பெற்றார்கள் - இவர்கள் வாழ் வதற்காக மரணித்தவர்கள்.

கோட்டை இராணுவ முகாம்மீதான இரண்டாவது தாக்குதல் முயற்சி.

கோட்டையின் வாசல் பக்கமாக உள்ளே செல்ல வேண்டிய அணியின் தலைவன் ரஞ்சன் தான். தாக்குதல் தொடங்கியது. ரஞ்சனும் அவனது தோழர்களும் முன்னேறினார்கள். ஒரு நிலையில் ரஞ்சனின் துப்பாக்கியை ரவை ஒன்று உடைத்தது. விழுந்த தோழனொருவனின் துப்பாக்கியை ஏந்தியபடி, ரஞ்சன்



கோட்டை மதிற்சுவரில் ஏறினான். ஆனால் அவனுடன் வருவதற்கு எவருமே இல்லை. முன்னேறி வந்த வழியெங்கும், அவனுடன் வந்தவர்களெல்லாம் மரணத்தை தழுவியும், காயமடைந்தும் விழுந்து கிடந்தனர்: அன்று புலிகள் பின்வாங்கினார்கள்.

சில நாட்களின் பின் கோட்டை முற்றுகை வெற்றி அடைந்தது. ரஞ்சன் தனது முகாமில் ஒரு கோட்டையை எழுப்பினான். அதில் கோட்டையில் விழுந்த ஒவ்வொரு போராளியையும் படமாகப் பதித்தான். ஒவ்வொரு நாள் உதயத்தின் பொழுதும் அவர்களில் தான் கண்விழிக்க வேண்டும் என நினைத்தான். மனது மேலும் மேலும் உறுதி பெற்றது. (தாக்குதலை நாடாத்த



வேண்டும்: ஆயுதங்களை எடுக்கவேண்டும்) அந்த நினைவே இரவிலும் வந்து போனது.

சிலாவத்துறை இராணுவ முகாம் தாக்குதல் சிறிய இராணுவ முகாமைக் கைப்பற்றும் பணியில் ஈடுபட்டவர்களில் ரஞ்சனும் ஒருவன். தாக்குதல் தொடங்கிச் சில நிமிடங்கள் சென்றன. இரண்டு இராணுவ முகாமிற்கும் மத்தியில் இருந்த காவலரண் புலிகளால் கைப்பற்றப்படுகிறது. அக்காவலரணில் இருந்த இலகு இயந்திரத் துப்பாக்கியை எடுத்தான் ரஞ்சன். அத்துப்பாக்கி இராணுவத்தினரை நோக்கி ரவைகளைக் கக்கத் தொடங்கியது. அதே நேரம், சிப்பாய் ஒருவனின் துப்பாக்கி ரவைகள் ரஞ்சனின் உடலிலும் விழுந்தன.

இன்று, ரஞ்சன் போராளியாக வாழ்ந்த மண்ணிலேயே அவன் பெயரைச் சொல்லும் சிறுவர் பூங்கா ஒன்று. அதில் அவனும் அவனது தோழர்களும் நிழற்படமாக நினைவுகளைச் சொல்லியபடியே நிற்கிறார்கள். ஒளிக்கதிர் தெறிக்கும் உதயங்களின் போதும், மழை இருள் கூடும் அந்தி நேரங்களிலும், சின்னஞ் சிறுசுகளெல்லாம் தாங்கள் நேசித்த சித்தப்பாவைப் பார்த்து, அவருடன் கதைத்து, அவரின் இலட்சியத்தில் கதைக்கிறார்கள். சித்தப்பாவின் கனவைப் போல, நாளைய தேசத்தின் ஆயுதமேந்திய காவல்காரர்களாக அவர்கள் வருவார்களாம்.

-கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை-

விடுதலைப் புலிகள் இதழிலிருந்து
குரல் -22 சித்திரை- வைகாசி 1991

# வீரவணக்கம்



நிலையுடன் பெயர்: மேஜர் ரஞ்சன் (சித்தப்பா)
நிலையான பெயர்: செல்வநாயகம் தயாளன்
வீரப்பிறப்பு: 17.03.1968
நிலையான முகவரி: தம்பசிட்டி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம்
நிகழ்வு: 20.03.1991 அன்று சிலாவத்துறை சிறீலங்கா படை முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவு
மேலதிக விபரம்: எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இம் மாவீரரின் நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ளது.




# பேரவலத்தின் சாட்சியாக முள்ளிவாய்க்கால் நினைவாலயம் அமைக்கப்படவேண்டும்

### வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராச ரவிகரன்

17.12. 2024

முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தில் பேரவலத்தின் சாட்சியாக, நினைவாலயம் ஒன்று அமைக்கப்படவேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றில் செவ்வாய்க்கிழமை (17) சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

2024 நவம்பர் 27நாளில் எமது மக்கள் தங்களின் உறவுகளுக்கு எதுவித இடர்பாடுமின்றி, அமைதியாக தமது அஞ்சலிகளைச்செலுத்தி தமது உணர்வலைகளை வெளிப்படுத்தி ஆறுதலடைந்தனர்.

அந்தவகையில் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாட்டிற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இலங்கைத்தீவில் காலங்காலமாக தொடர் இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழர்கள், 2009இல் இடம்பெற்ற இறுதிப் போரில் வார்த்தைகளில்டிக்க முடியாத துன்பத்தை அனுபவித்து இனவழிப்பிற்கு உள்ளாக்கப்பட்டனர்.

இறுதிப்போரின் வலிகள் இன்னும் ஆறாத நிலையில் அப்போரில் தமது உறவுகளை இழந்த ஏராளமான மக்கள் இன்னும் தம் உணர்வுகளுடன் நடைபிணங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தம்மை யாராவது காப்பாற்றமாட்டார்களா? என்ற ஏக்கத்தில் சின்னஞ் சிறியவர்கள் முதல், பெரியவர்கள் வரை ஏங்கித் தவித்த நிலை, "பசி, பசி" எனக் குழந்தைகள் அழும்போது செய்வதறியாத நிலையில் பெற்றோர்கள் கலங்கிய அவல நிலை, பதுங்குகுழிகளை விட்டு வெளியேவந்தால் தப்ப முடியாது என்றெண்ணி பதுங்குகுழிகளுக்குள்ளேயே தங்கியிருந்தநேரம் அதற்குள்ளேயும் குண்டுகள் விழுந்து உறவுகள் மடிந்தபோது உயிரிழந்த தமது உறவுகளைப் புதைப்பதற்கு இயலாமல் உடலங்களை அவ்வாறே விட்டு ஓடிய நிலமைகள், ஆகியவற்றை எண்ணிப்பாருங்கள்.

இலட்சக்கணக்கில் தமிழ் உறவுகளைப்பலி கொண்ட அந்தப் பேரவலம், தமிழ்த்தேசிய இனத்தின் கூட்டு மன உளவியலில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.


இந்தநிலையில் அங்கு உறவுகளை இழந்து, தற்போது வாழ்ந்து வருகின்ற மக்கள் தம் உறவுகளை நினைவுகூர்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நினைவிடம் தேவை என்பதை அங்குள்ள மக்கள் ஆதங்கத்துடன் கூறிவருகின்றனர்.

உயிரிழந்தோரை நினைவுகொள்ளும் விதத்தில் உலகின் மூத்தகுடிகளில் ஒன்றான தமிழ் இனம், மிக உயர் நாகரீக பண்பாடுகளைக்கொண்டுள்ளது. எம் இன வரலாற்றில் மிக அதிகமான மக்கள் உயிரிழந்த ஒரு அவலம். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட எம் உறவுகளை நினைவுகூர ஒரு நினைவாலயம் அமைக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

ஆழிப்பேரலையினால் உயிரிழந்த மக்களுக்கென முல்லைத்தீவில் மட்டுமல்ல, பல இடங்களில் நினைவுமண்டபம் அமைக்கப்பட்டு அதில் உயிரிழந்த ஒவ்வொருவருடைய பெயரும் குறிக்கப்பட்டுள்ளது.

இது காலாகாலத்திற்கும் உயிரிழந்தோரின் உறவுகளையும், சந்ததியினரையும் நினைவுகூர வழிசமைக்கின்றது.

அதேபோன்று முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவாகக் கட்டப்படும் ஆலயத்தில் உயிரிழந்தோரின் பெயர்கள் பொறிக்கப் படுவது தத்தமது உறவுகளை காலாகாலத்திற்கும் அவர்களின் சந்ததிகள் நினைவுகூர வசதியாக இருக்கும். எம் இனத்தின் பண்பாட்டையும் பிரதிபலிப்பதாகஅமையும்.



அந்தவகையில் தேசிய பேரவலத்தின் சாட்சியாக நினைவு ஆலயம் முள்ளிவாய்க்காலில் மே -18 நினைவுகூருமிடத்தில் அமைக்கப்படவேண்டும்.

இறந்தவர்களை நாங்கள் அடக்கம் செய்யும் போது கல்லறைகளை அதன்மேல் அமைக்கின்றோம். அந்தக்கல்லறைகளில் சம்பந்தப்பட்ட உறவுகள், நினைவு தினங்களில் பால் தெளித்து, படையல்களைப் படைத்து, பூக்கள் சொரிந்து, தீபங்கள் ஏற்றி தங்களுடைய மனக்கவலையை உள்ளத்திலிருந்து வெளிப்படுத்தி அழுது ஆற்றுகின்ற அந்த நிலைக்கு எமது மக்களையும் ஈடுபடுவதற்கு ஒரு நினைவாலயத்தை அமைப்பதற்கு எமது மக்களுக்கு அனுமதிதாருங்கள்.

இனப்பாகுபாடு பாராது, நாம் முள்ளிவாய்க்காலில் ஓர் நினைவாலயம் அமைப்பதற்கு அனுமதிதாருங்கள் எனக் கேட்டுக் கொள்கின்றேன் - என்றார்.

# மட்டக்களப்பில் கசிப்பு, போதைப்பொருள் விற்பனைகளுக்கு எதிராக மக்கள் போராட்டம்

17.12. 2024

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் முன்னெடுக்கப்படும் கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகளை தடுக்ககோரி கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல பகுதிகளில் கசிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையினால் பெரும் பிரச்சினைகள் ஏற்படுவதாக தெரிவித்து இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வவுணதீவு சிறீலங்கா காவல் நிலைய பொறுப்பதிகாரி யையும் சந்தித்த போராட்டக்காரர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்தனர்.

அங்குள்ள சிறீலங்கா விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் பிரதேசத்தில் காணப்படும் சட்ட விரோத கசிப்பு விற்பனை மற்றும் போதைப்பொருள் விற்பனைகளை தடுக்க உதவுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டதுடன் மகஜர் ஒன்றும் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரிக்கு வழங்கப்பட்டது.



அதனை தொடர்ந்து பேரணியானது மண்முனை மேற்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக வருகைதந்து அங்கும் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்த மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் யோகராஜாவுடன் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கலந்துரையாடினார்கள்.





# யாழ். சாவகச்சேரி நகர சபையை மூடி போராடிய வர்த்தகர்கள்

17.12. 2024

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி நகர சபையினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடைத்தொகுதியை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கடைகளின் வர்த்தகர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், வழங்க வேண்டும் என கோரி வர்த்தகர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாவகச்சேரி நகர சபைக்கு முன்பாக இன்றைய நாள் செவ்வாய்க்கிழமை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி நகர சபையால் அண்மையில் கட்டப்பட்ட புதிய கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக பகிரங்கமாக கேள்வி கோரப்பட்டுள்ளது.

கடை தொகுதியை புதிதாக நிர்மாணிக்க தொடங்கிய போது, கடந்த 2000 ஆம் ஆண்டு யுத்தத்தில் கடைகள் அழிவடைந்த நிலையில் உள்ள வர்த்தகர்களுக்கு புதிய கடைத் தொகுதியில் முன்னுரிமை வழங்கப்படும் என நகர சபையால் உத்தரவாதமளிக்க பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த வாக்குறுதியை மீறி கேள்வி கோரப்பட்டுள்ளதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், விண்ணப்பதாரி நகராட்சி மன்ற எல்லைக்குள் வசிக்க வேண்டும் என்ற நிபந்தினையை உள்ளடக்க வேண்டும் எனக்கோரியுமே இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது போராட்டக்காரர்கள் நகரசபையின் பிரதான நுழைவாயிலை பூட்டு பூட்டி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் பூட்டை உடைத்து அகற்றியதோடு போராட்டகாரர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த முனைந்தனர்.

அதன் போது, நுழைவாயிலை மறித்து நிலத்தில் அமர்ந்தவாறு தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.



போராட்டத்தய் அடுத்து குறித்த கேள்வி கோரலை இரு வாரங்களுக்கு ஒத்திவைக்குமாறு உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அதனை அடுத்து வர்த்தகர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.





# குடிநீருக்காக சிறீலங்கா இராணுவ முகாம் வாசலில் பூநகரி அரசபுரம் கிராம மக்கள்!


18.12. 2024

பூநகரி அரசபுரம் கிராமத்தில் பொதுமக்களிற்கு சொந்தமான 12 ஏக்கர் காணி இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டு அப்பகுதி மக்களுக்கு இருக்கின்ற ஒரே ஒரு குடிநீர் கிணறு இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

உலக தரிசனம் நிறுவனத்தினால் அப்பகுதி மக்களுக்காக 20 ஆண்டுகளுக்கு முன் கட்டி வழங்கப்பட்ட பொது குடிநீர் கிணறு இராணுவத்தினால் அதன் கட்டுப்பாட்டு எல்லைக்குள் அடைக்கப்பட்டுள்ளது. தினமும் மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை மக்கள் இராணுவ முகாமின் வாசலில் நீர் கொள் கலன்களை அடுக்கி வரிசையாக நின்று நீரினை பெறுதல் வேண்டும். இருபது லீட்டர் குடிநீர் மட்டுமே நாள் ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. முப்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்ற மக்களின் நெருக்கடி நிலை குறித்து எவரும் கண்டு கொள்ளவில்லையென கூறப்படுகின்றது.

இதனிடையே இராணுவ முகாம் அமைந்துள்ள வளாகத்திற்குள் 34 டிப்பர் வாகனங்களில் சுமார் 1000 தடவைகள் மண்ணை இராணுவத்தினர் கடந்த மாதம் விற்று உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# ஜனாதிபதி இந்திய பயணத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்த வேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன்

18.12. 2024

ஜனாதிபதி அநுரகுமார இந்திய பயணத்தில் வழங்கிய வாக்குறுதிமொழிகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் இந்திய பயணத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இருதரப்புப் பேச்சுவார்த்தைகள் மற்றும் கூட்டு பத்திரிகையாளர் மாநாடு குறித்தும் அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொடர்பிலும் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக இந்தியா சென்று வந்துள்ளார். ஜனாதிபதி அங்கம் வகிக்கும் மக்கள் விடுதலை முன்னணி என்ற கட்சி ஆரம்பத்திலிருந்து இந்திய எதிர்ப்பு வாதத்தை தனது கட்சியின் கொள்கையாகக் கொண்டிருந்தது.

இப்பொழுது தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சி அமைத்திருக்கக்கூடிய அனுர அரசாங்கமானது தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியாவிற்கு மேற்கொள்ளக் கூடிய அளவிற்கு பூகோள பிராந்திய அரசியல் சூழல் உருவாகியுள்ளது.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பொழுது அதில் இரண்டு ஷரத்துகள் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதில் ஒன்று ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பானது. இரண்டாவது இந்தியாவின் பாதுகாப்பிற்குக் குந்தகமான எந்தவொரு புற சக்திகளினதும் இடமாக இலங்கை இருக்கக்கூடாது என்பது.

அந்த வகையில் இப்பொழுது நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் இந்த இரண்டு விடயங்களும் மீண்டும் உறுதிபடப் பேசப்பட்டிருக்கின்றது. இந்தியாவினது பாதுகாப்பென்பது இலங்கையின் பாதுகாப்புடன் இணைந்தது என்பதை இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

அதனை ஏற்றுக்கொண்ட இலங்கை ஜனாதிபதி அவர்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்குக் குந்தகமான எந்தவொரு விடயமும் இலங்கை மண்ணிலிருந்து அனுமதிக்க மாட்டோம் என்பதை தெளிவுபடக்கூறியிருக்கின்றார். அதேபோன்று இந்தியப் பிரதமர் சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் நல்லுறவை பலப்படுத்த வேண்டும் என்றும் அதற்கு முக்கியமாக இலங்கை அரசாங்கம் ஏற்கனவே ஏற்றுக்கொண்டதைப் போல் அரசியல் யாப்பை முழுமையாக நிறைவேற்றி மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தும்படியும் கோரியுள்ளார்.

இந்திய அரசாங்கம் வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் தங்களது அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் தொடர்ந்தும் அக்கறையாக இருக்கின்றார்கள் என்பதை அவரது பேச்சுவார்த்தைகள் தெளிவுபடுத்துகின்றது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அந்த முயற்சிகளை வாழ்த்தி வரவேற்கின்றது.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் பல்வேறுபட்ட முக்கியமான விடயங்கள் பேசப்பட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்கின்றது. மின்சாரம், எரிபொருள் போன்றவற்றை கடல் நீருக்கடியினூடாக கொண்டுவருவதற்கான கொள்கை முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றது.

திருகோணமலை சம்பூரில் சூரியசக்தி மின்னுற்பத்தி நிலையத்தை உருவாக்குவதற்கும் இராமேஸ்வரம் தலைமன்னார் படகுச் சேவைக்கும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி இலங்கையில் மின்சக்தி உற்பத்திக்குத் தேவையான திரவ எரிவாயு வினியோகம் போன்ற பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு முடிவுகளும் எட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் இருதரப்பு உறவுகளுக்கு வலுச்சேர்த்துள்ள நிலையிலும் அரசியல் சாசனத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்தும்படி இந்தியா வலியுறுத்தியுள்ள சூழ்நிலையிலும் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய பரப்பில் களமாடும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இலங்கை தனது அரசியல் சாசனத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாணசபைத் தேர்தல்களை விரைவாக நடத்தும்படி இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டும்.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றும்படியும் மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்தும்படியும் இந்திய அரசாங்கம் கோரி வந்தது.

அதுமாத்திரமல்லாமல் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திலும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாணசபைத் தேர்தல்களை நடாத்தும்படி கூறிவந்துள்ளது. இப்பொழுது பதின்மூன்றாவது திருத்தம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் இலங்கையின் அரசியல் சாசனத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாணசபைத் தேர்தல்களை விரைந்து நடத்துமாறு கோரியிருப்பது என்பது இலங்கை அரசுடன் ஒரு சுமுகமான நல்லுறவை மேற்கொள்வதற்கான இந்தியாவின் ஒரு முயற்சியாகவே தோன்றுகின்றது.

இந்த நிலையில் எமது நீண்டகால நோக்கென்பது சமஷ்டியாகவோ அல்லது அதற்கு அப்பாற்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால், இன்றைய சூழ்நிலையில், தமிழ் மக்களது இருப்பைப்



பாதுகாக்கவும் அவர்களின் பிரதேசங்களைப் பாதுகாக்கவும் இந்தியாவின் ஒத்துழைப்புடன் மாகாணசபைக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதென்பது மிகமிக முக்கியமானது.

விமல் வீரவன்ச, சரத் வீரசேகர, உதய கம்மன்பில்ல போன்றவர்களும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்ற தோரணையில் மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று பேசுகின்றனர். ஜே.வி.பியும் புதிய அரசியல் சாசனம் வரும்பொழுது பதின்மூன்றாவது திருத்தம் இல்லாமல் செய்யப்படும் என்று கூறுகின்றார்கள்.

அதற்குப் பதிலாக தமிழ் மக்களுக்கான தீர்வு எவ்வாறு இருக்கும் என்பதைக் குறிப்பிடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. தமிழ் மக்கள் மத்தியிலிருந்தும் இது ஒற்றையாட்சிக்கு உட்பட்டது. இதனால் பிரயோசனம் இல்லை. ஆகவே அது நிராகரிக்கப்பட வேண்டும் என்று சொல்லக்கூடியவர்களும் இருக்கின்றார்கள்.

சிங்கள இனவாத சக்திகள் பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. தமிழ் மக்களை அடிமைகளாக நடாத்தவே விரும்புகின்றார்கள். ஆனால் ஆரம்பத்திலிருந்தே இந்தியா, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக கொண்டுவரப்பட்ட தீர்வினை நடைமுறைப்படுத்தும்படி தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

ஆகவே இன்றைய காலகட்டத்தில் ஒற்றையாட்சிக்குள் தீர்வு சாத்தியம் இல்லை என்றும் எனவே அதனை நிராகரிக்கின்றோம் என்றும் கருத்துகளை தெரிவிப்பதை விடுத்து, புதிய அரசியல் சாசனம் ஒன்றில் நாங்கள் கேட்கின்ற சமஷ்டி கோரிக்கை உள்வாங்கப்படும் வரையில் பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதை அனைத்து தமிழ் கட்சிகளும் அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்த வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

# வன்னிப் பாடசாலைகளிலுள்ள வளக்குறைகளைச் சுட்டிக்காட்டல்!

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

19.12. 2024

வன்னிப்பாடசாலைகளில் உள்ள வளக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாடசாலைகளுக்கான வளங்களைப் பகிரும்போது அனைத்துப் பாடசாலைகளுக்கும் வளங்களை சமமாகப் பகிருமாறும் கோரிக்கைவிடுத்துள்ளார்.

பாராளுமன்றில் சர்வதேச இறையாண்மை பிணைமுறி மறுசீரமைப்புதொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையிற்றும் போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

பாடசாலைகளுக்கு வளங்கள் சமச்சீராக (Equity) பகிரப்பட வேண்டும். இன்னமும் வன்னிமாவட்டத்தின் பலபாடசாலைகளில் இலத்திரனியல் மயப்பட்ட வளநிரப்பல் போதுமான அளவில் இல்லை. வன்னியில் முல்லைத்தீவு மற்றும், மன்னார் வலயங்களில் கணனி வளநிலையம் இல்லை. பாடசாலைகளில் கல்விசாரா ஊழியர்களாக சுகாதாரப் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லை. பாடசாலைப் பணியாளர், இரவு நேரக் காவலாளி போன்றோருக்குமான தேவைகள் உள்ளன. குறிப்பாக வன்னியில் போதுமான நிதியிடல் இல்லை. இன்றளவும் முல்லைத்தீவு கல்விவலயத்தில் ஒரு கணனியுடன் இயங்கும் பாடசாலைகள் உள்ளன.

அதேவேளை மாணவர்களிடையே விளையாட்டுக்களை ஊக்குவிக்கும் வகையிலான முழுமையான வளங்கள் வழங்கப்படவேண்டும். இந் நிலையில் மன்னார் மாவட்டத்தில் தோட்டவெளி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவி அன்ரன் ஜேசுதாசன் யதுர்சிகா பாடசாலைமட்டத் தேசிய மெய்வல்லுனர் போட்டியில் மகளிருக்கான ஈட்டி எறிதலில் தங்கம் வென்றுள்ளார். அதேவேளை முல்லைத்தீவு, கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகாவித்தியாலய மாணவி சுபாஸ்கரன் பவித்திரா தேசியரீதியிலான மல்யுத்தப்போட்டியில் தங்கம் வென்றுள்ளார்.

அதேபோல் முல்லைத்தீவுமாவட்டத்தைச் சேர்ந்த பத்து மாணவர்கள் தேசிய ரீதியிலான மல்யுத்தப்போட்டியில் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். அத்தோடு முல்லைத்தீவு வள்ளிபுனம் மகாவித்தியாலய மாணவன் ரதீஸ் சந்தோஷ், தேசிய ரீதியிலான குண்டுதள்ளுதல் போட்டியில் ஆறாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவர்களைப் வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் என்றவகையில் நான் பாராட்டி வாழ்த்துகின்றேன். இவ்வாறு வன்னியைச் சேர்ந்த மாணவர்கள் தேசிய ரீதியில் போட்டியிட்டு தங்கங்களையும், ஏனைய பதக்கங்களையும் பெறுகின்ற போதும், அந்த மாணவர்களுக்கும் பாரிய தேவைப்பாடுகள்



இருக்கின்றன. குறிப்பாக பயிற்றுவிப்பாளர்கள் போதாமை, பயிற்சி செய்வதற்கான முறையான மைதானங்கள் இன்மை, பயிற்றுவிப்பிற்கான உபகரணங்கள் இன்மை என பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே இது தொடர்பான விளையாட்டுத்துறை அமைச்சு இந்த விடயங்களில் கவனம் செலுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

www.sangathamil.ca

# யாழ் வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் இரவோடு இரவாக சட்டவிரோதமாக மணல் அகழ்வு

19.12. 2024

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் இரவோடு இரவாக சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதாக அப்பகுதி மக்கள் புதன்கிழமை (18) தெரிவித்தனர்.

ஆழியவளை பகுதியில் மணல் சட்டவிரோதமாக அகழப்படுவதாக பொலிசாருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டபோதும் அவர்களால் அந்த மணல் கொள்ளையை கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகிறது.

நள்ளிரவு நேரம் காவலாளர்கள் நிறுத்தப்பட்டு, JCB இயந்திரம் கொண்டு டிப்பர்கள் மூலம் மணல் கடத்தல்காரர்களினால் மணல் கொள்ளையிடப்படும் சம்பவம் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாதைகளை அழித்து வீதிக்கு அருகில் வைத்தே பெருமளவான மணல் வளம் சூறையாடப்பட்டு, மணல் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் சீரற்று காணப்படும் அந்த பாதைகளில் தற்போது பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கூறுகின்றனர்.

மணல் மேடுகளை அழிப்பதால் கடல் நீர் குடிமனைகளுக்குள் புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கிராம அலுவலர் ஊடாக மருதங்கேணி பிரதேச செயலர் மற்றும் மருதங்கேணி பொலிசாருக்கு அறிவித்தும் இதுவரை மணல் கொள்ளை தடுத்து நிறுத்தப்படவில்லை எனவும் பொலிசார் யாரையும் இதுவரை கைது செய்யவில்லை என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.



உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொலிசாருடன் இணைந்து ஆழியவளை கிராமத்தில் தொடர்ச்சியாக இடம் பெறும் மணல் கொள்ளையை தடுத்து நிறுத்தி, தமது கிராமத்தை பாதுகாக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மியன்மாரில் இருந்து 103 அகதிகளுடன் ள் முள்ளிவாய்க்கால் கரையை ஒதுங்கியது அகதிகள் படகு

19.12. 2024

முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் 103 மியன்மார் அகதிகள் அடங்கிய படகொன்று கரை ஒதுங்கிய சம்பவம் ஒன்று இன்று வியாழக்கிழமை (19) இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரைப்பகுதியில் மியன்மாரில் இருந்து 103 பயணிகளுடன் படகொன்று திசை மாறி வந்து கரையொதுங்கியுள்ளது. குறித்த படகில் 25 க்கும் மேற்பட்ட சிறுவர்களும் உள்ளடங்கியிருக்கின்றனர்.

அவர்களை மீட்டு கரைக்கு கொண்டுவரும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினர், சிறீலங்கா கடற்படையினர், இராணுவத்தினர், பொலிசார் ஈடுபட்டனர்.

குறித்த படகில் இருப்பவர்களுக்கு உணவுகள், உலருணவுகளை முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினர் வழங்கியிருக்கியுள்ளனர். படகில் காணப்பட்டவர்களில் சிலர்மயக்கமடைந்த நிலையிலும், சிலர் சுகயனமுற்ற நிலையிலும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.









# இலங்கையின் பொறுப்புக்கூறலை அர்தமுள்ளதாக்குமாறு கனடிய அரசாங்கத்திடம் சிவஞானம் சிறீதரன் எம்.பி கோரிக்கை

19.12. 2024

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு இனியும் கால நீடிப்பும் அரசியல் வெளியும் வழங்காது, குற்றவியல் பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச விசாரணையை நோக்கி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விதத்தில் அடுத்த தீர்மானத்தில் தகுந்த தர முயர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

இலங்கை தொடர்பான தீர்மானங்களைப் பிரேரிக்கும் மையக் குழு நாடுகளிடம் இந்தத் தரமுயர்த்தலை வேண்டுவதாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் தலைவருமான சிவ ஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கனடிய வெளிவிகார அமைச்சின் இந்தோ - பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதி அமைச்சர் வெல்டன் எப் உள்ளிட்ட கனடிய அரசியல் தரப்பினருடனான உத்தியோகபூர்வ சந்திப்பு வியாழக்கிழமை (19) கனடா - ஒட்டாவாவில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததோடு கோரிக்கை கடிதமொன்றையும் கையளித்துள்ளார்.

அக்கடித்தில், ஈழத்தமிழர் மீது திட்டமிடப்பட்ட தொடர்தேர்ச்சியான இன அழிப்பு இலங்கைத் தீவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று நாடாளுமன்றக் குழுத் தலைவராக நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழர்களின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி 1956 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய திருகோணமலைப் பிரகடனத்தில் எவ்வாறு இந்தத் திட்டமிடப்பட்ட இன அழிப்பை இலங்கை அரசு கட்டமைப்பு ரீதியாக மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதென்பதை ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான மறைந்த தந்தை செல்வா அவர்கள் ஆரம்பத்திலேயே தெளிவாக விளக்கியிருந்தார்.

அதன் ஒரு வடிவமாகவே ஒற்றையாட்சி அரசியலமைப்பு தொழிற்படுகிறதென்று சர்வதேச தரப்புகளை நோக்கி இலங்கை எதிர்நோக்கும் சிக்கல் என்ற வெளியீட்டை முதல் முதலாக சர்வதேசம் நோக்கி தமிழரசுக்கட்சி முன்வைத்திருந்தது. இது தொடர்பில் அன்று தொட்டு இன்று வரை சர்வதேசத்தின் பங்கை மக்கள் பிரதிநிதிகளாக நாம் வலியுறுத்திவருகிறோம்.

இலங்கைத் தீவு தொடர்பான பொறுப்புக்கூறல் அர்த்தமுள்ளதாகுவதெனில் அதைப் பின்வரும் மூன்று விதமாகப் படிநிலைப்படுத்தப்பட்ட முக்கியத்துவத்தோடும் ஒழுங்கோடும் அணுக வேண்டும் என்பது எமது பார்வையாக உள்ளது:

1) தலையாய சர்வதேசக் குற்றமான இன அழிப்புத் தொடர்பான பொறுப்புக்கூறல்

2) இதர சர்வதேசக் குற்றங்களான போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதை, வலிந்து காணமலாக்கப்பட்டமை ஆகியவை பற்றிய பொறுப்புக்கூறல்



3) மேற்குறித்த குற்றங்கள் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் பல பத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாது புரையோடிப் போயிருக்கும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை, குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் தனித்துவமான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் கூட்டாட்சி அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவதும் பொறுப்புக்கூறலின் முக்கிய பெறுபேறாக அமையவேண்டும்.

மேற்குறித்த மூன்று முனைகளில் அர்த்தமுள்ளவகையில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதிலும் மீள் நிகழாமையை உறுதிப்படுத்துவதிலும் பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளில் முதன்மையான நாடான கனடா நாடானது பின்வரும் வழிகளில் காத்திரமாக உதவ வேண்டும் என்று அனைத்து ஈழத்தமிழர் மற்றும் தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் வேண்டி நிற்கிறேன் என்றுள்ளது.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# புதிய அரசாங்கம் குறிப்பிட்ட எந்த விடயமும் தற்போது முன்னெடுக்கப்படவில்லை

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்

21.12. 2024

புதிய அரசாங்கம் தனது ஆட்சியிலே இடம்பெறுவதாக குறிப்பிட்ட எந்த விடயங்களும் தற்போது முன்னெடுக்கப்படவில்லை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் சனிக்கிழமை (21) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

13ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இந்தியா செயற்பட்டு வருகின்ற போதிலும் எமது புதிய அரசாங்கம் அதில் பெருமளவு கரிசனை காட்டவில்லை.

ஜனாதிபதி இந்தியா சென்று இந்திய பிரதமருடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். அனைத்து தமிழ் தரப்பினுடைய கோரிக்கையாக இருந்து வருவது சமஸ்டி கோரிக்கையாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமை அரசியலமைப்பில் இருந்தும் கூட அவை அமுல்படுத்தப்படவில்லை.

தற்போது இந்தியாவை சந்தித்த ஜனாதிபதி கூட அரசியல் உரிமை தொடரில் எந்த விதமான திட்டவட்டமான உறுதிமொழிகளையும் வழங்கவில்லை. அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்திருக்கிறார். புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் என்று தெரிவித்திருக்கிறார்.

அரசியலமைப்பு என்பது "பழைய மொந்தையிலே புதிய கள்" போன்று இருக்குமே தவிர எவ்வித தீர்வும் கொண்டதாக இருக்கப்போவதில்லை.

முதல் தடவையாக இனவாதத்தை கொண்டிருக்கக்கூடிய ஒரு அரசு பதவி ஏற்றிருக்கிறது. இவ்வாறு மிகப்பெரும் வெற்றி பெற்றும் கூட அவர்களது சிந்தனையில் பாரிய மாற்றம் இல்லை. ஒற்றை ஆட்சியை வைத்துக்கொண்டு தான் குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல செயற்பட்டு வருகிறார்கள்.

அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணைந்து எமது சுய நிர்ணய உரிமையை முன்வைப்பதற்கான கோரிக்கையை அரசாங்கத்துக்கு முன்வைக்க வேண்டும். பல உயிர் தியாகங்களை செய்த பின்பும் நாம் பிரிந்து செயற்பட முடியாது. எனவே அனைவரையும் ஒன்றுபடுமாறு அழைப்பு விடுவதாகவும் இதன்போது குறிப்பிட்டார்.

இதற்கு புலம்பெயர்ந்தவர்களும் ஈழத்தில் இருக்கக்கூடிய அத்தனை தமிழ்த் தேசிய அணியினரும் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

2013ஆம் ஆண்டு சட்டசபையில் ஜெயலலிதா அவர்கள் தமிழ் நாடு கோரிக்கை முன்வைத்து அதனை உறுதியுடன் செயல்படுத்தி இருந்தார். அதே கோரிக்கையோடு தான் தற்போது விஜய்யினுடைய கட்சியும் முன்னோக்கி செல்கிறது.



அதேபோல தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்களும் ஒரே கோரிக்கையுடன் பயணிப்போமாக இருந்தால் அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி 75 ஆண்டுகளை தாண்டியும் தற்போதும் தலைமைத்துவம் இல்லாத நிலையில் இலங்கை நீதிமன்றத்தை நாடுகின்ற நிலைமையே காணப்படுகிறது. எனவே அவர்கள் சமஸ்டியை கைவிட்டு ஒரு கூட்டு சமஸ்டி ஊடாக அனைவரையும் உள்வாங்கி முன்னோக்கி பயணிக்க வேண்டும் என்றும் சிவாஜிலிங்கம் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் ஜனாதிபதியின் இந்திய பயணம் தொடர்பாகவும் கருத்து வெளியிட்டார்.

# திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனலைதீவு கடற்தொழிலாளர்கள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர்!

21.12. 2024

தமிழக சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அனலைதீவை சேர்ந்த இரண்டு கடற்தொழிலாளர்கள் உள்ளிட்ட மூன்று கடற்தொழிலாளர்களும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு, உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 10ஆம் திகதி அனலைதீவு பகுதியில் இருந்து கடற்தொழிலுக்கு படகொன்றில் சென்ற இரு கடற்தொழிலாளர்களும், கடற்சீற்றம் காரணமாக தமிழக கடற்பரப்பினுள் தத்தளித்த நிலையில் , தமிழக கடற்தொழிலாளர்களால் மீட்கப்பட்டு தமிழக கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 30ஆம் திகதி நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இருவரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்பும் நோக்குடன் திருச்சி சிறப்பு முகாமில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை அவர்கள் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டு, உறவினர்களிடம் கையளிக்கப்பட்டனர்.

அவர்களுடன் மட்டக்களப்பை சேர்ந்த கடற்தொழிலாளர் ஒருவரும் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் , அவரையும் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் அழைத்து வந்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டார்.

அதேவேளை அனலைதீவு கடற்தொழிலாளர்கள் இருவரையும், அவர்களின் படகு மற்றும் அதன் வெளியிணைப்பு இயந்திரத்துடன் கடல் வழியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்களின் உறவினர்கள் கடந்த 03ஆம் திகதி ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சிறீலங்கா இராணுவத்தினர் காணியை விடுவிக்க வேண்டும் இல்லையெனில் காணி உறுதியுடன் உள்ளே வருவோம்

22.12. 2024

யாழ்ப்பாணம், தையிட்டி பகுதியில் ஆக்கிரமிக்கப்பட்டு, சிறீலங்கா இராணுவத்தினர் வசமுள்ள காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இல்லாதுபோனால் காணி உறுதிகளுடன் நாங்கள் உள்ளே நுழைவோம் என தையிட்டியை சேர்ந்த காணி உரிமையாளரான சுகமாரி சாருஜன் கூறியுள்ளார்.

காணி உரிமைக்கான மக்கள் கூட்டணியின் வடபிராந்திய சந்திப்பு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் நடைபெற்றது.

அதன் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் மௌனிக்கப்பட்டு 15 வருடங்கள் ஆகியும் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படவில்லை. கடந்த ஆட்சி காலங்களில் பல்வேறு வகையான போராட்டங்கள் ஈடுபட்டும், மகஜர்களை கொடுத்தும் எந்தவித பயனும் கிடைக்கவில்லை.

தற்போது வந்துள்ள ஆட்சி மாற்றத்தை தொடர்ந்து நாங்கள் மீண்டும் இதனை வலியுறுத்த வேண்டும் என்ற நாம் எதிர்பார்த்துள்ளோம்.



முப்படையினரின் அபகரிப்புக்கு அடுத்தபடியாக மதத்தின் பெயராலும் காணி அபகரிக்கப்பட்டுள்ளது.

தனியாருக்கு சொந்தமான 150 பரப்பு காணியை ஆக்கிரமித்து, மொரட்டுவ பல்கலைக்கழக கட்டடக்கலை நிபுணர் ஒருவர் பௌத்த தூபி ஒன்றை நிறுவியுள்ளார்.

பாதிக்கப்பட்ட நாம் போராட்டங்களை நடத்தினோம் ஆனால் முப்படை பாதுகாப்புடன் அங்கு பூசைகள் நடக்கிறது.

மிக விரைவாக எங்களுடைய காணிகள் எங்களுக்கு வேண்டும்.

நாட்டினுடைய பொருளாதாரத்தில் விவசாயம், கடற்றொழில் ஊடாக மிகப்பெரும் பங்காற்றிய வலி, வடக்கு மண்ணை ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தால், மக்கள் மீண்டும் பழைய நிலைக்கு வருவார்கள்.

காணிகளை மீட்பதற்காக எந்த நிலைக்கும் கீழிறங்க நாங்கள் தயாராக உள்ளோம். தீர்வு கிடைக்காவிட்டால் காணி உறுதிகளுடன் காணிகளுக்குள் நுழைவோம் எம்மோடு அனைத்து தரப்பினரும் வரவேண்டும் என தெரிவித்தார்.

# யாழ். பருத்தித்துறை – பொன்னாலை வீதியை புனரமைக்கக் கோரி வல்வெட்டித்துறையில் உண்ணாவிரத போராட்டம்

22.12.2024

யாழ்ப்பாணம், பருத்தித்துறை - பொன்னாலை வீதியை புனரமைக்கக் கோரி வல்வெட்டித்துறையில் அடையாள உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நீண்ட காலமாக புனரமைக்கப்படாது , கடல் அரிப்புக்கு உற்பட்டு வரும் சுமார் 12.8 km நீளமான வீதியினை புனரமைக்கக் கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறித்த போராட்டத்தில் அதிகளவான மக்கள் கலந்துகொண்டு தமது கையொப்பத்தை இட்டுச் செல்கின்றனர்.




இதன்போது எமது வீதி எமக்கானது புதிய அரசே புது வீதி அமைத்து தா?, ஓட்டுக்காக வீடு வந்தவரே வந்த வீதியை மறந்தது ஏன்?, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டம் முன்னெடுக்கப் படுகிறது.






# மதுபானசாலைகளை மூடுங்கள்: கிளிநொச்சியில் கண்டன பேரணி!

24.12.2024

கிளிநொச்சியில் அதிகரித்த மதுபான சாலைகளை மூடுமாறு கோரி இன்று செவ்வாய்க்கிழமை (24) கண்டன பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன்,

சிறீலங்கா ஜனாதிபதிக்கான மனு ஒன்றும் கையளிக்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான மதுபான சாலைகள் திறக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்துக் குறித்த போராட்டம் இன்றையநாள் முன்னெடுக்கப்பட்டது.

இப்போராட்டத்தின் போது அதிகரித்த மதுபான சாலைகளை மூடுமாறும் கோரி கிளிநொச்சி பசுமைப்பூங்கா முன்றலில் இருந்து ஆரம்பமாகி கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பேரணியைத் தொடர்ந்து சிறீலங்கா ஜனாதிபதிக்கான கோரிக் கைகள் அடங்கிய மகஜரை மத தலைவர்கள் இணைந்து மாவட்ட அரச அதிபர் சு.முரளிதரனிடம் கையளித்துள்ளனர்.

இப்போது போராட்டத்தில் கிளிநொச்சி மாவட்டத்தின் சிவில் சமூக அமைப்புகள் மதத் தலைவர்கள் மற்றும் வர்த்தக சங்கத் தினர் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் பெண்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.










# முதலில் கொலையாளிகளை தண்டிக்கட்டும்

## மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன்

24.12.2024

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசாங்கம் சட்டவாட்சியை பலப்படுத்தி கருத்து சுதந்திரத்திற் காக போராடியதற்காக கொல்லப்பட்டவர்கள் தொடர்பிலான குற்றவாளிகளை தண்டிக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளருமான ஞானமுத்து சிறிநேசன் கோரியுள்ளார்.

கொலையாளிகள் தண்டிக்கப்படாமல் உள்ளதோடு மட்டுமல் லாமல், கௌரவர்களாக உலாவி வருகின்றனர். அவர்களில் பலர் அதிகார சக்திகளால் பாதுகாக்கப்பட்டும் வருகின்றனர். சட்டவாட்சி வலுப்பெற்றால், அத்தகைய குற்றவாளிகள் தண்டிக்கப்படுவது உறுதியாகும்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான யோசப் பரராச சிங்கம், ரவிராஜ், சந்திரநேரு, சிவநேசன் ஆகிய தலைவர்கள் பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

மேலும், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தரும் பேராசிரியரு மான ரவீந்திரநாத் தலைநகரில் கடத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டதாக அறிய முடிகின்றது. சிரேஸ்ட விரிவுரையாளர் தம்பையா அவரது வீட்டில் இருக்கும் போது பகலில் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார்.

மேலும் திருமலை விக்கினேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டார். சிவராம், நடேசன், லசந்த விக்கிரமதுங்க, எக்னலிகொட, நிமலராஜன் போன்ற 40 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் 2006 தொடக்கம் 2015 இற்கு இடைப்பட்ட காலத்தில் கடத்தப்பட்டும், கொல்லப்பட்டும் உள்ளனர்.

அதனால் நாட்டின் மனிதவுரிமைகள் சட்டவாட்சி ஜனநாயகம் போன்ற விடயங்கள் கேவலப்படுத்தப்பட்டன. இவற்றுக் கெல்லாம் உரிய பரிகாரம் தேவையென்றால், சட்டவாட்சி பலப்படுத்தப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு முறையாக விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும்.

நாட்டின் கௌரவத்தை மீண்டும். கட்டியெழுப்ப ஜனாதிபதியும், தேசிய மக்கள் சக்தியும் முயற்சித்தால்வரவேற்புக் கிடைக்கும்.



இல்லையேல் முந்திய அரசாங்கங்கள் போன்றதாக இந்த அரசாங்கமும் அமைந்து விடும்." எனவும் சிறீநேசன் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பா.உ. பொ. கஜேந்திரகுமாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை

25.12.2024



கிளிநொச்சி மாவட்ட மக்களது தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பில் இன்று இடம்பறும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திற்காக பாராளுமன்ற உறுப்பினர் பொ.கஜேந்திரகுமார் அவகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்.

அரசாங்க அதிபர் - மாவட்டச் செயலகம் செயலாளர் - மாவட்ட ஒருங்கிணைப்பு குழு
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி

**பின்வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்காக**

காணி உறுதிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 1952, 1953, 1954, 1958 ஆகிய காலப்பகுதியில் வட்டக்கச்சி உருத்திரபுரம், இராமநாதபுரம் முருசுமோட்டை, கனகபுரம், கணேசபுரம் உட்பட மேலும் பல இடங்களில் அரசாங்கத்தினால் குடியேற்றத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அச்சந்தற்பத்தில் பொது மக்களுக்கு காணிகள் வழங்கும்போது அக்காணிகள் குடியிருப்பவர்களுக்குச் சொந்தமானதாகவிருக்கும் என்ற வாக்குறுதிகள் வழங்கப்பட்டே மக்கள் அங்கு குடியேற்றப்பட்டிருந்தார்கள். எனினும் குடியேற்றங்கள் நடைபெற்றபோது யாருடைய பெயரில் உறுதிகள் மற்றும் அனுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதோ அவர்களது பெயரிலேயே சுமார் 99 வீதமான உறுதிகளும் அனுமதிப்பத்திரங்களும் உள்ளன. குடியேற்றங்கள் நடைபெற்று சுமார் 72 வருடங்கள் கடந்த பின்னரும் அந்த மக்களுக்குரிய காணிகள் அவர்களுக்குச் சொந்தமானதாக மாற்றிக் கொடுக்கப்படவில்லை. அதனால் அக்காணிகளில் வசிப்பவர்கள் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சனைகளுக்கும் கொடுத்துவருகின்றார்கள். சட்டப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துவருகின்றார்கள்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்படி குடியேற்றத் திட்டங்களில் குடியேறியவர்களில் காணி உறுதிகள் மாற்றிக் கொடுக்கப் படாதவர்களது எண்ணிக்கை பிரதேச ரீதியாக எத்தனை?

கிளிநொச்சி மாவட்டத்தில் அனுமதிப்பத்திரங்கள் மூலம் காணிகள் வழங்கப்பட்டு தற்போது வரை அக்காணிகளுக்கு உறுதிகள் வழங்கப்படாதுள்ள உரிமையாளர்களது எண்ணிக்கை பிரதேச ரீதியாக எத்தனை?

ஆகிய தகவல்கள் எழுத்து மூலமாக வழங்குமாறும்

மேற்படி பிரச்சினைகளைத் தீர்க்குமுகமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் அந் நடவடிக்கையின் முன்னேற்றம் தொடர்பில் எழுத்து மூலமான அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கோருகின்றேன்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகள் அனைத்தும் கல்வித் திணைக்களத்தின் கீழ் கையளிக்க உடன் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

***பூநகரி பிரதேச செயலர் பிரிவு –***

பளையில் அமைந்துள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழு (LRC) காணிகளை அதே பகுதியிலுள்ள மக்கள் பெருந்தோட்டச் சபை (Janatha Estate Development Board) என்ற நிறுவனம் சட்டவிரோதமான முறையில் எந்தவொரு ஆவணமும் இல்லாமல் தனக்குச் சொந்தமான காணியென உரிமைகோரி வருவதுடன், LRC ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் சட்டபூர்வமாக பொது மக்களுக்கு வழங்கப்பட்ட காணிகளையும் உள்ளடக்கியதாக பெருமளவு காணிகளை சட்டவிரோதமான முறயில் புத்தளத்திலுள்ள **சிலோ பிளான்டேசன்** என்ற அமைப்புக்கு உபகுத்தகைக்கு வழங்கியுள்ளனர். இது தொடர்பில் விசாரணை நடாத்தப்படல் வேண்டும்.

பரன்மன்கிராய் -கல்முனை வீதி 16.1 கிலோ மீற்றர் கடந்த 15 ஆண்டுகளாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதனால் மக்கள் நாளாந்தம் பெரும் அவலத்துடன் குன்றும் குழியுமாக உள்ள கிரவல் வீதி ஊடாக பயணம் செய்கின்றார்கள். இவ் வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

***கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவு–***

கனகாம்பிகைக் குளத்தின் ஒரு பகுதியினை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து அதன் ஒரு பகுதியில் மண்கொட்டி நிரப்பப் பட்டமை தொடர்பாக கடந்த செப்ரெம்பர் மாதம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சுட்ட சுட்டிக்காட்டப் பட்டிருந்தது. அதனை அகற்றுவதற்கான தீர்மானங்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அது தொடர்பான முன்னேற்ற அறிக்கை எழுத்து மூலம் சமரப்பிக்க வேண்டும்.

2024 ஆம் ஆண்டுக்கான பாராளுமன்றத்தினூடான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் நிதி திருப்பப்பட்டமை தொடர்பில் விசாரணை வேண்டும்.

கிளி/கோணாவில் மகா வித்தியாலத்தில் பாராளுமன்ற உறுப்பினராகிய எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் திறந்த வெளி அரங்கின் கூரைத் திருத்தத்திற்கென ரூபா. 300, 000.00 (முந்நூறாயிரம்) வும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் கிளி/கோணாவில் மகா வித்தியாலத்திற்காக திறந்தவெளி அரங்கம் அமைப்பதற்கென ரூபா.1,800,000.00 (பதினெட்டு இலட்சம்) வும் ஒதுக்கப்பட்டது. குறித்த நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக கரைச்சி பிரதேச செயலகத்தின் 2024-07-30 திகதியிடப்பட்ட KR/DS/PL/DCBP/2024 ஆம் இலக்க கடிதம் மூலம் குறித்த பாடசாலைக்கு தகவல் KR/DS/PL/DCB/CON/2024/08 இலக்க வேலை ஒப்பந்தத்தில் 2024-10-04 ஆம் நாளன்று கரைச்சி பிரதேச செயலாளர் திரு.த.முகுந்தன் அவர்களும் கிளி/கோணாவில் மகாவித்தியாலயத்தின் முதல்வர் திரு.சே.அம்பிகைபாகன் அவர்களும் கைச்சாத்திட்டிருந்தார்கள். அதன் பின்னர் பாடசாலை நிர்வாகத்தால் அரச நிதி ஒழுங்கு விதிகளுக்கேற்ப 2024-10-22 ஆம் நாளன்று கூலி ஒப்பந்தகாரர்களுக்கு அவ்வேலையை வழங்கியிருந்த நிலையில் சனாதிபதி அலுவலகத்தின் PS/PIMD/07/11 ஆம் இலக்க 2024-10-28 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் மேற்குறித்த வேலையினை இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்ட நிலையில் குறித்த வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறித்த வேலைத்திட்டம் தொடர்பான அறிவித்தல் 2024-07-30 ஆம் கிடைக்கப்பெற்ற நிலையில் இரண்டுமாத காலம் வரை வேலைக்கான திட்டமிடல்களையும் கட்டுமான அளவுத் திட்டங்களையும் (BOQ) தயாரிப்பதற்கு இழுத்தடிக்கப்பட்டமைக்கான காரணங்களை தெளிவுபடுத்துவதுடன் குறித்த வேலைத்திட்டத்திற்கான நிதி தடுக்கப்பட்டமைக்கான காரணம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். ஆத்துடன் நிறுத்தப்பட்ட குறித்த வேலையை தொடர்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இவ்விடயத்தில் முன்னேற்றம் தொடர்பில் எழுத்து மூலம் பதில் தரப்படல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் முப்படையினர், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலீசாரது பிடியிலுள்ள தனியார் காணிகள் மற்றும் அரச காணிகள், பொது அமைப்புக்களுக்கான காணிகள் பற்றிய விபரங்கள் (அமைவிடம், விஸ்தீரணம் மற்றும் எவ்வளவு காலம்) மற்றும் அக்காணிகளுக்குச் சொந்தமான தனியாரதும் பொது அமைப்புக்களது விபரங்கள் என்பன எழுத்து மூலம் தரப்படல் வேண்டும்.

# மாமனிதர் ஜோசெப் பரராசசிங்கம் அவர்களின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்

25.12.2024





மாமனிதர் ஜோசெப் பரராசசிங்கம் பாராளுமன்ற உறுப்பினர் கடந்த 25.12.2005 மட்டக்களப்பில் தேவாலயத்தில் பாலன் பிறப்பு வேளையில் வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை மிலேச்சத்தனமான முறையில் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார். அவரது 19 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் பொன்மாஸ்டர் தலைமையில் இன்று இடம்பெற்றது.

# கண்ணீர் கடலில் மூழ்கிய யாழ். உடுத்துறை ஆழிப்பேரலை பொது நினைவாலயம்!

26.12.2024

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 20 வது ஆண்டு நினைவு நாள் இன்றைய நாள் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வடமராட்சி உடுத்துறையில் உள்ள சுனாமி பொது நினைவாலயத்தில் உறவுகளால் நினைவுகூறப்பட்டது.

சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு 9.25 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் படங்களுக்கு மாலையிட்டு, தீபங்கள் ஏற்றி உணவுகளை படையலிட்டு உறவுகள் வணக்கம் செலுத்தினர்.












# ஆழிப்பேரலையின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழகம்!

26.12. 2024

2004.12.26ம் திகதியன்று உலகத்தின் பெருமளவான பகுதிகளைப் பேரழிவுக்கு உள்ளாக்கிய ஆழிப்பேரலையின் 20ம் ஆண்டு நினைவேந்தல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் இன்றைய நாள் (2024.12.26) 12 மணி










யளவில் மேற்கொள்ளப்பட்டது.

உலகெங்கும் குறிப்பாகத் தமிழ்த்தேசத்தில் இப் பேரலை ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றியும் கருத்துரையாடப்பட்டதுடன் உயிரிழந்தவர்களுக்காக அகவணக்கம் செலுத்தி, ஒளிச்சுடர் ஏற்றி மலர் வணக்கமும் செலுத்தப்பட்டது.

# ஆழிப்பேரலையின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் முள்ளியவளை கயட்டையடி ஆழிப்பேரலை நினைவிடத்தில் இடம்பெற்றது!

26.12. 2024

ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களை விதைத்த இடமான முல்லைத்தீவு - முள்ளியவளை, கயட்டையடி ஆழிப்பேரலை நினைவிடத்தில், ஆழிப்பேரலை 20ஆம் ஆண்டு நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.



அந்தவகையிலா ஆழிப்பேரலையின்போதே உறவுகளை இழந்த வே.பரமேந்திரம் அவர்களால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.





அதனைத் தொடர்ந்து சமநேரத்தில் ஏனைய சுடர்களும் ஏற்றப்பட்டதுடன், மலர்தூவி, படையல்களைப் படைத்து உறவினர்களால் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், ஆழிப்பேரலையில் உயிர்நீத்தவர்களின் உறவுகள் என பலரும் பங்கேற்றிருந்தன.



www.sangathamil.ca

# முல்லைத்தீவு சுனாமி நினைவாலயத்தில் உணர்வெளிச்சியுடன் இடம்பெற்ற ஆழிப்பேரலை 20ஆம் ஆண்டு நினைவேந்தல்

26.12.2024



ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்பட்டு இரண்டு தசாப்தகாலங்கள் கடந்துள்ளன. கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப் பேரலை அனர்த்தத்தில் முல்லைத்தீவுமாவட்டத்தில் பெருமள வான மக்கள் உயிரிழந்தனர்.

இவ்வாறு ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்டவர்களின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவு சுனாமி நினை வாலயத்தில் 26.12.2024 இன்று உணர்வெளிச்சியுடன் மேற் கொள்ளப்பட்டது.

உயிரிழந்தவர்களின் உறவுகள் கதறி அழுது கண்ணீர் மல்க, தமது உயிரிழந்த உறவுகளுக்கு மலர் தூவி, தீபமேற்றி, உணவுப்பொருட்களைப் படையலிட்டு உணர்வுபூர்வமாக அஞ்சலிகளை மேற்கொண்டனர்.

அதேவேளை உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி மத வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

மேலும் இந்த நினைவேந்தல் வணக்க நிகழ்வுகளில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.குண பாலன் கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் திருமதி. இராஜஜோகினி ஜெயக்குமார், முல்லைத்தீவு மாவட்ட சமுகசேவைகள் உத்தியோகத்தர் நடராசா தசரதராஜகுமாரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.








# ஆழிப்பேரலையால் உயிரிழந்த கள்ளப்பாடு பாடசாலையின் 68 மாணவர்களுக்கு நினைவு வணக்க நிகழ்வு

26.12.2024

கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும்போது ஆழிப்பேரலையினால் உயிரிழந்த 68 மாணவர் களுக்கு 26.12.2024இன்று கள்ளப்பாடு பாடசாலையில் அஞ்சலி மேற்கொள்ளப்பட்டது.









ஆழிப்பேரலையில் உயீர்நீத்த மாணவர்களின் பெற்றோர் மற்றும், உறவினர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ் வானது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஆரம்பமானது.

அந்தவகையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொதுச்சுடரினை ஏற்றி நினைவேந்தல் நிகழ்வினை ஆரம்பித்துவைத்தார்.

தொடர்ந்து உயிர் நீத்த மாணவர்களின் நினைவாக கள்ளப்பாடு பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தூபிக்கு மலர் தூவி தீபங்களேற்றி வணக்கம் செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், காணி உத்தியோகத்தர் சோதிநாதன் சேந்தன், கரைதுறைப்பற்று பிரதேசசபைச் செயலாளர் திருமதி.இராஜயோகினி ஜெயக்குமார், கள்ளப்பாடு அ.த.க பாடசாலை அதிபர் ம.சுரேஸ்தரன், பிரதிஅதிபர் திருமதி. அகிலா விஜயரட்ணம், உயிரிழந்த மாணவர்களின் பெற் றோர்கள் மற்றும், உறவினர்கள், பழைய மாணவர்கள், பாட சாலை ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



மேலும் இதன்போது ஆழிப்பேரலையில் உயிரிழந்த மாணவர் களின் நினைவாக உதவுங்கரங்கள் அமைப்பால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந் தமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆழிப்பேரலை 20 ஆம் ஆண்டு நினைவேந்தல் கண்ணீரில் மிதந்த முல்லை. கள்ளப்பாடு

26.12.2024

கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் முல்லைத்தீவு - கள்ளப்பாட்டைச் சேர்ந்த பொருந்திரளான மக்கள் உயிரிழந்தனர்.

இந் நிலையில் இவ்வாறு உயிரிழந்தவர்களின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 26.12.2024இன்று கள்ளப்படு உதயம் விளையாட்டுக்கழக மைதானத்தில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.






அந்தவகையில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவேந்தல் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அழிப்பேரலையில் உறவுகளைப் பறிகொடுத்த இராசதுரை தவராசா மற்றும், மேரிஜோசெப் தங்கரத்தினம் ஆகியோர் இணைந்து பொதுச்சுடரைஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஆழிப்பேரலையின்போது உயிரிழந்த உறவுகளின் திரு உருவப்படத்திற்கு மலர்தூவப்பட்டு, சுடரேற்றப்பட்டதுடன், ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து தமது நினைவு வணக்கங்களை உணர்வெழுச்சியுடன் மேற்கொண்டனர்.

மேலும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை செயலாளர் திருமதி.இராஜஜோகினி ஜெயக்குமார், காணி உத்தியோகத்தர் சோதிநாதன் சேந்தன், கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் சு.கரிகாலன், கள்ளப்பாடு வடக்கு கிராம உத்தியோகத்தர் ஸ்ரீ.கௌசல்யா, கள்ளப்பாடு கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், மீனவஅமைப்புக்களின் பிரதிநிதிகள், கள்ளப்பாடு கிராமமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# மீண்டும் கிளிநொச்சியில் வெள்ளைவான்: ஊடகவியலாளர் மீது தாக்குதல்

26.12. 2024

கிளிநொச்சி மாவட்ட ஊடகவியலாளர் சுயாதீன ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வனை கிளிநொச்சி நகரில் வானில் கடத்தும் முயற்சியொன்று இன்று வியாழக்கிழமை மாலை நடந்தேறியுள்ளது.

கடமை நேரத்தின் பின்னராக மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக்கொண்டிருந்த தமிழ் செல்வனை பின்தொடர்ந்து வந்திருந்த வான் யாழ்.-கண்டிவீதியில் வழிமறித்து கடத்தலை முன்னெடுக்க முற்பட்டுள்ளது.

இந்நிலையில் கடத்தல்காரர்களிடமிருந்து தப்பித்து செல்ல முயன்ற வேளை அவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவின் தமிழ் செல்வன் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வன்னியில் முன்னெடுக்கப்படும் சுற்றுச்சூழல் அழிப்பு மற்றும் பரவி வரும் போதைபொருள் கடத்தல்கள் தொடர்பில் தொடர்ச்சியாக அம்பலப்படுத்திவரும் தமிழ் செல்வன் தகவல் அறியும் சட்டமூலம் தகவல்களை பெற்று பல ஊழல்களை அம்பலப்படுத்தும் முன்னணி ஊடக செயற்பாட்டளாராகவும் உள்ளார்.

இதனிடையே தமிழ் செல்வன் கடத்தல் முயற்சியை வன்மையாக கண்டித்துள்ள யாழ்.ஊடக அமையம் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணை தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மற்றும் ஊடக அமைச்சரிடம் கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

இதேவேளை கடத்தலிற்கு பயன்படுத்தப்பட்ட வாகனத்தின் சாரதியை அடையாளம் காண்பிக்க தயாராக இருப்பதாக தமிழ் செல்வன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**எமது மக்கள் சிங்கள இனவாத அடக்குமுறையின் அக்கினிப் பட்டறையில் புடம்போடப்பட்டவர்கள்; அரசியல் பயங்கரவாதத்தில் அகோரங்களைச் சந்தித்தவர்கள்; துன்பச்சிலுவையைச் சதா சுமந்து பழகியவர்கள்; மரணத்தின் நிழலில் படுத்துறங்கி வாழ்பவர்கள்**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

www.sangathamil.ca

# மட்டக்களப்பில் ஆழிப்பேரலையில் உயிரிழந்தோரின் 20 ஆம் ஆண்டு நினைவேந்தல்

26.12.2024

இலங்கையில் மிக உயரமான சுனாமி நினைவுத்தூபியை கொண்டிருப்பதும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி அனர்த்ததின்போது அதிக உயிரிழப்புகளை எதிர்கொண்டதுமான நாவலடி கிராமத்தில் உள்ள சுனாமி நினைவுத்தூபியில் இன்றைய நாள் உணர்வுபூர்வமான நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

நாவலடி சுனாமி நினைவுக்குழுவின் ஏற்பாட்டிலான இந்த நிகழ்வில் நாவலடி சித்திவிநாயகர் ஆலயத்தில் காலையில் விசேட பூஜைகள் நடைபெற்றன.

அதனை தொடர்ந்து சுனாமி நினைவுத்தூபியில் நினைவேந்தல் நினைவுகூறப்பட்டது.

இதன்போது விசேட ஆத்மசாந்தி பூஜைகளை தொடர்ந்து, உயிர்நீத்த உறவுகளால் சுடர் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தப்பட்டதுடன் வழிபாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இதேவேளை, நாவலடி கடற்கரையிலும் உயிர்நீத்தோரின் ஆத்மசாந்திக்காக விசேடபூஜைகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் அருட்தந்தையர்களான ஜோசப் மேரி, க.ஜெகதாஸ் அடிகளார் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பூ.பிரசாந்தன், இரா.துரைரெட்னம், முன்னாள் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



இதேபோன்று மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் நினைவுத்தூபியிலும் நினைவேந்தல் உணர்வூர்வுமாக முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு நாவலடி, புதுமுகத்துவாரம் பகுதியில் சுனாமி அனர்த்தம் காரணமாக சுமார் 1100க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.







# ஆழிப்பேரலையின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழீழமெங்கும் நினைவுகூறப்பட்டுள்ளது

26.12. 2024

ஆழிப்பேரலை எனும் கடல்கோளால் காவு கொள்ளப்பட்ட உறவுகளின் 20 வது ஆண்டு நினைவேந்தல் இன்று தமிழீழமெங்கும் நினைவுகூறப்பட்டுள்ளது.

2004 அன்று தென்கிழக்கு ஆசிய நாடுகள் 13 ஐ சுனாமி என்கின்ற ஆழிப்பேரலை மிகமிக மோசமாக தாக்கியது.

இந்தோனேசியாவில் சுமத்திராதீவில் உருவாகிய பூமி அதிர்வு ஆழிப்லேரலையாக மாறி சுற்றியுள்ள நாடுகளைத்தாக்கியதுடன் இலங்கையில் உள்ள 25 மாவட்டங்களிலும் உள்ள 15கரையோர மாவட்டங்களில் 11 மாவட்டங்களை நேரடியாக தாக்கி 26777. மனித உயிர்கள் காவுகொண்டது.

சுனாமியால் வடக்கு கிழக்கில் 17200 பேர் உயிரழந்தும் 30 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தும் இருந்தனர்.

அந்தவகையில் இலங்கையில் அதிகளவான மக்கள் உயிரிழந்த மாவட்டமாக அம்பாறை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் 9051 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் நாவலடி என்னும் ஒருகிராமம் முற்றக கடலில்மூழ்கி இல்லாமல்போயிருந்தது. மாவட்டத்தில் 2975பேர் உயிரிழந்தனர், திருகோணமலை மாவட்டத்தில் 984பேர் உயிரிழந்தனர்.

முல்லைத்தீவு மாவட்டமும் அதிகளவான உயிரிழப்புக்களை சந்தித்திருந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் 2902 பேர் உயிரிழந்தனர்.

கிளிநொச்சிமாவட்டம் ஆழிப்பேரலையில் நேரடியாகப்பாதிக்கப்படவில்லை எனினும் மறைமுகமாக அதாவது தொழில் நிமிர்த்தமும் உறவினர்களின் வீடுகளில் முல்லைத்தீவுக்கும் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிகிழக்குப் பிரதேசங்களுக்கும் சென்றிருந்தவர்களில் 32 பேர் உயிரிழந்திருந்தனர். யாழ்ப்பாண



மாவட்டத்தில் 1256 பேர் உயிரிழந்தனர்.

இறந்தவர்களில் 1250பேர் வடமராட்சிகிழக்கைச் சேர்ந்தவர்கள் ஆவர். 6 பேர் மட்டும்தான். இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் 4500பேர் உயிரிழந்தனர். காலிமாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் 3774பேர் உயிரிழந்தனர். மாத்தறை மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் 1061பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் இன்று வடகிழக்கிலும் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது,

# கிளிநொச்சியில் 36 சதவீதமான காணிகள் இராணுவத்தின் வசம்: விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு சிறீதரன் எம்.பி. கோரிக்கை!

27.12.2024

கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத் திட்டமிடலுக்குரிய காணிகளில் 36 சதவீதமானமை, போர் முடிவுற்ற 14 ஆண்டுகளின் பின்னரும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமலுள்ளமை மாவட்டத்தின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்பு, பூர்த்தி செய்யப்படாத வீட்டுத்திட்டங்களுக்கான விசேட நிதியீட்டங்களை குறித்த பயனாளிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல், மதுபானசாலைகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்தல் மற்றும் வெள்ளப் பாதிப்பினால் சேதமடைந்த வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சார்ந்த முன்மொழிவுகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடந்த 20ஆம் திகதி எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அதனடிப்படையில், வியாழக்கிழமை (26) நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகம், கலாசார மண்டபம் அமைக்கப்பட்டிருந்த காணி, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கு உகந்த சந்திரன் பூங்காக் காணி உள்ளிட்ட நகரப்புறக் காணிகள் பலவற்றை இன்றளவும் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, நகரின் முதன்மைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் மைதானத்துக்கான பாதையை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட சமநேரத்தில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது.

441 ஏக்கர் விஸ்தீரணமுடைய வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையின் 410 ஏக்கர் காணி தற்போதும் இராணுவத்தின் வசமுள்ளது.

இதனை விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கும் பட்சத்தில் இந்த மாவட்டத்தின் நூற்றுக்கணக்கானோருக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதால் பொதுப் பயன்பாட்டுத் தேவைகளுக்குரிய காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.



மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் வகையில் அமைவிடத்தைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுப்பயன்பாட்டு நிறுவனங்களை அண்மித்தும், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை மூடுவதென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதன் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் சிறீதரன் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு கிழக்கில் சுனாமி அனர்த்த நிவாரணம் மீள்கட்டுமானமும் ஜே.வி.பியின் செயற்பாடும்

27.12. 2024

வடக்கு கிழக்கில் சுனாமி அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமான பணிகளைச் செயல்படுத்த, அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் Post-Tsunami Operational Management Structure (P-TOMS) என்கின்ற பொதுக்கட்டமைப்புக்கு உடன்பட்டிருந்தனர்.

இந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு அரசியல் அதிகாரம் இருக்கவில்லை . அதே போல P-TOMS உருப்படியான எந்த நிர்வாக வலிமையும் கொண்டிருக்கவில்லை . மாறாக, இது மிக வரையறுக்கப்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட மிக ஒரு தற்காலிக மனிதாபிமான ஒழுங்கமைப்பாக உருவாக்கப்பட்டிருந்தது.

ஆழி பேரலையில் உயிர், உடைமைகள், வீடு வாசல்கள், தொழில் ஆதாரங்கள் உட்பட அனைத்தையும் இழந்து நிர்கதியாகி நின்ற அப்பாவி மக்களுக்கு மறுவாழ்வளிக்கவே P-TOMS உருவாக்கப்பட்டது. ஆனால் ஜேவிபி மேற்படி பொது இணக்கப்பாட்டை தனிநாடு நோக்கிய வரைபடமாக சித்தரித்தது. நாடு பூராகவும் பெருமெடுப்பில் போராட்டங்களை நடத்தியது.

ஜேவிபியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். குறிப்பாக அடிப்படை உரிமை மீறல் வழக்குகளை இன்றைய அமைச்சர் திரு சுனில் ஹந்துநெத்தி அவர்களே ஒழுங்கமைத்தார். ஜேவிபியின் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஏற்று கொண்ட உச்ச நீதிமன்றம் பொதுக்கட்டமைப்பு கிளிநொச்சியில் இயங்க தடை விதித்தது.

அதே போல P-TOMS திட்டங்களை உருவாக்கவும் நிர்வகிக்கவும் தடை விதித்தது. P-TOMS நிதியம் உருவாக்கவும் தடை விதிக்கப்பட்டது. இதுமாத்திரமின்றி திட்ட முகாமைத்துவ குழு செயற்படவும் அனுமதி மறுக்கப்பட்டது. இந்த நீதிமன்ற தீர்ப்பின் மூலம் P-TOMS முழுமையாக நீர்த்து போக செய்யப்பட்டது.

இயற்கை பேரழிவில் ஒரே நாளில் 6,000 உயிர்களை பலிகொடுத்த அப்பாவி மக்களுக்கான மறுவாழ்வு பொறிமுறை முற்றாக முடக்கப்பட்டது. தீர்ப்பு வெளியாகிய வேளையில், நீதிமன்ற வாயிலில் இன்றைய அமைச்சர்களான திரு விஜித ஹேரத், திரு சுனில் ஹந்துநெத்தி, திரு சந்திரசேகரர் உள்ளிட்டோர், வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

எங்கள் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை ஜேவிபி நேர்மையாக அணுகும் என எதிர்பார்க்கும் சில தரப்புகள்,



இன்றைய ஆழிப்பேரலை நினைவு நாளிலாவது, அப்பாவி மக்களின் மறுவாழ்வுக்கு எதிராக ஜேவிபி ஆடிய சன்னதங்கள் தொடர்பான வரலாற்று உண்மைகளை தெளிவாக புரிந்து கொள்வது அவசியம்.

# வெடுக்குநாறிமலையில் தமிழர்களின் நிம்மதியான வழிபாட்டுக்குரிய வழிவகைகளை ஏற்படுத்துங்கள்

### வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

27.12. 2024

வவுனியா வடக்கு - ஒலுமடு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் தமிழ்மக்கள் நிம்மதியான முறையில் வழிபடுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

அந்தவகையில் குறித்த வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தை பதிவுசெய்யவும், ஆலயத்திற்கான காணியை வனவளத் திணைக்களத்திடமிருந்து விடுவிக்கவும், ஆலயவளாகத்தில் குழாய்க்கிணறு அமைப்பதற்கான அனுமதியை வழங்கவும், ஆலயத்திற்கான பிரதான வீதியை சீரமைக்கவும், மலையுச்சியிலுள்ள சிவலிங்கத்திற்கு ஏற்னவே இருந்ததைப்போல சிறிய கூடாரம் அமைக்க அனுமதியளிக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் 27.12.2024இன்று இடம்பெற்ற நிலையில், குறித்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வெடுக்குநாறிமலையில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கோ, பொது மக்கள் சென்றுவருவதற்கோ எவ்வித தடையுமில்லை என்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பிற்கு அமைவாக அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.
இவ்வாறு அங்கு மக்கள் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றபோதும், இந்த ஆலயத்திற்குச் செல்வதற்கான பிரதான வீதி மக்கள் பயன்படுத்தமுடியாத நிலையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த கால ஆட்சியாளர்கள் அவ்வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. தற்போது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கமானது அவ்வீதியை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு குறித்த ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாடுகளுக்காகச் சென்ற அடியவர்கள் குடிநீர் இன்றி மிகுந்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்திருந்தனர். இந்நிலையில் தண்ணீர் தாகத்தால் தவித்த அடியவர்களுக்கு நீர் எடுத்துச்செல்லப்பட்டபோது பொலிசாரால் குடிநீர் கோவில் வளாகத்திற்குள் எடுத்துச்செல்லமுடியாது எனவும் தடுக்கப்பட்டது.

இந் நிலையில் காலையில் கோவிலுக்கு வழிபாடுகளுக்குச் சென்ற மக்களோடு நானும் சென்றிருந்தேன். இந்நிலையில் மாலைவரை தாகத்தால் தவித்து, குடிநீர் வராததால் கோவில் வளாகத்திலிருந்த நீரோடையில் நீரை எடுத்து அருந்த வேண்டிய நிலையும் ஏற்பட்டிருந்தது.

இந் நிலையில் குடிநீரைப் பெறுவதற்காகவும், ஆலயவழிபாடுகளுக்கான நீரைப்பெறும் நோக்கிலும் ஆலயநிர்வாகத்தினர் தற்போது ஆலயவளாகத்திலேயே குழாய்க்கிணறு ஒன்றினை அமைப்பதற்கு தயாராக இருக்கின்றனர். எனவே ஆலயவளாகத்தில் குழாய்க்கிணறு அமைப்பதற்கான அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
அதேவேளை குறித்த வெடுக்குநாறிமலை அமைந்துள்ள பகுதி தற்போது வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. எனவே ஆலயவளாகம் வனவளத் திணைக்களத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.



அத்தோடு குறித்த ஆலயம் பதிவுசெய்வதற்கு பல்வேறு இடையூறுகள் ஏற்படுத்தப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே இந்த ஆலயத்தை பதிவுசெய்வதற்கு இடையூறாக இருக்கின்ற விடயங்களைக் களைந்து. கூடிய விரைவில் பதிவுசெய்வதற்கான நடிக்கை எடுக்கப்படவேண்டும்.

மேலும் குறித்த ஆலயத்தில் இனந்தெரியாதவர்களால் விக்கிரகங்கள் திருடப்பட்டிருந்தன. பின்னர் நீதிமன்ற அனுமதியுடன் ஆலய விக்கிரகங்கள் ஆலய நிர்வாகத்தினரால் வைக்கப்பட்டு வழிபடப்படுகின்றது. இந் நிலையில் மலை உச்சியிலுள்ள சிவலிங்கத்தின்மேலாக ஏற்கனவே இருந்ததைப்போல சிறிய அளவிலான பாதுகாப்புக் கூடாரம் அமைப்பதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சிகள் மேற்கொண்டபோது தடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகின்றது. எனவே குறித்த பாதுகாப்புக் கூடாரம் அமைக்கவும் அனுமதி வழங்கப்படவேண்டும் - என்றார்

# தமிழீழ விடுதலைப்புலிகள் பாதுகாத்த எமது பெருமளவு நிலங்களை வன இலாகா அபகரித்துள்ளது; உடனடியாக விடுவிக்கப்படவேண்டும்

## வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன்

27.12.2024

கடந்த 2009இற்குமுன்னர் தமிழீழ விடுதலைப்புலிகளால் பாதுகாக்கப்பட்ட தமிழ் மக்களின் பெருமளவான விவசாய மற்றும், குடியிருப்பு நிலங்களை தற்போது வனவளத் திணைக்களம் அபகரித்துள்ளதாக வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு வனவளத் திணைக்களத்தால் அடாவடித்தனமாக அபகரிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

வவுனியா வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில், வவுனியாவடக்கு பிரதேசசெயலகப் பகுதிகளில் வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களின் காணி விடுவிப்புத்தொடர்பில் பேசுபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வன்னிப் பகுதி மக்கள் கடந்த காலங்களில் இடம்பெயர்வைச் சந்தித்து மீள்குடியேறியது அனைவரும் அறிந்ததே. சில இடங்களில் குறிப்பட்டளவு காலங்களுக்குள்ளும், சில பகுதிகளில் நீண்டகாலங்களுக்குப் பின்னரும் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இந் நிலையில் மக்கள் இடப்பெயர்விற்கு முன்பதாக பயிர் செய்கையில் ஈடுபட்ட காணிகள் தற்போது பற்றைக்காடுகளாகக் காட்சியளிக்கின்றன.

தற்போது இவ்வாறு பற்றைக் காடுகளாகக் காட்சியளிக்கும் எமது மக்களுக்குரிய காணிகளுக்கு, எவ்வித முன்றிவிப்புக்களுமின்றி வனவளத் திணைக்களத்தினர் தற்போது எல்லைக்கல்லிடுகின்ற அடாவடித்தனமான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

அந்தந்த மாவட்டசெயலருக்கோ, பிரதேசசெயலருக்கோ, கிராம அலுவலருக்கோ, காணிகளுக்குரிய மக்களுக்கோ அறிவிக்காமலேயே இவ்வாறு எல்லைக்கல்லிடும் பணிகளில் வனவளத் திணைக்களத்தினர் ஈடுபடுகின்றனர்.

பூர்வீகமாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு திறம்பட வாழ்துவந்த எமது மக்களின் பயிர்ச்செய்கை நிலங்கள் இதில் அதிகமாக வனவளத் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

வனவளத் திணைக்களத்தின் அடாவடித்தனமான ஆக்கிரமிப்புத் தொடர்பில் ஒரு உதாரணத்தைச் சுட்டிக்காட்டலாமென நினைக்கின்றேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2009இற்கு முன்னர் வனவளத் திணைக்களத்திடம் 2,22006 ஏக்கர், 2009ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடாவடித்தனமாக எமது மக்களின் காணிகளுக்கும் எல்லைக்கல்லிட்டு 4,35000 ஏக்கர் காணிகள் வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது.

அந்தவகையில் 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் எமது மக்களின் காணிகளை விடுதலைப் புலிகள் பாதுகாத்தனர். அவ்வாறு எமது மக்களின் காணிகளை விடுதலைப்புலிகள் பாதுகாத்ததால்தான் எமது மக்கள் நிறைவாகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள்.

இவ்வாறு அபகரிக்கப்பட்ட மக்களின் காணிகள் விடுவிக்கப் படவேண்டுமென நாம் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றோம். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசாங்கத்திடமும் இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ள எமது மக்களின் காணிவிடுவிப்புத் தொடர்பில் தொடர்ந்தும் வலியுறுத்துவோம்.



நாட்டிற்கு காட்டுவளம் தேவைதான். அதற்காக நாட்டுக்கான ஒட்டுமொத்த காட்டையும் வன்னிக்குள் இருந்து உருவாக்க வேண்டுமென நினைத்தால் அது முற்றிலும் தவறான நிலைப்பாடாகும்.

வன்னியில் மக்களிடம் இருந்த காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும். அவ்வாறு விடுவித்தாலே எமது மக்களால் தமது வாழ்வாதாரத்தைக்கொண்டுசெல்லமுடியும்.

வன்னி மக்கள் சிறந்த உழைப்பாளர்கள். அவர்கள் உழைத்து வாழ்ந்த நிலங்களே இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

எனவே அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவும் வனவளத் திணைக்களத்தின் இந்த அடாவடித்தனமான செயற்பாடுதொடர்பில் கவனமெடுக்க வேண்டும். ஜனாதிபதி, பிரதமர், வனவளத் திணைக்களத்தோடு தொடர்புடையவர்களுடனும் நாம் இணைந்து பேசி இந்த பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

# ஊடகவியலாளர் தமிழ்ச்செல்வனைக் கடத்த முற்பட்டமைக்கு கிளிநொச்சி மாவட்ட ஊடக அமையம் கண்டனம்

27.12. 2024

கிளிநொச்சியில் சுயாதீன ஊடகவியலாளர் முருகையா தமிழ்ச்செல்வனை இனந்தெரியாதோரால் கடத்த முற்பட்டதையும் தாக்கப்பட்டமையையும் கிளிநொச்சி ஊடக அமையம் வன்மையாக கண்டிக்கிறது.

இது குறித்து அமையம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கிளிநொச்சி ஊடக அமையம்
Kilinochchi Media Forum
කිලිනොච්චි මාධ්‍ය සංසදය
பதிவு இல: வட.மா/க.சு/பண்/கிளி/கரை/2017/03
Registration No:NP/M.E/CUL/KLI/KAR/2017/03
கிளிநொச்சி
kilinochchi

புதன்கிழமை (25) வாகனத்தில் வந்தோர் கடத்திச் செல்ல முற்பட்டுள்ளனர். இதனைத் தமிழ்ச்செல்வன் எதிர்த்துப் போராடியதை அடுத்து, கடத்தற்காரர்கள் அவரைத் தாக்கி, எச்சரித்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் வியாழக்கிழமை (26.12.2024) மாலை 5.00 மணியளவில் கிளிநொச்சி ஏ9 வீதியில் நடந்துள்ளது.

எமது ஊடக அமையத்தின் செயலாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான முருகையா தமிழ்ச்செல்வன், நேற்று மாலை தனது பணியை முடித்துக்கொண்டு வீடு திரும்பும் வழியில் வாகனத்தில் வந்தோர் அவரை இடைமறித்து தமது வாகனத்தில் பலவந்தமாக ஏற்ற முற்பட்டுள்ளனர். இதை எதிர்த்துத் தமிழ்ச்செல்வன் போராடியபோது, கடத்தற்காரர்கள் தமிழ்ச்செல்வனைத் தாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இது தொடர்பான விசாரணைகளை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

அரசியல் குறைபாடுகள், மக்கள் எதிர்நோக்குகின்ற சமூகப் பிரச்சினைகள், நிர்வாக முறைகேடுகள், ஊழல், சுற்றுச் சூழல் சிதைப்பு, சட்டவிரோதச் செயற்பாடுகள், போதைப்பொருள் பாவனை போன்றவற்றுக்கு எதிராக மிகவும் துணிச்சலான முறையில் செய்திகளையும் செய்திக் கட்டுரைகளையும் அளித்து வரும் தமிழ்ச்செல்வன் மீதான தாக்குதலானது, அவருடைய பணிகளை முடக்குவதற்கான உள்நோக்கைக் கொண்டதாக சந்தேகம் கொள்ள வைக்கிறது.

கடந்த 20 ஆண்டுகளாக ஊடகப் பணியாற்றிவரும் தமிழ்ச்செல்வன், யுத்த காலத்திலும் யுத்தத்திற்குப் பிந்திய காலத்திலும் துணிச்சலாவவும் நேர்மையாகவும் பணியாற்றியவர். இத்தகைய சிறப்பு மிக்க ஊடகவியலாளர் ஒருவரின் மீதான தாக்குதலானது, மக்களுடைய நல் வாழ்வுக்கான எதிர்காலத்தின் மீதான அச்சுறுத்தலாகவே கொள்ளப்பட வேண்டும்.

ஊடகவிலாளர் மீதான இந்தக் கடத்தல் முயற்சியும் தாக்குதலும் ஊடகத்துறையின் சுயாதீனத்துக்கும் ஊடகவியலாளரின் சுதந்திரமான செயற்பாட்டுக்கும் விடப்பட்டுள்ள அச்சுறுத்தலாகும். நாடு புதிய பாதையில் பயணிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கும் சூழலில் இத்தகைய சம்பவங்கள் மக்களிடையே பதட்டத்தை உருவாக்குவதோடு ஊடகத்துறைக்கும் பாரிய சவாலை ஏற்படுத்துகிறது. இந்தச் சம்பவம் குறித்து உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

இதேபோன்று அண்மையில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஊடகவியலாளர்களின் வீடுகள் எரிக்கப்பட்டு வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு தாக்கப்பட்டமைக்கான சரியான தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தொடர்வதால்தான் தொடர்ந்தும் இவ்வாறான தவறுகள் இடம்பெறுகின்றன. எனவே இனியும் கால தாமதம் செய்யாமல் உறுதிய முறையில் உரிய நடவடிக்கையை அரசும் காவல்துறையினரும் மேற்கொள்ள வேண்டும் என்றுள்ளது.

# அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம்!

28.12. 2024

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் கையெழுத்துப் போராட்டம் ஒன்று இன்று (28) இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா தபால் நிலையம் முன்பாக இந்த போராட்டம் இடம் பெற்றது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக விசாரணைகள் ஏதும் இன்றி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியே இப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் மதத்தலைவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்




www.sangathamil.ca

# தமிழர் அரசியல் தீர்வுக்கான தொடக்கப் புள்ளியாகக்கூட 13ஆம் திருத்தம் இல்லை

## யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

27.12.2024

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா இனிமேல் பேசாது விட்டால் அதனால் பெருமளவுக்கு மகிழ்ச்சியடையக்கூடிய ஒருவராக நானே இருப்பேன் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

எங்களது பிரச்சினைக்கு தீர்வாக 13ஆவது திருத்தத்தை பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுக் குறிப்பிட்டுள்ள அவர்,

மூன்று வருடங்களில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை மாகாண சபைகள் முறை தொடர்ந்து இருக்கும் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. மாகாணசபை தேர்தல்களை நடத்தி 13ஆவது திருத்தத்தை சாத்தியமானளவு அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் அது விடயத்தில் ஓரளவு நம்பகத்தன்மையைப் பெறமுடியும் என்று பத்திரிகையாளர் ஒருவர் எக்ஸ் தளத்தில் செய்த பதிவுக்குப் பதிலளித்தே கஜேந்திரகுமார் மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டிருக்கிறார்.

மாகாணசபை முறையையோ அல்லது 13ஆவது திருத்தத்தையோ இல்லாமல் செய்வதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள் இது வரையில் நம்பிக்கை வைத்திருக்கக் கூடும். ஆனால், அண்மையில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்ற ஜனாதிபதி அநுராகுமார திசாநாயக்கவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்திய பிறகு அவருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி 13ஆவது திருத்தத்தை பற்றி எதையுமே கூறுவதை தவிர்த்தார். இதன் மூலமாக கூறப்பட்ட செய்தியை தமிழ்க்கட்சிகள் விளங்கிக் கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை என்றும் அந்த பத்திரிகையாளர் தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

அதற்குப் பதிலளித்துள்ள கஜேந்திரகுமார்,

தமிழ் மக்களின் சார்பிலேயே இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திட்டது என்பது முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய தாகும். சமாதான உடன்படிக்கையில் தமிழர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் வரை தமிழ் மக்கள் சார்பில் தலையீடு செய்வதற்கான கடமைப்பாடு இந்தி யாவுக்கு உண்டு என்று நான் நினைக்கிறேன்.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் சமாதான உடனபடிக்கை



பொருத்த மற்றது என்று இந்தியாவே உணருமானால், அது முற்றுமுழுதாக வேறுவிடயம். நாங்கள் விரைவாக சிறந்த ஒரு தெரிவை கண்டறிய முடியும்.

ஒற்றையாட்சி அரசின் கீழ் எந்த அதிகாரப்பரவலாக்கமும் சாத்தியமில்லை என்று நீதிமன்றங்கள் திரும் பத்திரும்ப கூறியிருக்கும்போது 13ஆவது திருத்தத் தின் நடைமுறைப்படுத் தல் எவ்வாறு நடக்கமுடியும் ? அதனால் 13ஆவது திருத்தம் இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வின் தொடக்கப்புள்ளியாகக்கூட ஒருபோதும் இருக்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

# இராணுவம் காடுகளில் முகாம் அமைக்கலாம் மேச்சல் தரைக்கு அனுமதி இல்லை - மக்கள் விசனம்

28.12. 2024

வவுனியாவில் பெரும்காடுகளில் ஏக்கர் கணக்கான காணிகளில் இராணுவம் முகாம் அமைத்துள்ளது. ஆனால் கால்நடைகளிற்கான மேச்சல்தரை அமைப்பதில் மாத்திரம் திணைக்களங்கள் அக்கறையில்லாமல் செயற்படுவதாக வவுனியா ஒருங்கிணைப்பு குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.

வவுனியா பிரதேச ஒருங்கினைப்பு குழு கூட்டம் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் உபாலி சமரசிங்க தலைமையில் வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்றது.

இதன்போது வவுனியாவில் மேச்சல் தரை இல்லாமல் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்வதாக கவலை தெரிவித்தனர். மழைகாலங்களில்



அதன் நிலமை மேலும் மோசமடைவதுடன் பால் உற்பத்தியும் வீழ்ச்சியடையும் நிலை காணப்படுகின்றது

இராணுவம் பெரும் காடுகளில் பல ஏக்கர்கணக்கான காணிகளை பிடித்து முகாம் அமைத்துள்ளது. ஆனால் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் கால்நடைகளுக்கு மேச்சல் வரைவழங்குவதில் அதிகாரிகள் பின்னடிப்பதாக பொதுமக்கள் குற்றம் சுமத்தினர்.

குளத்தின் அலைகரைப்பகுதிகளில் மேச்சல் தரை அமைப்பது தொடர்பாக ஆராயுமாறும் அரச காணிகளை அடாத்தாக பிடித்து வைத்திருக்கும் நபர்களிடம் இருந்து அந்த காணிகளை பறித்து மேச்சல் தரை அமைப்பது தொடர்பாக பரிசீலிக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன் இதன்போது தெரிவித்திருந்தார்.

# தமிழீழத் தேசியத் தலைவரால் மதிப்பளிக்கப்பட்ட ஈழத்தின் மூத்த படைப்பாளி நா. யோகேந்திரநாதன் (வயது 80) காலமானார்

29.12. 2024

ஈழத்தின் மூத்த படைப்பாளியும் ஊடகவியலாளருமான நா.யோகேந்திரநாதன் (வயது 80) இன்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

தனது படைப்புகள் மூலம் தமிழ்த் தேசிய எழுச்சிக்கு வலுச்சேர்ந்த அவர், தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் மதிப்பளிக்கப்பட்டவர்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர் கிளிநொச்சி - திருவையாறு தபாலகத்தின் உதவித் தபால் அதிபராகப் பணியாற்றியிருந்தார் 1960களில் இலக்கியத் துறைக்குள் பிரவேசித்தார்.

இலங்கை வானொலியில் நாடக எழுத்தாளராக பணியாற்றிய அவர், போர்க்காலத்தில் புலிகளின் குரல் வானொலியில் நாடக எழுத்தாளராகவும் தயாரிப்பாளராகவும் கடமையாற்றினார். இக்காலத்தில் ஒலிப்பரப்பான உயிர்த்தெழுகை, உயிர் குடிக்கும் பறவைகள், சாம்பல் பறவைகள், காவல் வேலி போன்ற நாடகத் தொடர்கள் அவருக்கு மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை ஏற்படுத்தின.

1993இல் ஈழநாதம் நாளிதழ் வன்னிப் பிராந்தியத்துக்கான பதிப்பை தொடங்கிய போது அதன் ஆசிரியராக பணியாற்றினார். 1995 வரை வன்னி ஈழநாதத்தின் ஆசிரியராக அவர் தொடர்ந்து பங்காற்றினார். யாழ்ப்பாணத்தில் "புதுவிதி" வார இதழின் கௌரவ ஆசிரியராகவும் அவர் செயற்பட்டிருந்தார்.

மேலும் கண்ணீர் மழலைகள், விடுதலை முழக்கம் உட்பட பல தொடர் நவீனங்களை எழுதிய அவர் பலநூற்றுக்கணக்கான சிறுகதைகளையும் படைத்துள்ளார். தவிர போர்க் காலத்தில் பல வீதி நாடகங்களையும் உருவாக்கியிருந்தார்.


போர் முடிவுக்கு வந்த பின்னர் யாழ்ப்பாணத்தில் வெளியான பல பத்திரிகைகளில் அரசியல் கட்டுரைகளை சந்திரசேகர ஆசாத், யோகநாராயணன், விஷ்ணுபுத்திரன், அக்கினீஸ்வரன் என்ற புனை பெயர்களிலும் நா.யோகேந்திரநாதன் என்ற இயற்பெயரிலும் எழுத்தியுள்ளார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போரை ஆவணமாக்கும் பெரு முயற்சியில் அளப்பரிய பங்காற்றிய அவர் போராட்ட வரலாற்றை மையமாகக் கொண்டு நீந்திக் கடந்த நெருப்பாறு, (முள்ளிக் குளத்திலிருந்து கிளிநொச்சிவரை), நீந்திக்கடந்த நெருப்பாறு (கிளிநொச்சியிலிருந்து புதுமாத்தளன் வரை), மரண மழையில் நீந்திக் கடந்த நெருப்பாறு என்ற நாவல்களைப் படைத்திருந்தார்.

கடும் சுகயீனத்தால் பாதிக்கப்பட்டிருந்த வேளையிலும் ஆனையிறவை விடுதலைப் புலிகள் வெற்றிகொண்ட வரலாற்றை வெளிப்படுத்தும் விதமாக 39 நாட்களில் நீந்திக் கடந்த நெருபபாறு என்ற நாவலை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

இடது சாரிக் கொள்கையை மாறாத பற்றுடன் தன் வாழ்நாள் முழுவதும் பின்பற்றிய அவர் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராக அளப்பரிய பங்காற்றினார். இதனால் பல்வேறு இன்னல்களுக்கும் அவர் முகம் கொடுத்திருந்தார். சமூக ஒடுக்குமுறையை வெளிப்படுத்தும் விதமாக இடிபடும் இரும்புக் கோட்டைகள் என்ற நாவலையும் இவர் படைத்திருந்தார்.

போர்க்காலத்தின் பின்னர் இவர் எழுத்திய 3 நாவல்கள் தேசிய ரீதியில் விருதுகளை வென்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.



அத்துடன் இலங்கை வானொலியில் ஒலிப்பரப்பான காட்டு நிலா, என்ற வானொலி நாடகம் நூலாக வெளியாகியிருந்தது.

யோகேந்திரநாதன் படைப்புத்துறை தவிர்த்து கூத்துக் கலைஞராக, அரங்க நாடக நடிகராக வீதி நாடகத் தயாரிப்பாளராக, வானொலி நாடக தயாரிப்பாளராக, குரல் வழங்குநராக, சிறந்த விமர்சகராக, பேச்சாளராக எனப் பல் துறை ஆளுமையாளராக மிளிர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

www.sangathamil.ca

# பிரகீத் எக்னெலிகொட: கருணா முகாமில் படுகொலை?

30.12.2024

பிரபல சிங்கள ஊடகவியலாளரான பிரகீத் எக்னெலிகொட கோத்தபாயவின் உத்தரவில் கடற்படையினரால் கடத்தப்பட்டு கிழக்கில் படுகொலை செய்யப்பட்டமை அம்பலமாகியுள்ளது.

தற்போதைக்கு வெளிநாட்டில் வதியும், இலங்கைக் கடற்படையின் முன்னாள் சிப்பாயான பிரியசாந்தவின் தகவல்களின் பிரகாரம் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு, மட்டக்களப்பின் எருமைத் தீவில் கருணா முகாமில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொடவைக் கடத்திச் சென்ற குழுவில் எதிர்பாராதவிதமாக தானும் இணைக்கப்பட்டிருந்ததாகவும், அவரைக் கடத்திச் சென்ற போது அவர் ஊடகவியலாளர் என்பதோ, பிரகீத் எக்னெலிகொட என்பதோ தனக்குத் தெரிந்திருக்கவில்லை என்றும் குறித்த சிப்பாய் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் மட்டக்களப்பின் எருமைத் தீவுக்கு கொண்டு செல்லப்பட்ட பிரகீத் எக்னெலிகொடவின் தலையில் மூன்று துப்பாக்கிச் சூடுகள் நடத்தப்பட்டு அவர் படுகொலை செய்யப்பட்டதாகவும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவின் உத்தரவின் பேரிலேயே படுகொலை நடத்தப்பட்டதாக அதற்குப் பொறுப்பாக இருந்த உயரதிகாரி தன்னிடம் தெரிவித்ததாகவும் கடற்படைச் சிப்பாய் பிரியசாந்த தொடர்ந்தும் தெரிவித்துள்ளார்.

பிரகீத் எக்னெலிகொடவின் தலையில் துப்பாக்கிச் சூடு நடத்திய ரில்வான் எனப்படும் கொலையாளியும் பின்னொரு காலத்தில் மர்மமான முறையில் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்டதாகவும் பிரியசாந்த தெரிவித்துள்ளார்.

பிள்ளையான் மற்றும் கருணா குளுழுக்கள் மூலமே வடகிழக்கிலும் கொழும்பு உள்ளிட்ட தென்னிலங்கையிலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் இளைஞர்களும் சிங்கள செயற்பாட்டாளர்களும் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியிடப்பட்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தேசியத் தலைவர் அவர்களின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் 15ம் ஆண்டு நினைவு

31.12, 2024


2009ம் ஆண்டு வைகாசி மாதம் முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரால் சிறைப்படுத்தப்பட்டு பல மாத காலங்கள் சொல்லொணா துயர்களுக்கு மத்தியிலும் முகாமை விட்டு செல்ல அனுமதிக்காமலும், உரிய சிகிச்சைகள் அளிக்க மறுத்து 06.01.2010 அன்று சாவினைத் தழுவிக்கொண்ட தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் தந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் 13ம் ஆண்டு நினைவு வணக்க நாள் இன்றாகும்.

மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் தனது 86 வது வயதில் பனாகொடவில் இருக்கும் இராணுவ முகாமில் தனது இறுதி மூச்சை எம் மண்ணுக்காக விட்டுச்சென்றார் .

ஈழத்தமிழர்களின் ஒரே தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் வேலுப்பிள்ளை அவர்களை எம் தேசத்தின் விடிவுக்காய் தந்த எங்கள் மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை அவர்களின் பிரிவு எம்மை மிக ஆழ்ந்த சோகத்தில் இட்டுசென்றது.

யுத்தம் முடிவுற்று பல மாதங்கள் ஆகியும் கடும் நோயின் காரணமாக தவித்த போது கூட அவருக்கு சிகிச்சை அளிக்க மறுத்த சிங்கள கொடூர அரசு அவரை அவ் முகாமை விட்டு செல்ல அனுமதிக்காமல் தனது கோர முகத்தை காட்டி நின்றது வார்த்தைக்கு வார்த்தை மனித உரிமையை உச்சரிக்கும் வல்லரசு நாடுகளும் சர்வதேச நாடுகள் அதை கண்டும் காணாமல் மௌனம் சாதித்தது .

உண்மையிலே உலக நாடுகள் சுயநலம் அற்று நேர்த்தியாக செயல்பட்டிருந் தால் மாதந்தை திரு வேங்கடம் வேலுப்பிள்ளை அவர்கள் மட்டும் அல்ல எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டு இருந்திருக்கலாம்.




# தாய்மாரின் கண்ணீருக்கு பதில் தருவதாகக் கூறிய புதிய ஜனாதிபதியும் ஏமாற்றியுள்ளார்

30.12. 2024

தாய்மாரின் கண்ணீருக்கு பதில் தருவதாகக் கூறிய புதிய ஜனாதிபதியும் ஏமாற்றியுள்ளார் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் இன்று (30) இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

குறித்த போராட்டம் இன்று காலை 10 மணியளவில் கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அலுவலகம் முன்பாக இடம் பெற்றது. காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது படங்களை ஏந்தியவாறு குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

எமது பிள்ளைகள் கையளித்தும், சரணடைந்தும் காணாமல் ஆக்கப்பட்டள்ளனர். கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டும் உள்ளனர். குழந்தைகளும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளைத் தேடி நாங்கள் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை கண்டுபிடிக்க சர்வதேசம் முன் வர வேண்டும் என வலியுறுத்தி வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் போராடுகின்றோம்.

இதற்கு முன் இருந்த அரசுகள் எம்மை ஏமாற்றின. தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்ட நிலையில் சர்வதேசத்திடம் நீதி கேட்டு போராடுகிறோம்.

ஆண்டுகள் பல கடந்தாலும், எமது போராட்டத்துக்கான தீர்வும், நீதியும் இன்றுவரை கிடைக்கவில்லை. எமக்கு நீதி கிடைக்கும் வரை நாங்கள் தொடர்ந்தும் போராடுவோம்.

இலங்கையில் இடம்பெற்ற தேர்தல்களில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கு நீதி பெற்றுக் கொடுப்பேன் என புதிய ஜனாதிபதி கூறினார். ஆனால் 6 மாதங்களாகியும் இன்று வரை எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

ஏனைய ஜனாதிபதிகள் போன்று இவரும் ஏமாற்றுவதாகவே உணர்கின்றோம். இன்றுவரை பாதிக்கப்பட்ட எம்முடன் பேசக்கூவில்லை.




காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலியும், கண்ணீரும் எனக்கும் தெரியும் என்றார். அதன் வலி எனக்கு புரியும் என்றார். ஆனால் இன்றுவரை எந்த முயற்சியும் அவர் எடுத்திருக்கவில்லை.

நாங்கள் தொடர்ந்தும் ஏமாற்றபட்டே வருகின்றோம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# யாழில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டிப் போராட்டம்

30.12. 2024

இலங்கையில் உள் நாட்டு யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் வாழும் உறவுகள் இன்றையதினம் திங்கட்கிழமை (30) தமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

நீதி வேண்டி வடக்கு மாகாணத்தின் மாவட்டங்கள் தோறும் மாதாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தில் ஒரு அங்கமாகவே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முனியப்பர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த போராடமானது ஊர்வலமாக யாழ். பிரதான வீதி மற்றும் காங்கேசன்துறை வீதியூடாக சென்று யாழ் மத்திய பேருந்து நிலையத்தை அடைந்தது.

யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் ஒன்று கூடிய வாழும் உறவுகள் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலைகுறித்து சர்வதேசமே தீர்வை வழங்க வேண்டும் போன்ற சுலோகங்களை வலியுறுத்தி போராட்டத்தை முன்னெடுத்தனர்.









# யாழில் தொடரும் சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வு நீர் உவராகும் அபாயம்

30.12.2024

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதமான முறையில் சுண்ணக்கல் அகழ்ந்து திருகோணமலைக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது இதனை கட்டுப்படுத்த எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.





தென்மராட்சி பகுதிகளில் உள்ள தனியார் காணிகளிலையே சுண்ணக்கல் உள்ளிட்ட கனிமங்கள் சட்டவிரோதமான முறையில் அகழ்ந்து எடுத்து செல்லப்படுகிறது.

தென்மராட்சியில் குறிப்பாக, மந்துவில், வேம்பிராய் பகுதிகளில் தனியார் ஒருவர் பெருமளவான நிலப்பரப்பினை வாங்கி, தனது காணிக்குள் மண், சுண்ணக்கல், போன்றவற்றை அகழ்ந்து விற்பனை செய்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவர், சுண்ணக்கற்களை அவரிடம் வாங்கி அவற்றை திருகோணமலையில் உள்ள சீமெந்து உற்பத்தி நிலையத்திற்கு விற்பனை செய்து வருகின்றார்.

குறித்த தனிநபர்களின் செயப்பாடுகளினால் அப்பகுதிகளில் பாரிய பள்ளங்கள் தோன்றியுள்ளன.

தமது காணிகளில் கனிம வளங்களை அகழ்ந்தவர்கள் தற்போது, அரச காணிகளிலும் தமது கைவரிசையை காட்ட தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள நீர் வளத்தை சேமிக்க பிரதான அச்சாணியாக சுண்ணக்கல் காணப்படுகின்றது. இது நீரினை தேக்கி வைக்க உதவுகின்றது. இங்கு மழைநீர் மூலம் ஊடுருவும் முழு நிலத்தடி நீரும் நண்ணீராக மாறுகின்றது. கடல் மட்டத்துக்கு கீழே உவர்நீரும் கடல் மட்டத்துக்கு மேலே நன்னீரும் காணப்படுகின்றது. அவ்வாறான நிலையில் சட்ட விரோதமான முறையில் பெருமளவில் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெறுவதால் , நிலத்தடி நீர் உவராகும் வாய்ப்பு அதிகமாக உள்ளது.

அந்நிலையில் அதனை கட்டுப்படுத்த வேண்டும் என பல தரப்பினரும் கோரி வந்த நிலையில், கடந்த மே மாதம் 30ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில், "சட்டவிரோதமான முறையில் 2 முதல் 3 மீற்றருக்கு மேல் ஆழமாக சுண்ணக்கல் அகழப்பட்டு யாழ் மாவட்டத்தில் இருந்து அனுமதியற்ற முறையில் வர்த்தக நோக்குடன் பிற மாவட்டங்களுக்கு சுண்ணக்கல் எடுத்துச் செல்லப்படுகிறது" என நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் குற்றம் சாட்டி அதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

அதனை தொடர்ந்து ஜுன் மாதம் குறித்த பகுதிகளை அப்போதைய ஒருங்கிணைப்பு குழு தலைவரான டக்ளஸ் தேவானந்தா நேரில் சென்று பார்வையிட்டு இருந்தார்.

ஆனாலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் தொடர்ந்தும் சுண்ணக்கல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தேசிய மக்கள் சக்தியின் யாழ் . மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்



அகழ்வுகள் இடம்பெறும் பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு, அகழ்வு பணிகளை இடைநிறுத்த விரைந்து நடவடிக்கை எடுப்பேன் என அப்பகுதி மக்களுக்கு உறுதி அளித்திருந்தார்.

ஆனாலும் இன்னமும் அகழ்வு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதனால், தமது பகுதியை காப்பாற்ற உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

# "காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஐ. நாவே நீதியைப் பெற்றுத் தா" வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

30.12. 2024

"காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா" என கோஷம் எழுப்பி வவுனியாவில் ஆர்ப்பாட்டம் இன்று (30) நடத்தப்பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் ஏந்தியவாறு "காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே", "இராணுவத்தினரிடம் கையில் ஒப்படைக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன?", "ஐ.நாவே நீதியைப் பெற்றுத் தா", "15 வருடமாக போராடும் எமக்கு விடிவு இல்லையா" என பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது அவர்கள் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. எதிர்வரும் மார்ச் மாதம் நடை பெறும் ஐ.நா அமர்வில் எமக்கான நீதியை பெற்றுத் தர ஐ.நா வலியுறுத்த வேண்டும். 2025ஆம் ஆண்டிலாவது எமது 15 வருட போராட்டத்துக்கு நீதி கிடைக்க வேண்டும் என்றனர்.




இதில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.















# கனடிய செய்திகள்

## ரொரான்ரோவில் வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரிப்பு

17.12. 2024

கோவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் இவ்வாறு அதிகளவானோர் வேலைவாய்ப்பின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

கடந்த நவம்பர் மாத புள்ளிவிபர தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

ரொரான்ரோவில் சுமார் 380,000 பேர் தொழில் தேடிக் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி ரொரான்ரோவின் வேலையற்றோர் எண்ணிக்கையானது 8.1 வீதமாக காணப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னர் இவ்வாறு அதிக எண்ணிக்கையில் வேலையற்றோர் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரொராரோவில் வேலையற்றோர் எண்ணிக்கை இந்த ஆண்டில் 1.5 வீதத்




தினால் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவின் மாநிலமாக கனடா ஒருபோதும் மாறாது!

18.12. 2024

அமெரிக்காவின் மாநிலமாக கனடா ஒருபோதும் மாறப்போவதில்லை என ஒன்ராரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் 51-வது மாநிலமாக கனடா மாற வேண்டும் என்று அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் தெரிவித்திருந்தார்.

சமூக ஊடகம் வாயிலாக அவர் இந்த கருத்தினை வெளியிட்டு இருந்தார். எவ்வாறு எனினும் இந்த கருத்து தொடர்பில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

பெருமைமிகு கனடியர்கள் எப்பொழுதும் கனடியவர்களாகவே இருக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா தனது கெடுபிடிகளை அதிகரித்தால் ஒன்ராரியோவில் இருந்து கனடிய மாநிலங்களுக்கு விநியோகம் செய்யும் மின்சாரம் துண்டிக்கப்படும் என அவரை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நியூயோர்க், மிச்சிகன் மற்றும் மினசோட்டா போன்ற மாநிலங்களுக்கு ஒன்ராரியோவில் இருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுகின்றது.

இவ்வாறான ஒரு பின்னணியில் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். இறுதி கட்டமாக இவ்வாறு மின்சாரத்தை துண்டிக்கும்



நடவடிக்கை எடுக்கப்படும் என டக் போர்ட் தெரிவித்துள்ளார்

இதேவேளை, கனடியர்களுக்கு தங்களை பார்த்துக் கொள்ள தெரியும் எனவும் எந்த ஒரு நாட்டினதும் மாநிலமாக மாற வேண்டிய அவசியம் கிடையாது எனவும் பிரபல நடிகர் மைக் மெயர்ஸ் தெரிவித்துள்ளார்.

## ரொரான்ரோ-ஸ்கார்பரோவின் வாகனத் திருட்டு குறித்து நிகழ்ந்த முதல் சமூகப் பாதுகாப்பு பொதுக்கூட்டம்

19.12. 2024

கடந்த செவ்வாய்க்கிழமையன்று, ஸ்கார்பரோ - ரூஜ் பார்க்கின் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான விஜய் தணிகாசலம் தலைமையில் வாகனத் திருட்டு மற்றும் பொதுப் பாதுகாப்பில் கவனம் செலுத்தி ஸ்காபரோவின் முதல் சமூகப் பாதுகாப்பு பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இந்நிகழ்வானது, இணை அமைச்சர் மெக்ரிகர் மற்றும் ரொரான்ரோ பொலிஸ் சேவை



யின் 42 பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளை ஒன்றிணைத்து, குடியிருப்பாளர்கள் தங்கள் சமூகத்தில் நடக்கும் குற்றங்களை நிவர்த்தி செய்யும் பிரதிநிதிகளிடம் தங்கள் கவலைகளை நேரடியாகக் கூற ஒரு வாய்ப்பை வழங்கியது.

இந்த குற்றங்கள் மிக நீண்ட காலமாக ஸ்கார்பரோவை பாதித்துள்ளன. "ஒன்ராரியோ அரசங்கமும் எங்கள் சட்ட அமலாக்க அதிகாரிகளுக்கு தேவையான கருவிகளை வாங்க மில்லியன் கணக்கான டொலர்களை முதலீடு செய்துள்ளனர். எமது எல்லைப் பாதுகாப்பு சேவைகளை மேம்படுத்துவதும், பிணை முறையை சீர்திருத்துவதும் மத்திய அரசின் கடமையாகும். முதல்வர் டக் போர்ட்டும் எமது ஒன்ராரியோ மாகாண அரசும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் மத்திய அரசாங்கத்தை கேட்டுக் கொள்வது ஒரே விடயம் தான். இது போன்ற வன்முறைக் குற்றங்களை யாராவது செய்தால், அவர்கள் நீதியின் கதவு வழியாக விடுவிக்கப்படாமல், பூட்டி வைக்கப்பட வேண்டும்" என அவர் வலியுறுத்தினார்.

குடியிருப்பாளர்களால் எழுப்பப்பட்ட முக்கிய கவலைகளில் வன்முறைக் கடைக் கொள்ளைகளைக் கண்ட குடும்பங்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு, துப்பாக்கி முனையில் வாகனங்கள் திருடப்படுவது மற்றும் கனடாவின் பலவீனமான பிணைச் சட்டங்கள், மீண்டும் மீண்டும் குற்றவாளிகளை வீதிகளில்



திரும்ப அனுமதித்தல் போன்றன குறிப்பிடப்பட்டன.

விஜய் தணிகாசலம் அவர்கள், கடுமையான பிணைமீட்புச் சட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தினார், "மீண்டும் மீண்டும் குற்றவாளிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு, அடுத்த நாள் அதே குற்றங்களைச் செய்கிறார்கள். இது நிறுத்தப்பட வேண்டும். அதற்கு மத்திய அரசு பிணை சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். அனைவருக்கும் பாதுகாப்பான ஸ்கார்பரோவை உருவாக்க, குடியிருப்பாளர்கள் மற்றும் பிரதிநிதிகளிற்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான முக்கியமான படியை இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

## கனடாவில் கார்பன் வெளியீட்டு அளவில் வீழ்ச்சி!

20.12. 2024

கனடாவில் கார்பன் வெளியீட்டு அளவில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



கடந்த ஆண்டில் இவ்வாறு கார்பன் வெளியீட்டு அளவு வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த 2022ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது கடந்த 2023ஆம் ஆண்டில் கார்பன் வெளியீடு ஒரு வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

சனத்தொகை அதிகரிப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற காரணிகளுக்கு மத்தியில் இவ்வாறு கார்பன் வெளியீட்டு அளவு வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டில் சுமார் 694 மெகாடொன் எடையுடைய கார்பன் வெளியிடப்பட்டுள்ளதாகவும் இது 2022ம் ஆண்டை விடவும் 6 மெகாடொன் குறைவானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த 2005ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது சுமார் 8.5 வீதம் கார்பன் வெளியீடு குறைவடைந்துள்ளது.

கடந்த ஆண்டின் கார்பன் வெளியீடு குறித்த துல்லியமான மதிப்பீடுகள் எதிர்வரும் 2025ம் ஆண்டில் வெளியிடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




www.sangathamil.ca

# கனடாவில் ட்ரூடோவின் கூட்டணிக் கட்சி எடுத்துள்ள முடிவு: கவிழும் அபாயத்தில் ட்ரூடோ அரசு!

21.12. 2024

கனடா பிரதமரான ஜஸ்டின் ட்ரூடோ மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர, ஆளும் கட்சியின் கூட்டணிக்கட்சியாக



இருந்த கட்சி ஒன்றின் தலைவர் திட்டமிட்டுள்ளார்.
அதனால், கனடாவில் ஆட்சி கவிழும் அபாயம் ஏற்பட்டுள்ளது!

New Democratic கட்சியின் தலைவரான ஜக்மீத் சிங், ஜனவரி மாதம் 27ஆம் திகதி, மீண்டும் நாடாளுமன்றம் கூடும்போது, ஜஸ்டின் ட்ரூடோ அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகவேண்டுமென கனடாவில் கோரிக்கை வலுத்துவருகிறது.

கனடாவில் அடுத்த பொதுத் தேர்தல் 2025ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நடத்தப்பட உள்ளது.

அப்படி தேர்தல் நடைபெற்றால், தேர்தலில் ஆளும் ட்ரூடோவின் லிபரல் கட்சி படுதோல்வி அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படிப்பட்ட ஒரு சூழல் நிலவும் நிலையில், திடீரென ஜக்மீத் சிங் கட்சி, ட்ரூடோ மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர முடிவு செய்துள்ளது.

ஜக்மீத் சிங் நேற்று இது தொடர்பாக வெளியிட்ட கடிதத்தில், ஒரு பிரதமராக, மக்களுக்காக பணியாற்றவேண்டும், பலம் படைத் தவர்களுக்காக அல்ல என்னும் மிகப்பெரிய பணியில் ஜஸ்டின் ட்ரூடோ தோற்றுவிட்டார்.

ஆகவே, அவரது அரசைக் கவிழ்க்க NDP கட்சி வாக்களித்து, கனேடியர்கள் தங்களுக்காக உழைக்கும் ஒரு அரசைக் கொண்டு வருவதற்காக வாக்களிக்க வாய்ப்பை உருவாக்கும் என்று தெரிவித்துள்ளார்.

ஆக, ஜக்மீத் சிங் கொண்டுவரும் நம்பிக்கையில்லாத் தீர்மானத் துக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவளிக்குமானால், அமெரிக்காவில் ட்ரம்ப் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்களில் கனடாவில் ட்ரூடோ அரசு கவிழும் அபாயம்



CHEF DU NOUVEAU PARTI DÉMOCRATIQUE DU CANADA — LEADER OF THE NEW DEMOCRATIC PARTY OF CANADA

JAGMEET SINGH
DÉPUTÉ | MP, BURNABY SOUTH | BURNABY-SUD

December 20, 2024

Fellow Canadians,

The Canadian dream is a good job that gets you a home and a fridge full of groceries with enough left over to save for vacations. A country where health care is always there as soon as you need it. I believe every Canadian deserves that.

The Trudeau Liberals said a lot of the right things. Then they let people down again and again.

Justin Trudeau failed in the biggest job a Prime Minister has: to work for people, not the powerful. To focus on Canadians, not themselves.

The Liberals don't deserve another chance. That's why the NDP will vote to bring this government down, and give Canadians a chance to vote for a government who will work for them. No matter who is leading the Liberal Party, this government's time is up. We will put forward a clear motion of non-confidence in the next sitting of the House of Commons.

I called for Justin Trudeau to resign, and he should.

He can't fix health care.
He can't build homes you can afford.
He can't lower your bills.

I have always fought for people. I fought like hell to get dental care, free birth control and diabetes medication. I didn't give up when Justin Trudeau said no. And I won't let Pierre Poilievre take it all away.

The next fight is a big one. Pierre Poilievre and the Conservatives will give CEOs and big business anything they want, and make callous cuts to pay for it. They will cut health care, child care, housing and people's pensions.

Canadians can come together and build a country where we take better care of each other. A country where we create good jobs. Stand up to the threats of Trump's tariffs. And where everyone has a chance to succeed. I will be working hard to build a movement that can win in the next election. Join me in this fight.

Jagmeet Singh
Leader, New Democratic Party of Canada

# ஒன்ராரியோவில் தட்டமை நோயாளர் அதிகரிப்பு

24.12.2024

ஒன்ராரியோ மாகாணத்தில் தட்டம்மை நோயாளர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நியூ பிரவுன்ஸ்விக் பிராந்தியத்திலும் அதிக அளவு தட்டம்மை நோயாளர்கள் பதிவாகி உள்ளனர்.


இந்த மாத நடுப்பகுதி வரையில் நியூ பிரவுன்ஸ்விக் பிராந்தியத்தில் 37 தட்டம்மை நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதேவேளை, ஒன்ராரியோவில் சுமார் 10 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த அக்டோபர் மாதம் முதல் தட்டம்மை நோயாளர்கள் பதிவாகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நியூ பிரவுன்ஸ்விக்கில் பதிவான நோயாளர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பதின்ம வயது உடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தட்டமையின் நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் அனேக மானவர்கள் தட்டம்மை தடுப்பூசி ஏற்றுக் கொள்ளாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காய்ச்சல், செந்நிறத்திலான கண்கள் மற்றும் இருமல் போன்ற நோய் அறிகுறிகள் தென்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



பாடசாலைகளிலும் தட்டம்மை நோய் தடுப்பூசி ஏற்றப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# கனடிய டொலரின் பெறுமதி வீழ்ச்சி

25.12. 2024

கனடிய டொலர் தொடர்ச்சியாக வலுவிழந்து செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் சில மாதங்களில் டொலரின் பெறுமதி இவ்வாறு வீழ்ச்சியடையும் என தெரிவிக்கப்படுகின்றது.

பொருளியல் நிபுணர்கள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக அமெரிக்க டொலருக்கு நிகரான கனடிய டொலரின் பெறுமதியில் இவ்வாறு வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செப்டம்பர் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது கனடிய டொலரின் பெறுமதி 4 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.



# கனடியப் பிரதமரின் கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தி

26.12. 2024

இந்த ஆண்டின் சிறப்பு நேரம் இது. அன்பானவர்களுடன் கூடி, விடுமுறைக் காலத்தைக் கொண்டாடுவதற்கும், உலகில் உள்ள அனைத்து நன்மைகளுக்கும் நன்றி செலுத்துவதற்கும் ஒரு




நேரம்.

“கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை, இது இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவதற்கும், அவருடைய கருணை, மன்னிப்பு மற்றும் விசுவாசத்தின் கதையைப் பற்றி சிந்திக்கவும் ஒரு நேரம். அவருடைய வாழ்க்கையின் படிப்பினைகள் உலகளாவியவை, மேலும் அவை ஒவ்வொரு முறையும் மக்களுக்கு ஊக்கமளித்து ஆறுதலளிக்கின்றன. “உங்களைப் பொறுத்தவரை, விடுமுறை நாட்கள் பெரிய குடும்பக் கூட்டங்கள் மற்றும் விருந்துகள், பரிசுகள் மற்றும் கொண்டாட்டங்களின் நேரமாக இருக்கலாம்.

சிலவேளைகளில், இது மிகவும் கடினமான நேரமாக இருக்கலாம். நீங்கள் துக்கமாகவோ, கவலையாகவோ அல்லது தனியாகவோ இருந்தால், இது ஆண்டின் கடினமான நேரமாக இருக்கலாம். இது தனிமையாக இருக்கலாம், எனவே இந்த ஆண்டு எளிதான நேரத்தை அனுபவிக்காதவர்கள் மற்றும் நமக்குத் தெரிந்தவர்களை விட அதிகமாகத் தேவைப்படுபவர்களை நாம் அனைவரும் பார்க்கலாம்.

“கடந்த ஆண்டைப் பற்றி சிந்தித்து எதிர்காலத்தைப் பார்க்கும் போது, நமக்கும் தேவைப்படுபவர்களுக்கும் அன்பையும் கருணையையும் தொடர்ந்து காட்டுவோம். கனடாவை நாடாக மாற்றுவதற்குத் தங்களைத் தாங்களே அதிகம் கொடுத்தவர்களுக்கு ஒரு கணம் நன்றி செலுத்துவோம்.

கனடாவை தாய் நாடு அல்லது வீடு என அழைப்பதற்கு எங்கள் கனேடிய ஆயுதப்படையின் துணிச்சலான உறுப்பினர்கள், அர்ப்



பணிப்புள்ள முதல் பதிலளிப்பவர்கள் மற்றும் அத்தியாவசிய பணியாளர்கள் மற்றும் எண்ணற்ற தன்னார்வலர்களது பங்களிப்பினை நாங்கள் பெருமிதத்துடன் நினைவுகூருகின்றோம்.

“இன்று கொண்டாடும் அனைவருக்கும் நான் மகிழ்ச்சியையும், துன்பப்படுபவர்களுக்கு ஆறுதலையும் விரும்புகிறேன். நீங்கள் எங்கிருந்தாலும், நீங்கள் ஒளியையும், வரவிருக்கும் ஆண்டிற்கான நம்பிக்கையையும் பெறுவீர்கள் என்று நம்புகிறேன். கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.” என பிரதமர் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

www.sangathamil.ca

# அமெரிக்காவிற்கு விஜயம் செய்யும் கனடிய அமைச்சர்கள்

27.12. 2024

கனடாவின் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜொலி மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் டாமினோக் லாபிளாங்க் ஆகியோர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

அமெரிக்காவின் புளொரிடா மாகாணத்திற்கு இவர்கள் இரு வரும் விஜயம் செய்ய உள்ளனர்.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் குழு வினரை சந்திப்பதற்காக அவர்கள் இவ்வாறு அமெரிக்காவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 20ம் திகதி டொனால்ட் டிரம்ப் மீண்டும் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்காவுடன் உறவுகளை பலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் இந்த முக்கிய அமைச்சர்கள் அமெரிக்கா வுக்கு விஜயம் செய்ய உள்ளனர்.

கனடாவின் ஏற்றுமதிகள் மீது வரி விதிக்கப்படும் என அண்மை யில் புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமாக அறிவித் திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் கனடியர்கள் கடும் விமர் சனங்களை வெளியிட்டு இருந்தனர்.

வரிவிதிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த





சந்திப்பில் கலந்துரையாடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# லிபரல் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகுமாறு கனடிய பிரதமரிடம் மீண்டும் கோரிக்கை

30.12.2024

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை பதவி விலக வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அட்லாண்டிக் பிராந்தியத்தின் லிபரல் கட்சி உறுப்பினர்கள் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

ஜஸ்டின் ட்ரூடோ கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட கடிதம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. பிரதமர் பதவி விலக வேண்டும் என, நியூ பிரவுன்ஸ் விக் பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் வெயன் லோங் கோரியுள்ளார்.

எதிர் வரும் தேர்தலில் வெற்றி ஈட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டுமாயின் நிச்சயமாக பிரதமர் கட்சித் தலைமையில் இருந்து பதவி விலக வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார் அவ்வாறு செய்யத் தவறினால் கான்சர் வேட்டிவ் கட்சி ஆட்சியை நிறுவும் என அவர் தெரிவித்துள்ளார்.

கனடாவின் அட்லாண்டிக் பிராந்திய வலய மாகாணங்களின் லிபரல் கட்சி உறுப்பினர்கள் பிரதமர் பதவி விலக வேண்டும் என கோரியுள்ளனர்.

கட்சித் தலைமை பதவியில் இருந்து அவர் விலக வேண்டுமென இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரதமர் ட்ரூடோவிற்கு எதிராக மீண்டும் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவரப்பட உள்ளது.



இது எதிர்வரும் ஜனவரி மாதம் விவாதத்திற்கு எடுத்துக் கொள் ளப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# ரொரான்ரோவில் கப்பம் கோரல் சம்பவங்கள் குறித்து காவல்துறை எச்சரிக்கை விடுத்துள்ளனர்

31.12. 2024

ரொரான்ரோவில் கப்பம் கோரல் சம்பவங்கள் தொடர்பில் பொலிசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.





ரொரான்ரோ பகுதியில் இவ்வாறான கப்பம் கோரல் சம் பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அலைபேசிகளுக்கு வன்முறையான படங்களை அனுப்பி அதன் மூலம் அச்சுறுத்தல் விடுத்து பணம் கோரப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவிலிருந்து தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் குறுஞ்செய்திகள் ஊடாக கப்பம் கோரப்படுவதாக தெரிவிக்கப் படுகின்றது.

அமெரிக்காவின் அணுக்கக் குறியெண் 470 மற்றும் 404 ஆகியனவற்றினை அடிப்படையாகக் கொண்ட எண்களி லிருந்து அழைப்பு எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கோரப்படும் பணம் வழங்கப்படாவிட்டால் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படும் என எச்சரிக்கை விடுத்து தகவல்கள்




அனுப்பி வைக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான கப்பம் கோரல் அழைப்புக்கள் கிடைக்கப் பெற்றால் உடனடியாக பொலிசாருக்கு அறிவிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.







"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# தமிழக செய்திகள்



## வாக்குக்கு பணம் கொடுப்பவர்களுக்கு 10 ஆண்டு சிறை தண்டனை!

### பாமக தலைவர் நிறுவனர் இராமதாஸ்

16.12. 2024

புதிய அரசியல் பதிப்பகம் சார்பில், பாமக நிறுவனர் இராமதாஸ் எழுதிய 'போர்கள் ஓய்வதில்லை' நூல் வெளியீட்டு விழா சென்னையில் நேற்று நடைபெற்றது. பாமக தலைவர் அன்புமணி தலைமை தாங்கினார்.

பாமக நிறுவனர் இராமதாஸ், விஜடி வேந்தர் ஜி.விஸ்வநாதன், விஜிபி குழுமத் தலைவர் வி.ஜி.சந்தோசம், பாமக கவுரவத் தலைவர் ஜி.கே.மணி, இணை பொதுச் செயலாளர் ஏ.கே. மூர்த்தி, அன்புமணியின் மகள்கள் சங்கமித்ரா, சஞ்சுத்ரா மற்றும் பாமக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். புத்தகத்தின் முதல் பிரதியை விஜடி வேந்தர் ஜி.விஸ்வநாதன் வெளியிட, விஜிபி குழுமத் தலைவர் வி.ஜி.சந்தோசம் பெற்றுக் கொண்டார். விழாவில் இராமதாஸ் பேசியதாவது:

அரசியல்வாதிகள் நிறைய படித்திருக்க வேண்டும். அப்போது தான் நல்ல முடிவெடுக்க முடியும். மக்களுக்கு சேவை செய்ய முடியும். அதிகாரிகளை தன்னுடன் வைத்திருக்கலாம். ஆனால், அதிகாரிகள் சொல்வதையெல்லாம் அரசியல்வாதிகள் செய்யக்கூடாது.

மக்களின் நலனுக்காக பல போராட்டங்களை நடத்தியிருக் கிறேன். ஆனால், சாதி என்ற குறுகிய வட்டத்துக்குள் என்னை அடைத்துவிட்டார்கள். நல்ல கல்வி, சுகாதாரம், விவசாயம் இவைதான் நமக்குத் தேவை.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற சட்டத்தை கொண்டு வருவதைப் போல, வாக்குக்கு காசு கொடுக்கக் கூடாது என்ற சட்டத்தையும் கொண்டு வர வேண்டும். வாக்குக்கு பணம் கொடுப்பவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்க வேண்டும். நான் எப் போதும் மக்களுக்காகப் போராடிக் கொண்டே இருப்பேன். இவ் வாறு அவர் பேசினார்.

பாமக தலைவர் அன்புமணி பேசும்போது, "பாமக நிறுவனர் இராமதாஸ் 20 நூல்களை எழுதியுள்ளார். இந்தியாவிலேயே அவரைப் போல மது ஒழிப்புக்காக போராடியவர் யாரும் கிடை யாது. நதிநீர் பிரச்சினைக்கு எங்களிடம் தீர்வுகள் உள்ளன. எங்களிடம் 6 மாதம் அதிகாரம் இருந்தால்போதும், தமிழகத்தில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வருவோம்.

தமிழகத்தில் ஆளும்கட்சியும், எதிர்கட்சியும் மக்களுக்கு எதுவும்



செய்யவில்லை. அரசியல் ஆதாயத்துக்காக சாதி தலைவர் என்று கூறி இராமதாஸை சிறுமைப்படுத்துகிறார்கள். அனைத்து சமுதாயத்திற்காகவும் போராடியவர் இராமதாஸ். அப்படிப்பட்டவரை வேலை இல்லாதவர் என்று கூறி கொச்சைப் படுத்துகிறார்கள். இங்கிருப்பவர்கள் சமூக நீதியைப் பற்றி பேசுகிறார்களே தவிர, சமூக நீதியை நிலைநாட்டுவதில்லை" என்றார்.

## "தமிழக எல்லையோர மாவட்டங்களில் கேரள மாநில மருத்துவக் கழிவுகள்"

### பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை எச்சரிக்கை

17.12.2024

"கேரள கம்யூனிஸ்ட் அரசுடன் திமுக அரசு உறவாடிக் கொண டிருக்கும் அதே வேளையில், கேரள மாநிலத்தின் பயோ மெடிக்கல், பிளாஸ்டிக் மற்றும் இறைச்சிக் கழிவுகளின் குப்பைக் கிடங்காக நமது தென்மாவட்டங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. இனியும் இதே போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தால், வரும் 2025 ஜனவரி முதல் வாரத்தில், பொதுமக்களைத் திரட்டி, இந்த உயி ரியல் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைகளை லாரிகளில் ஏற்றிச் சென்று, கேரளாவில் கொண்டு கொட்டுவோம். முதல் லாரியில் நானும் செல்வேன்." என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை எச்சரிக்கை விடுத்துள்ளார்.







இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், "காவிரி நீர் உள் ளிட்ட தமிழகத்தின் உரிமைகளை தனது கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களான கன்னியாகுமரி, தென்காசி மற்றும் திருநெல் வேலி மாவட்டங்களை, கேரள கம்யூனிஸ்ட் அரசின் குப்பைக் கிடங்காக மாற்றவும் அனுமதித்திருக்கிறார்.

கேரள கம்யூனிஸ்ட் அரசுடன் திமுக அரசு உறவாடிக் கொண் டிருக்கும் அதே வேளையில், கேரள மாநிலத்தின் பயோ மெடிக்கல், பிளாஸ்டிக் மற்றும் இறைச்சிக் கழிவுகளின் குப்பைக் கிடங்காக நமது தென்மாவட்டங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. தினம் தினம் லாரிகளில் கொண்டு வந்து கொட்டப்படும் இந்தக் கழிவுகளைத் தடுத்து நிறுத்த வேண்டிய சோதனைச் சாவடிகள், வெறும் வசூல் மையங்களாக மட்டுமே மாறிவிட்டன.

ஒருபுறம் தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் இருந்து கேரள மாநிலத்துக்குச் சட்டவிரோதமாக கனிமங்கள் கடத்தப் படுவதைக் கண்டும் காணாததுபோல் இருக்கும் திமுக அரசு, மறுபுறம் தமிழகத்தை குப்பை கொட்டும் இடமாகப் பயன்படுத் திக்கொள்ள சுதந்திரமான அனுமதி அளித்துள்ளது. அதிகாரி களிடமும், முதல்வர் தனிப்பிரிவுக்கும் பலமுறை புகார் அளித் தும், இதனைத் தடுத்து நிறுத்த எந்த நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை. முழுக்க முழுக்க திமுக அரசுக்குத் தெரிந்தே இவை நடைபெறுகின்றன.

உடனடியாக, கேரள மாநிலத்தின் குப்பைக் கிடங்காக தமிழக எல்லையோர மாவட்டங்கள் மாற்றப்படுவதைத் திமுக அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இனியும் இதே போன்ற நிகழ்வுகள் தொடர்ந்தால், வரும் 2025 ஜனவரி முதல் வாரத்தில், பொது மக்களைத் திரட்டி, இந்த உயிரியல் மருத்துவக் கழிவுகள் மற்றும் குப்பைகளை லாரிகளில் ஏற்றிச் சென்று, கேரளாவில் கொண்டு கொட்டுவோம். முதல் லாரியில் நானும் செல்வேன் என்பதைத் திமுக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்." என்று அவர் கூறியுள்ளார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.ca**

# தமிழைவிட வேறு எந்த மொழிக்கும் அதிக வரலாறு கிடையாது

## தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்

18.12.2024

தமிழைவிட வேறு எந்த மொழிக்கும் அதிக வரலாறு கிடையாது காலத்துக்கு ஏற்ப மொழி முன்னேற வேண்டும் என்று அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார். தகவல் தொழில்நுட்பத் துறையின் தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் எத்திராஜ் மகளிர் கல்லூரி சார்பில் கணித்தமிழ் சொற்பொழிவு நிகழ்ச்சி எழும்பூரில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வை தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

'செயற்கை நுண்ணறிவும் கலைகளும்' என்ற தலைப்பில் முனைவர் மதன் கார்க்கி பேசும்போது, "ஒரு கலையின் முக்கியமான பணி உணர்வை கடத்துவதுதான். சிற்பங்கள், ஓவியங்கள் நம்மிடம் பேச வேண்டும். பாடல்கள் நம்முடன் கலந்திட வேண்டும். இதெல்லாம் செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்டால், அதே உணர்வை நமக்கு தருமா? இதில் சரி எது, தவறு எது என்பதில்லை. ஆனால் அந்த கேள்வி அவசியம். எதிர்காலத்தில் கருவிகளுடன் நாம் போட்டிபோடப் போகிறோம். அதற்கு தயாராகி கொள்ள வேண்டும்" என்றார்.

இந்நிகழ்ச்சியில் கணித்தமிழ் மின் இதழை வெளியிட்டு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பேசியதாவது: இன்றைக்கு இருக்கும் தொழில்நுட்பத்தில் தமிழில் என்ன செய்தால், தமிழின் பயன்பாட்டை அதிகரிக்கலாம் என்று திட்டமிட்டு பல முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்.

அதன் ஒருபகுதியாக இந்த சொற்பொழிவு நடத்தப்படுகிறது. எந்த ஒரு கலாச்சாரத்துக்கும் மொழி என்பது உச்சகட்ட அடையாளம் ஆகும். நம் அனைவரின் ரத்தத்திலும் நம் தாய்மொழி கலந்திருக்கும். உலக மொழிகளில் தமிழைவிட வேறு எந்த மொழிக்கும் அதிக வரலாறு கிடையாது.

அந்த அளவுக்கு பழமையும், பெருமையும் இருந்தாலும்கூட காலத்துக்கு ஏற்ப மொழி முன்னேறினால்தான் அதன் வளர்ச்சி நீடிக்கும். உலக பொருளாதாரத்தின் மையமாக இந்தியா உருவெடுத்து வருகிறது. அதன்படி வளரும் தொழில்நுட்பத்தில் மொழியின் அடையாளமும், பயனும் மாறிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்ப நாமும் முன்னேற வேண்டும்.

இதையொட்டி தமிழக அரசால் முன்னெடுக்கப்படும் அனைத்து முயற்சிகளிலும் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாக்கப்படுகின்றன. அதில் இணையவழி கல்விக் கழகம் முக்கிய பங்காற்றுகிறது.



குறிப்பாக கடந்த 2 ஆண்டுகளில் டிஜிட்டல் நூலகம், செல்போன் செயலிகள் போன்றவற்றை உருவாக்கியிருக்கிறது. அடுத்தகட்டமாக செயற்கை நுண்ணறிவு மூலம் தகவல்களை கொடுப்பதற்காக தமிழில் தரவு அமைப்புகளையும் உருவாக்கி வருகிறோம். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்வில் தமிழ் இணைய கல்விக்கழகத்தின் இயக்குநர் சே.ரா.காந்தி, எத்திராஜ் மகளிர் கல்லூரி தலைவர் வி.எம். முரளிதரன், முதல்வர் எஸ்.உமா கவுரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் நிறுவனத் தலைவர் ஐயா விஜயகாந்த் அவர்களுக்கு புகழ் வணக்கம்!

## செந்தமிழன் சீமான், தலைமை ஒருங்கிணைப்பாளர் – நாம் தமிழர் கட்சி

27.12.2024

தனது கம்பீரமான நடிப்பாற்றலால் நாற்பதாண்டுகளுக்கும் மேலாக திரையுலகில் ஆதிக்கம் செலுத்தி, மக்களை மகிழ்வித்த ஆகச்சிறந்தத் திரைக்கலைஞர்!

இயக்குநராகவும், நடிகராகவும் பலருக்கு அறிமுக வாய்ப்புகளைக் கொடுத்து, தன்னோடு மற்றவர்களும் மேலேறி வர வேண்டுமெனும் நல்நோக்கத்தோடு கைதூக்கிவிட்ட குணாளர்!

தான் சார்ந்திருக்கிற நடிகர் சங்கம் பெருங்கடனில் மூழ்கித் தவித்தபோது தனது கடினமான உழைப்பாலும், நிர்வாகத் திறனாலும் மீட்டெடுத்த பெருந்தகை!

ஏழை எளிய மக்கள் எவரும் பசி, பட்டினியாக இருக்கக் கூடாதெனும் உயர்ந்த எண்ணம் கொண்டு, தன்னை நாடி வந்தவர்களுக்கெல்லாம் உணவிட்ட மனிதநேயவாதி!

எந்த நிலையிலும் தன்னிலை மாறாது உள்ளன்போடு எல்லோரிடமும் பழகிய பண்பாளர்!

தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் நிறுவனத் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான ஐயா விஜயகாந்த் அவர்களது நினைவு நாளில் அவரது நற்செயல்பாடுகளைப் போற்றி, என்னுடைய புகழ் வணக்கத்தைச் செலுத்துகிறேன்.





# தமிழக மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை ஏற்படுத்த ஓயாது உழைப்போம்: இபிஎஸ் புத்தாண்டு வாழ்த்து

31.12.2024

"தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் வாழும் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு, நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்! ஓயாது உழைப்போம்!" என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "புத்தம் புது நம்பிக்கைகளுடன் மலருகின்ற இந்தப் புத்தாண்டில், தமிழக மக்கள் அனைவருக்கும் என் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில், மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு முத்தான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதோடு, மக்கள் எவ்வித அச்சமுமின்றி நிம்மதியுடன் வாழ்ந்து வந்ததை, இந்த நேரத்தில் பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் வாழும் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு, நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம்! ஓயாது உழைப்போம்! பொற்கால ஆட்சியை தமிழ் நாட்டில் மீண்டும் அமைப்போம்! என இந்நாளில் சபதமேற்போம்.

மக்கள் அனைவருக்கும் இந்தப் புத்தாண்டு, புதிய நம்பிக்கையையும், எழுச்சியையும், மலர்ச்சியையும், வளர்ச்சியையும் வழங்கும் ஆண்டாக மலரட்டும் என்று, எம்ஜிஆர்., ஜெயலலிதா ஆகியோரது தூய வழியில் மனதார வாழ்த்தி, அனைவருக்கும்



எனது உளங்கனிந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

# தமிழக பள்ளி பாட புத்தகத்தில் நல்லகண்ணு வரலாறு

## பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ்

31.12.2024

தமிழக பள்ளி பாடப் புத்தகத்தில் நல்லகண்ணுவின் வரலாற்றை இணைப்பது குறித்து முதல்வரின் ஆலோசனை பெற்று முடிவு செய்யப்படும் என்று அமைச்சர் அன்பில் மகேஸ்



தெரிவித்தார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணுவின் நூற்றாண்டு விழா, சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட நடிகர் விஜய்சேதுபதி, நல்லகண்ணுவின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி பாடப் புத்தகங்களில் தமிழக அரசு சேர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தார். இதே கோரிக்கையை சமூக வலைதளங்கள் மற்றும் ஊடகங்களிலும் பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில், நல்லகண்ணுவின் வரலாற்றை பாடநூலில் இணைப்பது குறித்து பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'விடுதலைப் போராட்ட வீரர் போற்றுதலுக்குரிய நல்லகண்ணுவின் வாழ்க்கை வரலாற்றை பள்ளி மாணவர்கள் அறிந்துகொள்ளும் விதமாக அவரின் வாழ்க்கை குறிப்பை பாடப் புத்தகத்தில்



இணைப்பது குறித்து முதல்வரின் ஆலோசனை பெற்று முடிவு செய்யப்படும்' என்று தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

## காசா யுத்தத்தில் 45 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலி

17.12.2024

இசுரவேல் - ஹமாஸ் இடையே 14 மாதங்களாக நீடிக்கும் போரில் காசா முனையில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 45 ஆயிரத்தை தாண்டியதாக பாலஸ்தீன சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கொல்லப்பட்டவர்களில் பொதுமக்கள் எத்தனை பேர், ஹமாஸ் அமைப்பினர் எத்தனை பேர்? என்று விளக்கமாக கூறவில்லை.

ஆனால் இறந்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று மட்டும் சுகாதாரத்துறை கூறியுள்ளது. அதேசமயம், 17,000க்கும் மேற்பட்ட ஹமாஸ் போராளிகளை கொன்றதாக இசுரவேல் இராணுவம் கூறுகிறது.

போர் தொடங்கியதில் இருந்து இதுவரை 45,028 பேர் கொல்லப்பட்டதாகவும், 106,962 பேர் காயமடைந்ததாகவும் பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இடிபாடுகளுக்கு அடியில் அல்லது மருத்துவ ஊழியர்கள் செல்ல முடியாத பகுதிகளில் ஆயிரக்கணக்கான உடல்கள் இன்னும் புதையுண்டிருப்பதால் உண்மையான பலி எண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

இசுரவேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் இருந்தாலும், இப்போது நடைபெறும் போரானது மிகக் கொடிய போராக உள்ளது. போருக்கு முன்பு காசாவில் 23 இலட்சம் மக்கள் இருந்த நிலையில், போரில் 2 சதவீதம் பேர் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




## காசாவிற்கு நீர் கிடைப்பதைத் துண்டித்ததன் மூலம் இப்படுகொலையே: மனித உரிமைக் கண்காணிப்பகம்

19.12. 2024

காசா பகுதியில் நீர் வழங்கும் உட்கட்டமைப்புகளைப் தேசப் படுத்தி பொதுமக்களுக்கு சுத்தமான நீர் கிடைப்பதைத் துண்டித்ததன் மூலம் இனபடுகொலைச் செயல்களைச் செய்ததாக மனித உரிமைக் கண்காணிப்பகம் தெரிவித்தது.

குறிப்பாக அக்டோபர் 2023 தொடக்கம் இசுரவேலிய அதிகாரிகள் வேண்டுமென்றே பாலஸ்தீனியர்கள் காசா பகுதியில் உயிர்வாழ்வதற்குத் தேவையான போதுமான அளவு தண்ணீரை அணுகுவதைத் தடுத்துள்ளனர் என மனித உரிமைக் கண்காணிப்பகம் இன்று வியாழக்கிழமை தனது அறிக்கையில் தெரிவித்தது.

பல டஜன் கணக்கான காசா மக்கள், மருத்துவர்கள் மற்றும் உதவிப் பணியாளர்கள், நீர் மற்றும் சுகாதார வசதிகளில் பணியாளர்கள், அத்துடன் செயற்கைக்கோள் படங்கள், புகைப் படங்கள், வீடியோக்கள் மற்றும் தரவு பகுப்பாய்வு ஆகியவற்றின் நேர்காணல்களை அடிப்படையா ஒரு வருடமாகத் திரட்டப்பட்ட ஆணவங்கள் அடிப்படையில் இந்த அறிக்கையை மனித உரிமைகள் கண்காணிப்பகம் தயாரித்தது.

நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களுக்கு மின்சாரம் வழங்க பயன்படுத்தப்படும் சோலார் பேனல்கள் உட்பட சுகாதார வசதிகளை வேண்டுமென்றே சேதப்படுத்தியமை. மற்றும் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் மீது இலக்கு வைத்து தாக்குதல்களை விரிவாக்கியததையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் விபரித்தது.

இசுரவேலிய அதிகாரிகள் வேண்டுமென்றே காசாவில் உள்ள பாலஸ்தீனிய மக்கள் மீது "வாழ்க்கையின் நிலைமைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அதன் உடல் அழிவைக் கொண்டு வரத் திட்டமிட்டம் போட்டமை போன்ற இவை எல்லாம் இன்படுகொலைச் செயல்கள் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டது.






இந்த அறிக்கையை இசுரவேல் பொய் நிறைந்தது என நிராகரித்தது. இசுரவேலுக்கு எதிரான எதிர்ப்புப் பிராச்சாரத்தை மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஊக்குவிப்பதாக குற்றம் சாட்டியது. அத்துடன் போர் தொடங்கியதிலிருந்து இஸ்ரேல் காசாவிற்கு தண்ணீர் மற்றும் மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து வழங்குவதற்கு வசதியாக இருந்தது என்று அது ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## இசுரவேல் அறிவிப்பால் கடும் கோபத்தில் ஈரான்

25.12.2024

காசாவில் போர் நிறுத்தத்திற்கான ஹமாஸின் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு தலைமை தாங்கிய இஸ்மாயில் ஹனியேவை ஜுலை 31ம் திகதி தாமே கொன்றதாக இசுரவேல் தற்போது ஒப்புக்கொண்ட நிலையில், இசுரவேல் மீது ஈரான் கடும் கோபத்தில் உள்ளது.

ஹமாஸ் அமைப்பின் முன்னாள் தலைவர் இஸ்மாயில் ஹனியேவை இந்த ஆண்டு கொன்றது குறித்த ஒப்புதல் இசுரவேலின் வெட்கக்கேடான செயல் என்று ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த கொடூரமான குற்றத்திற்கு இசுரவேலிய ஆட்சி தனது பொறுப்பை வெளிப்படையாக ஒப்புக்கொண்டது வெட்கக்கேடான செயல் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரான் தூதர் அமீர் சயீத் இரவானி ஐ.நா. பொதுச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் கூறியுள்ளார்.

முன்னதாக இசுரவேல் பாதுகாப்புத் துறை அமைச்சர் இசுரவேல் காட்ஸ், ஹனியே கொலைக்கு தனது நாடு தான் பொறுப்பு என்று ஒப்புக்கொண்டார். அதேவேளை கொன்று குவித்தது தொடர்பாக இசுரவேல் அதிகாரப்பூர்வமாக ஒப்புக் கொண்டது இதுவே முதல் முறை ஆகும்.

காசாவில் போர் நிறுத்தத்திற்கான ஹமாஸின் பேச்சுவார்த்தை முயற்சிகளுக்கு தலைமை தாங்கிய ஹனியே, ஜுலை 31ம் திகதி தெஹ்ரானில் உள்ள விருந்தினர் மாளிகையில் கொல்லப்பட்டமை பரப்ரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




## முக்கிய அறிவித்தல்


தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# சூரியனுக்கு மிக அருகில் சென்ற நாசாவின் பார்க்கர் விண்கலம்

28.12.2024

பார்க்கர் விண்கலம் தற்போது சூரியனுக்கு மிக அருகில் சென்று வரலாறு படைத்துள்ளதாக அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா தகவல் வெளியிட்டுள்ளது.




இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சூரியனின் மேற்பரப்பை ஆய்வு செய்வதற்காக நாசா, கடந்த 2018-ம் ஆண்டு "பார்க்கர் சோலார் புரோப்" (Parker Solar Probe) என்ற விண்கலத்தை விண்ணில் அனுப்பியது.

சூரியனின் மேற்பரப்பில் ஏற்படும் அதீத வெப்பம், சூரிய புயல் மற்றும் சூரிய துகள்கள் தொடர்பில் ஆய்வு செய்யும் நோக்கில் இந்த விண்கலம் செலுத்தப்பட்டது.

தினத்தந்தி டிசம்பர் 27, 10:17 pm Text Size நாசாவின் பார்க்கர் விண்கலம் சூரியனுக்கு மிக அருகில் சென்று வரலாறு படைத்துள்ளது.

சூரியனின் மேற்பரப்பில் இருந்து 6.1 மில்லியன் கிலோ மீட்டர் தூரம் வரை பார்க்கர் விண்கலம் சென்றுள்ளது.




மனித வரலாற்றிலேயே இதுவரை சூரியனுக்கு இவ்வளவு நெருக்கமாக சென்ற மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு பொருள் என்றால் அது இந்த விண்கலம்தான்.

அந்த விண்கலத்தில் இருந்து கிடைத்த தரவுகளை ஆய்வு செய்து வருவதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# இத்தாலி பலெர்மோ மாநகர முதல்வர் மற்றும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு இடையில் உடன்படிக்கை

29.12.2024

இத்தாலி பலெர்மோ தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவினரின் ஏற்பாட்டில், பலெர்மோ மாநகர முதல்வர் Prof. Roberto LaGalla. அவர்களுடனான சந்திப்பு ஒன்று நேற்று 28-12-2024 சனிக்கிழமை Palazzo Palagonia இல் நடைபெற்றது.



இச்சந்திப்பில் பலெர்மோ மாநகர முதல்வர் Prof. Roberto



LaGalla, துணை மாநகர முதல்வர் Giuseppe Mancuso அவர்களும், மற்றும் இத்தாலியப் பிரமுகர்கள். தமிழர் ஒருங்கிணைப்புக்குழுச் செயற்பாட்டாளர்கள், தமிழர் கத்தோலிக்க ஆன்மீக ஒன்றிய அருட்தந்தை பீற்றர் இராஜநாயகம் அவர்களும், தமிழ் இளையோர் அமைப்பினர், இத்தாலியப் பிரமுகர்கள், மற்றும் தமிழ் மக்கள் பிரதிநிதி திருமதி. றமணி தியாகராஜா, திலீபன் தமிழ்ச்சோலை ஆசிரியர் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.



இச்சந்திப்பின்போது இன அழிப்பு உடன்படிக்கை தொடர்பான விடயம் மற்றும் பலெர்மோ வாழ் தமிழ் இளையோர்களின் எதிர்கால விடயங்கள் நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு. பலெர்மோ மாநகர முதல்வர் மற்றும் தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவிற்கும் இடையிலான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

# தென்கொரிய விமான விபத்தில் இருவரைத் தவிர அனைவரும் உயிரிழந்துள்ளனர்

30.12.2024

தென்கொரிய விமானவிபத்தில் விமானத்தில் பயணித்தவர்களில் இருவரை தவிர 179 பேர் உயிரிழந்துள்ள நிலையில் விமான நிலையத்தில் மிகவும் வேதனையளிக்க கூடிய காட்சிகளை காண முடிந்தது.



விமானத்தில் பயணம் செய்தவர்களின் 100க்கும் அதிகமான குடும்ப உறுப்பினர்கள் தகவல்களை பெறுவதற்காக முவான் விமானநிலையத்தின் விசேட பிரிவில் திரண்டிருந்தனர்.

முவான் தீயணைப்பு பிரிவின் தலைவர் லீ ஜியோங் ஹியோன்



விமானத்திலிருந்தவர்களில் அனேகமானவர்கள் உயிரிழந்திருக்கலாம் என குடும்பத்தவர்களிற்கு தெரிவித்தவேளை அந்த அறையில் பெரும் அவலக்குரல் எழுந்தது என தென்கொரியாவின் யொன்காப் நியுஸ் தெரிவித்துள்ளது.

எவரும் உயிர் தப்பியிருப்பதற்கான வாய்ப்பே இல்லையா என பயணிகளின் குடும்ப உறுப்பினர் ஒருவர் தீயணைப்புபிரிவின் தலைவரிடம் கேட்டார். அதற்கு தலையை அசைத்து பதிலளித்த தீயணைப்பு பிரிவின் தலைவர் சொல்வதற்கு மன்னிக்க வேண்டும் நிலைமையை பார்த்தால் அப்படித்தான் தெரிகின்றது என தெரிவித்தார் என தென்கொரிய செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அதிகாரிகளும் விமானசேவையும் தாமதமாக செயற்பட்டதாக குடும்பத்தவர்கள் சிலர் விசனம் வெளியிட்டனர், தங்களை விமானவிபத்து இடம்பெற்ற பகுதிக்கு செல்வதற்கு அனுமதிக்குமாறு மன்றாட்டமாக அவர்கள் கேட்டனர், என தெரிவித்துள்ள யொன்காப் நியுஸ் ஆனால் அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்க மறுத்துள்ளனர்.



பதில் ஜனாதிபதி சொய் சங் மொக் விமானநிலையத்திற்கு சென்றவேளை குடும்பத்தவர்கள் அவரை சூழ்ந்துகொண்டனர், எங்கள் குடும்பங்கள் குறித்து முதலில் சிந்தியுங்கள் என மன்றாடினார்கள் அதற்கு அவர் உங்கள் உணர்வுகளை நான் புரிந்துகொள்கின்றேன் என யொன்காப் நியுஸ் தெரிவித்துள்ளது.

# எத்தியோப்பியாவில் சாலை விபத்தில் 71 பேர் பலி

30.12.2024

தெற்கு எத்தியோப்பியாவில் பாரவூர்தி ஒன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 71 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 68 ஆண்களும் 3 பெண்களும் அடங்குவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஐந்து பேர் ஆபத்தான நிலையில் போனா (Bona) வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாரவூர்தியில் அதிக பயணிகளை ஏற்றிச் சென்றமையே விபத்துக்குக் காரணம் என அந்த நாட்டுக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை சிடாமா மாநிலம் வழியாக பயணித்த வாகனம், பாலத்தைத் தவறவிட்டதால் ஆற்றில் விழுந்ததாக சிடாமா பிராந்திய அரசாங்கத்தின் செய்தித் தொடர்பாளர் வோசென்யெலே சிமியன் தெரிவித்தார்.

ஒரு திருமண விருந்தில் கலந்துவிட்டு பயணிகளில் வீடு திரும்பியபோதே இந்த விபத்து ஏற்பட்டது என வோசென்யெலே சிமியன் தெரிவித்தார்.




AFFORDABLE REFRIGERATION SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install used & new Walk in Cooler Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR GROUP
ARASAN RAJADURAI
Real Estate & Developments Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள் அனைத்து வீட்டு வேலைகளிற்கும் அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum) warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour Wind resistance
Termite Proof
Compare Traditional Building Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்தபடி மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா? அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழிற்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# தர்மமும், உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கின்றது

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது தேசிய சுதந்திரப் போராட்டம் இன்று முழு உலகத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது. ஒரு உள்நாட்டு நெருக்கடியாகத் தோன்றிய எமது பிரச்சினை இன்று உலகத்தை ஈர்க்கும் ஒரு சர்வதேச நெருக்கடியாக விஸ்வரூபம் கொண்டுள்ளது. சிங்கள அரசானது எம் முடன் தனித்து நின்று போராடவில்லை. ஏகாதிபத்திய நாசகார சக்திகள் அனைத்தையும் தனக்குப் பக்கபலமாக அணிதிரட்டி எமது மக்களுக்கு எதிராக ஒரு இன அழிப்பு யுத்தத்தை நடத்தி வருகிறது.

எமது கோரிக்கை என்ன? எமது அரசியல் இலட்சியம் என்ன? என்பதில் நாம் மௌனமாக இருந்துவிடவில்லை. எமது தமிழீழத் தனியரசுப் போராட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்கிய திட்டம் ஒன்றை நாம் முன்வைத்தோம். நாம் ஒரு தேசிய இனம் என்ற ரீதியிலும், வரலாற்று ரீதியாக அமைந்த எமது பாரம்பரியத் தாயக பூமி எமது சொத்துடமை என்பதாலும், எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணியிக்கும் சுயநிர்ணய உரிமை எமக்குண்டு. இந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலேயே எமது தனியரசுப் போராட்டம் அமைந்திருப்பதால் எமது போராட்டம் நியாயமானது என்பதை விளக்கியிருந்தோம். தேசிய சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்டம் நீண்ட வரலாற்றையுடையது. பல வடிவப் போராட்டங்களால் பரிணாமம் பெற்றது. காந்தியப் பாதையில், அமைதிவழிப் பாதையில், மொழி உரிமை கோரி, சம உரிமை கோரி, சமஸ்டி கோரி நடைபெற்ற அகிம்சை வடிவப் போரட்டங்கள் அனைத்துமே எதிரியின் இராணுவ ஒடுக்குமுறையால் அடக்கியொடுக்கப்பட்டன. இறுதியில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலான தனியரசுக் கோரிக்கை பிறந்தது. அது புரட்சிகர ஆயதப் போராட்ட வடிவம் பெற்றது. இப்படியாக தமிழரின் அரசியல் போராட்ட வரலாற்றின் உச்சக்கட்டமாகவே தமிழீழக் கோரிக்கையும் அதனை அடையும் மார்க்கமாக ஆயுதப்போராட்டமும் பரிணமித்தது என்பதை விளக்கியிருந்தோம். தமிழீழம் மக்களின் தேசியத்திற்கும், தாயகத்திற்கும், தேசிய சுயநிர்ணய உரிமைக்கும் உத்தரவாதமளிக்கப்படாத எந்த ஒரு தீர்வையும் நாம் அங்கீகரிக்க போவதில்லை என்பதே நமது உறுதியான நிலைப்பாடாக இருந்தது. ஆனால், சிங்கள அரசு எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை.

சிங்கள இனவாத ஆட்சியாளர் ஒரு இராணுவத் தீர்வையே விரும்புகிறார்கள் என்பது அவர்களது நடவடிக்கைகளிலிருந்து தெட்டத் தெளிவாகியுள்ளது. எமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் பூதமாகத் திரித்துக்காட்டி, சுதந்திரப் போராளிகளை வன்முறைப்பித்தர்களாகச் சித்தரித்துக் காட்டி, இராணுவரீதியாக எம்மை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். இந்த இலக்கில் அவர்கள் முழுச்சிங்கள தேசத்தையுமே இராணுவமயமாக்கி வருகிறார்கள். பெரியதொரு இனயுத்தத்திற்கு ஆயத்தங்கள் செய்து வருகிறார்கள்.

தர்மமும், உண்மையும் எமது பக்கம் சார்ந்திருக்கின்றது. அதுவே எமது பலம். அதர்மமும், பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்திருக்கின்றது அதுவே அவனின் பலவீனம். ஈற்றில் வெற்றி கொள்ளவது நாம். ஏனெனில் என்றும் அழியாத தர்மம் எமக்குப் பக்கபலமாக இருக்கின்றது.

குறிப்பு: திம்பு பேச்சுவார்த்தையின் போது 1985 ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து...


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
NORITZ 25
Install Included
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
WHY UPGRADE TO TANKLESS
Endless Supply of Water, SAVE UP to Save Up To 40%
25 YEARS WARRANTY
FREE ESTIMATE
Sale & Service
Repair & Installation
S.Kumar @ (416-993-8001
Airehvac70@gmail.com


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu




# மண்சுமந்தோர் கனவு

**மண்சுமந்தோர்**
**கனவு**

துயிலுமில்ல விதைப்பொன்றின் பின்னர்
வீடு திரும்பினேன்
படுக்கை விரித்துவிழ சாமக்கோழி கூவிற்று.
வித்துடல் தோளேற்றி நடந்ததால்
வலித்தது தோளும் மனமும்
தூக்கம் தொலைவாகிப்போனது.
கவிதையொன்று எழுதலாம்
எழுதலாம்தான் எப்படித் தொடங்குவது?
எழுதிச்சென்று எங்கே முடிப்பது?
பாட்டெழுதிப் பாட்டெழுதி
நான்படும் துயர் யாரறிவார்?
கூட்டுக்குள் கிடந்து குமைகிறது உயிர்
பூ அளிப்போட்டே புண்ணானது கைகள்.
நிதம் அழுதழுது
நீர் வற்றிப்போனது விழிகள்.
கண்மலரும் காலை ஒவ்வொன்றும்
வீரச்சாவுடன் தானே விடிகிறது.
இமை மூடும்பொழுதும்
இடிவிழுத்தித்தானே இருள்கிறது.
நிலவு முகந்திருந்திய நிர்மலப் பூங்குடிகளை
இழவு எடுத்து செல்கிறது நாளாந்தம்.
எத்தனை காலத்துக்கென்றுதான் இது?
பத்துப்பரப்பில் விதைக்கத் தொடங்கிய வயல்
ஏக்கர் கணக்காக நீள்கிறது இன்று.
விதைக்கக் குழிதோண்ட வியர்க்கிறது நிலம்
காற்றின் விழிகலும்து.
வெள்ளையடித்த கல்லறைக்குள்ளே
பள்ளி கொள்கின்றனர் பரமாத்துமாக்கள்.
நூல்பிடித்து ஓடியநேராய்
வரிசையான நாற்று நடுகை.
எல்லாம் முளைக்குமெனும் எதிர்பார்ப்பு
பொய்க்கவில்லை
கங்கும் களைமாக எங்கும் அரும்புகள்.
ஒருநாள் வந்து
உள்ளே புகுந்து ஒரு பூவைத்துப்பாரும்.
குழியிலிருந்து கேட்கும் குரல்
பார்க்கும் வழி
துடிக்கும் உயிர்.
எவர் சொன்னது இவர்களை இற்நதுபோனவர் என்று?
எவர் சொன்னது எலும்பும் உக்கி எருவானார் என்று?
வெளியே வருவதில்லையே தவிர
குழிக்குள்ளேயே ஒரு ராஜாங்கமே நடக்கிறது.
கார்த்திகை இருபத்தேழு
தேசத்துக்கு உயிர்பெழுதும்நாள்.
சில்லிட்டுப்போகும் நிலம்
பூக்கொண்டு நடப்போம் புனிதரிடம்.
மெல்ல அருகமர்ந்து
கல்லறைகள் கழுவுவோம் கண்ணிரால்.
நெய்விளக்கு ஏற்றும் நேரம்
செல்வங்கள் விழிதிற்ப்பர்
செவிகேட்க சிரிப்பார்.
மௌன மொழியில்
பெற்றமனம் குரப்பேவர்
அதில் ஆயிரம் அர்த்தங்கள் அவிழும்.
“மொழியாகி எங்கள் மூச்சாகி” என்று
என்புருக வழியும் பாடலில்
சிலிர்த்துப்போய் சிலையாவோம்.
“பணிமுடித்து உறங்குகின்றோம்.
மீதிவழி முன்செல்வீர்” என
தேவகுமாரனின் அசரீரி கேட்கும்.
“எமக்கானது பூவல்ல
எமக்கானது டரல்ல
எமக்கானது இந்தப்பாடல் மட்டுமல்ல
எமக்கானது விடுதலை
எமக்கானது தேசத்தின் விடிவு.”
காற்றிலேறும் இந்தப் பேரொலியுடன்
கல்லறைகள் மூடிக்கொள்ளும்
ஒளிபெறும் திசையில் பாதை தெளிவுறும்.
வாசல் கடந்துவெளியேவர
நிலம் விந்திருக்கும்.
எம் பயணம் தொடரும்
மண்மடிந்தோர் கனவு நனவாகும்வரை.

- புதுவை இரத்தினதுரை








# ஜொனி மதிவெடிகள்
## பெயரிடலும் வரலாறும்

1987 அக்டோபர் 10.

இந்தியப்படையுடன் போர் தொடங்கிவிட்டது.

அடுத்தநாள்–

கொக்குவில் பிரம்படி வீதியில், தலைவரின் பாசறையை இலக்குவைத்து, இந்தியப்படையின் சிறப்புக் கொமாண்டோக்கள் தாக்குதலைத் தொடுத்தனர். அவர்களின் முயற்சி வெற்றிபெறவில்லை. ஆனாலும், தலைவர் தனது பாசறையை இடம்மாற்றிக்கொண்டார்.

“ஒப்பறேசன் பவான்” என்ற பெயரில், புகழ்பெற்ற யாழ்ப்பாணச் சமரை இந்தியப்படைகள் தொடர்ந்தன.

“ஓரிரு நாட்களுக்குள் எல்லாம் முடிந்துவிடம்” என்றார்கள் இந்தியத் தலைவர்கள்.

ஆனால், யாழ்ப்பாணச் சமர் ஒருமாதம் நீடித்தது.

போரைத் தொடர்ந்து வழிநாடாத்துவதற்காக, தலைவர் தளத்தை மாற்றிக்கொண்டார். சில வாரங்கள் கழித்து, இந்தியத் தளபதிகளும் இதை அறிந்துகொண்டு விட்டனர்.

ஆனால், யாழ்ப்பாணத்தைவிட்டு தலைவர் எங்கு சென்றிருப்பார் என்பது, இந்தியத் தளபதிகளுக்குப் புதிராகவே இருந்தது.

வன்னிக்குச் சென்றாரா?

அல்லது மன்னார்ப் பெருங்காட்டிற்குச் சென்றுவிட்டாரா?

அல்லது கொக்கிளாய் ஆற்றைக் கடந்து, திருகோணமலைக்குச் சென்றாரா?

அல்லது அங்கிருந்து மட்டக்களப்பு மாவட்டத்திற்குள் சென்றுவிட்டாரா?


வரைபடத்தை விரித்துவைத்துவிட்டு, இந்தியத் தளபதிகள் குழம்பத்தொடங்கினர்.

தலைவரின் இருப்பிடத்தைக் கண்டறிந்து சொல்வதில், சிங்களப் புலனாய்வுத்துறையும் பெருமுயற்சி செய்தது. ஆனாலும், தலைவரின் இருப்பிடம் தொடர்பான ஊகங்களைத்தவிர, சான்றுகளைப் பெறமுடியவில்லை.

தலைவரைத்தேடி இந்தியப்படைகள் வன்னிப் பெருநிலப்பரப்பிலும், தென்தமிழீழத்திலும் மோப்பம் பிடித்துத்திரிந்தன.

இதேவேளை தமிழ்நாட்டில் தங்கிளிருந்த கிட்டண்ணை, இந்தியப்படையுடன் போர் நிறுத்தம் ஒன்றைக்கொண்டவந்து, பேச்சுவார்த்தை நடாத்த முயன்றபடி இருந்தார்.

இந்திய அரசின் சம்மதத்தைப் பெற்று, லெப். கேணல் ஜொனியை தலைவரிடம் அனுப்பி, அவரின் கருத்துக்களையும் பணிப்புக்களையும் பெற கிட்டண்ணை முடிவெடுத்தார்.


லெப். கேணல் ஜொனி. 13.03.1988

கிட்டண்ணையின் வேண்டுகோளை இந்தியப்படை ஏற்றது. ஆனால், ஜொனி இரகசியமாகத் தமிழீழத்திற்குச் செல்வதை அது தடுத்தது.

ஜொனி செல்லவிரும்பும் இடத்திற்கு தாங்களே கூட்டிச்சென்று பாதுகாப்பாக விட்டுவிடுவதாக இந்தியத் தளபதிகள் பாசாங்கு செய்தனர்.

ஜொனியின் பயணத்தைப் பயன்படுத்தித் தலைவரின் இருப்பிடத்தை அறிந்துகொள்ள அவர்கள் திட்டமிட்டனர்.

இந்தியத் தளபதிகளின் நோக்கம் தெரியாத ஒன்றல்ல. ஆயினும், அவர்களது கட்டளையை ஏற்கவேண்டிய தேவையும் நிர்ப்பந்தமும் இருந்தன.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

இந்தியப்படை வவுனியாவரை ஜொனியைக் கூட்டிச்சென்று விட்டுவிடுவது என்றும, அதன் பின் ஜொனி தானாகவே தலைவரைத் தேடிச்சென்று சந்தித்து, மீண்டும் வவுனியா இந்தியப்படை முகாமுக்கே திரும்பி வந்துவிடுவது என்றும், இணக்கம் காணப்பட்டது.

இந்தியத் தளபதிகளும் இதற்கு இணங்கினர்.

ஜொனியை வவுனியா கொண்டு சென்று இறக்கிவிட முன்னரே, வன்னிப் பெருநிலத்தில் ஜொனியின் பயணத்தைக் கண்காணிக்க இந்தியத் தளபதிகள் ஏற்பாடுகளைச் செய்தனர்.

ஜொனி வவுனியா கொண்டவந்து விடப்பட்டார்.

தேசவிரோதக் கும்பல்களினதும், அவர்களது உளவாளிகளினதும் மற்றும் பதுங்கியிருக்கும் இந்தியச் சிப்பாய்களினதும் கண்களில் படாது சுற்றிச்சுழன்று, தலைவரின் இருப்பிடத்திற்கு விரைந்தார்.




தலைவரைச் சந்தித்தார் – கிட்டண்ணையிடம் சொல்லவேண்டிய விடயங்களை மனதில் பதித்தார். மீண்டும் வவுனியா நோக்கிப் பயணத்தைத் தொடங்கினார்.

பயணத்தின் ஒரு கட்டத்தில் புதுக்குடியிருப்புக்கு வந்து, அங்கிருந்து சைக்கிள் மூலம் விஸ்வமடுவரை செல்ல முயன்று கொண்டிருந்தார்.

தேவிபுரத்திற்கு அருகே உள்ள காட்டாறு ஒன்றிற்குள், ஜொனியின் பயணப்பாதையை அறிந்த கொள்ளப் பதுங்கிக்கிடந்த இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கி லீச்செல்லைக்குள், ஜொனியின் சைக்கிள் சென்றுவிட்டது.

“ஜொனி மீண்டும் வவுனியா திரும்புவரை வன்னிப்பெருநிலத்தில், இராணுவ நடவடிக்கைகள் எதனையும் செய்ய மாட்டோம்” என்ற, இந்தியத் தளபதிகளின் வாய்மொழி வாக்குறுதியையும் மீறி, ஜொனி சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை விழ்த்தும் தந்திரோபாயத்தை இந்தியத் தளபதிகள் கடைப்பிடித்தனர்.

ஜொனியின் பயணத்தைப் பயன்டுத்தி, தலைவரின் இருப்பிடத்தைச் சரியாகக் கண்டறிவது ஒன்று; மற்றையது புலிகளின் தளபதியைத் தந்திரமாக கொன்றுவிடுவது.

இரண்டையுமே இந்தியத் தளபதிகள் அடைந்துவிட்டனர்.



வவுனியாவுக்கு மேற்குப்புறுத்தில் இருக்கும் மன்னாரிலோ அல்லது கொக்கிளாய் வாவிக்கு அப்பாலுள்ள தென் தமிழீழத்திலோ தலைவர் இல்லை; அவர் மணலாற்றுக் காட்டிற்குள்தான் பாசறை அமைத்து இருக்கின்றார் என்பதை ஜொனியைத் தடயமாகவைத்து அறிந்து கொள்ள, இந்தியத் தளபதிகளுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

“இராசா“ கண்டுபிடிக்கப்பட்டுவிட்டார். ஆகவே, இராசா இனி நகர முடியாது என்று நினைத்துக்கொண்டு, இந்தியப்படைகள் “செக்மேற்” சொன்னார்கள்.

ஜொனி சுட்டுக்கொல்லப்பட்டதும் அடுத்து என்ன நடக்கவிருக்கின்றது என்பதை தலைவர் ஊகித்தறிந்து கொண்டுவிட்டார்.

இன்னும் சில வாரங்களில், இந்தியப்படைகள் மணலாறுமீது ஒருபெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்று தலைவர் எதிர்பார்த்தார்.

வெள்ளம்போல் காட்டுக்குள் நுழையப்போகும் இந்தியச் சிப்பாய்களுடன் மரபுவழிச்சமரை நடாத்துவது எளிதல்ல என்பதும், தலைவருக்குத் தெரியும். அதற்காகப் பின்வாங்கிச்செல்வும் அவர் விரும்பவில்லை. ஏனெனில், அது புலிகள் இயக்கத்தை இராணுவரீதியாக அழித்துவிடும் என்று, அவர் உறுதியாக நம்பினார். தமிழீழத் தேசியத்திற்குக் கவசமாக இருக்கும் புலி



களின் இராணுவபலம் சிதைக்கப்பட்டால், தமிழினம் அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்டுவிடும் என்று தலைவர் அஞ்சினார்.

ஆகவே, இந்தியப்படையுடனான போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச்செல்லவேண்டிய வரலாற்றுக் கடமை தன்மீதே இருக் கின்றது என்பதை நன்குணர்ந்த தலைவர் அவர்கள், "சாதிக்க" அல்லது "சாக" முடிவெடுத்தார்.




மணலாற்றைத் தளமாக்கிய அடுத்த கணத்திலிருந்தே, ஒரு பெரும் காட்டுச் சமருக்காகக் காட்டையும், போராளிகளையும் ஏற்கனவே தலைவர் தயார்படுத்தியிருந்தார்.

இப்போது, முல்லைத்தீவு மாவட்டத்திலும், மணலாற்றுக் காட் டிற்குள்ளும் இருந்த சில நூறு புலிவீரர்களை, ஒரு பெரும் சண்டைக்குத் தயாராக்கினார்.

காட்டிற்குள் நுழையப்போகும் இந்தியப்படைகளின் சுதந்திர மான நகர்வைக் குழப்புவதன் மூலம் சில இராணுவ சாதனை களைப் படைக்கமுடியும் என்றும், இவ்விதம் பல இராணுவ சாதனைகள் நிகழ்த்துவதன் மூலம், இந்தியப்படையின் இரா ணுவ நடவடிக்கையை முறியடிக்கமுடியும் என்றும், தலைவர் எண்ணினார். இந்த இராணுவ சாதனைகள் ஒரு உளவியல் போருடன் கலந்து செய்யப்படுமானால், இது இரட்டிப்புப் பலனைக் கொடுக்கும் என்றும் அவர் எதிர்பார்த்தார்.

ஒரு தரைப்படை வீரனைக் கனவிலும் அச்சுறுத்துவது மிதி வெடிகளும், பொறிவெடிகளும், கண்ணிவெடிகளும்தான்.



இப்படியான சந்தர்ப்பங்களில், தூக்கிய ஒரு காலைக் கீழேவைக் கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு படைவீரன் செத்துப் பிழைக்கின்றான். இந்த மிதிவெடிகளை, எறும்புக்கூட்டம்போல வரவிருக்கும் இந்தியச் சிப்பாய்களுக்கு எதிராகப் பயன்படுத் தினால் நல்ல பலனைக் காணலாம்.

ஆனால் உயர் தொழில்நுட்பத்துடன் உற்பத்திசெய்யப்பட்டு, இறக்குமதிசெய்யப்படும் இத்தகைய மிதிவெடிகளுக்கு நாம் எங்கேபோவது?

தலைவரது கனவிலும், நினைவிலும் இந்தக் கேள்வியே உதித்து விடைதேடப் போராடியது.

ஒருநாள் அதிகாலை, நான்கு நான்கரை மணியிருக்கும் –

காட்டுப் பாசறையில், தனது படுக்கையில் இருந்தபடி சிந்தித்துக் கொண்டிருந்த தலைவர் அவர்கள் திடீரென எழுந்து, சில நூறுயார் தள்ளி இருந்த பாசறையில் தங்கியிருந்த இராணுவ தொழில்நுட்பப் பிரிவின் பொறுப்பாளர்களைத் தேடிச்சென்றார்.

தனது மனதில் தோன்றிய மதிவெடித் தயாரிப்புப் பொறிமுறை பற்றி, அவர்களுக்கு அப்போதே விளக்கிக் கூறினார்.







காட்டிலேயே கிடைக்கக்கூடிய மரந்தடி, ரின்பால்பேணி மற்றும் "றபர்பான்ட்" என்பவற்றைக்கொண்டு, சிறுபிள்ளைகள் விளை யாடும் "கெற்றப்போலின்" தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி, மிதிவெடிகளை தயாரிக்கமுடியும் என்று தலைவர் விளக்கி, நம்பிக்கையூட்டிக்கொண்டிருந்தார்.

பரீட்சார்த்த முயற்சிகள் தொடங்கின.

சிறுதொகையில் வெடிமருந்தும், "பென்ரோச்" பற்றறியும், "டெற்றோனேற்றரும்" தவிர, மிகுதி அனைத்துப் பொருட்களும் உள்ளூர்ப்பொருட்கள்.

இறுதியில் முயற்சி வெற்றிகண்டது.

இப்போது, இந்தியப்படைகள் மணலாற்றுக் காட்டைச்சூழ பல்லா யிரக்கணக்கில் விரைவாகக் குவிக்கப்பட்டனர். அதற்கு "ஒப்ப ரேசன் செக்மேற்" எனப்பெயரிட்டனர்.

மெதுவான வேகத்தில் மிதிவெடித் தயாரிப்புத் தொடங்கியது.

அந்த மிதிவெடிக்குத் தலைவர் பெயரிட்டார் –

ஜொனி மதிவெடி.

இந்தியப்படைகள் காட்டுச்சமரைத் தொடங்கின.

ஜொனிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு, காட்டுக்குள் நுழைந்த இந்தியப்படைக்கு, "ஜொனி மிதிவெடிகள்" நம்பிக் கைத் துரோகம் செய்யத்தொடங்கின.

ஜொனியின் பயணத்தை நயவஞ்சகமாகப் பயன்படுத்தி "பாதை" கண்டுபிடித்த இந்தியப்படைகளுக்கு இப்போது, ஜொனி மிதி வெடிகள் பாதத்தைக் கழற்றிக்கொண்டிருந்தன.

இந்தியப்படைகள் எண்ணியதைப்போல் தலைவரை அழிக்க முடியவில்லை.

செக்மேற் 1... 2... 3... என இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. 100... 200... 300... என இந்தியப்படைகளின் கால்களும் கழறற்பட்டன.

"செக்மேற்" அவமானத்துடன் முடிவடைந்தது.

ஜொனி மிதிவெடிகள், புத்துயிர் பெற்று புதுவேகம்கண்டன.

செக்மேற் முறியடிப்பின் முதுகெலும்பு "ஜொனி மிதிவெடிகள்".

ஒரு பெரிய வரலாறு இம்மிதிவெடிகளுக்குள்ளும் இப்பெயர் சூட்டலுக்குள்ளும் ஒளிந்து கிடக்கின்றது!

நன்றி: "விடுதலைப்புலிகள்' (ஆவணி, புரட்டாதி 1994)






# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை 10.01.1974






1974ஆம் ஆண்டு சனவரி மூன்றாம் திகதி தொடக்கம் பத்தாம் திகதி வரை தமிழ் மக்கள் தமது மொழி, பண்பாடு என்பனவற்றை உள்ளடக்கி நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தார்கள். மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதை அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது கொழும்பில் நேரடியாகவும், யாழ்ப்பாணத்தில் மாநகர மேஜர் ஊடாகவும் தொடர்ச்சியான தடைகளை ஏற்படுத்தியது. அத்துடன் மாநாடு நடைபெறுவதற்கான முக்கிய அரங்குகளின் அனுமதி இறுதி நேரம் வரை மறுக்கப்பட்டிருந்தது. மாநாட்டில் கலந்து கொள்ள பல வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா மறுக்கப்பட்டது.

இவைகள் எவ்வாறு இருந்தாலும், மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டும் என்ற மனவெழுச்சி அமைப்பாளர்களிடமும், மக்களிடமும் இருந்தது. மக்கள் அலை அலையாகத் திரண்டதைக் கண்ட அரசாங்கம் சற்றுக் கீழிறங்கி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வெளிநாட்டு அறிஞர்களுக்கு விசா வழங்கியது.

## 4 வது உலகத் தமிழாராச்சி மாநாடு 03-09 தை 1974



விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை

நன்றி: 'ஒளியில் எழுதி' அமிர்தலிங்கத்துகான இலண்டன் வெளியீட்டிலிருந்து...

மாநாட்டுக் குழுத்தலைவர் நீதியாளர் தம்பையா மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு விரும்பவில்லை. ஆகையால் அவர் தலைவர் பதவியிலிருந்து விலகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் தலைமையில் தமிழாராய்ச்சி மாநாடு மூன்றாம் திகதி ஆரம்பமாகி பத்தாம் திகதிவரை யாழ். முற்றவெளி திறநத் வெளியரங்கில் சிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் இலட்சக்கணக்கான மக்கள் யாழ். நகரம் வந்தார்கள். அதுவரை நடைபெற்ற எந்தவொரு மாநாடும் இதுபோல சிறப்பாக நடைபெறவில்லை. அன்றைய தினம் குடாநாடு விழாக் கோலம் பூண்டிருந்தது.

1974ஆம் ஆண்டு சனவரி பத்தாம் திகதி இறுதி நாளாகக் கொண்டாடப்பட்டது. இறுதி நிகழ்வாக அறிஞர்கள் தமிழின் பெருமைகளையும், பண்பாட்டின் பெருமையையும் பற்றிப் பேசினார்கள். மக்கள் உணர்வோடு கைதட்டி உற்சாகப்படுத்தினர். இறுதியாகத் தமிழகப் பேராசிரியர் "நைனா முகமது" பேசிக் கொண்டிருக்கும் போது யாழ். உதவிக்கு காவற்துறைமா அதிபர் சந்திரசேகரா தலைமையிலான காவற்துறை மாநாட்டில் கலந்து கொண்டிருந்த மக்களைத் தாக்கியதுடன், துப்பாக்கியாலும் சுட்டார்கள். இச் சம்பவத்தில் ஒன்பது பொதுமக்கள் உயிரிழந்தார்கள். பலர் காயமடைந்தனர். அரங்குகள் சேதமடைந்தன. இம் மாநாட்டினைக் குழப்பிய யாழ் உதவிக் காவற்றுறை அத்தியட்சகர் சந்திரசேகரா பின்னர் சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் காவற்றுறை அத்தியட்சகராகப் பதவி உயர்த்தப்பட்டார்.

***10.01.1974 அன்று தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டோர் விபரம்:***

1. வேலுப்பிள்ளை கேசவராஜன் (வயது 15 – மாணவன்)
2. பரமசோதி சரவணபவன் (வயது 26)
3. வைத்தியநாதன் யோகநாதன் (வயது 32)
4. ஜோன் பிடலிஸ் சிக்மறிங்கம் (வயது 52 – ஆசிரியர்)
5. புலேந்திரன் அருளப்பு (வயது 53)




6. இராசதுரை சிவானந்தம் (வயது 21 – மாணவன்)
7. இராஜன் தேவரட்ணம் (வயது 26)
8. சின்னத்துரை பொன்னுத்துரை (வயது 56 – ஆயுள்வேத வைத்தியர்)
9. சின்னத்தம்பி நந்தகுமார் (வயது 14 – மாணவன்)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# சுன்னாகம் காவல்துறை நிலையப் படுகொலை 08.01.1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச எல்லைக்குள் சுன்னாகம் அமைந்துள்ளது. யாழ் நகரிலிருந்து காங்கேசன்துறை செல்லும் கே.கே.எஸ் வீதியில் பத்து கி.மீ தூரத்திலுள்ள சந்திக்குத் தெற்குப் புறமாக இருநூற்றைம்பது மீற்றர் தூரத்தில் சுன்னாகம் காவல்துறை நிலையம் அமைந்திருந்தது.

1984ஆம் ஆண்டு தை மாதம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காரணமின்றிக் கைதுசெய்யப்பட்ட சுன்னாகப் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சுன்னாகக் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

1984ம் ஆண்டு தை மாதம் எட்டாம் நாள் காவல்துறை மீது போராளிகளின் எதிர்ப்புக்கள் பரவலடைய சுன்னாகக் காவற்றுறையினர், இளைஞர்களைத் தடுத்து வைத்திருந்த அறையில் நேரக்கணிப்பு குண்டினை பொருத்திவிட்டு அவ்விடத்தை விட்டு வெளியேறினார்கள். காவல்துறையினர் பொருத்திய குண்டு வெடித்ததில் காவல்துறை நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்ட இளைஞர்களை காப்பாற்றச் சென்ற சஞ்சீவன் உட்பட பத்தொன்பது இளைஞர்கள் உயிரிழந்தனர்.


*08.01.1984 அன்று சுன்னாகம் காவற்றுறை நிலையப் படு*

***கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்:***

01. செல்லர் சிவலிங்கம் (வயது 22 – மாணவன்)
02. வைத்திலிங்கம் நிகேதனன் (வயது 21 – மாணவன்)
03. கந்தையா பாலன் (வயது 25 – கமம்)
05. அப்பையா நாகராசா (வயது 38 – வியாபாரம்)
06. ஆசீர்வாதம் விஜிற்விமலராஜா ( வயது 20 – மின்சாரசபை ஊழியர்)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்களின் படுகொலை 06.01.1984




வங்காலைக் கிராமம் மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் கடற்கரையோரமாக அமைந்துள்ளது. புனித அருள் ஆலயம் இங்குள்ள மக்களின் வணக்கத்தலமாக உள்ளது.

1985 ஆம் ஆண்டு தை மாதம் ஆறாம் திகதி பூரணை தினத்தன்று பி.ப. 12:30 மணியளவில் வங்காலைக் கிராமத்தினை இராணுவத்தினர் சுற்றி வளைத்துக்கொண்டனர். நள்ளிரவு தொடக்கம் மறுநாள் காலை 10:00 மணிவரை வெடிச்சத்தங்கள் கேட்டவண்ணம் இருந்தன.

மேரி பஸ்ரியன் குருவின் வதிவிடத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டு இராணுவத்தினர் சென்றனர். குருவானவர் தனது மேலங்கியையும் அணிந்து கொண்டு செபமாலையுடன் வெளியே வந்து கைகளை மேலுயர்த்தியவாறு ஆங்கிலத்தில் "பிளீஸ்" எனக் கெஞ்சும் பொழுது அவரை நோக்கி இராணுவத்தினர் சுட்டனர் பங்குத்தந்தையுடன் நின்ற இரண்டு இளைஞர்களும் உயிரிழந்தார்கள். வெடிச்சத்தத்திற்கு பயந்து ஓடிய சிலரும் பலியாகினர். சிலர் கோயிலின் மேல் மாடியில் ஏறி பதுங்கியிருந்தார்கள். இராணுவத்தினர் பங்குத்தந்தையின் உடலை இழுத்து வந்து கன்னியர்மட வாசலிற் கிடத்திப் புகைப்படங்கள் எடுத்தனர். இவற்றைக் கோயிலின் மேல்மாடியில் ஒளித்திருந்த பொதுமக்கள் பார்த்தார்கள்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த பின் இராணுவத்தினர் ஒரே பாட்டும் கூத்துமாக இருந்தனர். பின்னர் இராணுவத்தினர் இறந்தவர்களை ஏற்றிக்கொண்ட சென்றுவிட்டனர். இதன் பின்னர் மக்கள் திரண்டு சென்று பார்த்தபோது மேரி பஸ்ரியனின் இருப்பிடம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது.

இறந்த மேரி பஸ்ரியனின் உடலைத் தரவி மற்ற எட்டுப் பேரின் உடல்களை மன்னார் வைத்தியசாலையிற் கொடுத்துவிட்டு, மேரி பஸ்ரியனின் உடலைத் தள்ளாடி இராணுவ முகாமிற்குக் கொண்ட சென்றுவிட்டனர். அவ்வேளையில் இந்த முகாமிலிருந்து எழும்பிய வழமைக்கு மாறான புகைமண்டலத்திலிருந்து அவரது உடல் எரிக்கப்பட்டதாக அப்பகுதி மக்கள் நம்புகின்றனர்.

இச்சம்பவத்தில் மேலும் பல இளைஞர்கள் வெடிபட்ட காயங்களுடன் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டு இரகசியமான முறையில் வைத்தியம் செய்யப்பட்டனர். இறந்தவர்களின் உடல்கள் வங்காலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டன.

*06.01.1985 அன்று வங்காலைப் பங்குத்தந்தை வணபிதா*



*மேரி பஸ்ரியன் மற்றும் பொதுமக்கள் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்*

1. மரியதல்மைடா தாசன் (26)
2. சூசையப்பு மேன்பீரிஸ் (20)
3. ஞானசேகரம் றூபன்குரூய் (24)
4. சவிரியான் அந்தோனி (23)
5. மனியப்பன் நீலமேகம் (28)
6. சந்தியா அலெக்சாண்டர் முறாவிலி (33)
7. வணபிதா மேரி பஸ்ரியன் (-)
8. லூயிசம்மா பிராண்டா (60)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# திருகோணமலை தமிழ் மாணவர்கள் படுகொலை 02.01.2006







இச்சம்பவத்திற் காயமடைந்தவர்கள் விபரம்
1. பரராஜசிங்கம் கோகிலராஜா (21)
2. யோகராஜா பூங்குழலோன் (20)
குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.





திருகோணமலை டொக்யார்ட் வீதி, பெரிய கடற்கரைச் சந்தியிலுள்ள காந்தி சிலைக்குச் அருகாமையாக மாலைப் பொழுதில் தனிமும் இளைஞர்கள் நின்று கதைப்பது வழக்கம். 02.01.2006 அன்றைய மாலைப் பொழுதும் மாணவர்கள் அவர்களை நிலத்தில் விழுத்தி கண்மூடித்தனமாகத் தாக்கினர். மாணவர்கள் இச்சம்பவம் பற்றி தமக்கு ஏதும் தெரியாது எனக் கூறியபோதும் மாணவர்களைச் சப்பாத்துக் கால்களால் மிதித்து கண்மூடித்தனமாக சுடத்தொடங்கினர். இத்தகைய காட்டு















பலர் அவ்விடத்தில் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தனர். அப்போது ஆட்டோ ஒன்றில் வந்த இனம் தெரியாத நபர்கள் இந்த இளைஞர்கள் மீது கைக்குண்டை வீசிவிட்டு கோட்டைப் பக்கமாகச் சென்றனர்.


கைக்குண்டு வெடித்தில் திருமலை புனிதஜோசப் கல்லூரி மாணவரான யோகராஜா பூஞ்குழலோன் என்பவர் காயமடைந்தார். இவரை ஏனைய மாணவர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்ல முற்பட்டபோது அப்பகுதிக்கு வந்த கடற்படையினர் அங்க சுமார் 10 நிமிடங்கள் வரை துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் கடற்கரையில் நின்ற மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடத்தொடங்கினர். இதற்கிடையில் காயமடைந்த மாணவர்களுக்கு அருகில் விரைந்த கடற்படையினர் மிராண்டித் தனமான தாக்குதலில் 05 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 05 மாணவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

***02.01.2006 அன்று திருகோணமலையில் கொல்லப்பட்டடோர் மாணவர் விபரம்***

1. லோகிதராசா றொகான் (20)
2. சண்முகராஜா சஜீந்திரன் (19)
3. மனோகரன் வஜீகர் (21)
4. தங்கத்துரை சிவானந்தன் (20)
5. யோகராஜா கேமச்சந்திரன் (22)



# மன்னார் படகுத்துறைப் படுகொலை - 02.01.2007




இலங்கையின் வடக்கே மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகருக்கு வடகிழக்கே சுமார் 20 மைல்களுக்கு அப்பாலுள்ள படகுத்துறைக் கிராமம். 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மீது சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட படை நடவடிக்கை காரணமாக யாழ்.நவாந்துறைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்துவந்து 35 வரையான குடும்பங்கள் இக்கிராமத்தில் குடியேறி வாழ்ந்துவந்தனர். இவர்கள் கடற்றொழிலையே தமது வாழ்வாதாரமாகக் கொண்டமையால் இக்கரையோரக்கிராமம் இவர்களது தொழில் நடவடிக்கைக்கு ஏற்புடையதாக இருந்தது. இங்கு வாழ்ந்த மக்கள் அனைவரும் கத்தோலிக்க மதத்தினைச் சேர்ந்தவர்கள். இக்கிராமத்தில் கத்தோலிக்க தேவலாயம் ஒன்று உள்ளது தேவாலயச் சுற்றாடல் பார்ப்பதற்கு மிகவும் இழகாக இருக்கின்றது. இம்மக்கள் மிகவும் சந்தோசமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்துவந்தனர்.

2007 சனவரி இரண்டாம் நாள் காலை இக்கிராமத்திற்கு மேலாக சிறீலங்கா சிங்கள வான்படையின் வேவு பார்க்கும் விமானம் ஒன்று பறந்துகொண்டிருந்தது. சரியாக 9:30 மணியளவில் இவ்வான்பரப்பில் நுழைந்த சிறீலங்கா சிங்கள வான்படையின் மூன்று கிபீர் விமானங்கள் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டன். கிராம மக்கள் மிகவும் நெருக்கமாக வாழ்ந்ததனாலும் விமானங்களிலிலிருந்து ஏவப்பட்ட குண்டுகள் அனைத்தும் குடியிருப்புப் பகுதி மீதே வீழ்ந்து வெடித்ததாலும் அவர்களது வீடுகள் மற்றும் சொத்துக்கள் அனைத்தும் முழுமையாக அழிவடைந்தன பெண்கள் சிறுவர்கள் உட்பட 15 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். மேலும் 37 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலின் மொத்தப் பாதிப்பும் பொதுமக்களுக்கே ஏற்பட்டுள்ளது என்பதை மதத் தலைவர்களும் அப்பகுதி மக்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். பாதிப்படைந்த மக்களை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் சென்று பார்வையிட்டுள்ளது. சிறீலங்கா விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை நடவடிக்கையானது அப்பாவிப் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட மனித நேயமற்ற ஒரு கொடுரத்தையே வெளிப்படுத்துகின்றது.

***02.01.2006 அன்று மன்னார் படகுத்துறைப் கொல்லப்பட்டடோர் மாணவர் விபரம்***

1. அ. ஆனந்தி (32)
2. அ. விதுசன் (04)
3. அ. இராஜகுமாரி (57)
4. அ. சத்தியப்பிள்ளை (26)
5. அ. குகன் (36)
6. கு. தயாழன் (02)
கு. வலஸ்தீனா (30)
8. ப. ஜமேசன் (12)
9. ச. மதுசன் (01)
10. உதயகுமார் (55)
11. உ. மாலினி (27)
12. உ. தர்சிகா (01)
13. வி. வினோயன் (04)
14. வி. தர்சினி (08)
15. வி. விஜிதா (35)

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.


























# சிறீலங்காவின் கொலைக் கரங்களால் படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமரர் பொன்னம்பலம்



தமிழினத்தின் விடுதலைக்காக சிறீலங்காவின் தலைநகரில் நின்று குரலெழுப்பியவர். சொல்லிலும் செயலிலும் தமிழீழ விடுதகைக்கு கொழும்பிலும் சர்வதேச அரங்கிலும் தளராது உழைத்தவர்.

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதானவேடத்தை ஜெனிவாவிலும் (சுவிஸ்) ஹேய்க் (நெதர்லாந்து) நகரிலும் நடந்த ஐ.நா.வின் மனித உரிமைகள் கூட்டத்தொடர்களில் பல தடவைகள் தோலுரித்துக்காட்டியவர். இறுதியாக இரண்டாவது தடவையாக சந்திரிகா ஜனாதிபதியாக பதவியேற்ற போது கூறிய ஆணவமான தமிழர் விரோத உரைக்கெதிராக பகிரங்கமாக பதிலெழுதியவர்.

தான் என்றோ ஒரு நாள் எதிரியின் துப்பாக்கிக்கு பலியாக நேரிடும் என்று தெரிந்தும். தமிழீழம் ஆயுதப்போராட்டம் மூலமே வென்றெடுக்கப்படவேண்டும் என்று உறுதியாக நம்பினார். அதனை தான் கொல்லப்படுவதற்கு அதாவது ஜனவரி 5ம் திகதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னதாக “ராவய: பத்திரிகைக்கு வழங்கிய போட்டியில் தனக்கேயுரிய பாணியில் கூறியிருந்தார்.

அப்பாவித் தமிழர்கள் சந்திரிகா அரசினால் வகை தொகை யின்றி கைது செய்யப்படுகின்ற வேலையிலெல்லாம் துணிந்து நின்று பிரதிபலன் பாராது சிறீலங்கா காவல்துறை நீதிமன்றுகள் தோறும் சென்று வாதாடினார். கொக்கட்டிச்சோலைப் படு கொலை, கிருசாந்திப் படுகொலை மற்றும் செம்மணிப் பெரும் புதைகுழி வழக்குகளிலெல்லாம் தமிழர் நியாயத்தை வலியுறுத்



தினார். மொத்தத்தில் தனது புலமை, ஆளுமை அனைத்தை யும் தமிழீழ விடுதலைக்காக செலவிட்டார்.

ஜனவரி 5, 2000 ஆம் ஆண்டு அன்று குமார் பொன்னம்பலம்



என்ற தனிமனிதரை கொல்லும் நோக்கம் மட்டுமல்லாமல் அவர் சார்ந்த கொள்கையை முறியடிக்கலாம் என்ற எண்ணத் துடனேயே படுகொலை செய்தார்கள். ஆனால் அதில் தோற்று விட்டனர் என்றே சொல்லலாம்.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் தமிழ் புத்திஜீவிகள் சமுதாயத் திற்கு ஒரு விதையை தூவிச்சென்றுள்ளார் (Legacy). அதைத் தொடர்ந்து செல்லவேண்டியது புத்திஜீவிகள் சமுதாயத்தின் கடமையாகும். அவர்களின் தேசத்திற்கான பங்களிப்பு. தனி மனிதர்களை அழிப்பதால் கொள்கை முன்னெடுப்புக்கள் பின் தங்கிவிடாது என்பதை சிங்கள இனவெறியர்களுக்கு புரிய வைக்கும்.





ஜெனீவா ஐ.நா. முன்றலில்
தமிழர் உரிமை முழக்கம்
ஏப்பிரல் 97




தமிழர் பாதுகாப்பு ஊர்வலம்
டென்மார்க் ஏப்பிரல் 99



இறுதிக் கிரியைகளின் போது
துணைவியார் அஞ்சலி
09.01.2000

# “தமிழர்கள் கொல்லப்படவேண்டியவர்கள்”
## மகாவம்சம் தருகின்ற சான்று



**எல்லாளனுக்கும் துட்டகைமுனுவுக்கும் இடம்பெற்றதாக சொல்லப்படும் போரை மையப்படுத்தி வரையப்பபட்ட ஓவியம்**
**ஓவியர்: பிரசன்னா ஜெணகொடி**

08.2024

முள்ளிவாய்க்காலில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு ஆயுதப் போராட்டம் போராட்டம் நிறைவுக்கு வந்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. அரசுக்கோ. சிங்களச் சூழலுக்கோ அவ்வழித்தொழிப்பு பற்றிய எந்தவொரு குற்றயுணர்ச்சியும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் தமிழர்களை கொன்றொழித்த பின்னர் இத்தகைய குற்றவுணர்ச்சி ஏற்பட்டதைப் பற்றி மகாவம்சம் பதிவு செய்திருக்கிறது. ஆனால் துட்டகுமுனுவுக்கு உறுத்திய மனசாட்சியோ தார்மீக அறமோ பௌத்த பிக்குகளுக்கு இருக்கவில்லை என்பதை மகாவம்ச வரலாற்றுப் பதிவுகளில் இருந்து நாம் அறிந்துகொள்ளலாம். இக்கட்டுரை அதைப் பற்றியதே.


சிங்கள பௌத்த, இன சாகச, இனத்துவ செருக்குக்கு, இனப் பெருமித உருவாக்கப் பின்னணியின் மகாவம்ச ஐதீகங்களுக்கு மிகப் பெரும் பங்குண்டு என்பதை சொல்லி வருகிறோம்.

இனப்படுகொலைக் கலாச்சாரத்துக்கான வரலாற்றுப் பின்னணியும் இந்திய எதிர்ப்புவாதமும் கூட அந்த மரபில் வந்தவை தாக். இலங்கையில் நிகழ்ந்த பல்வேறு இனவெருப்பு, இனவொதுக்கல், இனவெறிக்கான அடிப்படைகள் திடீரெனத் தோன்றியவை அல்ல. அதற்கான மனவிருப்பும், செய்த, செய்து வருகிற ஆக்கிரமங்களுக்கான சுயசமாதானமடைதல், சுயசரிகட்டுதல் என்பற்றுக்கான மூலம் மகாவம்சத்தில் உள்ளது. ஒரு நீண்ட வார்ப்புக்கு சிங்களத் தலைவர்கள், அறிஞர்கள், மதத் தலைவர்கள், நிறுவனங்கள், ஊடகங்கள், மக்கள் என அனைவரும் ஆளாகியுள்ளனர்.

மகாவம்சத்திலேயே அதிக அத்தியாயங்கள் கொடுக்கப்பட்ட ஆட்சித்தலைவன் துட்டகைமுனுதான். மகாநாம தேரரால் எழுதப்பட்ட முதலாவது தொகுதியில் 37 அத்தியாயங்களில் 22 லிருந்து 31 வரையான சுமார் ஒன்பது அத்தியாயங்கள் துட்டகைமுனு பற்றியது. இன்னும் சொல்லபோனால் மகாவம்சத்தின் நான்கில் ஒரு பகுதி துட்டகைமுனு பற்றியது. சமீபத்தில் வெளியான மகாவம்சத்தின் 6வது தொகுதியில் கூட ஜே.ஆர், பிரேமதாசா, சந்திரிகா, மகிந்த ராஜபக்ச ஆகியோருக்கு கூட தலா ஒரு அத்தியாயம் தான் கொடுக்கப்பட்டிக்கிறது. துட்டகைமுனு - எல்லாளன் சிங்கள - தமிழர் போராக வரலாறு நெடுகிலும் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. தமிழர்கள் ஆக்கிரமிப்பாளர்களாகவும், அழித்தொழிப்பாளர்களாகவும் புனைகிற பல ஐதீகங்கள் மகாவம்சத்தில் உள்ளன.

மகாவம்சத்தில் 25வது அத்தியாயம் துட்டகைமுனுவின் வெற்றி பற்றிய அத்தியாயமாகும். அவ்வத்தியாயத்தில் 108-113 வரையிலான சுலோகங்கள் தமிழர்களைக் கொன்றது பாவம் இல்லை என்று பிக்குமார்களால் துட்டகைமுனுவுக்கு சமாதான சொல்லும் பகுதிகளாகும்.

5ஆம் நூற்றாண்டில் மகாவம்சத்துக்கு மூலாதாரமாக மகாதாம் தேரரால் பயன்படுத்தப்பட்டதாக கருதப்படுவது 3ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட தீபவம்சம். தீபவம்சத்தில் கூட துட்டகைமுனுவுக்காக ஒதுக்கப்பட்டது ஒரே ஒரு அத்தியாயம் மட்டுமே.




அதுவும் கூட பௌத்த மத வளர்ச்சிக்காக துட்டகைமுனு ஆற்றிய பங்களிப்பு பற்றிய விபரங்களே அதிகம். ஏறத்தாழ மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ள அதே காலப்பகுதியைத் தான் தீபவம்சமும் கூறுகிறது என்பதும் கவனிக்கத்தக்கது. தீபவம்சம், மகாவம்சம் ஆகிய இரண்டுமே அன்றைய விகாரைகளில் பேணப்பட்டு வந்த சுவடிகளில் இருந்தும், செவிவழிக்கதைகளில் இருந்தும் எழுதப்பட்டவையே. அவ்வாறிருக்க, மகாவமசத்தில் மேலதிகமாக புனைவுகளை சேர்க்கும் தேவை மகாநாம தேரருக்கு ஏற்பட்டிருப்பதை உணராலாம். இதைப் பற்றிய விபரமான ஆய்வுகள் சிங்களத்தில் உள்ளன.

பேராசிரியர் கணநாத் ஒபேசேகர “துட்டகைமுனுவின் மனசாட்சி” என்கிற ஆய்வுக் கட்டுரையில் இதைப் பற்றி குறிப்படும் போது, மகாநாம தேரர் இந்த வகை சாகசவாத வர்ணனை வடிவத்தை மகாபாரதக் கதைகளில் இருந்து பெற்றிருக்கலாம் என்கிறார்![1]

மகாவம்சத்தில் வரும் துட்டகைமுனுவின் மனசாட்சி பற்றிய கதையாடல்களை நோக்கும் போது மகாபாரதக் காவியத்தில் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட மனநிலையை ஒத்திருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது.

அர்ஜுனன் தனது உறவினர்களோடு கடும் மோதலில் ஈடுபட்டு அவர்களை அழிக்கத் துணிகிறான். தனது உறவினர்களையே கொல்லும் நிலை ஏற்பட்டிருப்பதைப் பற்றிய குற்ற உணர்வை அங்கு அவனுக்கு தேரோட்டியாக இருந்து யுத்தத்தில் வழிகாட்டிக் கொண்டிருந்த கிருஷ்ண பகவனிடம் கூறுகிறான். கிருஷ்ணர் அர்ஜுனனிடம் போர்க்களத்தில் நடக்கும் கொலைகள் க்ஷத்திரிய தர்மப்படியே நடப்பதால் அது தவறில்லை என்று விளக்குகிறார். மேலும், எதிரிகளின் செயல்களின் மூலம் கொடிய கனிகளை அறுவடை செய்யத் தொடங்கிவிட்டதால், அவர்கள் ஏற்கனவே இறந்துவிட்டதாக கருதலாம், அவர்களைக் கொல்வதைக் குறித்து உனது மனதில் எந்த குழப்பமும் இருக்கக்கூடாது.

அர்ஜுனனிடம் கிருஷ்ணர் தான் ஒரு கொலைகாரன் அல்ல என்றும், எதிரிகளின் கர்மவினைக்கு ஆதரவாக மட்டுமே இருப்பதாகவும் கூறுகிறார். இந்த அறிவுரையைக் கேட்ட அர்ஜுனனின் குற்ற உணர்ச்சிகள் மறைந்தன.” என்கிறார். இத்தகைய காட்சியே துட்டகைமுனுவுக்கு கிடைத்த பௌத்த பிக்குமாரின் உபதேசம் அமைந்திருக்கிறது.

### துட்டகைமுனுவின் மனசாட்சி

அந்த மகாவம்ச சுலோகங்கள் இப்படிக் கூறுகின்றன. “எல்லாளனை தோற்கடித்தது. தமிழர்களைக் கொன்றது பற்றி மகிழ்ச்சியுறாத துட்டகைமுனுவை சமாதானப்படுத்த புவங்கு என்கிற தீவைச் சேர்ந்த பிக்குமார் அங்கிருந்து எட்டு பிக்குமாரை அனுப்புகிறார்கள்.

நடுச்சாமத்தில் வந்த அவர்கள், அரண்மனை வாசலில் இறங்கினார்கள். தாங்கள் அங்கே வந்திருப்பதை அறிவித்து ஆகாய மார்க்கமாகவே அரண்மனையின் மேல்தனத்தை அடைத்தார்கள். அவர்களை வரவேற்ற மகா அரசன், அவர்களை அமரச் செய்து, பல விதங்களில் மரியாதைகள் செலுத்திவிட்டு, அவர்கள் வந்ததற்கான காரணத்தை வினவினான், மனிதர்களின் அரசனே, தங்களைச் சமாதானப்படுத்த நாங்கள் புவங்குதீவின் மகாசங்கத்தினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளோம். அப்பொழுது மீண்டும் அரசன் அவர்களிடம் “என்னால் இலட்சக்கணக்கானோர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதால், வணக்கத்திற்குரியவர்களே. எனக்கு எப்படி அமைதி கிடைக்கும்?

“இந்தச் செயலால், நீங்கள் சுவர்க்கத்திற்குச் செல்லும் பாதையில் ஏதும் தடையில்லை. மனிதர்களின் அரசனே, தங்களால் ஒன்றரை மனிதர் மட்டுமே கொல்லப்பட்டனர். ஒருவன், மும்மணிகளிலே சரணடைத்து விட்டான்: மற்றவன், பஞ்சசீலத்தை மேற்கொண்டுவிட்டான். நம்பிக்கையற்றவர்களும் தீயவர்களுமே பிறர்: அவர்கள் மிருகங்களைவிட உயர்வாக மதிப்பிடக் கூடியவரல்லர், ஆனால் தாங்களோ, புத்தரின் நெறிகளுக்குப் பல வழிகளிலே புகழ் சேர்த்திருக்கிறீர்கள்; அதனால், மனதிலிருந்து கவலையை அகற்றுங்கள், மனிதர்களின் அரசே![2]

மிருகங்களைக் கொல்வது பாவம் என்று பௌத்த தர்மம் போதிக்கின்றது. ஆனால், மகாவம்சத்தில், தமிழர்கள் மிருகங்களைவிட மேலானவர்கள் அல்ல என்று கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் பௌத்த தர்மத்தின்படி மிருகங்கள்ளக் கொல்வது பாவமேயாயினும், தமிழர்களைக் கொல்வது பாவமில்லை என்ற போதனை, மகாவம்ச நூலில் பௌத்த துறவிகள் மொழிவதன் வாயிலாகப் பதியப்பட்டுள்ளது.

கி.மு இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நடந்த துட்டகைமுனு - எல்லாளன் யுத்தத்தை, தமிழ் சிங்கள இனங்களுக்கிடையிலான இன யுத்தமாக வர்ணிக்கும் மகாவம்சத்தில், இலட்சக்கணக்கான தமிழர்கள் மடியும்படி நேரிட்டது தனக்குக் கவலையளிப்பதாக மன்னன் துட்டகைமுனு கூறுவதாகவும், அப்போது மன்னனை ஆற்றுப்படுத்துவதற்காகப் பௌத்த துறவிகள் பின்வருமாறு ஆறுதல் கூறுவதாகவும் ஓர் உரையாடல் வருகின்றது.

“இந்த செய்கையின் காரணமாக நீ சொர்க்கத்திற்குப் போரும் பாதையில் எவ்வித தடையும் ஏற்படாது” என்று துறவிகள் மன்னனுக்குக் கூறுவதுடன், அவ்வாறு கொல்லப்பட்ட இலட்சக்கணக்கான தமிழர்கள் “நமது மார்க்கத்தை நம்பாதவர்கள். தீய வாழ்வை மேற்கொண்டவர்கள். மிருகங்களை விட உயர்வாக மதிக்கப்படக் கூடாதவர்கள் எனப் பௌத்த துறவிகள் மன்னனுக்கு எடுத்துரைத்தனர்” என்று. மகாவம்சம் கூறுகிறது. மகாவம்சம் கூறுகிற அக்கருத்தைச் சிங்கள மக்கள் நம்புகிறார்கள் என்பதே கவனத்திற்குரியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகாலமாக சிங்கள மக்களின் மனங்களில் இக்கருத்து வேரூன்றி, தமிழர்கள் மிருகங்களைவிடக் கீழானவர்கள் என்றும், அவர்கள் கொல்லப்படவேண்டியவர்கள் என்றும் ஒரு வரலாற்று மன உணர்வு அவர்களிடம் உருவாக்கப்பட்டுள்ளது”





அதுமட்டுமல்ல. இதன் நீட்சியாக இன்னொரு முக்கிய சிங்கள வரலாற்று இலக்கியத்தையும் இங்கே ஆதாரப்படுத்த வேண்டும்.

மகாவம்சம் வெளிவந்து ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட சத்தர்மலங்கரா அக்கருத்தை மேலும் மெருகூட்டி உயிர்ப்பிக்கிறது, மன்னனின் கவலைகளைப் போக்குவதற்காக, அவனால் கொல்லப்பட்ட தமிழர்கள் காட்டுமிராண்டிகள், மூடநம்பிக்கை கொண்டவர்ள் மட்டுமல்ல, அவர்களின் மரணம் மாடு, நாய், எலிகளின் மரணத்திற்கு சமமானது, என்கிறது.

பௌத்த பஞ்சசீல கொள்கைக்கே மாறான இந்த செய்கையை பௌத்தத்தின் பேரால் ஆறுதல் படுத்தவும், நியாயப்படுத்தவும் பௌத்த பிக்குமாரால் எப்படி முடிகிறது என்கிற கேள்வி நமக்கு எழுகிறது.

இலங்கை போற்றும் பிரபல பௌத்த பல்துறை அறிஞரான வல்பொல ராகுல தேரர் இந்த சம்பவம் குறித்து நடைமுறை ரீதியான பார்வையைக் கொண்டுள்ளதைக் காண முடியும்.

“இது புத்தரின் தர்மத்திற்கு முற்றிலும் முரணானது. பௌத்தத்தின் படி, எந்த வகையிலும் உயிர்களைக் கொல்வது தவறான செயல், புத்தசாசனத்தை பேணுவது, பாதுகாப்பது, வளர்ப்பது என்கிற பேரில் இது செய்யக்கூடாத ஒன்று” என்கிறார்.[3]

அதேவேளை நாரத தேரர், இப்படிக் கூறுகிறார். “துட்டகைமுனு மன்னன் தமிழர்களைக் கொன்று குவித்தான் அவன் மத மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் புண்ணியத்தை அடைந்தான். இந்தப் புண்ணியங்களால் பெற்ற பலத்தால் அவனின் தீய செயல்கள் செயலற்றுபோயின.” என்கிறார்.

இன்னும் குறிப்பாக சொல்லப்போனால் துட்டகைமுனு காலத்தில் அதாவது கி.மு. 160களில் இலங்கையில் தெளிவான இனக்குழும பிரிவுகள் இருந்ததற்கான சான்றுகளைக்காண முடியவில்லை. இன-மத முரண்பாடுகளோ, அவற்றின் அடிப்படையிலான தெளிவான பகைமையோ நிலவியமைக்கான சான்றுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இதைப் பற்றி ஆய்வாளர் எச். எல். செனிவிரத்தின் இவ்வாறு விளக்குகிறார்.

“துட்டகைமுனு - எல்லாளன் யுத்தம் பற்றி தேசியவாத வரலாற்றாசிரியர்களின் எழுத்துகள் அனுராதபுரக் காலத்துச் சமூக அரசியல் நிலைமைகள் பற்றிய தவறான கருத்துகளை மக்களிடையே உருவாக்கியுள்ளன. அக்காலத்தில் சிங்கள இனக்குழுமம், தமிழ் இனக்குழுமம் என்று இருவேறு குழுமங்கள் தெளிவான மொழி, சமய அடையாளங்களுடன் வளர்ச்சி பெற்றிருந்தன என்பது ஆதாரமற்றது. மகாவம்சத்தை தவறான முறையில் வாசிப்புச் செய்து இவ்வாறு ஒரு பொய்மையைத் தேசியவாத வரலாறு உருவாக்கியுள்ளது. துட்டகைமுனு - எல்லாளன் யுத்தத்தில் துட்டகைமுனுவிற்கு எதிராகப் போரிட்டவர்கள் அனைவரும் தமிழர்கள் அல்லர். துட்டகைமுனு எல்லாளனை எதிர்கொண்டு

போரிடுவதற்கு முன்னர் 32 ஆட்சியாளர்களுடன் போரிட்டு அம்மன்னர்களைப் போரில் தோற்கடித்தான் என மகாவம்சம் கூறுகிறது. இதன் மூலம் நாம் தெரிந்துகொள்ளும் உண்மை யாதெனில், 32 தனித்தனியான சுதந்திரமான சிறிய இராச்சியங்கள் இருந்தன. அந்த இராச்சியங்களின் மன்னர்களைத் துட்டகைமுனு தோற்கடித்தான் என்பதாகும். 32 வெவ்வேறு அதிகார மையங்கள் (Pover Centres) இருந்தன. அவை யாவற்றையும் வெற்றிகொண்ட துட்டகைமுனு அவற்றை “ஒரு குடைக் கீழ்“ (One Umbrella) கொண்டுவந்தான். இதன் பொருள், அவற்றையெல்லாம் அழித்து ஒன்றுபடுத்தல் (Unification) என்பதன்று. வரலாற்றுப் பாட நூல்கள் “ஒரு குடையின் கீழ்“ என்பதை அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்ட மத்தியப்படுத்தப்பட்ட அரசாட்சியை துட்டகைமுனு நிறுவியதாகச் சித்தரித்துள்ளன.”

மதத்தின் பேரால் கேள்வியின்றி எந்தவொரு பாதகச் செயலையும் ஏற்கவைக்க முடியும் என்பதற்கான சான்றுகளை புராணக் கதைகள் பலவற்றில் இருந்து நாம் சான்றுகளைப் பெற முடியும். கீதையில், மகாபாரதத்தில் யுத்தத்துக்கும், அழித்தொழிப்புக்கும் இந்து மத கர்மவினை நம்பிக்கைகளுக்கு ஊடாக எவ்வாறு நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றவோ இதுபோல மகாவம்சத்திலும் பௌத்ததில் பேரால் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான நியாயங்கள் கற்பிக்கப்படுகின்றன. துட்டைகை முனுவை அவனது குற்ற உணர்ச்சியிலிருந்து மீட்கிறது. துட்டகைமுனு அதற்கு எதுவாக இவ்வாறு குறிப்பிட்டதையும் பதிவு செய்கிறது மகாவம்சம்.

“என்னுடைய இந்த நடவடிக்கைகள் ஒருபோதும் அரசாட்சிக்கானதல்ல மாறாக என்னுடைய இந்த முயற்சிகள் அனைத்தும் புத்தசாசனத்தை ஸ்தாபிப்பதற்காகத்தானதே.” (மகாவம்சம; XXV;117) என்கிறான்.

துட்டகைமுனு சிங்கள பௌத்தத்தின் பேரால் தமிழர்களை கொன்றொழித்ததைப்போல 2150 ஆண்டுகள் பின்னர் அதே சிங்கள பௌத்தத்தின் பேரால் தமிழர்கள் கொடூரமாக கொலையுண்டார்கள். அதைப் பற்றிய முன்னெச்சரிக்கையை அதே மகாவம்சத்தை மேற்கொள் காட்டி விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் (தமிழீழத் தேசியத் தலைவர்) 2005 ஆம் ஆண்டு மாவீரர் உரையில் இப்படி குறிப்பிட்டதை இங்கே பதிவு செய்யலாம்.

“சிங்களத் தேசம் இன்னும் மகாவம்ச மனவுலகில், அந்தப் புராணக் கருத்துலகிற் புதைந்து போய்க் கிடக்கிறது. இலங்கைத் தீவானது தேரவாத பௌத்தத்தின் தெய்வீகக் கொடையொன்றும் சிங்கள இனத்திற்கே உரித்தான சொத்துடைமை என்றும் மகாவம்சம் திரித்துவிட்ட புனைகதையிற் சிங்கள மக்கள் இன்னும் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

அடிமனதில் ஆழமாக உறைந்து, அசைவற்றதாக இறுகிப்



போன இந்தப் புராணக் கருத்து நிலையிலிருந்து சிங்களத் தேசம் விடுபடப்போவதில்லை. இந்தக் கருத்தியற் குருட்டுத் தனத்தால் இலங்கைத் தீவின் உண்மை வரலாற்றையும் அங்கு நிலவும் சமுதாய மெய்ந்நிலைகளையும் சிங்கள மக்களாலும் அவர்களது அரசியல், மதத் தலைமைகளாலும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இலங்கைத் தீவின் வடகிழக்கு மாநிலத்தைத் தாயகத் தேசமாகக் கொண்டு, தமிழீழ மக்கள் என்ற வரலாற்றுத் தொன்மை மிக்க ஓர் இனம் இருப்பதையும் அவர்கள் ஒரு தனித்துவத் தேசமாக வாழ்ந்து வருவதையும் அவர்களுக்கு அடிப்படையான அரசியல் உரிமைகள், சுதந்திரங்கள் உள்ளன என்பதையும் சிங்களவராற் புரிந்துகொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. தமிழரது இருப்பு நிலைபற்றிய உண்மையைக் கிரகித்து, அவர்களது அரசியல் அபிலாசைகளைப் புரிந்துகொள்ளச் சிங்களத் தேசம் மறுத்து வருவதாலேயே தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினை தீர்வின்றி, முடிவின்திச் சிக்கலடைந்து இழுபட்டு வருகிறது.

சிங்கள மக்களின் மகாவம்ச மனவமைப்பில், அவர்களது சமூகப் பிரக்ஞையில், அவர்களது அரசியற் கருத்துலகில் அடிப்படையான மாற்றம் நிகழுமென நாம் எதிர்பார்க்கவில்லை. சிங்கள - பௌத்த மேலாண்மைவாதத்தின் வீச்சும் வலுவும் தணித்து போகவில்லை. மாறாக, அது புதிய, புதிய வடிவங்களை எடுத்துப் புத்துயிர்பெற்று வருகிறது.”[5]

துட்டகைமுனுவின் மனசாட்சி அன்று உலுக்கிய அளவுக்கு இன்றைய வளர்ச்சியடைந்த சமூகத்தில் சிங்களத் தலைவர்கள் எவருக்கும் வரவில்லை என்பதே இலங்கையின் தேரவாத பௌத்த தன்னை மெய்ப்பித்ததற்கான சான்று.

[1] பேராசிரியர் கணநாத் ஒபேசேகர, “துட்டகைமுனுவின் மனசாட்சி” 03.05.2015 ( https://kathika.lk/) என்கிற சிங்கள மொழிக் கட்டுரைத் தொடர்)

[2] Geiger. Wilhelm, Mahavamsa: Great Chronicle of Ceylon, London: Pub. for the Pall Text Society by Oxford university 1912.

[3] Walpola Rahuta, History of Buddhism in Ceylon, M.D. Gunasena; Colombo; 1950

[4] HL. Seneviratno – Buddhism, Identity and Conflict, 1 -29 Page (2004). International Centre for Ethnic Studies, Colombo

[5] விடுதலைப் புலிகளின் தலைவர் (தமிழீழத் தேசியத் தலைவர்) மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீரர் நாள் உரை, 2005

நன்றி: காக்கைச் சிறகினிலே ஆகஸ்ட் 2024
-கட்டுரை: என்.சரவணன


JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும்

## பகுதி -1

தென்னாசியாவில் பண்டு தொட்டு பெரிதும் புழக்கத்தில் இருந்து வந்த ஒரு பெயராக வடமொழியில் 'நாஹ' என்ற பெயரும், தமிழில் 'நாகம், நாகன், நாகர்' என்ற பெயர்களும் காணப்படுகின்றன. மத வழிபாட்டில் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. வட இந்தியாவில் அரசமைத்த குப்தரும், தக்கணத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். தமிழகத்தின் பண்டைய தலைநகரான நாகபட்டினம் நாகரின் தலைநகர் என்ற கருத்துண்டு. தமிழ்நாட்டில் சங்க இலக்கியத்திலும், சமகாலப் பிராமிக் கல்வெட்டுகளிலும் நாகன், நாகர் என்ற பெயர்கள் குறுநிலத் தலைவர்களுடனும், புலவர்களுடனும், நாடு - நகர் - ஊர் ஆகிய இடப்பெயர்களுடனும் இணைந்து வருகின்றன. இலங்கையின் முதற் பாளி வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மகாவம்சம் ஈழத்திற்கு விஜயன் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் எனக் குறிப்பிடுகின்றது (Mahavamsa : vi-vii.51-55). ஆயினும் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக உருவாக்கமும் வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறிய மக்களுடன் தோன்றியவை என்ற கருத்துடைய அறிஞர்கள் பலரும் வடஇந்தியக் குடியேற்றம் நடப்பதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த இயக்கரையும், நாகரையும் மனிதப் பிறவிகள் அற்ற அமானுசர் என்றே குறிப்பிட்டு வந்துள்ளனர் (Mendis 1946:8, Paranavitana 1961181-82). இந்நிலையில் பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ன, பேராசிரியர் ராஜ் சோமதேவா போன்ற அறிஞர்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுகளை நம்பகத்தன்மை உடைய ஆதாரங்களாகக் காட்டி இயக்கரையும், நாகரையும் இலங்கையில் வாழ்ந்த தொடக்க கால இனக்குழுக்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர் (Karunaratne 1984:56). இக்கருத்தை வட இந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்கள், பண்பாடு தொடர்பான தொல்லியற் சான்றுகள் மேலும் உறுதி செய்கின்றன. இத்தொல்லியல் ஆதாரங்கள் இலங்கையில் மனிதவரலாறு, பண்பாடு என்பவற்றின் உருவாக்கத்தை இங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் எனும் இனக்குழுக்களில் இருந்து ஆராய்ந்து பார்க்க வழியேற்படுத்தியுள்ளது எனலாம்.

இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலங்கையின் தொடக்ககால எழுத்து, மொழி, மதம், இனம், பண்பாடு என்பவற்றை அறிவதற்கு பிராமிக் கல்வெட்டுகள் நம்பகரமான சான்றுகளாகக் காணப்படுகின்றன. இலங்கையில் இதுவரை 1500 இற்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு எண்ணிக்கையிலான கல்வெட்டுகள் தென்னாசியாவில் வேறு எந்த வட்டாரத்திலும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவற்றுள் ஏறத்தாழ 200 கல்வெட்டுக்களில் 'நாக' என்ற பெயரை பலதரப்பட்ட மக்களும் தனிநபரின் முன்னொட்டு அல்லது பின்னொட்டுப் பெயராகப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அப்பெயருக்குரியவர்கள் இனக்குழுத்தலைவர்கள், சிற்றரசர்கள், அரச அதிகாரிகள், வணிகர்கள் என உயர் பதவிகளில் இருந்ததை அக்கல்வெட்டுகள் மேலும் கூறுகின்றன. அவற்றுள் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகள் அப்பிராந்தியத்தில் ஆட்சியில் இருந்த நாகச் சிற்றரசர்கள் பற்றிக் கூறுகின்றன. கல்வெட்டுகளில் வரும் செய்திகளை சமகாலப் பாளி இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன. அவ்விலக்கியங்கள் புராதன அநுராதபுர கால அரசியல் வரலாற்றை முன்னிலைப்படுத்திக் கூறுவதால் அக்காலத்தில் ஆட்சியில் இருந்த துல்லத்த நாக (கி.மு.119), கல்லத்த நாக (கி.மு.109-103), சோறநாக (கி.மு.63-51), மகாநாக (கி.பி.7-9), இளநாக (கி.பி.33-43), மகல்லநாக (கி.பி.136-143), குஜநாக (கி.பி.186-187), குஞ்சநாக (கி.பி.187-189), ஸ்ரீநாக (கி.பி.189-209), அபயநாக (கி.பி.231-240), ஸ்ரீநாக (கி.பி.240-242) முதலான நாக மன்னர்களின் ஆட்சி பற்றியே சிறப்பாகக் கூறியுள்ளன. இலங்கையில் வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு முந்திய நாக மக்கள் பற்றி வரலாறு, பல நூற்றாண்டுகள் கடந்த நிலையில், வரலாற்றுத் தொடக்ககால (கி.மு.3-கி.பி.3நூற்றாண்டு வரை) வரலாற்றில் முன்னிலைப்படுத்திக் கூறப்படுவது நாக மக்களுக்கும் பிற்கால மக்களுக்கு இடையிலான உறவையும், தொடர்பையும் காட்டுவதாகக் கொள்ளலாம். வடஇந்தியக் குடியேற்றத்திற்கு முந்திய இலங்கை வரலாறு பற்றி தொல்லியல் ஆய்வுகள் கூறுவதை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது இதற்குப் பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

நீண்டகாலமாக இலங்கையின் பூர்வீக மக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட வரலாற்றுப் பாட நூல்களில், இலங்கையின் பூர்வீக மக்கள், வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் வந்த ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்றே கூறப்பட்டு வந்துள்ளன. இந்நிலையில் அண்மைக்காலங்களில் இலங்கை அரசால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் வரலாற்றுப் பாட நூல்களில் விஜயன் தலைமையிலான குடியேற்றம் நடப்பதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்கள், பண்பாடு பற்றிய விடயதானங்களை சேர்க்கப்பட்டிருக்கின்றன. 1970 களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட நவீனத் தொல்லியல் ஆய்வுகள், விஜயன் வருகைக்கு முன்னரே வெவ்வேறு காலகட்டத்தில் மூன்று வகையான பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததை வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருப்பதே இந்த மாற்றத்திற்கு காரணமாகும். இப்பண்பாட்டுக்குரிய மக்களையே மகாவம்சம் கூறும் இயக்கர் - நாகர் என தொல்லியல், மானிடவியல், மொழியியல் அறிஞர்களும் அடையாளப்படுத்தி வருகின்றனர்.





**நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்**

### கற்காலப் பண்பாடு

1970 களில் வடஇலங்கையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட கலாநிதி சிரான் தெரணியகல கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுப் பகுதியில் இருந்து இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மேலைப்பழங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களை கண்டுபிடித்தார். இந்த ஆய்வின் போது, உணவு தேடி நாடோடிகளாக வாழ்ந்த இப்பண்பாட்டு மக்கள் பெரிய மிருகங்களை வேட்டையாடவும், காடுகளில் இயற்கையாகக் கிடைக்கும் காய்கனிகள், கிழங்கு வகைகளைப் பறிக்கவும் பயன்படுத்திய பல அளவுகளில், வடிவங்களில் செய்யப்பட்ட குவாட்ஸ், சேட் கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். மேலும் இப்பண்பாட்டு மக்கள், இரணைமடுவில் இருந்து தெற்கே மாங்குளம், தென்மேற்கே மன்னார் வரை வாழ்ந்திருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. நடோடிகளாக வாழ்ந்த கற்கால மக்கள் தற்காலிகமாகத் தங்கி வாழ்வதற்குப் பொருத்தமான அடர்ந்த காடுகள், குகைகள், பாறைகள், சமவெளிகள், மிருகங்களை வேட்டையாடுவதற்குப் பொருத்தமான வைரமான கற்கள், இலகுவாக நீரைப் பெறுவதற்கு ஏற்ற இயற்கையான நீர்நிலைகள் என்பன வன்னிப் பிராந்தியத்தின் இயற்கை அமைப்பாக இருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இரணைமடுவைத் தொடர்ந்து, இலங்கைத் தொல்லியற் திணைக்களமும், தென்னிலங்கைப் பல்கலைக் கழகங்களும் இணைந்தும், தனித்தும் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் தென்னிலங்கையில் முந்தல் போன்ற இடங்களில் இம்மேலைப்பழங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளால் தென்னாசியாவின் ஏனைய நாடுகள் சிலவற்றைப் போல இலங்கையிலும் கற்காலப்பண்பாட்டிற்குரிய மக்கள் வாழ்ந்துள்ளமை உறுதியாயிற்று.

2016-17 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினர் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளப் பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டபோது யாழ்ப்பாண தொல்லியல் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் திரு. மணிமாறன் செயற்கையாகச் செய்யப்பட்ட சில கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். அவற்றுள் ஒரு கற்கருவி காட்டுப் பகுதியில் பிற தேவைக்காக மண் அகழப்பட்ட இடத்தில் ஏறத்தாழ 12 அடி ஆழத்தில் கிரவல் மண்படையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இக்கருவி செயற்கையாக வடிவமைக்கப்பட்டதை கற்கருவியின் வடிவமைப்பும், அதில் பதிந்துள்ள கைவிரல் அடையாளங்களும் உறுதிசெய்கின்றன. இருப்பினும் இக்கருவியை வைத்து அதன் காலத்தையோ அல்லது அக்கருவியைப் பயன்படுத்திய மக்களையோ உறுதிப்படுத்த முடியாது. முறையான அகழ்வாய்வில் கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் கலாசார மண் அடுக்குகளையும், கருவிகளுடன் இணைந்திருக்கக் கூடிய (Associate Findings) பிற ஆதாரங்களையும் நவீன ஆய்வு முறைக்கு உட்படுத்துவதன் மூலமே ஒரு கருவியின் காலத்தையும், அதன் பண்பாட்டையும் உறுதி செய்ய முடியும். அதற்கான வாய்ப்புகள் விரைவில் கட்டுக்கரை ஆய்வுகளுக்கு ஏற்படும் என நம்பலாம்.

மேலைப்பழங்கற்காலப் பண்பாடு (Upper Paleolithic Culture) பற்றிய ஆதாரங்கள் வடஇலங்கையிலும், தென்னிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையின் பூர்வீக மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இப்பண்பாட்டு மக்களுக்கும் இலங்கையின் பிற்கால மக்களுக்கும் இடையே இருந்திருக்கக் கூடிய உறவு, தொடர்பு பற்றிய விரிவான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலைப்பழங்கற்காலப் பண்பாட்டின் முடிவுக்கும், பிற்காலத்தில் தோன்றிய நுண்கற்காலப் பண்பாட்டிற்கும் இடைப்பட்ட நீண்டகால இடைவெளியில் வாழந்திருக்க கூடிய மக்கள், பண்பாடுகள் பற்றிய ஆதாரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படாதிருப்பது முக்கிய காரணம் எனக் கூறலாம்.

### நுண்கற்கால மக்கள் (Mesolithic People)

தென்னிந்தியாவைப் போல் இலங்கையிலும், மேலைப்பழங்கற்காலப் பண்பாடு மறைந்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தொழில் நுட்பம் வாய்ந்த சிறிய நுண்ணிய கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவர்களின் நாளாந்த வாழ்க்கையில் நுண்ணிய கற்கருவிகள் முக்கிய தொழில்நுட்ப சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததால் இம்மக்களை தொல்லியலாளர்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் அல்லது குறுணிக்கற்காலப் பண்பாட்டு (People of Mesolithic Culture) மக்கள் எனப் பெயரிட்டுள்ளனர். இம் மக்கள் கி.மு. 37,000 இல் இருந்து மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை இலங்கையில் ஏறத்தாழ 75 இற்கும் மேற்பட்ட இடங்களில் வாழ்ந்ததற்கான சான்றாதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வடஇலங்கையில் மாதோட்டம், மாங்குளம், பூநகரி, இரணைமடு, புளியங்குளம், அண்மையில் கட்டுக்கரைக்குளம் ஆகிய இடங்களில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய குவாட்ஸ், சேட் கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த

குகைகள் மற்றும் சமவெளிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இப்பண்பாட்டின் தோற்றமும், மறைவும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாக இருப்பது தெரியவந்துள்ளது (Deraniyagala 1992: 695-701, 2004:6). இக்கால வேறுபாடுகளுக்கு, தொடக்க காலத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் காலப்போக்கில் அவர்களின் வாழ்வியலுக்குச் சாதகமாக இருந்த இடங்களைக் கண்டறிந்து வேறுபட்ட காலங்களில் அங்கு சென்று குடியேறியமையோ, அல்லது வேறுபட்ட காலங்களில் இப்பண்பாட்டு மக்கள் இலங்கைக்கு வெளியே இருந்து வந்து குடியேறியமையோ காரணமாக இருக்கலாம்.

தென்னிலங்கையில் பலாங்கொடைக்கு அண்மையில் உள்ள குகைகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் காலத்தால் முந்திய நுண்கற்கால கருவிகளும், மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இப்பண்பாட்டை பலாங்கொடைப் பண்பாடு எனவும், இங்குவாழ்ந்த மனிதர்களை பலாங்கொடை மனிதன் எனவும் அழைக்கின்றனர். இப்பண்பாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கையில் கற்கருவிகளே முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் மிருக எலும்புகள், மான் கொம்புகள் என்பவற்றில் வடிவமைக்கப்பட்ட முனைகள், ஊசிகள் போன்ற கருவிகளையும் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Seneviratne 1085:149, Deraniyagala, 1992:278-81, 2004:9). இப்பண்பாட்டு மக்களின் இருப்பிடங்கள் மிக அரிதாகவும், சிறிதாகவும் காணப்பட்டன. அவை ஏறத்தாழ 50 சதுர மீற்றரில் ஒரு சில மையக் குடம்பங்கள் வாழக்கூடிய நிலையில் அமைந்திருந்தன (Deraniyagala 1992:351, 2004:8). இறந்தவர்களை இம்மக்கள், வாழ்விடங்களிலேயே அடக்கம் செய்தனர். பாகியன் (Fa-hien Cave) மற்றும் ரணவிலா குகைகளில் (Ranaella Cave) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது இறந்த மனிதனின் ஒரு சில எலும்புகளை மட்டும் அடக்கம் செய்து அதன் மேல் செம்மண்ணால் பூசப்பட்டிருந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மரபு அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகின்றது (Deraniyagala 1992: 465-7, 696). பெல்லன்-பண்டி-பலச (Bellan-bandi-palasa) குகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இம்மக்கள் பலவகைப்பட்ட தானியங்கள், கிழங்குவகைகள், பழங்கள், காட்டு விலங்குகள், மீன் போன்ற கடல் உணவுகளைப் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. இச்சான்றுகளில் இருந்து இம்மக்கள் உணவுகளைச் சேமித்துவைக்கும் பழக்கத்தையும் நெருப்பின் பயன்பாட்டையும் அறிந்திருந்தனர் என்பது மேலும் தெரியவந்துள்ளது. 30,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிப்பிடப்பட்டுள்ள பெலி குகையில் (Beli Cave) இருந்து உப்புப் படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இம்மக்கள் மலைநாட்டிற்கும் கடற்கரைகளுக்கும் இடையே வலைப்பின்னலான தொடர்புகளைக் கொண்டிருந்தமை தெரிகிறது (Deraniyagala 1992:326, 2004:9).



நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்

நுண்கற்கால மக்களின் கலைப் படைப்புக்களையும், கலையுணர்வையும் அறிந்து கொள்ளக்கூடிய சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை. ஆயினும் சிரான் தெரணியகல சில குகை ஓவியங்கள் நுண்கற்கால மக்களுக்கு உரியவையாக இருக்கலாம் எனக் கருதுகிறார் (1992:465,2004:10). குரவித்தைக்கு அண்மையில் உள்ள பட்டதொம்பா (Batadomba Cave 31,000-11,500) குகையில் இருந்து சங்கிலிருந்து வடிவமைக்கப்பட்ட மணிகள் (beds of shell) கடல் ஓடுகள், சங்கு, சிப்பி என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அக்கால மக்களின் கலையுணர்வையும் கடற்கரையோடு இம் மக்களுக்கிருந்த தொடர்பையும் எடுத்துக்காட்டுகின்றன. அண்மையில் தொல்லியலாளர் பிரேமதிலகா, ஹற்றன் சமவெளியில் கிடைத்த தானிய விதைகளை ஆய்வுக்கு (Palynological Evidence) உட்படுத்தியதில் இருந்து கி.மு 17,000 இல் இருந்து வாற்கோதுமை, ஓட்ஸ் (Oats) எனப்படும் தானியங்கள் இம்மக்களால் பயிரிடப்பட்டமை தெரியவந்துள்ளது (Deraniyagala 2004:10).

நுண்கற்காலப் பண்பாடு பற்றி ஆதாரங்கள் மேலைப்பழங்கற்கால மறைவிற்குப் பின்னர் இலங்கையில் ஓரளவு நாகரிகமுடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இம்மக்கள் பிற்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்த பெருங்கற்கால (Megalithic People) அல்லது ஆதி இரும்புக்கால (Early Iron Age People) மக்கள் அறிமுகப்படுத்திய புதிய பண்பாட்டுடன் கலந்துள்ளனர். இந்த உண்மை பொம்பரிப்பு, அநுராதபுரம் அண்மையில் கட்டுக்கரைக்குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது அவ்விடங்களில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக அதன் மேற்படையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளும், அதன் தொடர்ச்சியாக வரலாற்றுத் தொடக்ககாலச் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து உறுதியாகின்றது. இந்நிலையில் கட்டுக்கரைப் பிரதேச அகழ்வாய்வின் போது பெருங்கற்காலச் சின்னங்களுடன் நுண்கற்காலக் கருவிகளும் கலந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டமை இதை மேலும் உறுதிசெய்கின்றன. இம்மரபு தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டிலும் காணப்படுகின்றன.



நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்

இலங்கைக்கு முதலில் இரும்பினை அறிமுகப்படுத்திய பெருங்கற்கால மக்கள் தமக்கு முற்பட்ட காலப்பண்பாட்டையும் உள்வாங்கிக் கொண்டனர் என்பதை இது காட்டுகிறது.

## பெருங்கற்காலப் பண்பாடு

பெருங்கற்காலப் பண்பாட்டின் அறிமுகம் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் புதிய காலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. இப்பண்பாட்டின் அறிமுகத்தோடு நாடோடிகளாக வாழ்ந்த இலங்கை மக்கள் ஓர் இடத்தில் நிரந்தரமாகக் கூடி வாழ்தல், நிரந்தரப் பொருளாதாரம், நீர்ப்பாசன விவசாயம், குளத்தை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புக்கள், இரும்பின் பயன்பாடு, மிகை உற்பத்தி, சிறு தொழில்நுட்ப வளர்ச்சி, சக்கரங்களைப் பயன்படுத்திய மட்பாண்ட உற்பத்தி, பண்டமாற்று, உள்நாட்டு - வெளிநாட்டு வர்த்தகம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோற்றம் பெற்றன.

பெருங்கற்காலப் பண்பாடு என்பது இறந்தவர்களுக்கான ஈமச் சின்னங்கள் பெரிய கற்களைப் (Mega - பெரிய, Lithic - கற்கள்) பயன்படுத்திக் கட்டப்பட்டதைக் குறிக்கின்றது. ஆதிகால மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில், தமது வாழ்விடங்களை விட இறந்தவர்களுக்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களை அமைத்ததற்கான சான் றுகள் உலகின் பல நாடுகளில் காணப்படுகின்றன. ஆயினும் திராவிட மொழி பேசும் தென்னிந்திய மாநிலங்களின் பெருங்கற்காலப் பண்பாட்டில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. அதிலும் தென்தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் ஒரே பிராந்தியம் என மயங்கும் அளவிற்கு பல்வேறு அம்சங்களில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது. அவற்றுள் இரும்பின் அறிமுகம், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் பயன்பாடு, தாழியடக்க முறை, சுடுமண் கலைவடிவங்கள் என்பவற்றில் காணப்படும் ஒற்றுமைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

இலங்கையில் இதுவரை 60 இற்கும் மேற்பட்ட இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களும், ஈமச் சின்ன மையங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பெரிய குடியிருப்பு மையமாக அநுராதபுரம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதையடுத்து இரண்டாவது பெரிய குடியிருப்புமையமாக வடஇலங்கையில் உள்ள கந்தரோடை அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் ஆரம்பகால பெருங்கற்காலக் குடியிருப்புகள் இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான இடங்கள், சிறிய பற்றைக் காடுகள், கடலுணவை இலகுவாகப் பெறக்கூடிய பரவைக்கடல், கடல் - தரை வழிப் போக்குவரத்திற்குச் சாதகமான இயற்கைத் துறைமுகங்கள் என்பவற்றைக் கொண்டிருந்த கடற்கரை ஓரங்களிலேயே உருவாகின. இலங்கையில் இக்குடியிருப்புகள் தமிழகத்தில் அரிக்கமேட்டுக்கு நேரெதிரே அமைந்த மாதோட்டத்திலும், ஆதிச்சநல்லூருக்கு நேரெதிரே அமைந்த புத்தளத்தில் உள்ள பொம்பரிப்பிலும் முதலில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இங்கு குடியேறிய மக்களே காலப்போக்கில் வளமான இடங்களைத் தேடிச் சென்று அவ்விடங்களில் குடியேறினர் (Seneviratne 1983 237 -307). அவற்றுள் பௌதிக மற்றும் கனிம வளங்களைக் கொண்டிருந்த அநுராதபுரம், கந்தரோடை, மகாகமை ஆகிய இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் உருவாகி அவ்விடங்களில் ஆரம்பகால நகரமயமாக்கமும்,

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை
தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203



# 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வட இலங்கையில் இருந்த நாக நகர் பற்றிக் கூறும் பிராமிக் கல்வெட்டு

அரச உருவாக்கமும் நிகழ்ந்தன. அநுராதபுரத்தில் மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்புகள் தோன்றியதால் அங்கு பலமான அரச தலைநகர் தோன்றியது. இங்கு 1994 இல் இருந்து உலகப் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் கனிங்காம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகளை நவீன காலக் கணிப்பிற்கு உட்படுத்தியதிலிருந்து இங்கு பெருங்கற்காலப் பண்பாடு தோன்றிய காலம் கி.மு. 1000 (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர்) எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

பாளி இலக்கியங்கள் கி.மு.6 ஆம் நூற்றாண்டிலிருந்து (இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்னர்) இலங்கைக்கு வட இந்தியக் குடியேற்றங்கள் ஏற்பட்டதாகக் கூறுகின்றன. இது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் புலப்பெயர்வை அடுத்து 400 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட புதிய குடியேற்றமாகக் கொள்ளலாம். ஆயினும் இவ்வாறான குடியேற்றங்கள் நடந்ததற்கு நம்பகரமான தொல்லியற சான்றுகள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதே பாளி இலக்கியங்கள் வட இந்தியாவில் இருந்து கி.மு.3 ஆம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு பௌத்த மதம் பரவியதாகக் கூறுகின்றது. இவற்றை உறுதிப்படுத்தும் பிராமிக் கல்வெட்டுகளும், பௌத்த மதம் சார்ந்த தொல்பொருட் சான்றுகளும் பெரும்பாலும் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த குடியிருப்பு மையங்களிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள், இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்களே, புதிதாக அறிமுகமான பௌத்த மதத்தை ஏற்றுக் கொண்டனர் என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

பௌத்தத்திற்கு முந்திய இலங்கை மக்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் ஒரே இன வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர். தொல்லியலாளர்கள் இலங்கையில் இம்மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும் தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். அல்ஜின் என்ற தொல்லியலாளர் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இரு பக்க அலகுடைய நுண்கற்காலக் கல்லாயுதங்கள் தமிழகத்தில் பாம்பன் கடற்கரைக்கு அண்மையில் உள்ள தேரிக் கலாசாரத்துடன், ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமையைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார் (Kennedy 1990:34). மொழியியலாளர்கள் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதி ஒஷ்ரிக் மொழி தென்னிந்தியாவில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதி ஒஷ்ரிக் மொழியோடு கொண்டுள்ள ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் தற்காலத்தில் இலங்கையில் பேச்சுவழக்கில் உள்ள 200 இற்கும் மேற்பட்ட சொற்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் பேசிய ஆதி ஒஷ்ரிக் மொழிச் சொற்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வொற்றுமைகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள், தென்னிந்தியா - அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள - தேரி மணற்குன்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா வடஇலங்கை - அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு - தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருப்பதால் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்துவந்த இம்மக்கள் முதலில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே குடியேறியிருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து இலங்கைக்குப் பரவிய பெருங்கற்காலப் பண்பாட்டை அறிஞர்கள் பலரும் இலங்கையின் ஆக்க காலமாகவே (Formation Period) எடுத்துக் கொள்கின்றனர். இப்பண்பாடு எங்கே தோன்றியது? எப்போது தோன்றியது? தோற்றுவித்த மக்கள் யார்? என்பது தொடர்பாக அறிஞர்களின் மத்தியில் வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. ஆயினும் திராவிட மொழி பேசும் மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலப் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்படும் தனித்துவமான அம்சங்கள் ஒரே பிராந்தியத்திற்குரிய பண்பாடாக தோற்றமளிக்கின்றன. இப்பண்பாட்டு வட்டத்திற்குள்ளேயே இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடு உள்ளடக்கப்படுவதால் இப்பண்பாட்டை தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த திராவிட மக்களே அறிமுகப்படுத்தினர் என்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாகும். கலாநிதி சிரான் தெரணியாகல இப்பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனத் தனித்து அடையாளப்படுத்திக் கூறுகின்றார் (Deraniyagala 1992:735). பேராசிரியர் இந்திரபாலா தென் தமிழக - இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு இடையே ஈமச் சின்னங்கள், தாழியடக்க முறை, இரும்புக் கருவிகள், சமயச் சின்னங்கள், சுடுமண் உருவங்கள், கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பவற்றில் காணப்படும் ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக பெருங்கற்காலப் பண்பாடும் தென்தமிழகத்தில் இருந்தே இலங்கைக்குப் பரவியதாகக் கூறுகின்றார் (இந்திரபாலா 2006). இவ்வாதாரங்களில் இருந்து பௌத்தத்திற்கு முந்திய இலங்கை மக்களும், பண்பாடும் தமிழகத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டவை என்பது தெரிகிறது. இதனால் பௌத்த மதத்தின் பரவலோடு இலங்கையில் தோன்றிய மொழிவழிப் பண்பாடுகளை பௌத்தத்திற்கு முற்பட்ட பெருங்கற்கால மக்கள், பண்பாடு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதே பொருத்தமாகும்.

இலங்கைக்கு, விஜயன் யுகத்திற்கு முந்திய வரலாறு உண்டு என்பதற்கு தொல்லியற் கண்டுபிடிப்புக்களை ஆதாரங்களாகக் காட்டியிருக்கும் பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா இலங்கை மக்களின் இன அடையாளங்களுக்கு உடற்கூற்றியல் வேறுபாடுகள் காரணமல்ல, பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் எனக் கூறி அப்பண்பாட்டு வேறுபாடுகளை இலங்கையில் மனித நாகரிக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமென வலியுறுத்துகின்றார் (சேனக பண்டாரநாயக 1985:1-23). அண்மையில் “வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்” என்ற பொருளில் கலாநிதி பொ. இரகுபதி எழுதிய கட்டுரையொன்றில் இலங்கைத் தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் பூர்வீக மக்களது பண்பாட்டிலிருந்து தொடங்க வேண்டும் எனக் குறிப்பிட்டு, 2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் வழிபாட்டில் இருந்துவந்த இயக்கர் வழிபாடு எவ்வாறு அண்மைக் காலங்களில் வல்லிபுரநாதர் ஆலயமாக மாறியதென்பதற்கு பொருத்தமான ஆதாரங்களைக் காட்டியிருந்தார் (இரகுபதி 2006:1-23). தற்காலத்தில் தமிழர் சமூகத்தில் மாடுகளுக்கு இடப்படும் குறிகள், சலவைத் தொழிலாளர் பயன்படுத்தும் அடையாளச் சின்னங்கள் என்பவை - அவை வரலாற்றுக் காலத்தில் கல்வெட்டுகள், நாணயங்களில் பயன்படுத்தப்படுவதற்கு முன்னரே - பெருங்கற்கால மக்களின் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டதற்கு, பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் பொறித்துள்ள குறியீடுகள், சின்னங்கள் என்பன சான்றாகக் காணப்படுகின்றன (புஷ்பரட்ணம்: 1999: 62-67). இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழர் வாழ்வியலுடன் இணைந்திருக்கும் நாக மரபிற்கும் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

தென்னாசிய நாடுகள் பலவற்றில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இருந்து நாகத்தைக் குலமரபுத் தெய்வமாக கொண்ட மக்கள் வாழ்ந்ததற்கு நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்நாக வழிபாட்டு மரபு வடஇந்தியா, தக்கணம், தென்னிந்தியா, தமிழகம், தென் தமிழகம் ஆகிய வட்டாரங்களிலும், வட்டாரங்களுக்கு உள்ளேயும் வேறுபட்ட காலங்களில், செம்புக்காலம் (Chalcolithic Culture), புதிய கற்காலம் (Neolithic Culture), நுண்கற்காலம் (Mesolithic Culture), பெருங்கற்காலம் (Megalithic Culture) முதலான பண்பாடுகளின் உருவாக்கத்துடன் தோன்றியதை தொல்லியல் ஆதாரங்கள் மேலும் உறுதிசெய்கின்றன. இலங்கைக்குரிய பெருங்கற்காலப் பண்பாடு தென்தமிழகத்தில் இருந்து பரவியதற்கே அதிக சான்றுகள் காணப்படுகின்றன. கலாநிதி சிரான் தெரணியாகல நாகர்களே இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாட்டை பரப்பியவர்கள் எனக் கூறுகின்றார். 1960களில் புத்தளம், பொம்பரிப்பு பெருங்கற்காலப் பண்பாடு பற்றி ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதானாவும் இக் கருத்தையே முதலில் முன்வைத்துள்ளார். பேராசிரியர் இந்திரபாலா பௌத்த மொழியான பிராகிருத மொழியை ஏற்றுக் கொண்ட மக்கள் அம்மொழி சார்ந்த இனக்குழுவாக உருவாகிக் கொண்டிருந்த போது நாக இன மக்கள் தமிழ் மொழி பேசும் இனக்குழுவாக உருவாகி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழத் தொடங்கினர் எனக் கூறுகிறார். இந்நிலையில் வடஇலங்கையில் கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய பெருங்கற்கால மையங்களிலும் நாக வழிபாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இம்மக்களிடையே நாகத்தை குலமரபுத் தெய்வமாக வழிபடும் மரபு தோன்றிவிட்டதை உறுதி செய்வதாக உள்ளது.

நன்றி: போராசிரியர் பரமு புஷ்பரட்ணம்



# நிலமும் நாங்களும்: பின் – போர்க்கால வட பகுதியின் நில விவகாரங்களைப் புரிந்துகொள்ளல்!

26.11.2024




உலகளாவிய ரீதியில் உள்நாட்டுப் போர்கள் மற்றும் ஆக்கிரமிப்புப் போர்களில் நிலம், நில உரிமை என்பன மோசமாகப் பாதிக்கப்படும் அம்சங்களில் ஒன்று. இதற்கு ஆகப்பெரிய உதாரணங்களாக இசுரவேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்கள், சிறீலங்கா அரசினால் ஆக்கிரமிக்கப்ட்ட தமிழர் பிரதேசங்கள் விளங்குகின்றன. பலஸ்தீனம் யூதர்களுக்காக வாக்களிக்கப்பட்ட பூமி என்ற நம்பிக்கையை, தமது நில அபகரிப்புக்கான நியாயப்பாடாக இசுரவேல் எடுத்துக்கொண்டது. அதேபோல் இலங்கைத் தீவு முழுவதும் பௌத்தத்தைக் காப்பதற்காகச் சிங்களவர்களுக்கு புத்தரால் அருளப்பட்டது என்பது சிங்களப் பேரினவாதத்தின் 'மகாவம்ச' நம்பிக்கை.


தமிழர் தாயகத்தின் வடபகுதியில் எதிர்நோக்கப்படும் நிலம் (காணி) சார்ந்த சிக்கல்களைக் காத்திரமாகப் பதிவு செய்துள்ள ஆய்வறிக்கை ஒன்று 2015 இல் வெளிவந்திருந்தது. 'மாற்றம்' நிறுவனத்தினரால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. இது சமூகத்தின் பல்வேறுபட்ட தரப்பினரிடமும் இருந்து சேகரிக்கப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. 'போருக்குப் பின்னர் இலங்கையின் வடக்கில் நிலவும் நிலம் (காணி) தொடர்பான பிரச்சினைகளும் அதைப் பற்றிய புரிதல்களும்' என்பது 72 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கையின் தலைப்பு. இது ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. அனைத்துலக சமூகத்தின் கவனத்திற்கும், அழுத்தத்திற்கும் வழிகோலக்கூடியது என்ற வகையில் இந்த ஆவணம் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டமையின் முக்கியத்துவம் அமைகின்றது (இந்த ஆய்வறிக்கை 2015 இல் வெளிவந்தது என்ற புரிதலோடு, இந்தக் கட்டுரை வாசிக்கப்பட வேண்டும். இதிலுள்ள தரவுகளில் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளின் பின் 2024 இல் நிச்சயம் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும்).

ஐந்து அத்தியாயங்களைக் கொண்டுள்ள இந்த ஆய்வறிக்கை ஒவ்வொரு அத்தியாயத்திலும் வடக்கின் நில விவகாரத்தோடு தொடர்புடைய சிக்கலுக்குரிய அம்சங்களை நுணுக்கமாகப் பதிவுசெய்துள்ளது. முதலாவது அத்தியாயம் வடபகுதி நிலங்கள் மீதான இராணுவ ஆக்கிரமிப்பினையும் அதன் பின்னணி, விளைவுகள் குறித்தும் ஆழமாகப் பார்க்கின்றது. காணி ஆவணங்களுடன் தொடர்புடைய சிக்கல்களை இரண்டாவது அத்தியாயமும் மூன்றாவது அத்தியாயம் நில உரிமையிற் தாக்கம் செலுத்தும் பாலின – சாதிய குறுக்கு வெட்டு அம்சங்களையும் பேசுகின்றது. நான்காவது அத்தியாயம் நில உரிமையிற் தாக்கம் செலுத்தும் இனத்துவ மற்றும் மதம் சார் அம்சங்கள் மீதான குறுக்கு வெட்டுப் பார்வையைக் கவனப்படுத்தப் படுகின்றது. நிறைவாக ஐந்தாவது அத்தியாயத்தில் ஆய்வின் பெறுபேறுகளின் அடிப்படையிலான முழுமையான அவதானிப்புகளும் பரிந்துரைகளும் முன்வைக்கப்படுகின்றன.

நில உரிமை, அதன் பயன்பாடு, நிலம் மீதான கட்டுப்பாடுகள், வளங்கள் மீதான கட்டுப்பாடு, சட்ட ரீதியான சிக்கல்கள், இராணுவ மயமாக்கல், காணி உரிமை மறுப்பு எவ்வாறு பெண்களைப் பாதிக்கின்றது, அது எவ்வாறு இனங்களுக்கிடையிலான உறவில் (தமிழ் – முஸ்லீம்) விரிசலை ஏற்படுத்துகிறது போன்ற நிலைமைகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## தமிழர்களின் காணிநிலக் கோரிக்கை

போருக்குப் பின்னான சூழலில் தமிழர்களின் காணிநிலக் கோரிக்கையின் முக்கிய அம்சமாக வடக்கில் கேப்பாப்புலவு மக்களின் ஜனநாயகப் போராட்டத்தினைக் குறிப்பிடலாம். 2017 இலிருந்து பல வருடங்கள் தமது காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க அவர்கள் போராடினர். இரவு பகலாக அம்மக்கள் தமது நிலங்களை விடுவிக்கப் போராட்டங்களை முன்னெடுத்தனர். பெரும் சிரமங்கள், நெருக்கடிகள், காவற்துறை, இராணுவம், புலனாய்வுத் துறையின் கெடுபிடிகள், மிரட்டல்களுக்கு மத்தியில் போராடினர். மழை, குளிர், வெயில் எனக் காலநிலைச் சிரமங்கள் மட்டுமல்ல, தொடர் போராட்டங்களில் ஈடுபட்டமையும் அவர்களின் நாளாந்த வாழ்வை பெரிதும் பாதித்தது இயல்புநிலை குழம்பிப் போனது; பலர் தொழில் வாய்ப்பை இழந்தனர் பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவும் வயதானவர்களைப் பராமரிக்கவும் சிரமப்பட்டனர்.




31 டிசம்பர் 2018 இற்கு முன் வடக்கு – கிழக்கு தனியார் நிலங்களிலிருந்து இராணுவம் விலக்கப்படுமென்று மைத்தரிபால சிறிசேன அரசாங்கம் உறுதியளித்தது. அது வாக்குறுதியாக மட்டுமே நின்றுபோனது. காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பின் (People's Alliance for Right to Land) தரவுகளின்படி கேப்பாப்புலவில் மக்களுக்குச் சொந்தமான 350 ஏக்கர் நிலங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. ஆளும் தரப்பு, தொண்டர் நிறுவனங்கள், வெளிநாட்டு அமைப்புகள் என எத்தனையே சந்திப்புகள் நடைபெற்றன் உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. ஆனால் அனைத்தும் காலம் கடத்தல்களாகவே நகர்ந்தன. நீதி, சமாதானம், நல்லிணக்கம் என்பவையெல்லாம் வெற்று வார்த்தைகளாயின.

நில உரிமைக்கும் நில அதிகாரத்திற்குமிடையிலான முரண்பாடு, அளவுகளில் வேறுபட்டாலும் உலகின் பல பாகங்களிலும் எல்லாக் காலங்களிலும் இவை நிலவிவந்துள்ளன. நிலப்பிரபுத்துவக் காலம் அதற்கான தொடக்கம். நிலம் மீதான உரிமை என்பது அடிப்படை வாழ்வாதாரம் சார்ந்தது. நிலம் மீதான அதிகாரம் என்பது அபகரிப்பு, நிலப்பறிப்பு சார்ந்தது. உயர் பாதுகாப்பு வலயம், தந்திரோபாய முக்கியத்துவம், பயங்கரவாத அச்சுறுத்தல், மூலோபாய இராணுவத் தளம் என்பதான பல்வேறு சொல்லாடல்களை ஆட்சியாளர்கள் கவசங்களாகப் பயன்படுத்தி வந்தனர்.

## இராணுவ நீக்கம் பற்றிய வாக்குறுதிகளும் எதிர்பார்ப்பும்

போர் முடிவுக்கு வந்து ஒன்றரைத் தசாப்தங்கள் கடந்துவிட்டன. இன்றும் இராணுவத்தினரின் பிரசன்னம் கொண்டதாகவும் இராணுவமயப்படுத்தப்பட்டதாகவுமே வடக்கு – கிழக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. சொந்த நிலங்களில் மீள்குடியமர முடியாத நிலையில் இன்றும் வடக்குத் தமிழர்கள் உள்ளனர். தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்தில் அளித்த வாக்குறுதிகளில் காணிகளை விடுவிப்பது முதன்மை பெற்றிருந்தது. அத்தோடு அரசியற் கைதிகளின் விடுதலை, போதைப்பொருள் பாவனைக்கான சமூகக் காரணிகளை இல்லாமற் செய்வது, தொழில் வாய்ப்புகளைப் பெருக்குவது குறித்த வாக்குறுதிகள் வழங்கப்பட்டன. நல்லெண்ணச் செயற்பாடாக ஆனையிறவு இராணுவச் சோதனைச் சாவடி நீக்கப்பட்டிருக்கின்றது. வடக்கிலிருந்து இராணுவத்தினை வெளியேற்றுவது குறித்தும் பேசப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் அது எத்தனை தூரம் நிறைவேற்றப்படும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து ஆராயும் போது, நில விவகாரம் குறித்த சிக்கல்களுக்குத் திருப்திகரமான தீர்வு எட்டப்படுவது தவிர்க்கவியலாதது. நில விவகாரச் சிக்கல்களுக்கான தீர்வு நோக்கிய முனைப்புகள், மக்களுக்கு நெருக்கமான நிறுவனங்கள், பொறிமுறைகள், கட்டமைப்புகள் மூலம் பொருத்தமானதும் கூர்உணர்வு மிக்கதுமான வழிமுறைகளைக் கண்டடைவதன் ஊடாக செயல்வடிவம் பெறவேண்டுமென இந்த அறிக்கை வலியுறுத்துகிறது.

## அரசியற் தீர்வில் நில உரிமையின் வகிபாகம்

தனிநபர் மற்றும் சமூகப் பாதுகாப்பின்மை, நிலங்கள் மற்றும் சமூகங்கள் மீதான இராணுவமயமாக்கல், பாலின ரீதியிலான வன்முறை, வேலையின்மை, தண்ணீர், சுகாதாரம், கல்வி மற்றும் பிற முக்கியமான சேவைகள், வளங்களின் பற்றாக்குறை வடக்கு (மற்றும் கிழக்கு) இலங்கையில் நீடிக்கிறது என்பதை நிறுவுகின்றது இந்த ஆய்வு.

போருக்குப் பிந்திய 'அமைதி' பேண்தகு வகையிலும் நீடித்ததாக அமைவதற்கு, காணி சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும். தேசிய இனப் பிரச்சினையில் நில உரிமை இன்றியமையாத ஒரு அங்கம் என்பதையும், தேசிய பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும் காணி சார் சிக்கலை உகந்த முறையில் தீர்க்க வேண்டும் என்பதையும் அங்கீகரிக்க வேண்டும். நிலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகள், மக்களுக்கு நெருக்கமான நிறுவனங்கள், பொறிமுறைகள் மற்றும் கட்டமைப்புகள் மூலம் அடையாளம் காணப்பட வேண்டும் என்றும் இவ் ஆய்வு வலியுறுத்துகின்றது.

## இராணுவ மயமாக்கலும் விளைவுகளும்

சிறீலங்காவின் 19 இராணுவப் பிரிவுகளில் (Military Divisions) வட பகுதியில் மாத்திரம், 14 இராணுவப் பிரிவுகள் நிலைகொண்டுள்ளன. இவை நிரந்தரமாக இருக்கக்கூடிய உட்கட்டுமானங்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி (வவுனியா, மன்னார் ஆகிய நிர்வாக மாவட்டங்கள்) ஆகிய மூன்று பிரதேசங்களிலும் பாதுகாப்புப் படையின் மூன்று கட்டளைத் தலைமையகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த 14 இராணுவத்தளங்களும் அமைந்துள்ளன. 2002 இல் வெளிவந்த தகவல்களின் படி, புதிய ஆட்சிப் பீடமும் வடக்கில் இராணுவப் பிரசன்னத்தினைக் குறைப்பதில்லை என அறிவித்துள்ளது.

வடக்கிலும் கிழக்கிலும் இராணுவத்தினருக்கான வீடுகளை அமைத்துக்கொள்வதற்கு சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சகத்திற்கு சீன அரசாங்கம், நிதியுதவி வழங்கியிருந்தது. அதற்காக 2012 இல் 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில், இராணுவத்தினரின் குடும்பங்களைக் குடியமர்த்தும் வீடமைப்புத் திட்டம் தொடங்கப்பட்டது. வடக்கில் இராணுவத்தை நிரந்தரமாக நிலைகொள்ளச் செய்தல் மூலம், சிங்களக் குடியேற்றத்தை முன்னெடுப்பதும், அதனூடு பௌத்த மயமாக்குதலும் என்ற மறைமுக அணுகுமுறை கைக்கொள்ளப்படுகின்றது.

தேசிய பாதுகாப்பு என்ற காரணத்தை முன்னிலைப்படுத்தி இராணுவமயப்படுத்தல் தொடரப்படுவதோடு, அதனை நியாயப்படுத்துகின்ற அணுகுமுறையும் கடைப்பிடிக்கப்படுகிறது. இரா

ணுவத்தின் குடும்பங்களைக் குடியமர்த்துதல் என்பது சிங்களக் குடியேற்றத்தின் மறைமுகமானதொரு வடிவமாகும். இராணுவப் பிரசன்னத்தைத் தொடருதல் என்பது, இன்னொரு வகையில் தேசிய இனப்பிரச்சினைக்கு 'இராணுவத் தீர்வு' என்ற அணுகுமுறையின் தொடர்ச்சியாகக் கைக்கொள்ளப்படுகின்றது.

வடக்கு (மற்றும் கிழக்கு) இராணுவமயமாக்கல் என்பது 30 வருட உள்நாட்டுப் போரின் நேரடி விளைவு. வடக்கு - கிழக்கை பாதிக்கும் முக்கிய பிரச்சினையாகவும் அது உள்ளமை வெளிப்படுத்தப்படுகின்றது. இராணுவமயமாக்கலின் மூலம், அதற்கான காரணங்கள், அளவு மற்றும் இராணுவமயமாக்கலின் தாக்கம் ஆகியவற்றை இந்த அறிக்கை ஆராய்கிறது. வட பகுதியின் பாரிய உயர் பாதுகாப்பு வலயமான 'வலிகாமம்' உட்பட உயர் பாதுகாப்பு வலய விளைவுகளை விரிவாக ஆராய்கிறது.

முல்லைத்தீவின் மணலாறு (வெலி ஓயா) ஒரு சர்ச்சைக்குரிய பிரதேசம். வடக்கிற்கும் கிழக்கிற்குமிடையிலான நிலத் தொடர்பினைத் துண்டிக்கும் வகையில் சிறீலங்கா அரசாங்கங்கள் அங்கு 1980 களிலிருந்து சிங்களக் குடியேற்றங்களை மேற்கொண்டு வந்திருக்கின்றன. யாழ்ப்பாண உயர் பாதுபாப்பு வலய தலைமைச் செயலகம் (Security Force Headquarters) மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. அனைத்துப் பாதுகாப்பு படைகளின் தலைமையகங்களும் இணைக்கப்பட்ட கீழ்ப் பிரிவுகளைக் கொண்டுள்ளன. வடக்கு - கிழக்கில் இராணுவத்தினருக்கு வீடுகளை அமைப்பதில் சீனா உதவி வந்துள்ளது. 2012 இல் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் இராணுவத்தினருக்கான வீடமைப்பிற்காகச் சீனா வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

"இராணுவமயமாக்கல் நிலத்தின் அணுகல், கட்டுப்பாடு மற்றும் விநியோகத்தையும் கணிசமாகப் பாதிக்கிறது. பொதுக் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்துவதைச் சட்ட ரீதியான வழிமுறைகளால் மட்டுமே தீர்க்கமுடியாது. நிலங்களின் இராணுவமயமாக்கல் இப்பிரச்சினையை மேலும் சிக்கலுக்குரியதாக்குவதில் சட்டத்தின் தெளிவற்ற விதிகள் துணை நிற்கின்றன. நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம் (பிரிவு 2) நிலத்தைப் 'பொது நோக்கங்களுக்காக' கையகப்படுத்த அனுமதிக்கிறது. தேசிய பாதுகாப்பு தொடர்பான காரணங்களுடன் தொடர்புடையதாக இல்லாவிட்டால், இந்தப் பொது நோக்கத்தை பகிரங்கமாகக் கூற வேண்டும் என்று அச்சட்டம் பரிந்துரைக்கிறது. காணிகளை இராணுவம் கையகப்படுத்தும் போது, ஒரு 'பொது நோக்கம்' உள்ளது என்று கூறுவது மட்டுமே சட்ட ரீதியான அங்கீகாரத்தை வழங்குகின்றது. நிலத்தை கையகப்படுத்த வேண்டிய அந்தப் 'பொதுத் தேவைக்கு' நீதிமன்றத்தின் முன் நியாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லாமலிருக்கின்றது. இலங்கையில் தேசிய பாதுகாப்பு விடயங்களில் நிறைவேற்று அதிகாரிகளுக்கு இருக்கும் சட்ட அமைப்பு மற்றும் நீதித்துறையின் பரந்த அளவிலான செல்வாக்குக் காரணமாக காணிகளை இராணுவம் கையகப்படுத்தும் பிரச்சினையைச் சட்ட ரீதியாக (மட்டும்) தீர்க்க முடியாதுள்ளது. இராணுவமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு நீக்கம் ஆகியவை சாராம்சத்தில் ஓர் அரசியல் பிரச்சினையாகும். இது தொலைநோக்கு அடிப்படையில் அரசியலால் மட்டுமே தீர்க்கப்படக்கூடியது" என நிறுவுகின்றது முதலாவது அத்தியாயம்.

**அத்தியாயம் 2: நில ஆவணம் (உறுதி) தொடர்பான சிக்கல்கள்**

மனிதனால் உருவாக்கப்பட்ட அழிவுகள் அல்லது இயற்கைசார் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட எந்தவொரு சமூகத்திலும் நில ஆவணங்கள் ஒரு முக்கிய பிரச்சினையாக உருவெடுத்திருப்பது இயல்பானது. புனரமைப்பு, மறுசீரமைப்புடன் இணைந்ததாக நில ஆவணங்கள் தொடர்பான சிக்கல்கள் இந்த அத்தியாயத்தில் கவனப்படுத்தப்பட்டுள்ளன. காணி உறுதிப் பிரச்சினைகள் போர் மற்றும் இனப் பிரச்சினையுடனும் நில நிர்வாகத்தின் பாகுபாடான அரசியல் போக்குடனும் தொடர்புடையவையாகும். ஆவணங்களின் இழப்பு மீள்குடியேற்றத்தைப் பாதிப்பதோடு, ஏற்பட்ட சேதங்கள், இழப்புக்கான இழப்பீட்டுத் திட்டங்களை அணுகுவதிலும் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும். மீள்குடியேற்றம் என்பது நிலத்தை அணுகுவது மற்றும் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல, மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளின் பேண்தகு பயன்பாட்டுத் திறனையும் பற்றியது என்கிறது இரண்டாவது அத்தியாயத்தின் முடிவுரை.

**அத்தியாயம் 3: நிலப் பிரச்சினையின் பாலின – சாதிய குறுக்கு வெட்டுப் பரிமாணம்**

வடக்கில் நிலப்பிரச்சினையில் ஆழ வேரோடியுள்ள பாலினம் மற்றும் சாதியப் பரிமாணத்தையும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்புமிகு விளைவுகளையும் இந்த அத்தியாயம் பதிவு செய்கின்றது. வடக்கில் காணி விநியோக முறைகள் என்று வரும்போது சாதி அடிப்படையிலான பாகுபாடு இன்னும் சவாலாகவே உள்ளது. அது தலைமுறை தலை முறையாக தொடர்கின்றது. குறிப்பாக வெளியாட்களுக்கு காணிகள் விற்கப்படும் போது, குறிப்பிட்ட சாதியினருக்கு விற்கக் கூடாது என்ற 'சமூக ரீதியாக' ஏற்றுக்கொள்ளப்பட்ட விதி பின்பற்றப்படுகின்றது. இதன் மூலம், குறிப்பிட்ட பகுதிகளில் 'சாதி அடிப்படையிலான பிராந்தியவாதம்' பேணப்படுகிறது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 72 வயதான ஓய்வுபெற்ற அரச அதிகாரி நாவுக்கரசு இப்படிக் கூறியுள்ளார்:

"யாழ்ப்பாணத்தில் சாதி அடிப்படையிலான நிலப் பிரிவுகள் உள்ளன. அவை இன்னும் உள்ளன. அடிப்படையில், நிலப்பரிவு என்பது ஒரு குறிப்பிட்ட சமூகத்தால் மேற்கொள்ளப்படும் வருமானம் ஈட்டும் நடவடிக்கையின் அடிப்படையில் அமைந்துள்ளது. இப்படியாகத்தான் யாழ்ப்பாணச் சமூகத்தில் சாதி வலுவாகப் புரையோடிக் கிடக்கிறது. ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் தமது நிலத்தை இன்னொரு சாதியைச் சேர்ந்தவர்களுக்கு இலகுவில் விற்க மாட்டார்கள். அண்டை வீட்டாரின்



கோப்பாப்புலவு மக்களின் போராட்டம்

சம்மதம் என்பது பெரும்பாலான மக்கள் பின்பற்றும் ஒரு எழுதப்படாத சட்டம். பொதுவாக ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் ஒரே இடத்தில் வசிக்கின்றனர். அவர்கள் வாழும் தெரு அல்லது பகுதியின் அடிப்படையில் ஒருவரின் சாதியை கண்டடையலாம்."

வடக்கில் நில விவகாரங்களில் பாலின, சாதியப் பரிமாணங்களுக்கு மிகக்குறைந்த அளவிலேயே கவனம் கொடுக்கப்படுகின்றது. இந்தப் பரிமாணம் (சாதிய, பாலினம் சார் நில விவகாரச் சிக்கல்) அரசு மற்றும் சட்டங்களால் மட்டும் தீர்க்கப்பட முடியாதவை. நில உரிமை, நிலத்திற்கான அணுகல் (Access) சார்ந்து சாதிய, பாலின ரீதியில் உருவாக்கப்பட்டுள்ள விளைவுகளைக் கையாள பரந்த சமூக ரீதியிலான அங்கீகாரம், செயற்திட்டம் அவசியம். இந்த விவகாரங்களை வெளிப்படையாக உரையாடுவதற்குத் தமிழ்ச் சமூகம் தயாராக வேண்டும் என்று அறிக்கை பரிந்துரைக்கின்றது.

**அத்தியாயம் 4: நிலப் பிரச்சினையின் இன – மத குறுக்கு வெட்டுப் பரிமாணம்**

இந்த அத்தியாயம் நிலப் பிரச்சினைகளின் இன மற்றும் மதப் பரிமாணத்தை ஒரு இனக்குழும முரண்பாட்டுக் கண்ணோட்டத்திற் பார்க்கிறது. இனம் மற்றும் மத அடையாளத்தை அடிப்படைவாதக் கண்ணோட்டத்தில் பார்க்காமல், அரசியல் கண்ணோட்டத்தில் இந்த ஆய்வு நோக்குகிறது. இனம் என்பது நில விவகாரத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் ஒரு குறுக்குவெட்டுப் பிரச்சினையாக, வடக்கில் தமிழர்கள் - சிங்களவர்களுக்கு இடையிலான இருமை நிலையாக (Binary) இந்த ஆய்வில் அணுகப்படவில்லை. முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் கவனப்படுத்தப்பட்டுள்ளன. 1990 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை இவ்விரு சமூகங்களுக்கிடையிலான உறவில் ஆழமான கரும்புள்ளியை ஏற்படுத்தியதுடன், இந்தச் சமூகங்களுக்கிடையில் நிலவும் காணி உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளில் தொடர்ந்தும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

தமிழ் - சிங்கள - பௌத்த முரண்பாட்டுப் பரிமாணத்திற்கு அப்பால், வடக்கில் நிலவும் மத ரீதியான பதட்டங்கள் முதன்மையாகத் தமிழர் - முஸ்லிம்கள் இடையிலான இனப் பிளவுடன் தொடர்புடையது. முஸ்லீம் மற்றும் தமிழ்ச் சமூகத்தினரிடையே உள்ள பிளவைக்களைவதற்கு காத்திரமான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். பரஸ்பர சந்தேகம் மற்றும் அவநம்பிக்கைகள் படிப்படியாக நீக்கப்பட வேண்டும். சமூகங்களுக்கிடையில் நம்பிக்கையை வளர்க்க முறையான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது நான்காவது அத்தியாயத்தின் கோரலாகும்.

## சிங்களக் குடியேற்றம்

விவசாய அபிவிருத்தித் திட்டங்களைக் காரணம் காட்டி கிழக்கில் சிங்களக் குடியேற்றங்களுக்கு அத்திவாரம் போடப்பட்டு, சனத்தொகைச் சமநிலையில் (Demographic Balance) பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி சிங்கள மயமாக்கலுக்கு வழிகோலப்பட்டது. போருக்குப் பின்னான சூழலில் தேசிய பாதுகாப்பு என்ற காரணம் காட்டப்பட்டு இராணுவமயமாக்கலும், அதன் விளைவாக சிங்கள மயமாக்கல் நேரடியாகவும் (பௌத்த விகாரைகள் நிறுவுதல் மூலமும்) மறைமுகமாகவும் (இராணுவத்தின் குடும்பங்களைக் குடியேற்றுவதன் மூலமும்) முன்னெடுக்கப்படுகின்றது. போருக்குப் பின்னர் 18 பௌத்த விகாரைகள் வடக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 67,000 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் (2014 இல் வட மாகாண சபை வெளியிட்ட தரவுகளின்படி,) இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட சூழல் நிலவுகின்றது. இவற்றில் தனியார் மற்றும் அரச காணிகள் அடங்குகின்றன. யாழ்ப்பாணத்தில் 10,919 ஏக்கர், முல்லைத்தீவில் 34,362 ஏக்கர், மன்னாரில் 22,247 ஏக்கர் நிலம் இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

## சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடும் நில வளங்கள் மீதான அதிகாரமும்

எந்தெந்த வகையில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் இராணுவம் முதலீடுகளை மேற்கொண்டு, விரிவுபடுத்தி வருகின்றது, 'Holiday Houses' எனப்படும் உல்லாச விடுதிகள், விவசாயம் மற்றும் கடற்தொழிலில் இராணுவத்தினர் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற சூழல், தமிழ் மக்களின் தொழில் வளத்தினையும் வாழ்வாதாரத்தினையும் அவை எத்தகையை மோசமாகப் பாதிக்கின்றது என்ற தரவுகளும் அறிக்கையில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

நில அபகரிப்பினாரல் பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ் மாவட்டத்தில் 40,000 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளன. சாதிய ஒடுக்குமுறை தொடர்வதன் விளைவாக தாழ்த்தப்பட்ட மக்கள் நிலவுரிமையற்ற நிலையில் உள்ளனர். இன ரீதியிலான பிளவுகளையும் நிலப் பிரச்சினை அதிகப்படுத்துகின்றது. முஸ்லீம் மக்களில் பெரும்பான்மையானவர்கள் யாழ்ப்பாணத்தில் மீளக் குடியேறவில்லை. பாதுகாப்பு தொடர்பான பரஸ்பர நம்பிக்கையீனம் அகலவில்லை.

**நில விடுவிப்பை நோக்கிய செயற்பாட்டு அணுகுமுறையும் பரிந்துரைகளும்**

இராணுவ நீக்கத்தினை (Demilitarization) நடைமுறைப்படுத்த அவசியமான செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீட்டினைத் தவிர்ப்பது மற்றும் சிவில் நிர்வாகம், சிவில் நிறுவனங்களைப் பலப்படுத்துதல், சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீடு மற்றும் அதில் நிலவும் குறைபாடுகளுக்கு எதிரான அழுத்தம் கொடுக்கத் தகுந்த பொறிமுறையைக் கண்டறிதல், தமிழ் - முஸ்லீம் உறவுகளை மேம்படுத்தும் வழிமுறைகள், சாதிய ஒடுக்குதலால் நிலமற்றவர்களாகவுள்ள மக்களை நிலத்திற்குச் சொந்தக்காரர்களாக்குதல் போன்றன பற்றிய பரிந்துரைகளும் இடம் பெற்றுள்ளன.

நிலம் சார்ந்த சிக்கல்களை நடைமுறை சார்ந்து மாகாண சபையினூடாக அணுகுவது பொருத்தமானதெனவும் கூறப்படுகின்றது. வட மாகாண சபை நில விவகாரம் தொடர்பாக நிலவக் கூடிய பிரச்சினைகளையும் அதன் பல்பரிமாண விளைவுகளையும் அடையாளம் காண்பதில் முனைப்புக் காட்ட வேண்டும். அவற்றை மத்திய அரசிற்கு எடுத்துச் சென்று, நிலவிவகார அணுகுமுறையில் கட்டமைப்பு சார்ந்ததும், நிர்வாக முறைமை சார்ந்ததுமான மாற்றங்களுக்கும் செயற்பாட்டுக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## நிலம்: அரசியல் உரிமை, இருப்பு சார் அடையாளம்

பொதுவாக நிலம் என்பதை 'குடியிருக்கின்ற இடம்' என்பதாகக் குறுக்கிவிட முடியாது. அது தமிழ் மக்களின் 'அரசியல்', 'உரிமை' மற்றும் 'இருப்பு' சார்ந்தது. வெறுமனே காணி என்று சுருக்கிவிட முடியாது. அது மக்களின் வாழ்வாதாரம், வளங்கள் மீதான உரிமை, பண்பாட்டு வாழ்வியலோடு பின்னிப்பிணைந்தது. இராணுவத்தை எதிர்த்து எவரும் எதுவும் கேட்கமுடியாது என்ற புறநிலையில், வடக்கில் சிங்கள பௌத்த மயமாக்கலை நடைமுறைப்படுத்தும் இயந்திரமாக 'அரசினால்' இராணுவம் பயன்படுத்தப்படுகின்றது.

போருக்குப் பிந்தைய சூழலில் தமிழர் தாயகத்தின் வடக்கில் நிலவிவரும் நில உடைமை சார்ந்த விடயங்களைக் கள ஆய்வு மூலமும், தகவல், தரவுகள், ஆதாரங்கள் வழியாகவும் இந்த அறிக்கை ஆவணப்படுத்துகின்றது. நிலத்தின் பயன்பாடு - அதன் மீதான அணுகல், நிலக் கட்டுப்பாடு, 'போருக்குப் பிந்தைய மீள்கட்டமைப்பு மற்றும் நல்லிணக்க சூழலில்' பெண்கள், ஆண்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களின் வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தின் கூறுகளையும் ஆய்வு கவனத்திலெடுத்துள்ளது.

தமிழர் தாயகத்தின் வடக்கில் நிலம் சார்ந்து மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான துல்லியமானதும் விரிவானதுமான தகவல்கள் திரட்டப்பட்டு காத்திரமான ஆய்வறிக்கையாக இந்த ஆவணம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. நில விவகாரம் உணர்ச்சிவயப்பட்டதாக மட்டுமே கடந்த காலங்களில் இருந்து வந்துள்ளது. இதனைத் தகுந்த தரவுகள், தகவல்கள், பரிந்துரைகளுடன் ஆவணமாக்கி, அறிவுசார் தளத்தில் முன்னெடுக்க வழிவகுப்பதாக இந்த ஆய்வறிக்கை அமைகிறது.

- நன்றி: சிவராஜா ரூபன் (எழுநா முகநூல்)


இராணுவ ஆட்சி
மேலோங்கியுள்ளது.
அடிமைகள்போல்
விலங்கிடப்பட்டுள்ளோம்.
பெரும் கொடுமைகளை
அனுபவிக்கின்றோம்.
எங்கு பார்த்தாலும்
இராணுவ வேலி. எமது
வீடுகள் வேலிகள்
அழிக்கப்பட்டு
கொடியவர்கள்
வேலியாகியுள்ளனர்.






**05.01.2008 அன்று மன்னார் மாவட்டம் பள்ளமடுப்பகுதியில் சிறீலங்கா படைகளின் ஆழஊடுருவும் படைப்பிரிவு நடாத்திய கிளைமோர்த் தாக்குதலில், படைய புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளர் கேணல் சாள்ஸ் லெப்டினன்ட் சுகந்தன் லெப்டினன்ட் காவலன் லெப்டினன்ட் வீரமாறன் ஆகிய போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.**



# 40ஆம் ஆண்டு வீரவணக்கம்



கப்டன் பண்டிதர்
சின்னத்துரை ரவீந்திரன்
கம்பர்மலை, வல்வெட்டித்துறை
(25.12.1959-09.01.1985)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான கப்டன் பண்டிதர் 1985ஆம் ஆண்டு தை 09ஆம் திகதி அச்சுவேலியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றை சிங்களப்படைகள் முற்றுகையிட்ட போது இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்தார்.

பண்டிதர் அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராக இருந்தார். அதுமாத்திரமன்றி தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆயுதப் பராமரிப்புக்கும் நிதிவளங்களுக்கும் பொறுப்பாளராக இருந்தார். வல்வெட்டித்துறைக்கு அருகேயுள்ள கம்பர்மலையை பிறப்பிடமாக கொண்டவர். அவர் வீரச்சாவடைகின்றபோது வயது இருபத்தி நான்கேயாகும்.

1977ஆம் ஆண்டு அமைப்பில் இணைந்து விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப் பற்று ஆகிய சீரிய பண்புகள் நிறைந்த கப்டன் பண்டிதர் சகபோராளிகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழத் தேசியத் தலைவரின் நேசம்மிக்க தளபதியாக விளங்கிய பண்டிதர் விடுதலைப் புலிகள் அமைப்பின் நிர்வாகப் பொறுப்புக்களை சுமந்ததோடு மட்டுமல்லாது பல வெற்றிகரமான தாக்குதல்களிலும் கலந்துகொண்டார்.

தமிழீழ விடுதலைக்காய் இன்னுயிரை நீத்த இவ் வீரவேங்கையுடன் வீரச்சாவு அடைந்த எனைய போராளிகளின் நினைவோடு எம் பணி தொடர்வோம்.



# அசாத் வீழ்ச்சியுடன் ரஷ்ய தளங்கள் மூடல்: சிரியாவில் எல்லைகளை ஆக்கிரமிக்கும் இஸ்ரேல்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

16.12.2024

(சிரியாவின் கடற்படை, இராணுவ தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளதுடன், கடந்த சில நாட்களில் நூற்றுக் கணக்கான சிரியாவின் கடற்படை, இராணுவ மையங்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

அதேவேளை அசாத்தின் ஆட்சியின் விரைவான வீழ்ச்சியானது ரஷ்யா மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தும் அதன் லட்சியங்களுக்கும் ஒரு பாரிய அடியை அளித்துள்ளது)

சிரியாவில் பஷீர் அல் அசாத் அரசாங்கம் கிளர்ச்சியாளர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தூக்கியெறியப்பட்டதிலிருந்து இரு முக்கிய விடயங்கள் மத்திய கிழக்கு அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன.



முதலாவது விடயம் சிரியாவில் இஸ்ரேலிய அரசால் ஆக்கிரமிக்கப்பட்ட கோலன் (Golan Heights) குன்றுகளுக்கு அப்பால் உள்ள இராணுவமற்ற பாதுகாப்பு வலயத்திற்கு (Buffer Zone) மீண்டும் தனது தரைப்படைகளை நகர்த்தி உள்ளது.

இரண்டாவது முக்கிய விடயம் சிரியா நாட்டில் ரஷ்யாவின் விமான மற்றும் கடற்படை தளங்களின் தலைவிதி கேள்விக் குறியாக உள்ளது.

ரஷ்யா தனது சிரிய தளங்களில் இருந்து பின்வாங்கிறது என்பதனை மாஸ்கோ அரசு மறுத்தாலும், தற்போது ரஷ்யாவின் கடற்படை, வான்படை வாபஸ் பெறப்பட்டுள்ளதாக சுயாதீன தகவல்கள் தெரிவிக்கின்றன.

### இஸ்ரேல் அழிக்கும் சிரிய ராணுவ வளம்:



இஸ்ரேலின் தாக்குதல் சிரியாவின் ஆட்சி மாற்றத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள குழப்பத்திற்கு மத்தியில் இஸ்ரேல் தொடர் தாக்குதலை நடத்தி வருகிறது.

சிரியாவில் உள்ள ஆயுதங்கள் கிளர்ச்சியாளர்களின் கைகளுக்கு செல்வதை தடுக்க, அங்கு தொடர் தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளதாகவும், இதில் சிரியாவின் ஆயுத கிடங்குகள் பலவும் அழிக்கப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கிளர்ச்சிப் படைகள் ஆட்சியை கைப்பற்றியுள்ள நிலையில், கிளர்ச்சியாளர்களின் கையில் இரசாயன ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகள் சென்று சேர்வதை தடுக்க இஸ்ரேல் முயற்சிப்பதாக தெரிவித்துள்ளது.

அல் கொய்தா போன்ற அமைப்புகளுடன் தொடர்புடைய கிளர்ச்சிப் படைகளின் வளர்ச்சியை தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் சிரியா முழுவதும் உள்ள ஏவுகணைகள் அனைத்தையும் அழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

சிரியா முழுவதும் உள்ள இலக்குகள் மீது அதன் போர் விமானங்கள் நானூறுக்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதல்களை நடத்தியதாகவும் இஸ்ரேலிய பாதுகாப்பு படை கூறியுள்ளது.

### ரஷ்ய இராணுவ தளங்களின் நிலை ?




அசாத்தின் ஆட்சியின் விரைவான கவிழ்ப்பு ரஷ்யாவிற்கும் மத்திய கிழக்கில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்தும் அதன் லட்சியங்களுக்கும் ஒரு பாரிய அடியை அளித்துள்ளது.

கிரெம்ளின் அரசின் நீண்ட கால கூட்டாளியான ஜனாதிபதி பஷர் அல்-அசாத் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், சிரிய பிரதேசத்தில் ரஷ்யாவின் விமான மற்றும் கடற்படை தளங்களின் தலைவிதி கேள்விக்குறியாக உள்ளது.

ரஷ்யா தனது சிரியாவின் தளங்களில் இருந்து பின்வாங்குகிறது என்பதனை மாஸ்கோ அரசு மறுத்துள்ளது.

சிரியாவில் ரஷ்யாவிற்கு இரண்டு இராணுவ தளங்கள் உள்ளன. மத்தியதரைக் கடலோரத்தில் உள்ள டார்டஸ் (Tartus) கடற்படை தளம் உள்ளது.

அத்துடன் லதாகியா துறைமுக நகரத்திற்கு அருகிலுள்ள க்மெய்மிம் (Khmeimim Air Base) விமான தளம் உள்ளது. அவை கிரெம்ளினின் மிகவும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இராணுவப் புறக்காவல் நிலையங்களாகக் கருதப்படுகின்றன.

ரஷ்யாவிற்கு மத்தியதரைக் கடலுக்கான ஒரே நேரடி அணுகல் மற்றும் கடற்படை பயிற்சிகள், போர்க் கப்பல்கள் மற்றும் அணு சக்தி நீர்மூழ்கிக் கப்பல்களை நடத்துவதற்கான தளம் ஆகியவற்றை வழங்குகிறது. இதனால் டார்டஸ் தளம் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

சிரிய கிளர்ச்சிப் போராளிகள் ஏற்கனவே இரண்டு தளங்களையும் அடிப்படையாகக் கொண்ட லதாகியா மாகாணத்தின் முழு கட்டுப்பாட்டையும் எடுத்துள்ளனர்.

கிரெம்ளின் செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவின் கூற்றுப்படி, இராணுவ தளங்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் திறன் கொண்டவர்களுடன் சிரியாவில் தொடர்பை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பதாக கூறுகிறது.

சிரியாவுடன் தற்போதய புதிய கிளர்ச்சியாளர்கள் அரசுடன் புதிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக மாஸ்கோ தளங்களின் தலைவிதியைப் பாதுகாத்துள்ளதாக ரஷ்ய அரசு ஊடகம் கூறியுள்ளது.

ரஷ்யாவின் ஹெமிமிம் மற்றும் டார்டஸ் தளங்களில் இருந்து தற்காலிகமாக விலகுவதாகக் கூறும் ரஷ்ய இராணுவ பதிவர்கள் உட்பட பல செய்திகள் வந்துள்ளன.

### சிரிய இராணுவ இலக்குகள் குறிவைப்பு:

சிரிய அரசாங்கம் கிளர்ச்சியாளர்களால் ஞாயிற்றுக்கிழமை தூக்கியெறியப்பட்டதிலிருந்து இஸ்ரேலிய பாதுகாப்பு படை பாரிய தாக்குதல்களை நடத்தியுள்ளதாக பிரித்தானியாவை தளமாகக் கொண்ட மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு கூறியது.

ஆயினும் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்ட ஒரு அறிக்கையில், இஸ்ரேல் அரசை அச்சுறுத்தும் மூலோபாய திறன்களை அழிப்பதை இஸ்ரேலிய படையினரின் நோக்கம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொடராக சிரியாவின் கடற்படை, இராணுவ தளங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து அந்நாட்டு இராணுவம் விட்டுச் சென்ற ஆயுதங்களை அழிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, கடந்த இரு நாட்களில் நூற்றுக்கணக்கான சிரியாவின் கடற்படை மற்றும் பிற இராணுவ சொத்துக்களை குறிவைத்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

### சிரிய கடற்படையை அழிக்க முயற்சி:

லதாகியா மற்றும் எல் பெய்டா விரிகுடாவின் துறைமுகப் பகுதியில் இஸ்ரேலிய ஏவுகணைக் கப்பல்கள் அசாத்தின் படைகளுக்குச் சொந்தமான கடற்படைக் கப்பல்களை அழித்தன. அவை பல நூறு மைல்கள் வரை தாக்கும் திறன் கொண்ட ஏவுகணைகளை கொண்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

இத்துடன் சிரிய கடற்படையை அழிக்கும் நடவடிக்கை பெரும் வெற்றி பெற்றதாகவும் இஸ்ரேலிய அரசு அவர் தெரிவித்துள்ளது. சிரிய தலைநகர் டமாஸ்கஸ், ஹோம்ஸ், டார்டஸ் மற்றும் பால்மைராவில் உள்ள விமானநிலையங்கள், இராணுவ வாகனங்கள், விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மற்றும் ஆயுத தயாரிப்பு தளங்கள் உட்பட - பரந்த அளவிலான இலக்குகள் தாக்கப்பட்டதாகவும் இஸ்ரேலிபய பாதுகாப்பு படை குறிப்பிட்டுள்ளது.

### சிரியாவை ஆக்கிரமிக்க முயற்சியா?




இஸ்ரேல் திடீரென பயங்கர தாக்குதல் நடத்தியதால், சிரியாவை கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளதாக தகவல் பரவியது. இதை மறுத்த இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள், சிரியா எல்லையில் உள்ள இஸ்ரேலின் பகுதியை கைப்பற்றத் தான் இராணுவம் நுழைந்தது. சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி இஸ்ரேல் டேங்க்குகள் செல்கின்றன, என்ற செய்தி தவறானவை என்றனர்.

அத்துடன் தெற்கு சிரியாவை இராணுவ பலம் அற்றதாக மாற்ற இந்த தாக்குதல் அவசியம். அசாத் ஆட்சியை பின்பற்ற முயற்சிக்கும் எந்த ஒரு படைக்கும் இதே கதிதான் ஏற்படும். சிரியா எல்லையில் ஹிஸ்புல்லா போன்ற அமைப்புகள் மீண்டும் தீவிரவாத தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்காக ஆயுத கிடங்குகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது என இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### ஐ. நா கடும் கண்டனம்:

சிரியா எல்லையில் ஆக்கிரமிப்பு பகுதிக்குள் இஸ்ரேல் நுழைந்ததற்கு எகிப்து, ஜோர்டன், துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. சிரியாவின் நிலையற்ற தன்மையை, தனது எல்லையை விரிவுபடுத்தும் நோக்கத்துக்கு இஸ்ரேல் பயன்படுத்தி கொள்வதாக அந்த நாடுகள் குற்றம்சாட்டியுள்ளன.

சிரியாவின் ஒரு பகுதிக்குள் இஸ்ரேல் ஊடுருவியது 1974-ம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறுவதாக உள்ளது என ஐ.நா சபை குற்றம் சாட்டியுள்ளது.









## REWARDING YOUR EVERYDAY

MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.

## Merchant Benefits

- Website Template: Modern design for improved user experience.
- Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
- Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
- Comprehensive Analytics: Access full reporting and tracking online.
- Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
- Financial Security: Build income for future sale or retirement.
- One-time Registration Fee: $199 to unlock these benefits.

And more...

## Member User Benefits

- Point Accumulation: Earn 4% to 60% on purchases.
- Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
- Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
- Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
- Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
- Networking Opportunities: Build your own shopping network effortlessly.
- Exclusive Privileges: Gain mining rights worth $60.

And more...

## Register Now




WWW.MYEVERYDAYSHOPPING.COM






# இருளிலிருந்து...

வீடு சத்தமில்லாம் ஊமையாக்கிடக்கு. அதுக்காக வீட்டில ஒருத்தரும் இல்லையாக்கமெண்டு நினைச்சிடப்படாது. அம்மாவை விட மற்ற எல்லாரும் வீட்டிலதான் இருக்கிறம். காலமம் வெள்ளாப்போடயே சயிக்கிளில வாழைச்சேனைக்குப் போன அம்மா பதினொரு மணியாகியும் இன்னும் வரல்ல. அதுதான் எல்லாற்ற முகத்திலயும் யோசினை. ஆனா அப்பா, பெரியண்ணாச்சி, தங்கச்சி எல்லாரும் வீட்டிலதான் இருக்கிறம்.

அப்ப பெரியண்ணாச்சியும் அப்பாவும் வேலைக்குப் போறேல்லையோ? இல்ல. போகேலா, போனா திரும்பி வரேல்லா. பாழாப்போன ஆமியோ, பொலிசோ, ஊர்காவற்படையோ கொண்டு போவானுகள். கொண்டுபோனாக் கொண்ட போனதுதான். எங்கையெண்டும், எப்பையெண்டுமில்ல. இருக்கோ இல்லையோவெண்டுமில்ல. வீட்டுக்காறர் ஒண்டு இரண்டு வருசத்துக்கு அழுதுபோட்டு பிறகு மனசுக்குள்ளேயே பூட்டி வைச்சுக் குமுறுறதவிட வேற ஒண்டுஞ் செய்யேலா.

அதுசாரி... தங்கச்சி ஏன் பள்ளிக்குடம் போறேல்ல? அதையேன் கதைப்பான்? பொம்பிளைப் பிள்ளையளை வெளியால விட்டிட்டு பிறகு அதுகளைக் காணேல்ல எண்டு தேடுறதவிட வீட்டிலேயே வைச்சிருக்கலாம். அப்ப, அண்ணாச்சியும் அப்பாவும் வேலைக்குப் போகாட்டி வீட்டுப்பாடுகள கவனிக்கிற ஆர்? அதெல்லாம் அம்மாதான். அதுக்குத்தான் அம்மா இப்ப சயிக்கிளில வெளிக்கிட்டிருக்கிறா. காலம வெள்ளாப்போட ராத்திரி உறைய வைச்ச தயிர வாழைச்சேனைப் பக்கத்தில கொண்டுபோய் வித்துப் போட்டு அங்கயிருந்து கடல்மீனை வாங்கி “ஐஸ்” போட்டு பிளாஸ்ரிக் வாளிக்குள்ள எடுத்துக் கொண்டந்து வீடு வீடா வித்துத்தான் அம்மா வீட்டுப் பாட்டைக் கவனிக்கிறா...

எங்கட ஊர் தென் தமிழீழத்தில இருக்கிற எல்லைக் கிராமங்களில் ஒண்ட. முல்லை, மருதம் எண்டு சொல்லிற நிலங்கள்தான் எங்கட ஊர். ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறு ஓடுது. அதோட குளமும் இருக்கு. இந்தப் பிரச்சினைக்கு முந்தி ஊர், தாயைக் கண்டாச் சிரிக்கிற சின்னப்பிள்ளையள் போல சந்தோசமாத்தான் இருந்திச்சு. வயல் செய்யிறதும், காட்டில பிரம்பு வெட்டுறதும் ஆத்திலயும் குளத்திலயும் மீன் பிடிக்கிறதும் பட்டிமாடடைக்கிறதும் தான் ஊராக்களின்ர தொழில்.

வீட்டு ஆம்பிளையள் எல்லாரும் இந்த நாளில் ஏதாவது ஒரு தொழிலைச் செய்வினம். இதால வீட்டுக்கு வருவாய் எப்பவுமே பிரச்சினையா இருக்கேல்லை. எங்கட ஊருக்கு இயற்கை தந்த கொடை அது. தொழில் செய்ய ஒரு முலுமில்லையெண்டாலும் பிரச்சினையில்லை; ஒரு சின்னக் கத்தியோட பிரம்பு வெட்டுறாக்ளோட பிரப்பங்காட்டுக்குப் போனா, வரேக்க ஒரு பெரிய கட்டுப் பிரம்போட வரலாம். கூடை, கதிரை பின்னிற ஆக்களுக்கு அதை வித்தா கையில காசு, வீட்டுச் சீவியம் தளம்பலில்லாமல் போகும்.

மாடும் கண்டும் எங்கட ஊரின்ர கண்மாதிரி. பட்டிக்காறர் காட்டு ஓரத்தில “காலை”யில் மாடுகளை அடைச்சிருப்பினம். வெள்ளாப்போடயே போய் பால் கறந்து போட்டு மாடுகளைச் சாய்ச்சுக் கொண்ட போய் மேயிறதுக்கு விடுவினம். பாலைப் பாற்சாலையில குடுக்கிற. மாதம் முடியக்காசு. பின்னேரம் மாடுகளைச் சாய்ச்சுக் கொணண்டு வந்து “காலை”யில அடைச்சுப்போட்டு வீட்ட வந்தா நிம்மதியான சீவியம். இந்த நாம்பன் கண்டுகள் ஒரு கணக்கான பருவம் வந்தோடன காட்டில போயிடுங்கள். இதால அதுகளை கணக்கான வயது வரேக்க ஒண்டில் விப்பினம். அல்லாட்டி கரத்தை மாட்டுக்கு பழக்குவினம்.

ஆத்தங்கரையில் வேற ஊராக்கள் வந்து வாடி போட்டுத் தங்கிப் பொயிலை செய்யிறவை. இங்கத்தைப் பொயில சுறுட்டுக்கு வலுதிறமானதாம். அதால யாழ்ப்பாணத்துச் சுறுட்டு முதலாளிமார் இங்கை வந்து பொயிலை வாங்க வருவினம். ஊரில் வயல் செய்தாப்பொன் விளையும். ஆத்தங்கரையில இருந்து பாத்தால் கண்பார்வைக்கு ஏலாத தூரம் வரைக்கும் வயல் வெளிதான். வருசத்தில ரெண்டு போகமும் சும்மா பச்சைப்பாய் கணக்கா வயல்வெளி பச்சைப் பசேலெண்டு இருக்கும். வயல் வெட்டி சூடடிச்சு நெல்லை ஏத்திக்கொண்டு வந்து வீடு நிறைய அடுக்கி வைச்சநெல்லை வித்தா கையில ஆறு இலக்கத்தில காசு வரும். நெல்லுவித்தாப் பிறகு வயல்காறர் வீட்டுக்காறரோட ரவுணுக்குப் போனா கரத்தை பிடிச்சுதான் சாமான் ஏத்திக்கொண:டு வருவினம். பிறகு ஊர்க்கோணிலுகளில் திருவிழா, தீப்பிழம்பு, கொம்பு விளையாட்டு எண்டு ஒரே கொண்டாட்டந்தான்.

முந்தியே சொன்னான்தானே ஊரின்ர ரெண்டு பக்கமும் ஆறும் குளமும் இருக்கெண்டு. ஊராக்கள் அதில மீன் பிடிக்கிறவை. குளத்தில் விரால், யப்பான், சுங்கன் மீனுகள் பிடிபடும். ஆத்தில பெரிய பெரிய செப்பலி மீன் பிடிக்கலாம். தூண்டில் போட்டும் சின்னச்சின்ன தோணியில் போயும் மீன் பிடிப்பினம். உந்த மீனை ஊர்கடைத் தெருவில வித்துப்போட்டுப் போனா குடம்பப் பாட்டக் கவனிக்கலாம். சிலபேர் மீன் பிடிக்கிறதோட பட்டி மாடும் அடைப்பினம். இல்லாட்டி மீன்பிடிக்கிறதோட பிரம்பும் வெட்டுவினம். மீன்பிடிக்கப் போற ஆக்களிட்டச் சொல்லிக் காரையில நிக்கிற சின்னதுகள் தாமரைப்பூப் புடுங்குவிக்குங்கள். நீந்தத் தெரிஞ்சவை கொடிவிலத்திப் போய்ப் பூவும் தாமரை இலையும் புடுங்கி வருவினம். ஊர்க்கோயிலில தாமரைப் பூவாலதான் பூசை யாக்குவார் பூசாரியார். தாமரை இலையிலதான் கடையிலயும், சபையளிலயும் சாப்பிடுறது.

இத்தனை தொழில் இருந்தும் ஏன் ஊர் ஆம்பிள்ளையள் தொழிலுக்குப் போறல்ல? ஏன் வீட்டோட இருக்கினம்? ம்... அதையேன் கேட்பான்? இந்தப் பிரச்சினை தொடங்கின பிறகு அவனுகள் எங்களைப் படுத்துற பாடு கொஞ்சமோ? ஊருக்கு நடுவில பொலிஸ் ஸ்ரேசனைக் கொண்டந்திற்றாங்கள். ஒரே குறுக்காலயும் மறுக்காலயும் நடந்து திரிவாங்கள். றோட்டு நீட்டுக்கும் அவனுகளின்ர ஜீப் ஓடித்திரியும். இரவாகிற்றெண்டா துண்டா வெளிக்கிட் ஏலா. வீட்டோட இருந்தாப்போல விடுறாங்களே? இருந்தாப்போல வந்தானுகளெண்டா கண்ணில காணுற ஆக்களையெல்லாம் அள்ளிக்கொண்டு போயிடுறானுகள். எங்களைக் கடவுள்தான் காப்பத்தவேணும்.

இப்ப பட்டிக்காறர் பாடு பெரிய கஸ்ரம். மாடுகளைக் காட்டுப் பக்கம் தானே மேய்ச்சலுக்குச் சாய்ச்சுக் கொண்டு போற. சில நேரத்தில மாடுகள் காட்டுக்கையும் போகுந்தானே! அந்த

மாடுகளைப் பிடிக்கக் காட்டுக்கப் போனா, காட்டுக்கை ஒளிச்சிருக்ற பொடியனுகளோட கதைச்சிற்று வாறமெண்டு சந்தேகத்தில "கொட்டியா சப்போட்" எண்டு சொல்லி இழுத்திற்றுப் போனானுகளெண்டா பிறகு, ஆளே இல்ல. இப்படி எத்தனை பொடியனுகளைக் கொண்டு போயிற்றானுகள். முந்தி எவ்வளவு பெடியனுகள் நின்டு வேலைசெய்வானுகள். இப்ப பெடியனுகளைக் கண்ணிலயும் காண ஏலா. கொம்பு இழுக்கிற தெண்டா முந்தி எவ்வளவு பொடியனுகள். இப்ப கொம்புழுக்க ஆக்களும் இல்லை, கொம்பு விளையாட்டும் இல்ல. ஊரில இருக்கிற பொடியளுகளை எண்ணிப் போடலாம். அவ்வளவு ஆக்கள் தான் மிஞ்சியிருகினம். ம்...

பிரம்பு வெட்டுற, மீன்பிடிக்கப் போற ஆக்களின்ரயும் இந்தக் கதைதான். அதுகள் ஆத்துக்கு, குளத்துக்கு பிரப்பங்காட்டுக்கு போனா, அங்கநிற்கிற பெடியனுகளுக்கு சாமான் கொண்டு போய்க் குடுக்கிறதெண்டு சொல்லிப் பிடிச்சிற்றுப் போயிடுவானுகள். அதால மீன்பிடியுங் குறைவு. எந்த நேரம் எந்த இடத்தில் ஒழிஞ்சிருந்து சுடுவான்கள், இல்லாட்டி பிடிப்பானுகள் எண்டு தெரியா. எப்பிடியும் ஒவ்வொருநாளும் ஆராவது அவனுகளிட்ட மாட்டுப்படுவினம். அதால மீன்பிடியும் சரியாகக் குறைஞ்சு போயிற்று.

வயல் செய்யிறது அடியோட இல்ல. எங்கட வயலுகளில சிங்கள வரைக் குடியேத்திப் போட்டாங்கள். ஒரே சிங்கள மயம். மிச்ச வயலையாவது செய்வமெண்டா அவனுகளிட அட்டகாசம்... வயல் செய்தா ஆமியும் ஊர்காவற்படையும் வந்து வயலையும் எரிச்சு ஊராக்களையும் சுட்டு அநியாயமாக்கிப் போடுவானுகள். இப்படி எத்தின தரம் நடந்திருக்கு. இப்ப என்னடாண்டா நாங்கள் வயல் வெட்டி சூடடிச்சா அப்பேக்க வந்து எங்களைச் சுட்டுக் கலைச்சுப் போட்டு எங்கட நெல்லை அவனுகள் அள்ளிக் கொண்டு போயிர்றானுகள். வீடு நிறைய நெல்லிருந்த காலம் போய் இப்ப சோத்துக்கு அரிசி வாங்கிற நிலமை வந்திற்று.

★★★

அந்தா அம்மா வாறா... மனிசி செரியா மாஞ்சு போயிற்று. வெள்ளாப்போடயே எழுப்பி முப்பது கட்டை சயிக்கிள் மிதிச்சு பிறகு வீடு வீடா மீன் வித்து வாற தெண்டா... அம்மா பதினொண்டு, பன்னிரெண்டு மணிக்குத்தான் மீன் கொண்டு வாறதால ஊராக்கள் வாங்கிறதும் குறைவு. அதோட அதுகளிட்டயும் மீன் வாங்கக் காசிமில்ல. தொழில் செஞ்சாத்தானே காசி. இப்ப ஊர் தொழிலில்லாம சோந்து வாடிப்போய்க் கிடக்கு. அதால அம்மாவுக்கு மீன் விக்கிறதும் பெரியபாடுதான். எண்டாலும் என்னத்தச் செய்யிற. எல்லாம் எங்கட தலையெழுத்தெண்டு தாங்கிற தான்... முந்தியெண்டா சில நேரத்திலதான் ஊருக்கு கடல் மீன் வரும். மீன் வந்துகொண்டா வந்து அரைமணித்தியாலத்துக்குள்ள முடிஞ்சிடும். கொஞ்சம் பிந்தினா மீன் கிடைக்காது. ஆனா இப்ப வீட்ட கொண்டந்து குடுத்தாலும் வாங்கிறதுக்கு சனத்திற்ற காசில்ல.





எங்கட வீடு றோட்டு ஓரத்தோட இருக்கு. எங்கட வீட்டுக்கு வலது பக்கத்திலதான் பொலிஸ் ஸ்ரேசன். இடது, கொலனிக்குப் போற பாதை. அதில அவனுகளிட சென்றி. சென்றிக்கும் ஸ்ரேசனுக்குமிடையில ஒரே நடந்தும் ஜீப்பிலயும் திரிவானுகள். இரவெண்டா ஒரே அவனிகளிட சத்தந்தான். நாயும் விடாம குலைக்க, கடவுளே... பகலிலயெண்டா வளவுக்கையும் வருவானுகள்... வெரிய பயங்கரம்.

அம்மா கொண்டு வந்த காசிக்கு சாமான் வாங்கி சமைச்சு சாப்பிடக்குள்ள பின்னேரமாகிப் பொழுதும் மங்கிற்று. இனி ஒருத்தரும் வெளியில வெளிக்கிட ஏலா. பக்கத்தில வீட்ட கூடப் போகேலா. வீட்டுக்குள்ளேயே இருக்கிறதுதான். எல்லாரும் நேரத்தோடயே படுத்திருவம். படுத்தாலும் உடன நித்திரைக்குப் போக ஏலா. ஒரே அவனுகளின்ர சப்பாத்துச் சத்தம் கேக்கும். வீடு றோட்டுக்குப் பக்கத்தில இருக்கிறதால எங்கட நெஞ்சில நடக்கிறமாதிரி பயங்கரமாக கேக்கும். நான் காதுக்குள்ள பஞ்சு வைச்சுக்கொண்டு தான் படுக்கிற. இல்லாட்டி நித்திரை கொள்ள ஏலா.


எனக்கு வெளியில போகவேணும் போல இருக்கு. ஆனா வெளியில ஒரே இருட்டாயிருக்கு. அதோட அவனுகள் நிண்டாலும் நிப்பானுகள். வெளியில போகப் பயமாயிருக்கு. அதால பேசாமப் படுத்திற்றன். இருட்டு விடியத்தானே வேணும்.

- பு. சத்தியமூர்த்தி



உலக வணிகம் ULAGA VANIKAM

# 2025



# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY



## உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல
அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள்
செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு
நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை
பெருகச் செய்யும். அது உங்கள் வணிக
முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது
உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

**தொடர்புகளுக்கு 437.345.4203**

# தமிழரசுக் கட்சிக்கு 75 வயது

25.12.2024

கடந்த புதன்கிழமை தமிழரசுக் கட்சி அதன் 75 ஆவது ஆண்டை நிறைவு செய்தது. கடந்த புதன்கிழமை அதை விமரிசையாகக் கொண்டாட முடியவில்லை என்று அதன் தொண்டர்கள் சிலர் கவலைப்பட்டுக் கொண்டார்கள். ஏன் கொண்டாட முடியவில்லை? 75 ஆண்டுகள் எனப்படுவது ஒரு மனிதனின் முழு அயுளுக்குக் கிட்டவரும். இந்த 75ஆண்டு காலப்பகுதிக்குள் தமிழரசுக் கட்சி சாதித்தவை எவை? சாதிக்காதவை எவை ?

இப்பொழுதுள்ள தமிழ்த்தேசியக் கட்சிகளில் பெரிய கட்சி அது. நாடாளுமன்றத்தில் அதிக ஆசனங்களை வென்றிருக்கும் கட்சியும் அது. ஒரு விதத்தில் தாங்களே தலைமை சக்தி என்ற பொருள்பட சுமந்திரன் கூறிக்கொள்வார். கடந்த 15 ஆண்டுகளாக தமிழ்மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் முடிவுகளை எடுக்கும் பொறுப்பில் இருந்த ஒரு கட்சி எப்படிப்பட்ட முடிவுகளை எடுத்தது? அந்த முடிவுகளின் விளைவாக தமிழ் மக்களுக்கு கிடைத்தவை எவை? கிடைக்காதவை எவை?



இந்தக் கேள்விக்கு ஒரு குறியீட்டுப் பதிலைச் சொல்லலாம். தந்தை செல்வாவின் நினைவுத் தூபி அமைந்திருக்கும் வளாகத்தைச் சுற்றிப்பார்த்தால் கட்சியின் நிலையை, கட்சியால் வழி நடத்தப்பட்ட அரசியலின் நிலையை அது குறியீடாக வெளிப்படுத்தும். அந்த சிலையைச் சுற்றியிருக்கும் வளாகம் தொடர்ச்சியாக பராமரிக்கப்படுவதில்லை. பெரும்பாலான காலம் அதைச் சுற்றி பற்றைகள் புல், பூண்டுகள் மண்டிக் கிடக்கும். அந்த சிலைக்கு ஏறிப்போகும் உலோகப் படிக்கட்டு துருப்பிடித்துக் கிடக்கிறது. அந்த வளாகத்தின் வாசலில் உள்ள கேற், அதன் பூட்டு எல்லாமே துருப்பிடித்துள்ளன. அவ்வப்போது அந்தச் சிலைக்கு மரியாதை செலுத்தச் செல்லும் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் அதைக் குறித்த எந்த விவஸ்த்தையுமின்றி அந்தப் பற்றைகளின் பின்னணியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வருகிறார்கள். அந்த வளாகத்தைச் சுத்தமாக அழகாகப் பேண வேண்டும் என்று ஏன் யாருக்கும் தோன்றவில்லை? கட்சியின் ஸ்தாபகரின் சிலை, அவரை தந்தை என்று அழைக்கிறோம். ஆனால் அந்த சிலையை ஒரு நினைவிடமாக அதற்குரிய மதிப்போடு பேண ஏன் கட்சியால் முடியவில்லை?

இது ஒரு குறியீடு. கட்சியின் தற்போதைய நிலையைக் காட்ட இது உதவும். தமிழரசு கட்சி தூர்ந்து போய்க் கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தில் நிற்கின்றது. கட்சியின் தலைவர் யார் என்பதில் தடுமாற்றம். கடந்த 18ஆம் திகதி வவுனியாவில் நடந்த மத்திய செயற்குழு கூட்டம் கட்சி எந்தளவுக்குச் சிதைந்து கொண்டிருக்கிறது என்பதனைக் காட்டியது.

கட்சிக்குள் ஒன்றை மற்றது பிடித்துத்தின்னும் பகைக் குழுக்கள் தோன்றி விட்டன. இந்த குழுக்களுக்கு இடையிலான பகையானது கட்சியின் வெளி எதிரிகளுடன் உள்ள பகையைவிடவும் மூர்க்கமானதாகவும் பழிவாங்கும் உணர்ச்சி மிக்கதாகவும் காணப்படுகின்றது. கடந்த ஆண்டு தமிழரசுக் கட்சியின் 75 ஆண்டுகளில் மிகத் தோல்விகரமான ஆண்டுகளில் ஒன்று. கட்சிக்காரர்களே கட்சியை நீதிமன்றத்தில் நிறுத்திய ஆண்டு.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரே சுவரொட்டியில் ஒன்றாகத் தோன்றிய கட்சி முக்கியஸ்தர்கள் உள்ளூரில் பிரச்சாரம் செய்யும்பொழுது ஒருவர் மற்றவருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார்கள். ஒருவர் மற்றவருக்கு வாக்களிக்க வேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக் கொண்டார்கள். உட்பகை கட்சியை படிப்படியாகத் தின்று கொண்டிருக்கிறது. கட்சி ஒரு கட்டுக்கோப்பான உருகிப்பிணைந்த கட்டமைப்பாக இல்லை. அங்கே கூட்டுணர்வு இல்லை.

ஆனால் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்குத்தான் அதிக ஆசனங்கள் கிடைத்தன. அதனைக் கட்சி ஒரு பெருமையாகக் கருதுகின்றது. ஆனால் துயரம் என்னவென்றால், கட்சிக்கு கிடைத்த அதேயளவு ஆசனங்கள் அரசாங்கத்திற்கும் கிடைத்திருக்கின்றன என்பதுதான். அரசாங்கத்தின் துணை வெளிவிவகார அமைச்சரும் திருகோணமலைத் தமிழருமாகிய அருண் ஹெமச்சந்திர அண்மையில் ஒர் ஊடக நேர்காணலில் கேட்கிறார் "தமிழ் தரப்பு என்பது இப்பொழுது யார்" என்ற பொருள்பட. ஏனென்றால் அரசாங்கத்திடம் 28 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்டு. தமிழர் தாயகத்தில் மொத்தம் எட்டுப் பேர். இவர்கள் அனைவரும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள் மொத்தம்10 பேர்தான். அர்ஜுனா எந்தப் பக்கம் நிற்பார் என்று தீர்மானமாகக் கூறமுடியாது. எனவே மொத்தத் தமிழ் தேசிய பிரதிநிதித்துவம் பத்தாகச் சுருங்கியுள்ளது. அதனால்தான் அருண் ஹேமச்சந்திர கேட்கிறார், எது தமிழ் தரப்பு என்று. அதாவது தமிழ்த் தேசியத் தரப்பு மட்டும் இப்பொழுது தமிழ்த் தரப்பு அல்ல என்ற பொருளில்.



தமிழரசியலுக்கு குறிப்பாக, தமிழ்த் தேசிய அரசியலுக்குத் தலைமை தாங்கும் ஒரு கட்சி என்று பெருமை பாராட்டிக்கொள்ளும் ஒரு கட்சியானது இதற்குப் பதில்சொல்ல வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 ஆசனங்களை கொண்டிருந்தது. அது இப்பொழுது பத்தாகச் சுருங்கிவிட்டது. இது தோல்வி. ஆனால் கட்சிக்காரர்கள் கடந்த தேர்தலில் கிடைத்த அற்ப வெற்றியைக் கொண்டாடுவதாகத் தெரிகிறது. ஒட்டு மொத்த தமிழ்த்தேசிய ஆசனங்கள் குறைந்திருக்கின்றன. நாடாளுமன்றத்தில் ஒரு தேசமாக தமிழ்மக்கள் மேலும் மெலிந்திருக்கிறார்கள்.

கடந்த மாதத்தின் நடுப்பகுதி வரையிலும் முழு நாட்டிலிருந்தும் வெளியேறியவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்தை விட அதிகம். இதில் எத்தனை பேர் தமிழர்கள்? அவர்கள் வெளியேறுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால் அது தமிழ்த் தேசியவாத அரசியலின் தோல்விகளில் ஒன்று. வாக்காளர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். தன்னைத் தலைமை தாங்கும் சக்தியாகக் கருதும் தமிழரசுக் கட்சி இவை எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலை; தேசத்தைத் திரட்டும் அரசியலை ஏன் முன்னெடுக்கவில்லை?

மாறாக, கட்சிக்காரர்களே ஒருவர் மற்றவருக்கு எதிராக கட்சியை நீதிமன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தும் ஒரு நிலைமை ஏன் தோன்றியது? மூத்த உறுப்பினராகிய சிவஞானத்தை, இளம் நாடாளுமன்ற உறுப்பினராகிய அர்ஜுனா "நீங்கள் யார்?" என்று கேட்கும் ஒரு நிலைமை தமிழரசியலில் ஏன் தோன்றியது?

இந்த தோல்விகள் அனைத்துக்கும் முழுப்பொறுப்பு முதலாவதாக சம்பந்தர். இரண்டாவதாக சுமந்திரன். மூன்றாவதாக மாவை. நாலாவதாக, இவர்கள் அனைவருடைய செயல்களையும் ஆதரித்த அல்லது தங்களுக்குள் புறுபுறுத்துக் கொண்டு எதிர்க்காமலிருந்த எல்லா மூத்த உறுப்பினர்களும் பொறுப்பு. சிறீதரனும் பொறுப்பு. இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சித் தொண்டர்கள் சிறீதரனின் கையில் கொடுத்த பொறுப்பை அவர் சரியாகக் கையாளவில்லை. அவர் எதற்கோ தயங்குகிறார்.

இதுதான் 75 ஆவது ஆண்டு முடிவில் கட்சியின் நிலை. கட்சிக்குள் உறுதியான தலைமைத்துவம் இல்லை. கட்சி இரண்டாகி நிற்கிறது. வாக்காளர்களின் இன உணர்வுக்கு நெருக்கமாக ஒரு பகுதி. கொழும்பை நோக்கிச் சாயும் இன்னொரு பகுதி. தமிழரசு கட்சிக்குள் காலாகாலமாக இந்த இரண்டு போக்குகளும் இருந்தன. ஒரு போக்கு வாக்காளர்களுக்கு நெருக்கமாக இருப்பது. இன்னொன்று கொழும்பை நோக்கிச் சாய்வது. இந்த இரண்டு போக்குகளினதும் கலவைதான் தமிழரசுக் கட்சி.

யாழ்.பல்கலைக்கழகத்தின் மெய்யியல் துறையின் தலைவராக இருந்த கலாநிதி ராமகிருஷ்ணன் சொல்வாராம் "ஒரு பனங்காட்டானைத் தலைவனாகத் தெரிந்தால் அவர் வாக்காளர்களின் சொற் கேட்பார்" என்று. அமிர்தலிங்கம் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோது, அவர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் பனங்காட்டான் என்று கருதியது யாழ்ப்பாணத்தவர்களை மட்டுமல்ல. தன் வாக்காளர்கள் மத்தியில் வீடு வாசல், சொத்துக்களைக் கொண்டிருக்கும் மக்கள் பிரதிநிதியைத்தான். கொழும்புமையத் தமிழ்த் தலைமைகளுக்கு எதிராகவே அவர் அவ்வாறு கூறுவாராம்.

இந்த இரண்டு போக்குகளும் ஒன்று மற்றதை இட்டுநிரப்பி கட்சியின் தலைமைப் பீடத்தை நிர்வாகித்து வந்தன. ஆனால் கடந்த 15 ஆண்டுகளில் இந்த இரண்டு போக்குகளுக்கும் இடையிலான மோதல் கட்சியை உருக்குலைத்து விட்டது. இது ரெண்டாயிரத்தி ஒன்பதுக்குப் பின்னரான தமிழ் கூட்டு உளவியலின் விளைவு.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்குள் நடந்த தேர்தலில் சுமந்திரன் கட்சிக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டார். அந்த தோல்வியை அவர் நாகரீகமாக ஏற்றுக்கொண்டது போல வெளியில் காட்டிக்கொண்டார். ஆனால் அவர் அந்தத் தோல்வியை தாங்கிக் கொள்ளவில்லை என்பதைத்தான் பின்வந்த நடவடிக்கைகள் நிரூபித்தன. ஆண்டின் தொடக்கத்தில் கட்சிக்காரர்கள் அவரை தோற்கடித்தார்கள்; ஆண்டின் முடிவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் அவரைத் தோற்கடித்தார்கள். கட்சிக்குள் தலைமைப் போட்டியை அவர் கையாண்ட விதத்தை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்ல என்பதை அந்தத் தீர்ப்புக் காட்டியதா?

ஆனால் இரண்டு தோல்விகளையும் அவர் ஜீரணித்துக் கொண்டதாகத் தெரியவில்லை. அவற்றிலிருந்து அவர் கற்றுக்கொண்டதாகவும் தெரியவில்லை. ஏனென்றால் கடந்த 18ஆம் திகதி வவுனியாவில் நடந்த கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் அதைத்தான் உணர்த்துகின்றது. அதாவது கட்சி தொடர்ந்தும் நீதிமன்றத்தில் நிற்கப்போகிறது என்று தெரிகிறது. மருத்துவர் சிவமோகனும் புதிதாக ஒரு வழக்கைப் போட்டிருக்கிறார்.

எனவே கடந்த 75 ஆண்டுகளையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால் தமிழரசுக் கட்சி ஒரு வெற்றி பெறாத கட்சிதான். அது கட்சியாகவும் தோற்றுவிட்டது. தமிழ் மக்களையும் தோற்கடித்து விட்டது. சம்பந்தர் இறக்கும்பொழுது தோல்வியுற்ற தலைவராகவே இறந்தார். யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலையரங்கில் அவருடைய பூதவுடலுக்கு கிடைத்த இறுதி மரியாதை அதற்குச் சான்று. ஆனால் அதிலிருந்தும்கூட கட்சியின் மூத்த தலைவர்கள் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை.

கடந்த 15 ஆண்டுகாலம் என்பது தமிழரசுக் கட்சி மட்டுமல்ல பெரும்பாலான தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் இறந்த காலத்தில் இருந்து கற்றுக்கொள்ளாத ஒரு காலம்தான். அவர்கள் தங்கள் கட்சிகளையும் தோற்கடித்திருக்கிறார்கள் தமிழ் மக்களையும் தோற்கடித்து விட்டார்கள். தேசத்தைத் திரட்டா விட்டால் கட்சிகளையும் திரட்டமுடியாது என்பதனை நடந்து முடிந்த தேர்தல் நிரூபித்திருக்கிறது.



இப்படிப்பட்டதோர் தோல்விகரமான அரசியல் பின்னணியில், தமிழரசுக் கட்சியின் 75ஆவது ஆண்டு நிறைவு என்பது அது தன் இறுதி இலட்சியமாகிய சமஸ்டியை வெல்லத்தவறிய மற்றொரு ஆண்டுதான். அதாவது, சமஸ்ரியை அடையாத 75ஆவது ஆண்டு. கட்சி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் ஓராண்டு. தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் மேலும் சுருங்கிப் போயிருக்கும் ஓராண்டு. நிச்சயமாக அது கொண்டாடப்படத்தக்க பவள விழா ஆண்டு அல்ல.

நன்றி: நிலாந்தன்

# யாழ்ப்பாண உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இனக்கொலைகளின் 51ஆம் ஆண்டு நினைவு


விழாக் கோலத்தில் யாழ் நகர் 1974 தை

யாழ்ப்பாண நன்னகர் விழாக்கோலம் பூண்டிருந்தது. 4வது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிப் பேச்சைக் கேட்க மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது. "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று தமிழகத்தின் பேராசிரியர் நைனா முகம்மது - தமிழ் மக்கள் மேல் சிறீலங்காப் பொலிசார் நடக்கத் தொடங்கினர். திரண்டிருந்த மக்கள் வெள்ளம் அங்கு என்ன நிகழ்கின்றது என திரும்பிப் பார்ப்பதற்கிடையில் துப்பாக்கி வேட்டுக்களின் தீர்வுச் சத்தம் மக்களை கிலிகொண்டு ஓட வைத்தது. பதறி ஓடும் மக்களை துப்பாக்கி அடிப்பாகத்தால் துரத்தித் துரத்தி அடித்தனர் சிங்களப் பொலிசார். எங்கும் தமிழ் ரத்தம் ஆறாகப் பீரிட்டு பாய்ந்தது.


10.01.1974

தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

சி. மந்தகுமார் | வே. கேசவராசன் | ப. சரவணபவன்

இ. சிவானந்தம் | வ. யோகநாதன் | இ. தேவரட்னம்

பி. சிக்மாறிலிங்கம் | சி. ஆறுமுகம் | சி. பொன்னுத்துரை

இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, சிங்கள அரசின் காவற் படையினரின் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான ஒன்பது தமிழர்கள்.

ஓடிய பெண்களின் ஆடைகளைப் பிடித்திழுத்து அவர்களை நிர்வானமாக்கி தமிழ்த் தாய்க்குலத்தையே அவமானப்படுத்தி மகிழ்ந்தனர் சிறீலங்காப் பொலிஸ் படையினர். எங்கும் கூக்குரல் எங்கும் உதவிக்குரல்கள். இவற்றுக்கு நடுவே சிங்களச் சிப்பாய்களின் சின்னத்தனமான துப்பாக்கி வேட்டுக்குப் பலியாகி 09 தமிழ் உயிர்கள் மண்மீது உயிரற்று வீழ்ந்து கிடந்தனர். 11.01.1974 இல் சிறீலங்காவின் இன அழிப்பு வெறிக்கு இந்த 09 பேரும் பலியாகினர். இதற்கு முதல்நாள் சிறீலங்கா கலாச்சார ஊர் வலத்துக்கு அனுமதி மறுத்து உரிய பாதுகாப்பு ஏற்பாடகளைச் செய்து கொடுக்காது யாழ்ப்பாண மாநகரசவையைத் தடுத்ததினால் கலாச்சார ஊர்தி மின்சாரக் கம்பத்தில் முட்டி இரு தமிழ் உயிர்கள் துடி துடித்துச் செத்தன. ஆக மொத்தமாக 1972இல் தமிழர்களது தாயக உரிமையை பறித்து சிங்கள பௌத்த குடியரசை அவர்கள் மேல் சட்ட விரோதமாகத் திணித்த

***சிறீமாவோ பண்டாரநாயக்கா நடத்திய இனப்படுகொலைகள் தமிழ் மக்களை ஆயுத எதிர்ப்புக்குத் தள்ளியது.***

***தமிழரின் தாயக உரிமையை 1972-ல் பறித்த சிறீலங்கா 1947-ல் கலாச்சார உரிமையை மறுத்தது.***

***சிங்கள அரசாங்கங்களின் தமிழன் அழிப்பு என்பது யுத்தத்தினால் தோன்றிய எதிர்விளைவுகளல்ல.***

சிறீலங்கா 1974இல் தமிழர்களின் நில உரிமை (சிங்கள குடியேற்றங்கள்), மொழி உரிமை (சிங்களம் மட்டும் சட்டம்), தொழில் செய்யும் உரிமை (சிங்களம் படிக்கும்படி வற்புறுத்தல்), கல்வி உரிமை (1970ஆம் ஆண்டின் தரப்படுத்தல் பல்கலைக்கழக அனுமதி மறுப்புச் சட்டங்கள்), அரசியல் ஜனநாயக உரிமைகள் (1972-ன் குடியரசு அறிவிப்பு) எல்லாவற்றையுமே பறித்த சிறீலங்கா 1974இல் அவர்களது கலாச்சார உரிமைகளையும் மறுத்து கல்வி நோக்கில் மேற்கொள்ளப்பட்ட உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இனப்படுகொலைக் களமாக்கியது. இந்த 1974 தை 11ஆம் திகதிய இனப்படுகொலைகள், 1972 முதல் தமிழீழ தேசத்தை மீளமைக்க வேகமுடன் செயற்பட்டு வந்த தமிழ் இளைய சமூதாயத்திடை ஆயுத எதிர்ப்பின் தேவையை மேலும் வலுப்படுத்தியது. சிறீமாவோ பண்டாரநாயக்கா சிங்கள பௌத்த குடியரசை தமிழ் மக்கள் மேல் சட்ட விரோதமாக திணித்த நாள் முதல் சிறீலங்காப் பொலிசார் இராணுவத்தினர் போல் தமிழர் தாயகத்தில் செயற்பட்டனர். காரணமற்ற கைதுகள் விசாரணையற்ற படுகொலைகள் என்பன சிங்கள பொலிசாரின் சாதாரண செயற்திட்டங்களாக்கப்பட்டன. இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி தமிழரின் அரசியற் பணிவைப் பெறுதல் அரசியல் விழிப்புணர்ச்சி உற்றவர்களை கொன்று அழித்தல் அல்லது சிறைப்படுத்தி சித்திரவதை செய்து செயலற்றவர்களாக்குதல் எனும் இரு நோக்கமாக சிறீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சி பொலிசாரை இராணுவத் தினராக இயக்க வைத்து தமிழ் மக்களை வாட்டி வதைத்தது. இதனாலேயே 1972 முதல் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தமிழர்கள் உயிர்வாழலாம் என்ற தன்மை தமிழ் மக்களிடை வசப்பெற்றது. இந்த தேவையின் அவசியத்தை வலியுறுத்தும் வரலாற்றுச் சம்பவமாக 1974 தை 11ஆம் திகதிய உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டு இனப்படுகொலைகள் அமைந்தன.


ஊர்வலத்தில் இறந்த இருவரின் உடல்



தமிழீழத் தேசத்தை மீளமைப்பதன் மூலமே மக்கள் பாதுகாப்பான அமைதியை பெறலாம் என்ற உண்மையை உணர்த்தி தமிழீழ மக்களை "மக்கள்" என்ற தனித்தன்மையை உணர வைத்து "தேசிய இனம்" என்ற உணர்வுடன் "தமிழீழத் தேசிய விடுதலைப்போராட்டத்தை" முன்னெடுத்த வரலாற்றுச் சம்பவமாக இயங்கும் 1974 தை 11 யாழ்ப்பாண உலகத்தமிழாராய்ச்சி மாநட்டு படுகொலை நடந்து முடிந்து 51 ஆண்டுகள் முடிகின்றன. ஆனாலும் இன்னும் சிறீலங்கா அதே இன அழிப்பு வெறியுடன் அதே ஆயுதப் படை கொண்டு தமிழரை இன அழிப்பு செய்யும் அரசியற் செயற்திட்டத்துடன் தொடர்ந்து செயல்படுகிறது.

இந்நிலையில் இந்த உண்மைகளை உலகுக்கு எடுத்துரைத்து யுத்தத்தினால் சிறீலங்கா அரசாங்கம் தமிழர்களின் மேல் கட்டுப்பாடுகளை ஆயுத ஒடுக்குமுறைகளை மேற்கொள்ளவில்லை. தமிழர்கள் மேல் திட்டமிட்டமுறையில் மேற்கொள்ளப்பட்ட ஆயுத ஒடுக்குமறைகளே தமிழர்களை ஆயுதமேந்தி போராடவைத்தது - வைக்கிறது என்பதனை நன்கு உலகுக்கு வெளிப்படத்த வேண்டும். இதன் மூலம் தமிழீழத் தேசத்தை உலகுக்கு அங்கீகரிக்க வைத்தல் மூலமே உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு இனக் கொலைகளில் பலியான எம் உடன் பிறப்புக்களது உயிரிழப்புக்கு சிறந் அஞ்சலியை நாம் செலுத்தலாம்.

நன்றி: சூ.யோ. பற்றிமாகரன்



# சிரியாவில் பறிபோகும் குர்திஷ் நிலம்! துருக்கியின் ஆக்கிரமிப்பு எல்லை மீறுகிறதா?

– ஐங்கரன் விக்கினேஸ்வரா

21.12.2024




சிரியாவில் வீழ்ச்சியுற்ற அசாத் ஆட்சியின் பின்னர், சிரியாவில் வாழும் குர்திஷ் மக்கள் எதிர்காலத்தில் இழக்க நேரிடுபவை இன்னும் அதிகம் என்பதை காணக் கூடியதாக உள்ளது. அவர்களின் சுயாட்சி முதல் தங்கள் சமூகங்களின் பாதுகாப்பு வரை மிகவும் முக்கியமானவற்றை இழக்கிறார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அசாத் ஆட்சியின் பின்னர் முதன்மையான பயனாளிகளாக இஸ்ரேலும் துருக்கியும் என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



## தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள் :

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் (முரசனளைா) தென்கிழக்கு துருக்கி, வடகிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.


ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக்குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்திற்கும் தள்ளப்பட்டார்கள்.

ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகி விடக் கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண்டிருக்கின்றன என்பது உண்மை தான்.

2011 இல் சிரியாவின் உள்நாட்டுப் போர் வெடித்த பிறகு, நவம்பர் 2103 இல் குர்திஷ் படைகள் வடகிழக்கு சிரியாவின் சில பகுதிகளில் சுயாட்சியை அறிவித்தன.

அங்கு அவர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். சுமார் 30 மில்லியன் குர்திஷ் மக்கள் வடக்கு ஈராக், மேற்கு ஈரான், வடக்கு சிரியாவில் பரவி உள்ளனர். மேலும் துருக்கியின் மக்கள் தொகையில் சுமார் 18% பேர் உள்ளனர்.




## ஐந்து நாடுகளில் சிதறிய குர்திஷ்தான்:

குர்திஷ்தான் தாயகமானது ஈராக், ஈரான், சிரியா, துருக்கி, ஆர்மேனிய நாடுகளுக்குள் ஒவ்வொன்றுடனும் இணைந்தவாறு, அந்தந்த நாடுகளின் எல்லைப் பகுதிகளிலேயே அமைந்திருக்கின்றன. குர்திஷ் மக்கள் வாழும் இந்த மலைப்பகுதிகளை இணைத்து 'குர்திஷ்தான்' எனும் தனிநாடு காண விரும்புகிறார்கள்.

முதலாம் உலகப்போருக்குப் பின்னர் ஓட்டோமான் சாம்ராஜ்யம் வீழ்ந்ததையடுத்து நடைபெற்ற 'வெர்சாய்ஸ்' சமாதான மாநாட்டில் குர்திஷ்தான் கோரிக்கை முதலில் முன்மொழியப்பட்டது.

இதையடுத்து, முதலாம் உலகப்போரில் வெற்றிபெற்ற மேற்கத்திய கூட்டுப்படையினர் சுவிட்சர்லாந்தில் கூடி, 'செவ்ரெஸ் ஒப்பந்தம்' கொண்டுவந்தனர். 1920ல் கொண்டுவரப்பட்ட அந்த ஒப்பந்தத்தில், ஐந்து நாடுகளிலும் உள்ள பகுதிகளை சேர்க்காமல், துருக்கியில் மட்டும் உள்ள பகுதியில் 'குர்திஷ் தேசம்' ஒன்று உருவாக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், 1923ம் ஆண்டில் அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளுடன் கையெழுத்தான 'லாவ்சன்னே' ஒப்பந்தத்தின்படி நவீன துரக்கியின் எல்லைகள் வரையறுக்கப்பட்ட போது குர்திஷ் தேசம் உருவாக்கப்படவில்லை என்பது வரலாற்றின் மறைக்கப்பட்ட பக்கங்களாகும்.

## அசாத் வீழ்ச்சியின் பின் குர்திஷ் மக்கள்:

சிரியாவுடன் கிட்டத்தட்ட 900 கிலோமீட்டர் எல்லையைப் பகிர்ந்து கொள்ளும் துருக்கி, அசாத் ஆட்சியின் நீண்டகால எதிர்ப்பாளராகவும், சுன்னி, ஜிஹாதி பிரிவுகள் உட்பட ஆயுதக் குழுக்களின் முதன்மை ஆதரவாளராகவும் இருந்து வந்துள்ளது.

2016 முதல், துருக்கி தனது எல்லையில் ஒரு தன்னாட்சி குர்திஷ் பிராந்தியத்தை உருவாக்குவதைத் தடுக்கும் நோக்கத்துடன் குர்திஷ் மக்களைக் குறிவைத்து சிரியாவில் பல இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கி நடத்தியது.

2019 ஆம் ஆண்டில், சிரியாவுடனான தனது எல்லையில் 30 கிலோமீட்டர் இடையக பாதுகாப்பு வலயத்தை உருவாக்க துருக்கி முயற்சித்து தோல்வியடைந்தது. பல ஆண்டுகளாக, எர்டோகன் அந்த தற்காப்புப் பகுதியை நிறுவுவதற்கான தனது திட்டங்களை பலமுறை முயற்சித்துள்ளார்.


தற்போது அசாத் வெளியேற்றப்பட்ட உடனேயே, அந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக SDF கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியைக் கைப்பற்ற துருக்கி ஆதரவுப் போராளிகள் நுழைந்தனர்.

துருக்கிய தாக்குதலுக்கு மத்தியில் சிரியாவின் குர்திஷ் மக்களுக்கு எதிர்காலம் நிச்சயமற்றதாக மாறியுள்ளது.

## துருக்கியின் ஆக்கிரமிப்பு தாக்குதல்:

டிசம்பர் 8 அன்று சிரிய ஜனாதிபதி பஷர் அல்-அசாத் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து சிரியாவில் அதிகார வெற்றிடத்தை






நிரப்ப உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளாவிய சக்திகளில் துருக்கி முதன்மையானது.

வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பின் மூலம் அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டணியில் இருந்தாலும், சிரியாவில் துருக்கியின் முக்கிய இலக்கு, குர்திஷ் தலைமையிலான சிரிய ஜனநாயகப் படைகளை (SDF) அழிப்பதாகும்.

பல ஆண்டுகளாக, சிரியாவின் வடகிழக்கில் இஸ்லாமிய அரசை எதிர்த்துப் போராட அமெரிக்கப் படைகளுடன் SDF உழைத்துள்ளது. துருக்கியை தளமாகக் கொண்ட குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி - PKK இன் விரிவாக்கமாக SDF இன் சண்டைப் படையின் பெரும்பகுதியை உருவாக்கும் மக்கள் பாதுகாப்புப் பிரிவுகளாக YPGI துருக்கி பார்க்கிறது.

PKK பல தசாப்தங்களாக தென்கிழக்கு துருக்கியில் போராடி வருகிறது. அத்துடன் குர்திஷ் இன மக்களுக்கு அதிக சுயாட்சி மற்றும் உரிமைகளைப் பெறுவதற்காக ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

**இப்போது சிரியாவில் குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக்களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும்.**

### சிரிய தேசிய இராணுவம் -SNA

ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் - HTS, ஒரு சக்திவாய்ந்த இஸ்லாமியப் பிரிவின் தலைமையிலான கிளர்ச்சியாளர்கள், அசாத் ஆட்சியை வீழ்த்துவதில் முக்கிய பங்கு வகித்தனர்.

துருக்கியுடன் தொடர்புடைய மற்றொரு குழுவான 'சிரிய தேசிய இராணுவம்' - SNA, அந்த சண்டையில் முக்கிய பங்கு வகித்தது. சிரியாவின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

துருக்கி ஆதரவு சிரிய இடைக்கால அரசாங்கம், சிரியாவில் ஒரு மாற்று அரசாங்கம் அமைக்க முயற்சி செய்கிறது. அசாத் அரச எதிர்ப்பை ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக 2017 இல் SNA ஐ நிறுவ துருக்கி உதவியது.

துருக்கியினால் பயிற்சியளிக்கப்பட்ட, ஆயுதம் மற்றும் நிதியுதவி பெற்ற SNA, டிசம்பர் தொடக்கத்தில் சிரியப் படைகளிடமிருந்து சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவை மீண்டும் கைப்பற்ற HTS க்கு உதவியது.

சிரியாவில் குர்திஷ் சுயாட்சிக்கான எந்தவொரு வாய்ப்புகளையும் நசுக்கும் முயற்சியில் SNA அங்காராவுடன் பூரண உடன்பாடு நிலையில் உள்ளது.

SNA 2018, 2019 இல் குர்திஷ் படைகளுக்கு எதிரான துரக்கியுடன் ஆதரவு தாக்குதல்களில் பங்கேற்றதும் குறிப்பிடத்தக்கது.

### குர்திஷ் மக்களுக்கு அமெரிக்காவின் நிச்சயமற்ற ஆதரவு?

சிரியாவில் தற்போது புதிய அரசை உருவாக்குவது சிரியர்கள் எடுக்க வேண்டிய முடிவுகள் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை செயலர் ஆண்டனி பிளிங்கன் கூறியுள்ளார்.

சிரியாவில் போர் நிலமைகள் மாறக்கூடிய நிலையில் இருப்பதால், குர்திஷ் படைகள் ஐ.எஸ்.க்கு எதிராக தொடர்ந்து போரிட அனுமதிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை துருக்கியுடன் விவாதித்ததாக பிளிங்கன் கூறினார்.

ஆனால் துருக்கி ஒரு பரந்த தாக்குதலுக்குத் தயாராகும் நிலையில், குர்திஷ் மக்களுக்கு அமெரிக்க ஆதரவின் எதிர்காலம் தெளிவாகத் தெரியவில்லை.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட டொனால்ட் டிரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டு குர்திஷ் மக்களுக்கு ஆதரவளிக்கும் அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற்றார்.

### ஐ. எஸ். க்கு எதிரான போரில் குர்திஷ் பெஷ்மெர்கா படை:

வடக்கு ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக, ஈராக்கிய குர்திஷ்களான பெஷ்மெர்கா வீரர்கள் முன்னணியில் போரிட்டனர். 2013 ஆம் ஆண்டின் மத்தியில், தனது கட்டுப்பாட்டில் வடக்கு சிரியாவில் இருந்த எல்லைக்குள் மூன்று குர்திஷ் வாழ் பகுதிகளை ஐ.எஸ். ஜிகாதி குழுவினர் குறி வைத்தனர்.

ஜூன் 2014ல் வடக்கு ஈராக்கில் ஐ.எஸ். தீவிரவாதிகள் முன்னேறியதும், அந்த நாட்டு குர்து மக்களைச் சர்ச்சைக்குள் இழுப்பதாக இருந்தது. ஈராக்கிய இராணுவத்தால் கைவிடப்பட்ட பகுதிகளுக்கு, தன்னாட்சி பெற்ற ஈராக்கில் குர்திஷ்தான் பிராந்தியத்தின் அரசாங்கம் தனது பெஷ்மெர்கா படைகளை அனுப்பி, ஐ.எஸ். தீவிரவாதிகளை விரட்டி அடித்தது.

### அடக்கு முறைக்குள் குர்திஷ் மக்கள்:

நீண்ட காலமாக தனி நாட்டிற்கான போராட்டங்களால் குர்திஷ் மக்கள் பல அடக்கு முறைக்கு உள்ளானார்கள். குர்திஷ் மக்களின் எழுச்சிகளை கட்டுப்படுத்த நினைத்த ஈராக்கின் அதிபர் சதாம் உசேன் ஈவு இரக்கமின்றி அம்மக்களை கொன்று குவித்தார்.

1988-ல் குர்திஷ் இன மக்கள் மீது நரம்புகளை செயலிழக்க வைத்துக் கொல்லும் அதிபயங்கர இரசாயன ஆயுதங்களையும் ஏவினார்.

சதாமின் எதிரியான ஈரானிலும் குர்திஷ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். துருக்கி அரசாலும் குர்திஷ் மக்கள் கொலை செய்யப்பட்டு வருகிறார்கள். சிரியாவும் குர்திஷ் மக்களை ஒடுக்கிக்கொண்டே வருகிறது.

இப்போது சிரியாவில் குர்திஷ் மக்கள் தம் வசமுள்ள சுயாட்சி அதிகார பிரதேசத்தை பாதுகாக்க முயல்கின்றனர். ஆனால் துருக்கியின் ஆக்கிரமிப்பு தொடருமானால், குர்திஷ்தான் மக்களின் நாடு காவு வாங்கப்படும் கனவு தேசமாகவே மாறும்.

**ஈராக், ஈரான், சிரியா, துருக்கி நாடுகளுக்குள் ஆயிரம் பகைமை போட்டியிருந்தாலும், குர்திஷ்தான் என்கிற ஒரு அரசு உருவாகி விடக்கூடாது என்பதில் இந்நாடுகள் ஒத்த கருத்தைக் கொண் டிருக்கின்றன என்பது உண்மை தான்.**

**எமது போராட்ட வாழ்வின்
உண்மைகளைக் கலை இலக்கியப் படைப்புக்கள்
தரிசித்து நிற்கவேண்டும்; எமது சமூக வாழ்வியக்கத்தின்
சகல பரிமாணங்களிலும் ஆழமாக ஊடுருவி நிற்கும்
இன ஒடுக்கு முறையின் கொடூரத்தினை சிருஷ்டி
கர்த்தாக்கள் சித்தரித்துக் காட்டவேண்டும்.**

**-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-**

# மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் 25ஆம் ஆண்டு வீரவணக்க நாள் – 05.01.2000

சந்திரிக்கா அரசின் தமிழின அழிப்புக் கொள்கையை அம்பலப் படுத்தியவரும் மனித உரிமைவாதியும் சட்டத்தரணியுமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் கொழும்பில் சந்திரிக்கா அரசின்கொலையாளிகளால் 05.01.2000 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

சிங்களத் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரின வாதத்திற்கு சவால் விடுத்து. ஆபத்துக்கள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள்.

இவரின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் இவருக்கு மாமனிதர் விருது வழங்கப் பட்டது.

மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களைப்பற்றி பல நினைவுக் கட்டுரைகள் நினைவுமலர்கள் தமிழிலும் வெளிநாடுகளில் ஆங்கிலத்திலும் வெளியாகியிருப்பதை பலர் அறிவார்கள். ஆனால், ஆங்கில நினைவு மலர்களில் வெளியானவற்றை பலர் அறியாமல் இருப்பார்களென நினைத்து சிலவற்றை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது.

குமார் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் மாபெரும் குரல் மௌனிக்கச் செய்யப்பட்டது. (கரென் பார்கர் - பிரதம ஐ.நா. பேராளர் சர்வதேசக் கல்வி அபிவிருத்தி / மனிதநேய சட்டக் கருத்திட்டம்)

சர்வதேசக் கல்வி அபிவிருத்தி / மனிதநேயச் சட்டக் கருத்திட்டம் எனும் எமது அமைப்பானது 18 வருடங்களாக இலங்கையில் நிலவிவரும் மோதலில் மனித நேயச்சட்ட நியதிகள் பிரயோகம் செய்யப்பட வேண்டுமென்பதற்காகப் பணியாற்றியுள்ளது.

இலங்கைத் தீவில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையிட்டு ஒரு மதிக்கத்தக்க பேச்சாளராக விளங்கினார். அவர் எங்கள் அமைப்பினால் மட்டுமல்ல, உலகெங்குமுள்ள இதுபோன்ற அநேக மனித உரிமைகள் அமைப்பினாலும் மதிக்கப்பட்டார்.

சுவிற்சர்லாந்து ஜெனீவாவில் உள்ள உலகளாவிய கிறிஸ்தவ பேரவையில் அவரைக் கௌரவிக்கும் வகையில் எமது இணை அனுசரணையுடன் ஒரு ஞாபகார்த்த வழிபாட்டை நடாத்துகின்றோம். இதில் மாபெரும் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்புகள் இணைந்து கொள்கின்றன. மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் நடுநிலையம் அமர்வு கொண்டிருக்கும் ஜெனீவாவில் இது நிகழ்த்தப்படுவதும் மிகப் பொருத்தமானதே. இங்கு இடம்பெறும் ஐ.நா. அமர்வுகளில் மனித உரிமைகளுக்கான ஒரு மாபெரும் வழக்கறிஞராக அவர் திகழ்ந்தார். அநேக தடவைகளில் எமது அமைப்பினைப் பிரதிநிதித்துவம் செய்த அவர் நடைமுறையில் உள்ள மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்ட நியதிகளின் ஒளியில் இலங்கைத் தீவில் தமிழர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் சொற்திறன் மிக்க ஒரு பேச்சாளராக விளங்கினார். தெளிவான பேச்சுத்திறனுடன் எப்போதும் மனித உரிமைகளின் காப்பாளராக விளங்கிய குமார் இலங்கையில் நிலவும் முரண்பாட்டிற்குத் தீர்வு காணுமுகமாக மிதவாதத்தினதும் நியாயத்தன்மையினதும் குரலாகத் தனித்தே செயற்பட்டவராக எம்முன் நிற்கிறார். அவரது நாவன்மையையும், கனவான் பண்பையும் இன்மகிழ் நோக்கையும் அர்ப்பண சிந்தையையும் நாம் என்றும் மறவோம்.

தமிழ், சிங்களம் ஆகிய தன் தேசிய அடையாளம் இரண்டையும் வெளிப்படுத்துவதற்கான தனது போராட்டத்தில் இலங்கையானது ஒரு பிரதான பங்கேற்பாளரை இழந்துள்ளது. உடன்பாடொன்று எட்டப்படக் கூடியதாயிருந்த சமயத்தில் சிங்களத் தீவிரவாதப் போக்குடையோர் அவரைப் படுகொலை செய்வதையே தமது தெரிவாகக் கண்டிருப்பது எத்துணை கவலையளிப்பதாக உள்ளது. இலங்கையில் தமிழர்களின் நிலை எத்தகையது என்பதை உலகமாவது அறிந்துள்ளது எனவும் அந்த வகையில் குமாரின் வாழ்வு வீணாகிப் போய்விடவில்லையெனவும் நாம் நம்புகிறோம்.


தனது மனித மற்றும் மனிதநேயச் சட்ட உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் எனக் கோருவதில் சர்வதேச சமூகம் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன், இனப்பிரச்சினையில் குமார் பொன்னம்பலத்தின் மாபெரும் பங்களிப்பை எவரும் மறந்து விடக்கூடாது.

2000 ஆம் ஆண்டில் இலங்கைத்தீவின் சமாதானத்தை நாடும் உங்கள், கரென் பார்க்கர் பிரதம ஐ.நா. பேராளர் சர்வதேசக் கல்வி அபிவிருத்தி / மனிதநேயச் சட்டக் கருத்திட்டம் ஐக்கிய நாடுகளால் (செயலாளர் நாயகத்தின் பட்டியலில் இடம்பெற்றது. நம்பிக்கைச் சான்றளிக்கப்பட்ட ஓர் அமைப்பு).

**நீதிபதியினதும் வழக்கறிஞர்களினதும் சுதந்திரத்திற்கான நடு நிலையம், ஜெனீவா (சுவிற்சர்லாந்து)**

இலங்கை: வழக்குரைஞர் குமார் பொன்னம்பலத்தின் கொலை குறித்துப் பூரண விசாரணையொன்றை நடாத்துமாறு சட்ட வல்லுநர்கள் அரசாங்கத்தைக் கோருகின்றனர்.

2000 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டமை




குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்து ஜெனீவாவில் உள்ள நீதிபதிகளினதும் வழக்குரைஞர்களினதும் சுதந்திரத்திற்கான நடு நிலையம் (CIJL) இலங்கை அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதியுள்ளது. பொன்னம்பலம் அவர்கள் ஐந்து தடவைகள் சுடப்பட்டுள்ளாரெனப் பிரேத பரிசோதனையறிக்கை தெளிவாகத் தெரிவித்தது.

பொன்னம்பலம் பிரசித்திபெற்ற ஓர் எதிர் வழக்குரைஞராகத் திகழ்ந்தார் என்பதையும் மனித உரிமைகள் சார்ந்த அநேக வழக்குகளில் தம் கட்சிக்காரர்களுக்காக வாதாடியுள்ளார் என்பதையும் CIJL நிறைவு கூர்ந்தது. தமது கட்சிக்காரர்களின் பயனுறுதியான பாதுகாப்புக்காக வாதிட்டார் என்பதற்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டாரெனக் கூறி CIJL வருத்தம் தெரிவிக்கிறது.

பல்வேறு விடயங்களில் பொன்னம்பலம் தன் மனதைத் திறந்து பேசினார். அவர் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கத்தை எப்போதும் மகிழ்விப்பதாக இருந்ததில்லை. உண்மையில், 1998 நவம்பர் 17 ஆம் திகதி தொலைக்காட்சியொன்றுக்கு அவர் வழங்கிய நேர் காணலையடுத்து அவரைக் கைதுசெய்வதற்கான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டபோது 1998 டிசம்பரில், 09 அவர் சார்பாகத் தலையிட்டது.

பொன்னம்பலம் அவர்களின் படுகொலை குறித்து முழுமையான விசாரணையொன்றை ஏற்பாடு செய்யுமாறும் குற்றவாளிகளை நீதிக்குமுன் கொண்டுவரப் பயனுறுதியான, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இலங்கையின் சட்டமா அதிபரை CIJL வற்புறுத்தியது.

**அமெரிக்க ஜூரர்கள் சங்கத்தின் பிரகடனம்**

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பொருளாதார மற்றும் சமூகப் பேரவையின் ஆலோசகர் அந்தஸ்துடைய அரசசார்பற்ற நிறுவனமான அமெரிக்க ஜூரர்கள் சங்கம் இலங்கையில் கொழும்பு வெள்ளவத்தையில் தை 5 ஆம் திகதி குமார் பொன்னம்பலம் என எல்லோராலும் அறியப்பட்ட திரு ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஜூனியர் அவர்கள் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டிக்கின்றது. பல ஆண்டுகளாக மனித உரிமைகளின் தீவிர செயற்பாட்டாளராக விளங்கிய திரு பொன்னம்பலம் கொழும்பில் மிகவும் மதிக்கப்பட்ட ஒரு வழக்கறிஞராகத் திகழ்ந்தார். பொன்னம்பலம் நீண்டகாலமாகக் கொலை அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து வந்திருந்தமையும் எமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. குமார் பொன்னம்பலம் அவர்களின் மரணமானது இலங்கைக்கும் தமிழ் சமூகத்திற்கும் துயர்தரும் ஓர் இழப்பாகும்.

புகழ்பெற்ற நிபுணத்துவம் வாய்ந்த ஒரு குற்றவியல் வழக்கறிஞர் என்ற வகையில் பொன்னம்பலம் மனித உரிமை மீறல்கள் காரணமாகத் துன்பத்திற்குள்ளான பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழ் மக்கள் சார்பாக எதிர் வழக்காடினார். மனிதவுரிமை வழக்குகள் சார்ந்த முக்கிய அறிக்கையையும் அவர் பதிவுசெய்து வைத்தார்.

சர்வதேச சமூகத்தின் மனித உரிமைகளுக்காகவும் பொன்னம்பலம் உரத்துக் குரல் கொடுத்தார். 1997 இலும் 1999 இலும் மனித உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகள் ஆணைக்குழுவில் இலங்கையில் தமிழ் மக்களுக்கெதிரான சித்திரவதை, தான் தோன்றித்தனமான தடுத்துவைப்பு, காணாமற்போதல்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் என்பவற்றை எதிர்த்து வெளிப்படையாகக் கண்டனம் தெரிவித்தார். பல முக்கிய சர்வதேச சபைகள் மத்தியில், பிரசெல்ஸில் உள்ள






ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் லண்டனில் உள்ள அரச நிறுவன உறுப்பினர்கள் மத்தியில் அவர் பேரூரையாற்றினார்.

பொன்னம்பலம் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் என்பவற்றுக்காகத் துணிச்சலோடு தளராமற் போராடிய ஓர் வெற்றி வீரனாகத் திகழ்ந்தார். மனித உரிமைகள் குறித்து உரத்துப் பேச அவர் அஞ்சியதில்லை. இதற்காகத் தம் உயிரையே அவர் விலையாகக் கொடுக்க நேரிட்டது. இப்படுகொலையானது நீதிக்காவும் மனித உரிமைகளுக்காகவும் போராடும் அனைவருக்கும் துயர் தரும் ஒரு பேரிழப்பாகும்.

இக்காரணங்களின் நிமித்தம் ஈவிரக்கமற்ற, படுபாதகமான இச்செயலை மிகக் கடுமையாகக் கண்டிக்குமாறு அனைத்துத் தனிநபர்களுக்கும் மனித உரிமை அமைப்புக்களுக்கும் நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம். மேலும், சுதந்திரமான விசாரணையொன்றை மேற்கொண்டு துயர் தரும் இம்மரணத்திற்குப் பொறுப்பாயிருப்பவர்களுக்கெதிராக புறம்பான படுகொலைகள் பற்றிய விசேட புலன் விசாரணையாளரான திருமதி அஸ்மா ஜஹாங்கீர் அவர்களை, இலங்கை அரசாங்கத்தின் உதவியைப் பெற்று இக்குற்றச் செயல்குறித்து விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகளை நீதிக்குமுன் நிறுத்துமாறு விதந்துரைக்கின்றோம்.

தமிழ் மக்களுக்கெதிராக இலங்கை அரசாங்கத்தால் இழைக்கப்படும் அட்டூழியங்களுக்கெதிராக குரல் கொடுப்பதற்காகதான் உயிரிழக்கும் அபாயம் ஏற்படலாம் என்று குமார் எப்போதும் எம்மிடம் கூறிவந்த போதிலும், இந்த ஆபத்துக் குறித்து நாம் முனைப்புடன் விழிப்புணர்வு கொண்டிருந்த போதிலும், அவரது படுகொலை எமக்கொரு பேரதிர்ச்சியாகவே இருந்தது. என்னால், அதை நம்ப முடியவில்லை.

முதன்முதல் குமாரை நான் லண்டனில் ஐந்து வருடங்களுக்கு முன்பு சந்தித்தேன். அதனையடுத்து, ஐரோப்பாவிலும் மேலும் பல கனங்களிலும் பல்வேறு நாடுகளிலும் அநேக மனித உரிமை நிகழ்வுகள், கருத்தமர்வுகள், செயலமர்வுகள் என்பவற்றின் போதும் அவரைச் சந்தித்துள்ளேன். கூட்டங்களில் பங்குபற்றிய, மனதில் உள்ளதை வெளிப்படையாகப் பேசியவாறு எங்கெங்கு குமார் பயணம் செய்தாரோ, அங்கெல்லாம் அவரது சக்தி, அவரது பற்றுறுதி, அவரது துணிவு என்பவற்றால் எழுச்சியூட்டப்பட்ட அவரைச் சுற்றிவர இருப்பவர்களில் ஒரு மேலதிகசக்தியும் தன்னம்பிக்கையும் காணப்பட்டது.



## தமிழீழ விடுதலைப் புலிகள்
## *Liberation Tigers of Tamil Ealam*

### மாமனிதர் மறைவு
### பிரபாகரன் இரங்கல்

தாயக தேசத்தின் விடுதலையை தணியாத இலட்சியமாக வரித்து, அந்த உன்னதமான இலட்சியத்திற்காக அரும்பணி ஆற்றிவந்த ஒரு அபூர்வமான மனிதரை நாம் இழந்துவிட்டோம். விடுதலைக்காக எரிந்து வந்த ஒரு இலட்சியச் சுடர் அணைந்து விட்டது. பகைவனின் கோழைத்தனத்திற்கு தமிழினப் பற்றாளர் ஒருவர் பலியாகிவிட்டார்.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அரசியல் சுயநலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு தனித்துவமான மனிதர். ஒரு புரட்சிகரமான அரசியல்வாதி. நேர்மையுடன், நெஞ்சுறுதியுடன் மனித நீதிக்காக குரலெழுப்பி வந்தார். சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்கள பேரினவாதத்திற்கு சவால் விடுத்து வந்தார். ஆபத்துகள் சூழ்ந்திருந்தபோதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்து போராடியவர்.

திரு. பொன்னம்பலம் அவர்கள் ஒரு உயரிய தேசப்பற்றாளர். தமிழீழ தாயகத்தில் ஆழமான பாசம் கொண்டவர். தமிழர் தேசம் தன்னாட்சி உரிமைபெற்று சுதந்திர நாடாக உருவாகவேண்டுமென ஆவல்கொண்டவர். ஆயதப் போராட்டம் வாயிலாகவே தமிழரின் விடுதலை சாத்தியமாகும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். அதனால் பகிரங்கமாகவே எமது விடுதலை இயக்கத்தையும், எமது இயககததன கொள்கையையும் ஆதரித்தார். எமது விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி உலக அரங்கில் குரல் கொடுத்து வந்தார். நேர்மைத் திறமையுடன், அற்புதமான துணிச்சலுடன் அன்னார் ஆற்றிய அரும் பணி மிகவும் பாராட்டத்தக்கது.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

மனிதஉரிமைகள் தொடர்பான பல்வேறு விடயங்களில் குமாருடன் பணியாற்றக்கிடைத்தமையானது ஒரு மாபெரும் வரப்பிரசாதமாகும். அவரது ஆழ்ந்த இறை நம்பிக்கையும் மற்றும் அனைத்தையும் அவர் தம் மனச்சாட்சிப்படியே செய்து வந்தார், என்ற உண்மையும் கருத்தைக் கவர்வதாகவும் உணர்ச்சியூட்டுவதாகவும் இருக்கின்றன. மனித உரிமை தொடர்பிலான தன் நடவடிக்கைகளின் பொருட்டுத் தன் உயிருக்கு உலைவைக்கப்படலாம் என்பதை முழுமையாக அறிந்து கொண்டே அவர் தம் பணியில் ஈடுபட்டார்.

மனச்சான்றின்படி வாழ்வதில் அவர் கொண்டிருந்த இந்த உறுதியான நிலைப்பாடானது தமிழ் மக்களின் கூட்டு உரிமைகளை மதித்தல், அவர்களது சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி அங்கீகரித்தல், மற்றும் வடக்கு, கிழக்கில் தமது சொந்தத் தாயகத்தில் பாதுகாப்பாக வாழவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொள்ளல் என்பவற்றால் மட்டுமே நாட்டிலுள்ள மோதலுக்கு நிலையான தீர்வு ஒன்றைக்காண முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கையையும் மனத்திட்டத்தையும் உள்ளடக்கியிருந்தது. அவரது இழப்பையிட்டு உலகெங்கும் வாழும் தமிழர்களால் வெளியிடப்பட்ட துயர் பகிர்வுகளில் எதிரொலிக்கின்ற உணர்வலைகள் காட்டுவதிலிருந்து அவரது படுகொலையே அநேக தமிழர்களை தெளிவான இத்தீர்மானத்திற்கு வரச் செய்துள்ளது தெரிகிறது.

குமாரை நேரடியாகச் சந்தித்த அனைத்து மட்டங்களிலுமான சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் சர்வதேச சபைகள் என்பவற்றின் ஆர்வலர்கள் அர்ப்பணத்துடனான அவரது பணியை மெச்சுகின்றனர். எப்போதும் அவரது துணைவியார் யோகி சகிதம் வலம்வரும் குமார் மனித உரிமைகள், சமாதானம் மற்றும் நீதி என்பவை குறித்தான உணர்ச்சி ததும்பும் தனது தாகத்தினை வெளிப்படுத்திப் பேச ஒருபோதும் தயங் கியதில்லை. சர்ச்சைகளைத் தவிர்த்து வசதியான ஒரு வாழ்வை அவர் வாழ்ந் திருக்கலாம். அவரது மனைவி யோகியும் தனது வாழ்க்கைத் தொழிலைத் தங்கு தடையின்றி நடத்தியிருக்கலாம். இருந்தும், பற்பல இடங்களுக் கும் சென்று குரலற்றவர்களுக்காகக் குரல் கொடுக்க அவர்கள் ஒரு போதும் தயங்கியதில்லை. தமிழ் மக்களுக்கெதிராக இலங்கை அரசாங்கம் இழைத்துவரும் அட்டூழியங்கள் தொடர் பில் குமார் நம்பகமான உறுதியான ஒரு வழக்கைச் சர்வதேச சமூகத்தின் முன் கொண்டுவருவார்.

குமார், குடும்பத்தின் மீது பற்றுக் கொண்ட ஒரு மனிதராக விளங்கினார். தனது மகனையும் மகளையும் தொலைபேசியில் அழைத்து அவர்களது வீட்டில் உள்ளோர் அனைவரதும் சுகநலம் குறித்தும் விசாரிக்காமல் ஒருநாள் கூடக் கழித்தது கிடையாது. கடவுளையும் உண்மையையும் நீதியையும் நேசித்த சிறந்த ஒரு பண்பாளராக விளங்கிய அவர் இப்போது இல்லை. அவரை நாம் பெரிதும் இழந்து நிற்கிறோம். அவரது பிரிவு எமக்குப் பேரிழப்பாகும். இவ்விழப்பினால் முடிவில்லாத ஒரு சோகத்தினுள் நாம் தள்ளப்பட்டுள்ளோம். அவரது வாழ்வினால் தொடப்பட்டவர்களான யோகி, கஜேந்திரகுமார் மற்றும் மிருனாளினி, நண்பர்கள் மற்றும் மனித மாண்பு, நேர்மை மற்றும் பெறுமதி ஆகியவற்றின் விழுமியங்களைப் பேணி வளர்க்கத் தள்ளப்படும் உலகின் மூலை முடுக்கெங்கும் வாழும் அவரது பரந்துபட்ட மனித நேயக் குடும்பத்தினர் ஆகியோரின் மனங்களில் அவர் நினைவு என்றென்றும் வாழும்.

நன்றி: எரிமலை ஜனவரி 05 2016

# 20வது ஆண்டில் ஆழிப்பேரலை நினைவு: சுனாமி நிவாரண பொறிமுறையை எதிர்த்த JVP!

– நவீனன்

23.12.2024

**[ஆழிப் பேரலையாக தமிழர் தாயகத்தை இயற்கை அழித்த சுனாமி 2004 ஆண்டின் இருபதாம் ஆண்டு நினைவுகளில் ஈழத்தமிழர் மூழ்கியுள்ளனர்]**




இயேசு பாலன் பிறப்பை தேவாலையங்கள் எங்கும் மங்களம் பொங்கும் நிகழ்வுகள், பூஜைகள் நடந்து கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருந்த நேரம்.

அந்த நேரம் தான் இந்தனோசியா கடலடியில் ஏற்பட்ட பூமித் தட்டுக்களின் உரசல் பூமிப்பந்தையே உலுக்கி இந்து மகா சமுத்திர நீரையே விழுங்கிக் கொள்கிறது.

அதிகாலை 2004.12.26 அன்று ஈழத்து நேரம் அதிகாலை 6.28 மணியளவில் விழுங்கிய நீரை பூமித்தகடுகள் துப்பிவிட மேலெழுந்த நீர் பெரும் அலைகளாகி சுனாமி என்ற சொல்லை ஈழ தேசத்துக்கு அறிமுகப்படுத்துகிறது.

2004 மார்கழி மாத இரவு தனது இருட்டைத் தொலைத்து சூரிய ஒளியால் ஒளிரத் தொடங்கிய அதிகாலை நேரம். பல ஆயிரம் ஆசைகள் நெஞ்சில் நிறைந்து கிடக்கிறது. எம் வாழ்வுக்கு ஒளி காட்ட பாலன் பிறந்துவிட்டான் என்று எம் ஊர்கள் மட்டுமல்ல உலகமே மகிழ்வில் திளைத்துக் கொண்டிருந்த வேளையில் ஈழ தேசத்தை போலவே, பல ஆண்டுகளாக ஆச்சே தேசம் விடுதலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவிற்கு எதிராக போராடி, பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவினை இதே காலகட்டத்தில் எதிர் கொள்கிறது.

ஈழத்தில் கரையோர மக்கள் காலை 09.00 - 09.15 ஈழத்து நேரப்படி நத்தார் கொண்டாட்டத்தில் இருந்த மக்கள் கடற்கரை நீர் உள் இழுக்கப்படுவதை கண்டு என்ன என்று அறிய முன் கடலில் பாரிய அலை ஒன்று கரை நோக்கி வருவதை கண்டு திகைத்து நின்றார்கள்.

### தமிழர் தேச கட்டுமான சிதைவு:

நீண்ட காலமாக விடுதலைக்காக போராடிய தமிழ் மக்கள் “தேசம்” எனும் கட்டுமானத்துக்குள் வந்த காலகட்டமே 2003-2005 ஆகும். விடுதலையை மூச்சாக கொண்டு போராடிய தமிழர் தேசம் பின்னர் ஆழிப் பேரலையின் பாரிய அழிவினை இக்காலகட்டத்தில் எதிர் கொள்கிறது.



ஈழத்தின் கீழ்நில கடற்கரைப் பகுதிகள் யாவும் சுனாமி அலைகளால் தாக்கப்பட்டு பாரிய சேதம் ஏற்படுகிறது. கிட்டத்தட்ட 30,000 மக்கள் இயற்கையின் சீற்றத்தால் உயிரிழந்து, பல ஆயிரம் மக்கள் காயமடைந்து, பல கோடி உடமைகளை இழந்து போன அந்த நொடி இன்றும் இரத்தவாடையோடு நகர்கிறது.

தமிழ் இனத்தை மட்டுமல்லாது பல்லின மக்களையும் ஏதுமற்ற ஏதிலிகளாக்கிய சுனாமி சிறிய இடைவெளியில் மீண்டும் ஒரு முறை தாக்கி விட்டு சென்ற போது மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றார்கள். கடல் அலையால் தூக்கி எறியப்பட்டவர்கள் கையில் கிடைத்தவற்றை பிடித்து கொண்டு தம்மை காத்து கொண்டார்கள். பனை தென்னை என்றும் மரங்களின் கொப்புகளிலும் பிடித்துக்கொண்டு காத்து கொண்டவர்கள் பயங்கர காயங்களாலும் பாதிக்கப்பட்டார்கள்.



### அழிந்த தேசத்தை மீள அழித்தனர்:

இருபதாவது ஆண்டில் சுனாமியின் அழிவுகள் தமிழ் மண்ணில் நிகழ்ந்ததன் பின்னர் அதற்குரிய நிவாரண பொறிமுறையை தடுத்து நிறுத்திய பெருமைக்குரியவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.



தற்போது அனைத்து மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான, இன, மத, மொழி வர்க்க வேறுபாடற்ற, நாட்டிற்கு தேவையான அரசியல் யாப்பை எங்களால் உருவாக்க, வடக்கு, கிழக்கு, மலையகம் என அனைத்து இன மக்களும் எமக்கு ஆதரவை வழங்கியிருக்கிறார்கள் என தேர்தல் வென்றதன் பின்னர் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் சம அந்தஸ்த்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு ஒன்றினைந்த இலங்கைக்குள் உச்சபட்ச தீர்வை, வழங்குவார்கள் என நம்பிக்கையை இந்த தேர்தல் தீர்மானிக்கிறது என்றும் சில ஊடகங்கள் ஊகங்களை வெளியிட்டன.

இனவாதத்துக்கோ, மதவாதத்துக்கோ, அதன் ஊடாக அரசியல் செய்வதற்கோ இனிமேல், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக்கப் போவதில்லை. சட்டத்துக்கு மேல் யாருமில்லை என கன்னி உரையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

### சுனாமி நிவாரண பொறிமுறையை எதிர்த்த JVP



இப்போது இனவாதத்துக்கோ, மதவாதத்துக்கோ இடமில்லை என்று கூறும் ஜேவிபியின் முன்னைய வரலாற்றை பலரும் மறைக்க முயல்கின்றனர்.

1994 நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் அரசை JVP ஆதரித்து வந்தாலும், பின்னர் குமாரதுங்க நிர்வாகத்தை கடுமையாக விமர்சித்திருந்தது.

2000 ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தேசியப் பட்டியலில் நாடாளுமன்றம் சென்ற இன்றைய ஜனாதிபதி 2001 தேர்தலில் மீண்டும் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

2004 இல், சிறீலங்க சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் மக்கள் விடுதலை முன்னணி போட்டியிட்டு 39 ஆசனங்களை நாடாளுமன்றத்தில் கைப்பற்றியது. குருணாகல் மாவட்டத்தில் இருந்து அனுர திசநாயக்கா நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார்.

சந்திரிக்காவின் அமைச்சரவையில் விவசாயம், கால்நடைகள், நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக 2004 பெப்ரவரியில் நியமிக்கப்பட்ட அனுரா, 2005 ஜூன் 16 இல் தன் அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்.

காரணம் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அரசாங்கம் புலிகளுடன் இணைந்து ஏற்படுத்திய வட, கிழக்கு மாகாணங்களின் சுனாமி நிவாரண ஒருங்கிணைப்புப் பொறிமுறையை JVP எதிர்த்ததே காரணம் என்பது வரலாற்று உண்மையாகும்.

இப்படித்தான் உள்ளது உண்மையான வரலாறு. ஆயினும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின் போதும், பல வாக்குறுதிகளை வழங்கி தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தார்கள்.

### 13ஆவது திருத்த சட்ட நீக்கம்?

தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் சம அந்தஸ்த்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு ஒன்றினைந்த இலங்கைக்குள் உச்சபட்ச தீர்வை வழங்குவோம் என ஜனாதிபதி தேர்தலின் போதும், பொதுத் தேர்தலின் போதும், வாக்குறுதிகளை ஜேவிபி வழங்கியிருந்தது.

1980களின் பிற்பகுதியில் JVP ஆரம்பத்தில் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்த இருந்தது. ஆனாலும் பின்னய காலத்தில் கட்சியின் தலைவர் றோகண விஜயவீர இனவாதத்தை கையில் எடுத்தார்.

அதன் பின்னர் இனவாதத்தை தூண்டிவிட்டே இக்கட்சி செயல்பட்டது. தற்போதைய தேர்தல் வாக்குறுதிகளை மீறி, தமிழ் மக்களுக்கு ஓரளவு அதிகாரப் பகிர்வு வழங்கிய 13ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கப் போகிறார்கள் என ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரிஸ்வின் சில்வா கூறியதை பின்னர் வாபஸ் பெற்றுக் கொண்டாலும், அவர்கள் மீண்டும் தங்கள் இனவாத அரசியலை விட்டு வெளியேறவில்லை என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.



## கற்றுணராத கடந்த 77 வருட அனுபவங்கள்:



இலங்கையின் அரசியல் வரலாற்றில் கடந்த 77 வருட அனுபங்களை கற்றுணர்ந்த பாடங்கள் பலவும், காற்றில் கரைந்ததே மிச்சமாகும்.

1977ஆம் ஆண்டு தேர்தலில் ஜே.ஆர் ஜெயவர்த்தனவிற்கு இலங்கை மக்கள் கொடுத்த அறுதிப் பெரும்பான்மையை 168 ஆசனங்களில் 140ல் வெற்றி பெற்று சாதனை படைத்தார். ஆனால் 1983 இனக்கலவரத்திற்கு வித்திட்டதோடு, இலங் கையை இரத்தக் களரியாக்கிய சிங்கள பேரினவாத அரசின் கொடூரமான ஆட்சியை உலக அரங்கில் வெளிப்படுத்தினார்.

2019 பின்னர் 69 இலட்சம் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி யாகவும், 145 ஆசனங்களுடன் 2/3 நாடாளுமன்ற பெரும் பான்மையை பெற்ற அரசாங்கமாகவும் உருவெடுத்த பொது



ஜன பெரமுனவும், கோட்டபய ராஜபக்ஸவும் நாட்டை வங்கு ரோத்திற்கு இட்டுச்சென்று, உலகின் எல்லா நாடுகளிலும் கையேந்தி பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

கடந்த 77 வருட அனுபங்களை கற்றுணர்ந்த எந்த அரசும் இதுவரை நாட்டை இனவெறி தவிர்த்து ஆளவில்லை.

தற்போது 2024இல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக அறுதிப்பெரும்பான்மை பெற்ற அதாவது 159 ஆசனங்களைப் பெற்ற தனிப்பெரும் கட்சியாக தேசிய மக்கள் சக்தியும் (NPP) ஆட்சிப்பீடத்தில் அமர்ந்து உள்ளது.

அனைத்து மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான, இன, மத, மொழி வர்க்க வேறுபாடற்ற, நாட்டிற்கு தேவையான அரசியல் யாப்பை எங்களால் உருவாக்க , வடக்கு, கிழக்கு, மலையகம் என அனைத்து இன மக்களும் எமக்கு ஆதரவை வழங்கியிருக் கிறார்கள் என தேர்தல் வென்றதன் பின்னர் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.


தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் சம அந்தஸ்த்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான சூழலை உருவாக்குவதற்கு ஒன்றிணைந்த இலங்கைக்குள் உச்சபட்ச தீர்வை, வழங்கு வார்கள் என நம்பிக்கையை இந்த தேர்தல் தீர்மானிக்கிறது



என்றும் சில ஊடகங்கள் ஊகங்களை வெளியிட்டன.

ஆழிப் பேரலையாக தமிழர் தாயகத்தை இயற்கை அழித்த சுனாமி 2004 ஆண்டின் இருபதாம் ஆண்டு நினைவுகளில் ஈழத்தமிழர் மூழ்கியுள்ளனர். ஆனால் சுனாமி நிவாரண பொறி முறையை எதிர்த்த JVPயின் இன வஞ்சகத்தை தமிழர் தேசம் ஒருபோதும் மறக்காது.

தற்போது இனவாதத்துக்கோ, மதவாதத்துக்கோ இடமில்லை என்று கூறும் ஜேவிபியின் முன்னைய வரலாற்றை பலரும் மறைக்க முயல்கின்றனர்.





# தமிழீழ விடுதலை வரலாற்றில் சனவரி



### சிங்களச் சிறீ தமிழர்களின் வாகனங்களில் பொருத்தப்பட்டது:



சிங்களப் பேரினவாதத்தின் ஆசியோடு ஆட்சிபீடமேறிய சிறீலங்காவின் பிரமர் எஸ்.டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டு தமிழீழப் பகுதிகளில் அமுல்படுத்தப்பட்டது. அதன் ஒரு கட்டமாக 01.01.1958 அன்று தமிழர் பகுதிகளில் அனைத்து வாகனங்களிலும் சிங்கள சிறீ எழுத்தை பொறிக்க வேண்டும் என்ற அநாகரிக இனவாத விதி அமுல்படுத்தப்பட்டது.

### தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை:






10.01.1974

தமிழ்மீது காதல்கொண்டனர்
கொலை வெறிக்காளாகி மாண்டனர்.

சி. சுந்தகுமார் | வே. கேசவராசன் | ப. சரவணபவன்

இ. சிவானந்தம் | வ. யோகநாதன் | இ. தேவரட்னம்

பி. சிக்மாறிலிங்கம் | சி. ஆறுமுகம் | சி. பொன்னுத்துரை

இலங்கையில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று, சிங்கள அரசின் காவற் படையினரின் காட்டுமிராண்டித்தனத்திற்குப் பலியான ஒன்பது தமிழர்கள்.

10.01.1974 அன்று சிறீலங்கா அரசின் பல்வேறு தடைகளையும் மீறி யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட உலகத் தமிழாராட்சி மாநாட்டு நிகழ்வின் போது சிறிமா அரசின் சிங்களக் காவல் படைகளால் 9 அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### கப்டன் பண்டிதர் வீரவணக்க நினைவு நாள்:




மூத்த உறுப்பினர் கப்டன் பண்டிதர் ( சின்னத்துரை ரவீந்திரன் - யாழ். வல்வெட்டித்துறை) தொய்வு நோயால் பீடிக்கப்பட்டிருந்த தனது உடல் நிலையை பொருட்படுத்தாமல் கடமை உணர்வுடன் செயற்பட்ட புரட்சி வீரன். ஆவரங்காலில் புலிகளின் முகாமொன்றை சிங்களப்படைகள் முற்றுகையிட்டு தாக்கியபோது போராளிகளான ரவி (சோ. பிரதாபன்), சாமி (ஆறுமுகம் தவரத்தினம்), சிவா (சிவகுரு சிவேந்திரன்) , தவம் (நடசே தவராசா), நேரு (செல்லையா தில்லைச்சந்திரன்) ஆகிய வீரர்களோடு 09.01.1985 அன்று வீரச்சாவடைந்தார்.

### லெப். கேணல் பாண்டியன் வீரவணக்க நினைவு நாள்:



விடுதலைப் புலிகளின் முதன்மைத் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் பாண்டியன் (செல்லத்துரை சிறீதரன் - யாழ். கொக்குவில்) யாழ் மாவட்டத் தளபதியாகக் பணியாற்றியவர். காரை நகரில் இந்தியப் படைகள் முற்றுகையிட்ட போது 09.01.1988 அன்று தன்னைத் தானே சுட்டு வீரச்சாவடைந்தார்.

### லெப். கேணல் வேனு வீரவணக்க நினைவு நாள்:

விடுதலைப் புலிகளின் முதன்மைத் தளபதிகளுள் ஒருவரான லெப். கேணல் வேனு ( பிரான்சிஸ்றோபேட் சேவியர் - மன்னார்) 1984 இல் இயக்கத்தில் இணைந்தவர். மன்னார் மாவட்டத் தளபதியான இவர் வெடிவிபத்தொன்றில் மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகிய 3 வீரர்களோடு 16.01.1992 அன்று வீரச்சாவடைந்தார்.



### மேஜர் சோதியா வீரவணக்க நினைவு நாள் :



விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் மூத்த போராளிகளுள் ஒருவரும் முதலாவது தளபதியுமான மேஜர் சோதியா (கைக்கல் அமல உற்பவ வசந்தி - யாழ். கரவெட்டி) உடற் பலவீனத்தையும் பொருட்படுத்தாது பணிசெய்த போது மூளைக்காச்சல் நோயினால் பீடிக்கப்பட்டு 11.01.1990 அன்று சாவடைந்தார்.

### கிளாலி நீரேரிப் பயணிகள் படுகொலை:

2.01.1993 அன்று யாழ் மாவட்டத்தில் கிளாலி நீரேரியில்வைத்து குழந்தைகள் பெண்கள் உட்பட 50ற்கும் மேற்பட்ட பயணிகள் சிறீலங்கா சிங்களக் கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.



### மாவீரன் கப்டன் அருள் வீரவணக்க நினைவு நாள்:



தாயகத்து விடுதலைக்காக 1986இல் தனனை விடுதலைப்புலிகளோடு இணைத்துக் கொண்டவர் கப்டன் அருள் மாஸ்ரர் (மாணிக்கம் ரவீந்திரராா - யாழ்). தமிழீழ விடுதலைப் புலிகளால் பாவிக்கப்படும் துப்பாக்கி எறிகணையான அருள்-89 இவரால் வடிவமைக்கப்பட்டதாகும். 04.01.1988 அன்று நீர்வேலிப் பகுதியில் ஏற்பட்ட இந்திய இராணுவத்துடனான மோதலின்போது விரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

### கொக்கட்டிச்சோலைக் கிராமப்படுகொலை:






1987ல் 28,29,30 ஆகிய நாட்களில் மகிழடித்தீவு, இறால் கொம்பனி, முனைக்காட்டுப் பகுதிகளில் சிறீலங்கா விசேட அதிரப்படையினரால் பெண்கள், குழந்தைகள் உட்பட 200 தமிழ் மக்கள் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டனர்.

### வங்கக்கடலில் காவியம் படைத்த கேணல் கிட்டு மற்றும் லெப். கேணல் குட்டிசிறி உட்பட 10 போராளிகளின் வீரவணக்க நினைவு நாள்:

விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும் முதுபெரும் தளபதியுமான கேணல் கிட்டு (சதாசிவம் கிருஸ்ணகுமார் - யாழ். வல்வெட்டித்துறை) அவர்கள் போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட ஒரு அத்தியாயம். யாழ். மக்களால் அன்புடன் நேசிக்கப்பட்ட இவர் சிங்களப்படைக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர்.




விடுதலைப் புலிகளின் முது நிலை உறுப்பினர்களில் ஒருவரான குடடிசிறி (இராசையா சிறிகணேசன் - யாழ். சுதமலை) இயக்கத்தின் இராணுவ தொழில் நுட்பபிரிவில் கடமை யாற்றியவர். இவரது பெயரில் உருவாக்கம் பெற்ற குட்டிசிறி மோட்டார் படையணி பல சமர்களில் பெரு வெற்றிகளைத் தந்திருக்கின்றது.

16.01.1993 அன்று வெளிநாட்டிலிருந்து குவேக்கர்ஸஜன் சமாதானச் செய்தியுடன் வந்து கொண்டிருந்தபோது இந்தியச் சதிக்குப் பலியாகி 09 போராளிகளுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

### மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் நினைவு நாள்:



சந்திரிகா அரசின் தமிழின அழிப்புக் கொள்கையை அம்பலப்படுத்தியவரும், மனித உரிமை வாதியும், சட்டத்தரணியுமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் சிறீலங்காவின் தலைநகர் கொழும்பில் சந்திரிகா அரசின் கொலையாளிகளால் 05.01.2000 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.


சிங்களத்தின் தலைநகரில் தனித்து நின்று சிங்களப் பேரினவாதத்திற்கு சவால் விடுத்து, ஆபத்துக்கள் சூழ்ந் திருந்த போதும் அஞ்சா நெஞ்சத்துடன் அநீதியை எதிர்த்துப் போராடியவர் திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள். இவரின் இனப் பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து. அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களால் இவருக்கு மாமனிதர் விருது வழங்கப்பட்டது.

### சிங்களப் படைத்தரப்பு கினீகிர-9 என்ற குறியீட்டுப் பெயருடன் படை நடவடிக்கை:




16.01.2001 அன்று கினீகிர 09- என்ற குறியீட்டுப் பெயருடன் சிங்களப்படை தென்மராட்சியில் பெருமெடுப்பில் தரைநகர்வு நடவடிக்கையொன்றினை மேற்கொண்டது. விடுதலைப் புலிகள் பிரகடனப்படுத்தியுள்ள ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தைப் பயன்படுத்தி சிங்களப் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையானது விடுதுலைப் புலிகள் தொடுத்த பதில் நடவடிக்கையில் முறியடிக்கப்பட்டது. இதன் போது நூறிற்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஐநூறிற்கும் அதிகமான படையினர் காயமடைந்தனர். இவ். முறியடிப்புச்சமரில் வெற்றிக்கு வித்தான 70 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

### பொங்குதமிழ்:





யாழ். பல்கலைக்கழக சமூகத்தின் ஏற்பாட்டில் எழுச்சி கொண்ட பொங்கு தமிழ் நிகழ்வு முதன் முதலில் 17.01.2001 அன்று உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. பேராசிரியர்கள் மாணவர்கள் உட்பட பல்லாயிரம் மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வானது அன்றைய சூழலில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட இடையூறுகள், தடைகள், அச்சுறுத்தல்கள் என்பவற்றைத் தாண்டி எழுச்சிகரமாக இடம்பெற்றது.

### கேணல் அருள்வேந்தன் (சாள்ஸ்) உற்பட மூன்று மாவீரர்கள் வீரச்சாவடைந்த நினைவு நாள்:




தளபதி சாள்ஸ் (சண்முகநாதன் ரவிசங்கர்), 1988 இல் போராட்டத்தில் இணைந்துகொண்ட இவர் விடுதலைப் புலிகளின் இராணுவ புலனாய்வுப் பொறுப்பாளராகவும் வெளிக்களப் புலனாய்வின் பகுதிப் பொறுப்பாளராகவும் செய்றபட்டவர். சிறீலங்கா தலைநகர் கொழும்பில் இடம்பெற்ற பல வெற்றித் தாக்குதலுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர். 05.01.2008 அன்று மன்னாரில் ஆழ ஊடுருவும் படையினரின் தாக்குதலில் லெப். சுகந்தன், லெப். காவலன், லெப். வீரமாறன் ஆகியோரோடு வீரச்சாவடைந்தார்.

### வீரத் தமிழ் மகன் முத்துக்குமார் நினைவு நாள்:

ஈழத் தமிழருக்கா தீக்குளித்து இன்னுயிர் எய்திய வீரத் தமிழ் மகன் முத்துக்குமார் குமரேசன் ( தூத்துக்குடி-புலியநல்லூர், தமிழ்நாடு)



# புதிய ஆண்டைத் திட்டமிடுவது

28.12.2024



இந்த ஆண்டில் என்ன கிடைத்ததோ அதிலிருந்துதான் அடுத்த ஆண்டு தொடங்கும். இந்த ஆண்டு என்ன கிடைத்தது? இரண்டு தேர்தல்கள் நடந்தன. இரண்டு தேர்தல்களின் விளைவாகவும் என்பிபி மிகப்பெரிய பலத்தோடு ஆட்சிக்கு வந்திருக்கிறது. இது முதலாவது.

இரண்டாவது, ஜனாதிபதி தேர்தலில் முன்னிறுத்தப்பட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ்த் தேர்தல் வரலாற்றில் ஒரு வேட்பாளர் பெற்ற ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றார். கட்சிகளைக்கடந்து தமிழ்மக்களைத் தேசமாகத் திரட்டலாம் என்ற முயற்சிக்கு கிடைத்த முதல் வெற்றியது.

மூன்றாவது, நாடாளுமன்றத் தேர்தலில், தமிழ்மக்கள் மத்தியில் இருந்தும் என்பிபிக்கு ஆதரவு கிடைத்திருக்கிறது. அதன் மூலம் தமிழ்மக்கள் தங்களை இலங்கையராகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள் என்று என்பிபியின் தமிழ் ஆதரவாளர்கள் கூறத்தொடங்கி விட்டார்கள்.

நாலாவது, நாடாளுமன்றத்தில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக மேலும் மெலிந்து போயிருக்கிறார்கள்.

ஐந்தாவது, தமிழ்த் தேசியவாதம் பேசும் கட்சிகள் தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதிலும் வெற்றி பெறவில்லை; தங்களைக் கட்சிகளாகத் திரட்டுவதிலும் வெற்றி பெறவில்லை. ஒப்பீட்டளவில் அதிக ஆசனங்களை வென்ற தமிழரசுக் கட்சியானது நீதிமன்றத்தில் நிற்கிறது. எனவே ஒரு கட்சியாக அது தோல்வி யடைந்து விட்டது. ஆனால் தமிழ்மக்கள் வேறு வழியின்றி அதற்கு வாக்களித்திருக்கிறார்கள்

இவைதான் இந்த ஆண்டில் தமிழ்மக்களுக்கு கிடைத்தவற்றுள் முக்கியமானவை. இவற்றின் தேறிய விளைவுகளே வரும் ஆண்டைத் தீர்மானிக்கும்.

தமிழ்மக்கள் ஒரு தேசமாக நாடாளுமன்றத்தில் மெலிந்து போயிருக்கும் ஓர் அரசியல் சூழலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றிருக்கும் என்.பி.பி அரசாங்கம் இனப்பிரச்சினையை எப்படி அணுகும்?

பேராசிரியர் ஜெயதேவ உயாங்கொட பின்வருமாறு கூறுகிறார்..” இந்தியாவால் அறிமுகப்படுத்தப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் உரையாடலையும் என்பிபி தவிர்த்து ஒதுக்குகின்றது. ஐநாவின் முகவரமைப்புக்களினாலும் உள்ளூர் மற்றும் உலகளாவிய மனித உரிமைக் குழுக்களினாலும் ஊக்குவிக்கப்படும் முரண்பாடுகளுக்கான தீர்வு, நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் போன்றவற்றுக்கான லிபரல் போக்குடைய சமாதான உரையாடல்களையும் என்பிபி தவிர்த்து ஒதுக்குகிறது.” அதாவது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளை பிராந்திய மற்றும் சர்வதேச மயநீக்கம் செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று உயாங்கொட கூறுகிறார்.

அதேசமயம் அண்மையில் இந்தியாவுக்குச் சென்ற ஜனாதிபதி அனுர அங்கு பின்வருமாறு பேசியிருக்கிறார். “இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அண்மையில் நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் ஒரு போதுமில்லாதவாறு வெளிப்படுத்தப்பட்ட மக்கள் ஆணை, எமது நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்பக் கூடிய அரசியல் மாற்றத்திற்கான விதைகளை விதைத்துள்ளது. வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய திசைகளில் அமைந்துள்ள அனைத்து மாகாணங்களிலும் உள்ள பல்வேறு சமூகங்கள் மற்றும் பல்வேறு தரப்பு மக்களும் இந்த மக்கள் ஆணைக்கு பங்களித்தனர்.” அதாவது தமிழ்மக்களின் ஆணை தனக்கு உண்டு என்று ஜனாதிபதி கூறுகிறார். அதன்மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆணை தனக்கு கிடைத்திருப்பதாக அவர் கூறவருகிறார்.

அவருடைய இந்திய விஜயத்தின் போது இந்தியா உத்தியோக பூர்வமாக 13ஆவது திருத்தத்தைப்பற்றி எதுவும் கூறவில்லை. பதிலாக யாப்பை முழுமையாக நிறைவேற்றுமாறுதான் கேட்கப்பட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தல்களை வைக்குமாறும் கேட்கப்பட்டிருக்கிறது. 13இன் மீதான அழுத்தத்தை இந்தியா குறைத்திருப்பது ஒரு கொள்கை மாற்றமாக ஒரு பகுதி ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆனால் கடந்த 15 ஆண்டுகளிலும் இந்தியா 13ஐ அழுத்திக் கூறிவந்தாலும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த தேவையான அழுத்தங்களை கொழும்பின் மீது பிரயோகித்திருக்கவில்லை. இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவிடமிருந்து வரக்கூடிய அழுத்தங்கள் தொடர்பான பயம் சிங்களத் தலைவர்களுக்கு எப்பொழுதோ இல்லாமல் போய்விட்டது.

நாட்டில் அதிகரித்துவரும் சீனாவின் பிரசன்னமானது சிங்களத் தலைவர்களின் பேர பலத்தை கூட்டியிருக்கிறது என்பதே உண்மை நிலை. கொழும்பை இறுக்கிப் பிடித்தால் அது சீனாவை நோக்கிச் சாய்ந்துவிடும் என்று ஏனைய தரப்புகள் பயப்படுவதை சிங்களத் தலைவர்கள் தமக்குரிய பேர வாய்ப்பாகக் கருதுகிறார்கள்.

தேர்தல் முடிந்த கையோடு வடக்கு கிழக்குக்கு வந்த முதலாவது தூதுவர் சீனத் தூதுவர்தான். அவர் வழமையாக தமிழர்கள் மத்தியில் இனப்பிரச்சினை தொடர்பாக உரையாடுவதில்லை. ஆனால் இம்முறை வழமைக்கு மாறாக யாழ் ஊடக அமையத்தில் உரையாற்றும்போது தேர்தல் முடிவுகளை வரவேற்றுக் கதைத்திருக்கிறார். குறிப்பாக தமிழ்மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களித்ததை அவர் பாராட்டியிருக்கிறார். அதன்மூலம் அவர் சொல்லாமல் சொல்லவருவது என்னவென்றால், தமிழ்மக்கள் என்பிபி அரசாங்கத்தை நம்புகிறார்கள், எனவே இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இந்தியாவோ, ஐநாவோ, ஐரொப்பிய ஒன்றியமோ, அமெரிக்காவோ தலையிடுவதற்கான தேவைகள் குறைந்துவிட்டன என்பதுதான். இவ்வாறு பேராசிரியர் உயாங்கொடவும் சீனத்துதுவரும் கூறியவற்றைத் தொகுத்துப்பார்த்தால் கிடைக்கும் சித்திரம் மிகத்தெளிவானது. இனப்பிரச்சினையை பிராந்திய மயநீக்கம் அல்லது சர்வதேச மயநீக்கம் செய்ய முற்படும் சக்திகள் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் உற்சாகமடைந்திருக்கின்றன.

ஆனால், தேசிய இனப்பிரச்சினைகள் உள்நாட்டுப் பிரச்சினைகள் அல்ல. அவை சாராம்சத்தில் பிராந்திய மற்றும் அனைத்துலகப் பிரச்சினைகள்தான். உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றின் மீது வெளிச் சக்திகள் தலையீடு செய்யும்போதே தேசிய இனப்பிரச்சினைகள் பூதாகரமாகின்றன. எனவே எல்லாத் தேசிய இனப்பிரச்சினைகளுக்கும் அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. உள்நாட்டுத் தீர்வு கிடையாது. திம்புவில் தொடங்கி ஜெனிவா வரையிலும் அதுதான் இலங்கை இனப்பிரச்சினையின் யதார்த்தம். இந்த யதார்த்தத்தை அதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால், மூன்றாவது தரப்பு ஒன்றின் மத்தியஸ்தம் அல்லது அழுத்தம் இல்லாமல் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது.

ஆனால் கடந்த 15ஆண்டுகால அனுபவங்களின் அடிப்படையில் சொன்னால், தமிழ்த் தரப்பு பலவீனமடைந்து செல்லும் ஒரு பின்னணியில், மூன்றாவது தரப்பை இனப்பிரச்சினையில் இருந்து நீக்குவது ஒப்பீட்டளவில் இலகுவாகி வருகிறது.

அதாவது, பேச்சுவார்த்தக்கான தமிழ்த் தரப்பின் பேரபலம் குறைந்து வருகிறது என்பதைத்தான் நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் நிருபித்திருக்கின்றன. வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் அதேவிதமான தேர்தல் முடிவுகள் கிடைத்தால் தமிழ்மக்கள் ஒரு தரப்பாக மேலும் பலவீனப்படுவார்கள். அந்த வெற்றி தரும் உற்சாகத்தில் அரசாங்கம் ஒரு புதிய யாப்புக்கான தயாரிப்பு வேலைகளை முடுக்கிவிட முடியும்.

எனவே இன்னும் சில மாதங்களுக்குள் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படுமாக இருந்தால், தமிழ்த் தரப்பு இப்பொழுதே திட்டமிட வேண்டும். தேர்தல் அறிவிக்கும் வரை காத்திருந்து தேர்தல் கால ஐக்கியங்களுக்கு போவதைவிடவும் தேர்தலுக்கு முன்னரே தமிழ்மக்கள் தங்களை ஐக்கியப்படுத்த வேண்டும். இதை அதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால், தேர்தல் தேவைகளுக்காக ஐக்கியத்தை உருவாக்காமல் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஐக்கியத்தை, தேசத்தைத் திரட்டுவதற்கான ஐக்கியத்தைக் குறித்து தமிழ்க்கட்சிகள் சிந்திக்க வேண்டும்.



ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான சிவில்சமூக யதார்த்தத்தின்படி கட்சிகளை அவ்வாறு ஒன்றிணைக்கும் வேலைகளில் சிவில்சமூகங்கள் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் அரிதாகவே தெரிகின்றன. கட்சிகள் தங்களாக ஐக்கியப்பட வேண்டும்.

அந்த அடிப்படையில்தான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தீர்வை நோக்கிய ஐக்கியத்துக்கான முன்னெடுப்புகளைப் பார்க்கவேண்டும். அது ஒரு சுடலை ஞானம் தான். தேசமாக மெலிந்த பின் ஏற்பட்ட ஞானம். எனினும், தேர்தல் முடிவுகளில் இருந்து கற்றுக்கொண்ட பாடங்களின் அடிப்படையில் முன்னணி சிந்திக்குமாக இருந்தால் அதை வரவேற்கலாம்.

ஆனால் தமிழரசுக் கட்சிக்குள் வளர்ந்துவரும் உட்பகையானது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஐக்கியத்திற்கான அழைப்பை சவால்களுக்கு உட்படுத்தும். தமிழ்மக்கள் பேரவையின் முன்மொழிவின் அடிப்படையில் தீர்வு முயற்சிகளை எதிர்கொள்ள வேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருக்கிறது. ஆனால் சுமந்திரன் தெரிவிக்கும் கருத்துக்கள் அந்த அழைப்பை வரவேற்பவைகளாக இல்லை.

சுமந்திரன் இப்பொழுதும் கட்சிக்குள் செல்வாக்கு மிக்கவர் போலவே காணப்படுகிறார். சிறீதரன் கட்சியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதவராகவும் காணப்படுகிறார். எனவே தமிழரசுக் கட்சிக்குள் காணப்படும் தலைமைத்துவ முரண்பாடானது, புதிய யாப்புருவாக்க முயற்சிகளிலும், உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புக்கள் உண்டு. முன்னணியின் ஐக்கிய முயற்சிகளின் அடுத்த கட்டமானது, தமிழரசுக் கட்சியின் தலைமையை யார் கட்டுப்படுத்துகிறார்கள் என்பதிலும் தங்கியுள்ளது.

அது மட்டுமல்ல, ஜனநாயகத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் ஒரு கூட்டாக என்ன முடிவை எடுக்கப்போகிறது? ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை முன்னுறுத்திய தமிழ்த்தேசியப் பொது கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையில் தமிழ்மக்கள் பேரவையின் முன்மொழிவை வரவேற்று எழுதப்பட்ட வாசகங்களை ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு உள்ள சில கட்சித் தலைவர்கள் நீக்குமாறு கேட்டார்கள். அதற்கு அவர்கள் கூறிய காரணம் பேரவைக்குள் தாங்கள் இருக்கவில்லை என்பதாகும்.

இப்படிப்பட்டதோர் பின்னணியில், தமிழ்மக்கள் பேரவையின் முன்மொழிவின் அடிப்படையில் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சிகள் எந்தளவு தூரம் வெற்றி பெறும் என்பதனை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். அவ்வாறு வெற்றி பெற்றாலும் அது தேசத்தை திரட்டுவதற்கான ஒரு முழுமையான ஐக்கியமாக இருக்கமுடியாது. ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த அனுபவம் அத்தகையதே. தமிழ் மக்களை வாக்காளர்களாக, விசுவாசிகளாக, பக்தர்களாக, வெறுப்பர்களாகப் பிரித்து வைத்திருப்பது கட்சிகள்தான்.

அவ்வாறு பிரித்து வைத்திருந்ததன் தோல்விகரமான விளைவுகளினால் கட்சிகள் தங்களுக்கு இடையே ஏதாவது ஓர் ஐக்கியத்துக்கு போக முயற்சிக்கக்கூடும். ஆனால் அதுமட்டும் தேசத்தைத் திரட்ட உதவாது. அது ஒரு தொடக்கமாக இருக்கலாம். தமிழ்ப்பொது வேட்பாளரை முன்நிறுத்திக் கிடைத்த அனுபவம் அதுதான்.

எனவே இந்த ஆண்டின் தொடக்கத்தில் தமிழரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தலும் ஆண்டின் முடிவிலும் நடந்த நாடாளுமன்றத் தேர்தலும் தமிழரசியலின் சீரழிவைக் காட்டின .எனினும் செப்டம்பர் மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் கடந்த 15ஆண்டு கால தமிழ் அரசியலில் ஒரு புதிய அனுபவத்தை கொடுத்திருக்கிறது. தமிழ்மக்கள் எப்பொழுதும் தேசமாகத் திரள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதே அந்தச் செய்தி. அதுதான் இந்த ஆண்டின் நற்செய்தியும்கூட. அந்த நற்செய்தியில் இருந்து திட்டமிட்டால் அடுத்த ஆண்டை ஒரு வெற்றி ஆண்டாக மாற்றலாம்.

நன்றி: நிலாந்தன்

# 32ஆம் ஆண்டு வீரவணக்கம்



மேஜர் வேலன் (மலரவன்)
(சுந்தரலிங்கம் சுந்தரவேல்)
வியாபாரிமூலை, பருத்தித்துறை



கேணல் கிட்டு
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)
வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம்



கடற்புலி கப்டன் நாயகன்
(சிவலிங்கம் கேசவன்)
பொலிகண்டி, வல்வெட்டித்துறை



கடற்புலி கப்டன் ஜீவா
(நடராசா மார்க்ஜெயராஜ்)
கொய்யாத்தோட்ட ஒழுங்கை,
பாசையூர், யாழ்ப்பாணம்



கடற்புலி லெப். தூயவன்
(மகாலிங்கம் ஜெயலிங்கம்)
கண்டிவீதி, யாழ்ப்பாணம்



கடற்புலி குணசீலன்
(சேகரன்குருஸ் மைக்கல்ஜீவா)
2ம் குறுக்குத்தொரு,
உதயபுரம், மணியம்தோட்டம்



லெப். கேணல் குட்டிசிறி
(இராசையா சிறிகணேசன்)
சுதமலை வடக்கு, யாழ்ப்பாணம்



கடற்புலி லெப். நல்லவன்
(சிவஞானசுந்தரம் ரமேஸ்)
மணியந்தோட்டம், கொழும்புத்துறை
யாழ்ப்பாணம்



கடற்புலி கப்டன் றொசான்
(அரத்தினசிங்கம் அருணராசா)
அரசடி வீதி,
நலலூர், யாழ்ப்பாணம்

**இந்திய ஆக்கிரமிப்புச் சதிக்கு உள்ளாகி**
**தமிழர் கடலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட**
**வேங்கைகளின் முப்பத்தி இரண்டாம் ஆண்டு**
**நினைவு வணக்க நாள் – 16.01.2025**



கடற்புலி லெப். அமுதன்
(அலோசியஸ் ஜான்சன்)
2ம் குறுக்குத்தெரு, நாவாந்துறை
வடக்கு, யாழ்ப்பாணம்

சங்கத்தமிழ்